Koviloor Digital Library

அருட்பிரகாச வள்ளலார்

சத்திய ஞானசபை
என்னுள் கண்டனன்
-வள்ளலார்-

2285
R65(வள்)

குங்கிலியம் பழ.சண்முகனார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-4

2285

அருட்பிரகாச வள்ளலார்

குன்றக்குடி

7/11/85

குன்றக்குடி பழ. சண்முகனார்

கோவிலூர் ஆதீனம்
2285
R65 வள்
கோவிலூர்

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

1986

16/00

Koviloor Digital Library

திருத்திய பதிப்பு : டிசம்பர், 1986.

உரிமை: சேறிவு

பதிப்பாசிரியர்: ச. மெய்யப்பன் எம். ஏ.,

விலை ரூ. 16-00

கிடைக்குமிடம்

மணிவாசகர் நூலகம்

12-B. மேலசன்னதி, சிதம்பரம்-608 001.
14. சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600 001.
55. லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001.
28A. வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை-625 001.
3/4 ராஜ வீதி, கோயமுத்தூர்-631 001.
20. நந்தி கோயில் தெரு, திருச்சி-620 002.
சென்னை போன்: 512996; சிதம்பரம் போன்: 2799.

அச்சிட்டோர்: அபிராமி அச்சகம், சிதம்பரம்-608001.

KOVILOOR MADALAYAM
Koviloor Digital Library
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: ...-436840)

4-4

வணங்குகிறேன்

பேராசிரியர் **ச. மெய்யப்பன்**, எம். ஏ.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அருட்பிரகாச வள்ளலார் என்னும் இத்திருநூல் பூச நன்னாளில் மலர்கிறது. வாழ்வாங்கு வாழ்ந்தொளிர் பவர் வள்ளலார், சங்கம் சாலை சபை கண்ட சான்றோர். அருள்நெறி அருளிய ஆன்றோர். அருட்சோதி வழி பாட்டை அருளிய அண்ணல். ஆன்மநேய ஒருமைப் பாட்டுக் கொள்கையை அளித்தவர், வாழையடி, வாழை யென வந்த திருக்கூட்ட மரபினராகத் தோன்றி வளர்ந்து தான் ஒருவரேயான புதுமையர். திருமுறைகளில் தோய்ந்த திருவாளர். வாடிய பயிரைக் கண்டு வாடியவர். பசித் துயர் போக்கப் பாதை படைத்தவர். காலமெலாம் ஞாலம் புகழும் வகையில் திகழ்பவர். நூலாசிரியர், உரை யாசிரியர். பதிப்பாசிரியரென முத்துறையிலும் முதன்மையர். உரைநடை வல்லார், கவிதை ஊற்று.

சமரச ஞானி வள்ளலார். தாயுமானவர் நெறியில் சமரசம் ஓங்கச் செய்தவர். பொதுமை போற்றும் புண்ணியர். சாகாக்கலை இயலை விளக்கியவர், மரண மிலாப்பெருவாழ்வில் வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் திருவாய் மலர்ந்த திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. வள்ளலார் கழல் வாழ்த்துவதை வாழ்வுநெறியாகக் கொண்ட தவத்திரு சன்முகனார் அவர்கள் இந்நூலை இயற்றியுள்ளார்கள்.

Koviloor Digital Library

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகத் திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் நூல்களை ஓதுவதை எந்தையார் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். பர்மாவில் வள்ளலார் சங்கம் கண்டு அவர் நெறியினைப் பரப்பியவர். திருமுறைகளை ஓதியுணர்ந்த பெரியார். வாழ்விலும் சீலம் போற்றுபவர்கள். கற்றவழி நடக்கும் சான்றோராகிய இவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்பவர்கள். தில்லைத் திருவீதியில் அங்கப்பிரதட்சணம் செய்த ஆன்றோர், இவர்கட்கு மகனாகப் பிறந்த பேற்றினை எண்ணி எண்ணி என்றும் இன்பம் எய்துகிறேன். சொல்லும் செயலும் ஒன்றி தூயநெறியில் வாழும் இவர்கள் இல்லறம் சிறக்க நடத்தித் தொல்காப்பியர் கூறும், தொண்டுள்ளம் சிறந்த தூய துறவு நெறியில் வாழ்பவர்கள். படிப்பதும். சிந்திப்பதும், உரையாற்றுவதும், கலந்துரையாடுவதும், இவர்கள் நாளும் செய்யும் நற்பணியாகும். பல்லாண்டு களாக வள்ளலார் நூல்களில் ஆய்வு நடத்தி வருகிறார்கள். அவ்வப்போது இதழ்களில் சில கட்டுரைகளும் எழுதியுள்ளார்கள். உண்மையாளன் எனப்போற்றப் பெறும் சிந்தனையாளர் ஜெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நெறிகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள். ஜெ. கே. யின் 'தியானம்' (Meditation) என்ற ஆங்கிலச் சிறு நூலைத் தமிழாக்கி அந்நிறுவனத்திற்கு ஈந்துள்ளார்கள்.

'செஞ்சுடர்ப் பூ' எனும் சிறந்த கட்டுரை பலராலும் பாராட்டப்பெற்ற சிறப்பினையுடையது. கலந்துரையாடலில் உரைத்த கருத்துக்களைச் சில கட்டுரைகளில் விரிவாக்கியுள்ளார்கள். கட்டுரைகள் தோறும் வள்ளலார் திருவுள்ளம் விளங்கக் காணலாம். வள்ளலாரிடத்து நூலாசிரியர் கொண்டுள்ள ஈடுபாடும், பக்தியும் பக்கந்தோறும் பளிச்சிடக் காணலாம்.

Koviloor Digital Library 4-4

எந்தையார் நூலை பொன் விழா ஆண்டில் வெளிக் கொணரும் நற்பேறு கிடைத்ததை எண்ணி நனி மகிழ்வு கொள்கிறேன். பதிப்பாளன் ஒருவன் தன் தகப்பனாரின் நல்ல நூலை வெளியிடுவதைவிட வேறு என்ன பேறு அவன் பெற முடியும்? பதிப்பாசிரியர் எனப் பல்காலும் எழுதிக் கொள்வதில் அடையும் மகிழ்ச்சி இந் நாளில் பல்லோர் உள்ளத்துள் பெய்யும் உவகையெல்லாம் என் உள்ளத்தில் பெய்வதாக எண்ணி முழுதும் நனை கிறேன்.

என் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் நூலுக்குப் பதிப்புரை எழுதும்போது மகிழ்ச்சியும், என் ஆசிரியர் மு. அண்ணாமலை அவர்கள் நூலுக்கு பதிப்புரை எழுதும்போது பெருமையும், என்னோடு பயின்றோர் கு. சதாசிவம், சொ. ந. கந்தசாமி, சோம. இளவரசு, மு.வை. அரவிந்தன் ஆகியோர் நூலுக்கு அணிந்துரை அளிக்கும்போது அளவிலா மகிழ்ச்சியும், என் மாணவர் அரு. ராமனாதன் நூலுக்கு அணிந்துரை வழங்கும்போது பெருமிதமும் அடைகிறேன். என் இனிய நண்பர்கள் செகந்நாதன் அறிவொளி நூல்களுக்கு மதிப்புரை எழுதும் போது இன்பமும் அடைகிறேன். என் தகப்பனார் நூலுக்குப் பதிப்புரை எழுதும்போது என்பிறவி புனித மடைவதை உணர்கிறேன். அவர்களை ''வணங்குதல் அல்லது வாழ்த்துதல்'' என் நாவிற்கு அமையாதென புத்தர் பெருமானை மணிமேகலை வணங்கி உரைப்பதனையே நானும் கூறிப் பணிவுடன் இருகை கூப்பி வணங்கி அமைகிறேன்.

டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் அணிந் துரை இந்நூலுக்கு ஓர் அணிகலம். அவர்களுக்கு என்றும் எம் நன்றி உரியது.

Koviloor Digital Library

அணிந்துரை

டாக்டர் **வ. சுப. மாணிக்கம்** அவர்கள்

முன்னாள் துணைவேந்தர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

"மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"

என்று சேக்கிழார் பெருமான் பாடிய திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் அருளாளர் சண்முகனார். நம் காலத்து வாழும் நாயனார் இவர். திருக்கடவூர்க் கலயனாரின் குங்கிலியத் தொண்டினை இக்காலத்து உயிர்ப்பித்த பேரன்பர். ஆளுடைய அரசுபோல அகப்பணியோடு புறப் பணி செய்து ஒழுகுபவர். இல்லறம் துய்த்து நன்மக்களைப் பெற்றுத் துறவு பூண்ட அறத்தகை. ஒதுங்கிய காட்டுத் துறவியாகச் செல்லாமல் பொதுமக்களொடு கலந்து உற வாடும் நாட்டுத் துறவியாக வாழும் சமயத் தொண் டாளர். வடலூர் வள்ளலாரின் திருத்தொண்டர். சுந்தரர் மீண்டும் பிறந்து பாடினால், அப்புதிய திருத்தொண்டத் தொகையில் அன்பர் சண்முகனார் வரிசை பெறுவர்.

Koviloor Digital Library

சமய வாழ்வும் தமிழ்ப் புலமையும் ஒன்றிய சண்முகனார் எழுதிய 'அருட்பிரகாச வள்ளலார்' என்ற கட்டுரைத் தொகுதி இரக்கமே உருவானவள்ளற் பெருமானின் சில பாடற்கருத்துக்களைத்தெளிவிக்கின்றது. நான்காவது திருமுறையில் வரும் பிரசாத மாலையின் பத்துப் பாடல்களுக்கு அருட்புலவர் சண்முகனார் தரும் விளக்கம் மேலோட்டமாகப் பிரசாத மாலையைப் படிப்பவர்க்கு வரும் மயக்கத்தை அகற்றுகின்றது.

'திருநீறு தருக என்று வள்ளலார் சிவனைக் கேட்டார்: முன்பே விரும்பி அளித்து விட்டேனே; அதனை உன் வடிவத்திற் கண்டு கொள்வாய் என்று சிவன் மறு மொழிந்தார்' என்ற கருத்து ஒரு சமயப் புதிராகும். 'செஞ்சுடர்ப்பூ' என்ற குறியீட்டின் பொருளை முழுமையாக விளக்கியிருப்பதும், 'நவமாய செஞ்சுடர்' என்ற திருவாசகத்தையும் 'செஞ்சுடர் மண்டலத்து' என்ற திருமந்திரத்தையும் மேற்கோள் காட்டியிருப்பதும், திருவகவலில் வரும் நால்வகைப் பூக்களை இணைத்திருப்பதும், 'நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும்' என்ற அப்பரின் திருத்தாண்டகத்தைச் சான்று படுத்தியிருப்பதும் எல்லாம் அருளாளர் சண்முகனாரின் ஞான விளக்கம் என்றே மதிக்க வேண்டும். ஒரு பதிகத்தின்மேல் எழுந்த உயர் சமய ஆராய்ச்சி பொதுளியது இக்கட்டுரை.

''திருமுறைக்குத் தீட்டுண்டா?'' என்ற கட்டுரையில் குணமென்னும் குன்றேறி நின்ற சண்முகனாரின் வெகுளியை உணர்கின்றோம். முதல் ஐந்து திருமுறைகட்கு ஒரு வகை மதிப்பும் ஆறாம் திருமுறைக்குத் தனிப் பெரு மதிப்பும் கொடுத்துவரும் திருமுறையுட் பேதங்களை அருட் சண்முகனார் உடன்படவில்லை. வள்ளலாரின் எழுத்து, செய்யுளாயினும் உரைநடையாயினும், அவை

Koviloor Digital Library

யனைத்தையும் ஒன்றாகக் காண்பதே காட்சி என்று யாண்டும் பரவிக் கிடக்கும் கருத்துத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவர். அருட்பிரகாசம் ஆறு திருமுறை களிலும் உள்ளொளி வீசுகின்றது. என்ற புதிய சிந்தனை யை அருட்பாப் பொழிவாளர்களும் எழுத்தாளர்களும் மேலும் சிந்திப்பார்களாக.

அருளாளர் சண்முகனார் தாமே முயன்று நல்ல தமிழ் கற்றவர்; செய்யுள் இயற்ற வல்லவர்; முன்னேற்ற நோக்கங் கொண்ட சமயச் சான்றோர் காலத்து வரும் மாற்றங் களை நன்கு தழுவிக் கொள்ள வேண்டும் என்று அறம் மொழிபவர். இல்லறத்துக்கும் துறவறத்துக்கும் வழி காட்டியாகத் திகழும் அன்பர் சண்முகனார், திருத் தொண்டினையும் அத்தொண்டின் பயனாக விளைந்த அருட் கட்டுரைகளையும் பாராட்டுவதற்கு அடையாள மாக இம்மதிப்புரையை எழுதியுள்ளேன்.

“எள்ளல் அடியேன் எனக்குள் ஒளியாமல்
உள்ள படியே உரைக்கின்றேன்.”

தந்தையாரின் நூலை மணிவாசகர் பதிப்பகம் வெளியிடும் பேறு பிறப்பின் சிறப்பாகும்.

காரைக்குடி,

வ. சுப. மாணிக்கம்

Koviloor Digital Library

முன்னுரை

வடலூர் சத்தியஞானசபையில் வருடந்தோறும் நடைபெற்று வரும் திருவருட்பா முற்றோதலில் 1977 ஆம் ஆண்டு ஓதுதலின் சன்மார்க்க தேசிகன் பதிப்பு, பாடல் 3160 முதல் 3169 வரை உள்ள பிரசாதமாலை 'தலைப்பில் வரும் பத்துப் பாடல்களில் காண்கின்ற "பூ" என்ன "பூ" என்ற சங்கையை வேலூர் திருக்குறள் நம்பி ஊ. வ, தட்சிணாமூர்த்தி அவர்கள் எழுப்பினார். "இது ஒரு வகை மலர் என்றும் எனவே சமயம் கடந்த சாலை சபையில் திருநீறு வழங்காமல் ஒரு பூவையே (ஏதேனும் ஒருவகை மலர்) வழங்கலாம் என்றும் முன்னர் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள்" என்றும், அங்குப் பலர் சொன்னார்கள். அதற்குப் பதில் கூறும் முகத்தால் "இது பூ வகைகளே அல்ல, உடல் மாற்றம் பூத்தது" என்றும் பதில் சொன்னேன். முற்றோதல் ஆகையால் பணி தடைப்படும் என்று அவ்வளவில் அங்கு நிறுத்திவிட்டேன். இல்லம் வந்ததும் அன்று இரவு சுத்த சன்மார்க்க நிலையத்தில் திரு. தட்சிணாமூர்த்தியார் அதனை மீண்டும் தொடர்ந்து விபரம் தெரிந்து அமைதியுற்றார். இக்கருத்தினைக் கட்டுரையாக்கித் தர விரும்பினார். அவ்வாறே எழுதிக் கொடுத்தேன். கட்டுரை சன்மார்க்க விவேக விருத்தி 1—7—77 இதழில் குங்கிலியம் என்ற புனை பெயரில் (சன்மார்க்க விவேக விருத்தி என்பது வள்ளற் பெருமான் தொடங்கிய இதழ். இப்பொழுது தவத்திரு ஊரனடிகளார் இவ்விதழை நடத்தி வருகிறார்.) வெளி வந்தது. அப்போதே பாராட்டுகள் பல வந்தன.

Koviloor Digital Library

அப்பால் 1980-ஆம் ஆண்டு கோடையில் தவத்திரு துறவியார் அவர்கள் மணிமாடத்தில் 19—5—80 முதல் 24—5—80 வரை 5 நாள் சத் விசாரத்தைச் சிறப்புறச் செய்து நடத்தினார்கள்.

1982-ல் தவத்திரு ஊரனடிகள் சுத்த சன்மார்க்க நிலையத்தில் நடத்திய கோடை வகுப்பில் 15—5—82 முதல் 24—5—82 வரை 10 நாள்களில் சத்விசாரம் இரவு 9 முதல் 11 மணி வரை நடத்திச் சிறப்புறச் செய்தார்.

பின்னர் மாதப்பூசந் தோறும் வடலூர் ஞானசபை வீதியில் உள்ள உலகமைய சங்கத்தில் சோதி தரிசனத்துக்குப் பிறகு சத்வீசாரமும் பரோபகார உணவளித்தலும் நடை பெற்று வருகிறது. இதில் தவறாது கலந்து கொள்ளும் (1) சென்னை தேனாம்பேட்டை (2) பெண்ணாடகம் (3) திண்டிவனம் (4) சாத்தப்பாடி வயலாமூர் முதலிய ஊர் சங்கத்தார்களும் தனிப்பட்ட பல ஊர் அன்பர்களும் தொடர்ந்து வருகிறார்கள் இதில் ஆர்வம் காட்டி ஊக்கமாய் நடத்தி வருபவர் தியாகச்செம்மல் உலகமைய சங்கத்துணைத் தலைவர் திரு. அ. பழனிவேல் ஆவார்.

இது பற்றி இத்துணை எழுதுவதின் நோக்கம் வள்ளற் பெருமானார் சத் விசாரம், பரோபகாரம் இரண்டினையும் சுத்த சன்மார்க்கத்தின் இரண்டு கண்களாகக் கருதி அருளுகிறார்கள். சொற்பொழிவுகளில் பெறும் பயனைக் காட்டிலும் சத்விசாரமான கலந்துரையாடலிற்றான் தக்க பயன் மிகுந்து பெருகி வளருகிறது.

அருள் நூல்களைப் படிக்கும் பொழுது நாம் முன்னரே கற்றுச் சிந்தனைப் பெட்டகத்தில் இருப்பு வைத்திருக்கும் முடிவுகளோடு இணைத்துப் பார்க்காமல் புதிதாக அந்தந்த நூல்களின் பொருள்களை நடுநிலையோடு ''அது அதுவாய்''

Koviloor Digital Library

ஒன்றிப் பார்த்தால்தான் உண்மை புலனாகும். அம் முறையில் இந்நூலில் உள்ள ஆய்வுகளைச் சிந்தித்தால் முற்றிலும் பொருந்தும். "அது அதில் விளங்கும் அருட்பெருஞ் சோதி என் அரசே" என்பது அருட்பிரகாசரின் திருவாக்கு.

சுத்த சன்மார்க்க விளக்கங்களில் இப்பொழுது வழங்கி வரும் சில கருத்துகள் இந்நூலில் மறுக்கப் பெற்று புது விளக்கம் காணப்பெறுகிறது. ''அறிதொறும் அறியாமை கண்டற்றால்'' என்ற வள்ளுவத்தின்படி அறியாமையை நாம் வளர வளர விளங்கிக் கொள்கிறோம். அவ்வளவு தானே அன்றிப் புதுமையாக இல்லாத ஒன்றைச் சொல்ல வில்லை. ''அறியாமையின் அருமை'' என்ற ஒரு கட்டுரை யும் இந்நூலில் இடம் பெற்று இருக்கிறது.

இந்நூலைப் படிப்போர் நடுநிலை நின்று கருத்தைத் தெரிவித்தால் ஆவலோடு ஏற்றுச் சிந்தித்துச் சத்விசாரப் பணியை வளர்க்க முடியும். உண்மை என்பது என்றும் உள்ளதுவாய் ஒருபடித்தாகத்தான் உள்ளது. சத்விசாரத் தின் மூலம் நாம்தான் வளர்ந்து வளர்ந்து உண்மையை நெருங்குகிறோம். ''உள்ளதனை உள்ளபடி உணர உணர்த் தினையே'' என்று அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடம் நம்பெருமானார் திருவாய் மலர்ந்தருள்வார்.

கட்டுரைகள் 16, 17, 18, 19. தலைப்புகள் பாண்டி வானொலி சிந்தனை அமுதத்தில் பேசியதும் ஏனைய கட்டுரைகளனைத்தும் செய்தி இதழ்களில் வந்தவைகளே இவைகளைப்பற்றிய சங்கைகள் பின்னர் வந்தவைகளுக்குப் பதிலும் ஆங்காங்கு தரப் பெற்றிருக்கிறது.

தமிழ்மாகடல் டாக்டர் வ.சுப ''மா'' அவர்கள் வழங்கி யுள்ள அணிந்துரை, எளியேனை ஏறாநிலைமிசை ஏற்றி வைத்துள்ளது. இறையருளை எப்படித் துதித்து எல்லை காண முடியாதோ அவ்வாறுதானாகும். இத்தூய நெறி

Koviloor Digital Library

யாளருக்கு நன்றி சொல்லத் துணிவது. அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் ஒப்பற்ற மாணிக்கமாகவே ஒளி விடுகிறது. வள்ளற் பெருமானைத் துதிப்பதொன்றே இவர்களுக்கு நன்றியுரையாகும்.

பலதுன்றைகளில் நல்ல ஆய்வு நூல்களை வெளியிட்டு வரும் சிதம்பரம் மணிவாசக நூலகத்தார் வள்ளற் பெருமான் பற்றிய நூல் முதன் முதலில் வெளியிட்ட இந்நூலைத் தொடர்ந்து வடலூர் சாலை, சபையில் உள்ள கல்வெட்டுப் பாடல்களை வெளியிட்டார்கள் பின்னர் வள்ளலாரும் திருஞான சம்பந்தரும், வள்ளலாரும் மாணிக்கவாசகரும், வள்ளலாரும் திருநாவுக் கரசரும் வள்ளலாரும் தாயுமானாரும், என்ற வரிசை நூல்களையும் வெளியிட்டு இப்போது திருவருட்பாச் சிந்தனை என்ற ஆய்வுப் பெருநூலை பேராசிரியர், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் உயர் சைவத் திரு க. வெள்ளை வாரணனாரைக்கொண்டு வெளியிடுகிறார்கள். வள்ளலார் நூல்கள் வெளியிடப் பெரிதும் ஆர்வங் கொண்டிருப்பது தெரிந்து மகிழ்கிறேன். நல்ல பல நூல்கள் வெளிவரவும் மக்கள் பயனடையவும் பணி செய்யப்பதிப்பகத்தாருக்கு அருள் பாலிக்க எந்தை பிரான் திருவடி பற்றி வாழ்த்துகிறேன்.

நூல் செம்மைபெற விரைவான காலத்தில் அச்சுப் பணி செய்து தந்த அபிராமி அச்சக உரிமையாளர் வாழிய ''சுப்பு''. எல்லா நலன்களும் பெற்று வாழ்வுயர வாழ்த்துகிறேன்.

''எங்கே கருணை இயற்கையில் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெரும் சிவமே''

வள்ளலார் கழல் வாழ்த்த வாழ்வாவதே!

வடலூர்

பழ. சண்முகம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

எந்தையே சிவபதியே

1. வந்தெமை ஆண்டருளே — 1

2. வடலூர் வள்ளல் — 2

3. செஞ்சுடர்ப் பூ — 11

4. கைபிடிக்கக் கால் பிடித்தேன்! — 47

5. அறியாமையின் அருமை — 63

6. சும்மாயிருக்கும் சுகம் — 77

7. ''விளங்குகவே'' — 95

8. ''செத்தார் எழுதல்'' எனச் செப்பியதும் தீதாமோ? — 104

9. கனவுகாண், கருத்து — 125

10. திருமுறைக்கும் தீட்டுண்டோ! — 148

11. சந்தோடச் சந்தோடல் — 162

12. கொடி விளக்கம் — 167

13. மணிமாடம் திறப்பு விழா — 182

Koviloor Digital Library

14. இறைவனடி சேர்தலில் ஏமாற்றமா? — 189

15. கண்ணாடியிலா கந்தன் காட்சி? — 194

16. நோன்பு — 201

17. தொண்டு — 203

18. பக்தி — 206

19. அடிகளாரின் அருள் நெறி — 209

20. வஞ்சமிலா வள்ளலுக்கு வாழ்த்து — 216

21. மூவா மருந்தேநீ! முந்து — 218

22. எந்தையே இராமலிங்க நின் இணையடி ஏத்து வோமே — 222

Koviloor Digital Library

எந்தையே! சிவபதியே!

1. வந்தெமை ஆண்டருளே!

வெண்துகில் கொண்டு செஞ்சுடர்மேனி
விளங்கும் படிமூடி
விண்ணவர் முனிவர் கண்டுகண் கூச
வெள்ளொளியே பரப்பி
எண்டிசைத் தேவரும் இவ்வுலகடைந்து
எழிலுறு சித்திபெற
இணையிலா ஞானசபைதனை நிறுவிய
எந்தையே! சிவபதியே!
கண்ணொளி தனிலே கதிரொளி வீசிய
கருணைக் கடலமுதே!
கடவுளர் நிலைகளில் கலக்கமகற்றிய
கண்கண்ட பேரொளியே!
மண்ணக வாழ்வினில் மரணமதோட்டிய
வடலூர்ப் பொன்னுடல!
மருதூர்மாமணி வள்ளற் பெருந்தகை
வந்தெமை ஆண்டருளே!

Koviloor Digital Library

2. வடலூர் வள்ளல்

விண்ணவரும் கண்கூசும் வெள்ளொளியைப் பூத்துநிதம்
மண்ணகத்தில் விண்ணகத்தை வைத்தாளும்
வெண்துகிலார்
செஞ்சுடர்ப் பொன் மேனியனே! செந்தேன்
— திருவருட்பா
கொஞ்சுமொழிக் கிள்ளைநீயென் கோன்.

உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை நிலவி வரும் கடவுட் கொள்கை மறுப்பும், அக்கொள்கையை ஏற்றோரில் காணப்பெறும் கருத்து வேற்றுமையும் என்றென்றும் இருந்து வரவே செய்யும். இதுதான் இயற்கையின் நியதி. உயிர் வளர்ச்சிக்கு இதுவே தக்க நீர்வளம்.

இந்த நீர்வளத்தில் சிந்தை மயக்கறுத்துத் தெளிவு பெற்று வளர்ந்து சிவபரம்பொருளில் ஒன்றிய பெரு மக்களே 'அருளாளர்' வரிசையில் வைக்கப்பெற்றுப் போற்றவும், வாழ்த்தவும் பெற்று வருகிறார்கள் என்பது கண்கூடு. தவத்தில் பெரியார்களான இம் மகான்கள் திருவாய்மலர்ந்தருளிய அருள்மொழி ஏடுகள்தாம் எதிர் நீச்சல் கண்டவை. "ஞாயிறும் திங்களும்" உள்ளவரை இவற்றின் செஞ்சொற்கள் ஒளி வீசிக் கொண்டே இருக்கும். இந்த நிலையில் தமிழகத்தில் அருளாளர்கள் வரிசைப் பட்டியலில், யோக மூர்த்தியாம் தாயுமானவப் பெருந்தகைக்குப் பின் தோன்றியருளிய ஒப்பற்ற மாப் பெருமை வடலூர் வள்ளற் பெருந்தகைக்கே சாரும். தற்சேர்ந்தாரைக் காக்கும் பெற்றித்தாய தேனாம் திருவாசகத்தில் தன்னை அர்ப்பணித்து அன்புருவம், அருளுருவம் இன்புருவ மென்ற மூவுருவ சித்தி பெற்று

Koviloor Digital Library

அருட்பெருஞ்சோதி ஆண்டவன் ஒருவனேதான் எனை ஈன்றான் நான் ''ஒருவன் தானே'' அவன்பிள்ளை யெனப் பெரியர் எலாம் அறிந்து பேசுமாறு பெரும் பேறு பெற்ற பேராளர் அடிகளார்.

திருமறையாம் ''வேதம்'', சிவபரம் பொருளால் அருளப் பெற்றவை. அவ்வாறு அருளியவற்றை இப்போது யாரும் மாற்றமுடியாது. காலத்திற்கேற்ப அம் மொழி களில் சிலவே செயல்பட முடியும். சில மோனமாகவே நின்றுவிடும். சில இடங்களில் மிகுதியாகவும் கொள்ள வேண்டியது அமையும். இதுதான் கால வளர்ச்சியின் தர்மம். இந் நிலைக்கு அதாவது வேதம் மொழிந்த இறைவனருளுக்கு இசையவே புதுமைகள் செய்பவர்கள் யாவர்? இதற்குச் சேக்கிழார் பெருமான் விடை தருகிறார்கள்.

"திருமறை நம்பர் தாம்முன்பு அருள்செய்த
"அதனைச் செப்பும்".
ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரானார் பால் ஒக்க
வருமருட் செய்கை "நாமே வகுத்திட வல்லோர்"
என்றால்
பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க்கு "இடையீடு",
பெரிதாமன்றே".

(பெரிய — திருஞானசம்பந்தர்: 592)

இத்திருப்பாட்டைப் பொருள் செய்யுமிடத்து ''அதனைச் செப்பும்'' என்ற இடத்தில் ஒரு முற்றுப்புள்ளி வைத்தல் பொருத்தமாகும். அதனைத் தான்செப்பும்' அதாவது கூடவோ, குறையவோ செப்பாது சொன்ன வற்றைத்தான் அது இப்போது செப்பமுடியும். ஆனால்

Koviloor Digital Library

கால வளர்ச்சியில் பல மாறுதலாகியே தீர வேண்டிய நின்றியமையாததாகிறது. யார் செய்ய முடியும்? அதனைச் செப்பியே ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரானார்பால் ஒக்க வருமருட் செய்கை தாமே வகுத்திட வல்லமை பெற்ற ''அருளாளர்களே'' தாம் செய்ய முடியும். அதனால்தான் ''எனதுரை தனதுரை'' என்றும், ''நான் உரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை'' யென்றும் ஆணையிட்டுக் கூறுகின்றார்கள்.

உதாரணமாக, ஒன்று சொல்லுவோம். பசுவேட்டல் மூல வேத உடன்பாடு. ஆனால் இந்த உடன்பாட்டைத் தமிழ்மறை வகுத்த அருளாளர் திருவள்ளுவப் பெருந்தகையார் 'ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமையேதான் அவிசொரிந்தாயிரம் வேட்டலின் நன்று' (குறள் 259) என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். இப்போது இது தான் செயல்படுகிறது. இதையே வேதமொழியாகக் கொள்கிறோம். ஆகவே அருளாளர்கள் வரிசையில் வரும் உத்தமோத்தம ஞானிகள் செய்தவெல்லாம் வேதமே. முன்னைய ஆதிவேதத்திற்கும் இப்போதைய நடைமுறைத் திருமறைகளுக்கும் இடைவெளி பெரியதாகவே இருக்கு மென்பது செந்தமிழ் மாமுனிவராம் சேக்கிழார் பெருமானின் ஒப்பற்ற உட்கிடக்கையென்பது புலனாகிறது.

உயிர்களின் பேரில் உள்ள பெருங்கருணைத் திறத்தால் இறையருள்தான்இத்தகைய அருளாளர்கள் வழி இக்கால நடைமுறை வேத வாக்கியங்களாகப் பலப்பல மொழிகளைச் செய்து அம்மொழிகளை மக்கள் நம்புவான் வேண்டி அவர்களிடம் பல பேராற்றல்களான அருட் செயல்களையும் வைத்தாளுகிறது. ஒவ்வொரு சமயமும்

Koviloor Digital Library

தனக்குவமையில்லாத தனிப் பெருந் தலைவனாம் வாலறிவனாலே அந்தந்த நாட்டு வளர்ச்சி, பக்குவம், காலம் இவற்றுக்கேற்ப அருளாளர்கள் பூவுலகில் பிறந்தருளச் செய்யப்பெறுகிறார்கள்.

இம்முறையில்தான் அறத்தாறு நிலைநிறுத்த நலஞ் சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும்'' [திரு ஆரூர்த் திருத்தாண்டகம் (9)] ஒன்று அப்பர் மூர்த்திகள் கூறி யருளிய போது முதல் மலர் ''கொல்லாமை''யே ஆகிறது. கொல்லாமை என்னும் போது புலால் புசிப்பு என்று மட்டும் பொருள் கோடல் தகாது. மனத்தாலும், மொழி யாலும், செயலாலும் கொல்லாமையைக் கடைப் பிடித்தாக வேண்டும். எண்மலர்களில் ஈறாக ''அன்பு'', என்ற ஒருமலர் எட்டாவது மலராக மிளிர்கிறது. முதலுக்கும் ஈறுக்கும் நடுவேஉள்ள ஆறு மலர்களாவன: ''பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம்''. ஆதி கொல்லாமையாகவும், அந்தம் அன்புடைமை யாகவும், நடுவே உள்ள ஆறும் அதன் அங்கங்களாகவும் காட்டியருளுவர் அப்பர் பெருமான்.

வாடிய பயிரைக் கண்டபோது வடலூர் வள்ளல் கண்ணீர் விட்டார்கள். ஒரு கட்டியாக இருந்த மண்ணாங் கட்டி உதிரும்போதும் கரைகிறார்கள். துன்பத்தில் நெஞ்சிளகும் வள்ளற்பெருந்தகை ''ஜீவகாருண்யமே மோட்சவீட்டின் திறவுகோல்'' என்கிறார்கள் ஆன்மீக உலகிலேயே புதியப் படைப்புப் புரட்சி செய்யும் அடிகள் நாலாந்திருமுறை ஆநந்த மாலையில் தன்னைப் ''புதியன்'' எனப் பேசிய பெருந்தகை ஆறாந்திருமுறையில் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவன் அன்றோ'' என்று சூசக நயமாக தம்மை அறிமுகம் செய்து, கொண்டு தம்புதுமைக்குப் பழமை

Koviloor Digital Library

யோர்களைச் கவரச் சொல்லாமற் சொல்லி அழைக்கும். திறன்புன்னி மகிழ்தற்குரியது. காலத்திற்கேற்ப இந்த ''நெகிழ்ச்சியை'' ''அன்பை'' விளக்கிப் பாமாலைகளாக, உரைநடைகளாக பத்திரிகை வாயிலாக, சங்கம் நிறுவி ''கந்து கந்தென்று'' கத்தியமைந்த ஒரே ஒருவர் வள்ளற் பெருந்தகை என்றால் அது மிகை ஆகாது. இவ்வாற்றால் முன்னைய அருளாளர்கள் குறைந்தவர்கள் என்பது பொருளே அன்று. அவர்கள் அனைவரும் திரண்டுதான் வடலூர் வள்ளல் திருவுருவில் இறையருளால் காலந்திற் கேற்ப வருவிக்க வந்துள்ளார்கள் என்பதே பொருள்.

''எல்லாம் அற என்னையிழந்த நலம்'' [கந்தர் அநுபூதி-(2)] என்று அருணை முனிபுங்கவரும் ''யான்எனது என்னும் செருக்கறுப்பான்'' (குறள்-346) என்று பொய்யா மொழியாரும், ''நான் எனது என்னும் மாயம் கடிந்த வாயிலே நின்று'' (திருவாசகம்-569) என்று மணிமொழி நாவரும் அடிப்படை உண்மையை எடுத்துக்காட்டுகிறார் கள். இறைவழிபாடு செய்வதெல்லாம் இந்நிலையை அடையத்தானே தவிர 24 மணி நேரத்தில் 23 மணி 59 மணித்துளிகள் நேரம் வழிபாடு செய்து ஒரு நொடியில் ஈவிரக்கமற்ற தீச்செயல் செய்தால் பயன் என்னாகும்?

பிறவிப் பெருங்கடல் நீந்த ஒரேவழி ''அன்புடைமை'', என்பதை சமயத்துறை வாயிலாக நெஞ்சமுழுத்தி வற்புறுத்திய செம்மல் வடலூர் வள்ளற் பெருந்தகையே. மக்களின் நிலையைக் காண்கிறார்கள் அடிகள். எத்தனை பேர் சிவத்தொண்டு செய்கிறார்கள்? இறைவழிபாடு செய்கிறார்கள்? இறைத்தொண்டு செய்கிறார்கள்? சிவ பூஜை செய்கிறார்கள்? ஏன் முன்னேறவில்லை? என்ற நுட்பத்தை வெளிப்படுத்துகிறார்கள். ''செயல்களிலும், தொண்டுகளிலும் அன்புடைமை என்பது ஊடுருவவே

Koviloor Digital Library

இல்லை'' என்பதைச் சிக்கெனப் பிடித்து உள்ளம் நெகிழ்கிறார்கள். இவர்கள் சொன்ன அன்புடைமை தமிழ் மக்களுக்குப் புதுமை இல்லை. பன்னிரண்டு திருமுறைகளின் உள்ளீடே ''அன்புடைமை'' தான். இதை மிகுதியாக, இரத்தினச் சுருக்கமாக வற்புறுத்திய அருள்மொழிகளைத் திருமந்திரமும், திருவாசகமுமான தமிழ் தோத்திர ஆகமங்களில் பரக்கக் காணலாம். ''அன்பே சிவமாவதாரும் அறிகிலார்'' (திருமந்திரம்-270) என்ற திருமந்திரமும் ''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு'' (திருவாசகம்-218) என்ற வாதவூரடிகள் வாய்மொழியும் நம்மிரு கண்களாக ஒளிர்கின்றன. இந்த அன்பு என்ற சொல்லுக்குப் பொருள் கண்டு வாழ்க்கையில் கொண்டுவராத நிலையே பிறப்புக்கு மேலும் மேலும் வித்தாகிறது.

அன்புடைமை நமது வாழ்வில் பொருளற்ற ஒரு வழக்குச் சொல்லாகி விடுகிறது. அனைவருக்கும் கடிதம் எழுதத் தொடங்கும்போது ''அன்புடையீர்'' என்ற சொல் எப்படி ஆழமற்ற நிலையில் வழங்கப்படுகிறதோ அவ்வளவில் தான் அன்புடைமைத் தன்மையும் செயல்படுகிறது. மக்களிடத்தில் தாய் காட்டும் அன்புதான் அன்புடைமைக்குச் சான்றாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதே நிலை அன்பு எல்லா உயிர்களிடத்தும் நாம் காட்டுவதில்லை. நெஞ்சிளகும் நிலையில் யாதொன்றும் சிந்திக்காமல் செயல்படுவதே அன்பு. தந்நிலை உணராது தியாகம் செய்வதுதான் அன்பு. இவ்வாறு சிந்தியாமல் செய்வதால் பிறகு ஏற்படும் நலந்தீங்குகளுக்கு ஆளாகும் இயல்பே அன்புடைமைத் தத்துவமாகிறது. சிந்தித்துச் செயல் படுவது அன்பு ஆகாது.

ஓர் உவமை மட்டும் சொல்லி விளக்குவோம். பிள்ளை நெருப்பில் விழுந்து விட்டால் உடனே தாயானவள்

Koviloor Digital Library

நெருப்பில் குதித்துக் குழந்தையைத் தூக்குவாள். இதில் சிந்தனையே இல்லை. இது அன்பின் செயல். ஏதேனும் கொஞ்சம் சிந்தித்து அதாவது நாம் என்ன ஆவோம், நம் அணிகலன்கள் என்னாம், நம் உயிர் என்னாம் என்று யோசித்துத் தொடங்குவளேயாயின் அது 'அன்புடைமை யின் அரிச்சுவடி கூடவாகாது.

நான், எனது என்ற நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந் தால்தான் "தான்" இல்லாமலிருக்கலாம். அவ்வாறு "நானாகிய தான்" அற்றால்தான் "தானாகிய தானாம் பரமன்" கொலு வீற்றிருப்பான் என்பது தெளிவு. இந்த "நான், எனது" என்பது அணுவளவு கூட இல்லாமல் ஒருவன் நிலை எய்தி விடுவானானால் அவனுக்குப் பல அடையாளங்கள் அடிகள். கூறுகிறார்கள். தன்னை இழந்தவர்களுக்கும் இழக்காதவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள இடைவெளி இருப்பது இயல்பு அன்றோ? ஆராய்ச்சி செய்தா அவர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்? பட்டப்பகலில் பசுமாட்டைத் தெரிந்து கொள்ளப் பூதக் கண்ணாடியா வேண்டும்? "பல்லோருங் காண என்றன் பசு பாசம் அறுந்தானை", (திருவாசகம்-476) என்பதால் தெரிந்து கொள்ள முடியும்.

வடலூர் வள்ளற் பெருந்தகை, பசு பாசம் அறுத்தவர் களுடைய திருமேனியே மாறிக் காட்சியளிக்கும் என்பதை அருட்பெருஞ்ஜோதி அகவல் எண்—1450 "தோலெலாம் குழைந்திட..." என்பது முதல் 1490. "பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டாய் என்னுளம் கலந்த என் தனி அன்பே" என்றது வரை பொன்னுடலம் பெறுகின்ற அனுபவங்களைத் திருவாய் மலர்ந்தருளு கிறார்கள். இதற்கு வித்தாகத் அழுதடியடைந்த அன்புருவர் "புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்

Koviloor Digital Library

பொன்னெடுங் கோயிலாப் புகுந்து'' (திருவாசகம்—545) என்பதை அன்றே தந்து அருளிச் செய்திருக்கிறார்கள். இதை உறுதிப்படுத்துமாப்போல் 'வச்சிரங்களென மேனி தங்கமுற', என்பார்கள். திருப்புகழ் அமிர்த சிவயோக ஞானியாம் அருணகிரிப் பெருந்தகை தில்லையம்பதித் திருப்புகழான ''கட்டிமுண்டகர'' என்ற திருப்பாடலில். இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாக ஆவடுதண்துறையில் தவம் புரிந்து தமிழ் ஆகமம் தந்த சிவயோக ஞான சித்தர் 'கறுத்த இரும்பே கனக மதானால் ...... மறித்துப் பிறவியல் வந்தணு கானே'' (திருமந்திரம்—2051) என்று பன்னெடுங் காலத்திற்கு முன்பே பகர்ந்தருளியுள்ளார்கள். இதை அண்மையில் திருவான்மியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞான பானு ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் திருத்தொடையல் என்ற பகுதியில் இந்நிலையை விளக்கம் செய்திருப்பதை தருகிறோம்:—

''நின்மலச் செஞ்ஜோதி வடிவுடைய உனை
அனவரதம் நினைப்போர்க்கு என்றும்
பொன்மயச் செம்மேனி உடம்புண்டாகும்;
நரை திரைகள் பொருந்தா புன்கண்
தன்னுரத்தினால் உயிர்கொள் கூற்றமணு
காதெதினும்சத்தாய் நிற்கும் — ;
சின்மயத்தின் தெருட் பிழம்பே!
யான் றொழுமேர் வேற்சமர்த்தா! சிவச்சீர்க்குன்றே!
—(பாடல் எண்-12).

விரிவஞ்சி இதன் விளக்கத்தை இத்துடன் நிறுத்துகிறோம்,

ஆகவே பல கோடி கற்பகாலமாகக் காணமுடியாத சிவபரம்பொருள் ''பொருள் தெரிந்த, புரிந்த நடை

Koviloor Digital Library

முறை அனுபவத்தில், உள்ள பரிபூரண உச்சநிலை அன்பில்'' காட்சி கொடுக்கும் என்ற முன்னைய பேரருளா ளர்கள் கருத்துரைக்குச் சுருக்கமான விளக்கவுரை தருவது போலத் தந்தருளிய திரு அருட்பாப் பாடலைப் பார்ப்போ மாக:-

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படும்பரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே!
அன்புருவாம் பர சிவமே."!

மேற்கண்ட திருப்பாடற் பொருளை

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு."

என்ற தமிழ்ப்பொதுமறை நமக்குத் தெற்றெனத் தெளி வாக உறுதிப்படுத்துகின்றது

எனவே திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க அடிகளார் இக்காலத்து "வேத மொழியர்" என ஏற்றம் பெறுகிறார்கள்.

Koviloor Digital Library

3. செஞ்சுடர்ப்பூ

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாச வள்ளற் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா திருப்பாடல்கள் 3160 முதல் 3169 வரை உள்ளவை "பிரசாத மாலை" என்ற தலைப்பில் அருளப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலிலும் ஆண்டவன், அடிகளுக்குப் 'பூ' ஒன்று அருளியதாகக் காண்கிறோம். இந்தப் பூவின் திருப்பெயர்கள் 10 பாடல்களிலும் கீழ்க்கண்டவாறு அருளப்பெறுகின்றன. முறையே:

(அ)

(1) செஞ்சுடர்ப்பூ
(2) தகு சுடர்ப்பூ
(3) குழகிய செஞ்சுடர்ப்பூ
(4) அலை கடந்த கடல் மலர்ந்த மணச் செழும்பூ
(5) அருள் மணப்பூ விளக்கம்
(6) அருள் மணப்பூ
(7) எத்தேவர்க்கும் மிக அரிய எனும் மணப்பூ
(8) செழுமணப்பூ
(9) மண் விருப்பம் கொளு மணப்பூ
(10) செழுமணப்பூ

இந்தத்திருவருட் "பூ" என்ன "பூ" என்பதைச் சிறிது தெரிந்து கொள்ள முயலுவோமா என்பது இக்கட்டுரையின் நோக்கம். வள்ளற்பெருமானின் செய்ய திருவடிகள் சென்னிமேற் கொண்டு தொடங்குவோமாக!

Koviloor Digital Library

இதற்குத் துணைசெய்ய அருட்பெருஞ்சோதி ஆண்டவன் எவ்வகைத் திருக்கோலம் பூண்டு அருளினன் என்று அருளப் பெற்றிருப்பதையும் சிந்திப்பது பொருத்தமாகும். அவ்வகைத் திருவடிவ வகைகள் கீழ்வருமாறு பாடல்களில் காண்கிறோம்:

(ஆ)

(1) திருவுருக்கொண்டருளி
(2) ஒரு பொன் வடிவம் தரித்தே
(3) அழகு நிறைந்திலக ஒரு திருமேனி தரித்தே
(4) விலை கடந்த மணியென ஓர் திருமேனி தரித்தே
(5) உலர்ந்தமரம் தழைக்குமொரு திருவுருவம் தாங்கி
(6) குருவடிவது கொண்டு
(7) முழுமணி போன்றொரு வடிவு
(8) தெள்ளமுதம் அனைய ஒரு திருவுருவம் தாங்கி
(9) கருணைவடிவெடுத்தருளி
(10) உன்னுதற்கும் உணர்வதற்கும் உவட்டாத வடிவம்.

மேலும் ஆய்வுக்குப் பக்கபலமாக இந்த அற்புதத் திருவளர் ''பூ'' வை எதிலிருந்து எடுத்தருளினன் இறைவன் என்பதையும் அடிகள் அருளுகின்றார். அவை முறையே:

(இ)

(1) திருநீற்றுப்பை அவிழ்த்து
(2) தன்வடிவத் திருநீற்றுப்பை அவிழ்த்து
(3) பொக்கணத்தில் எடுத்து

Koviloor Digital Library

(4) திருநீற்றுப்பை அவிழ்த்து

(5) திருநீற்றுக் கோயில் விரித்தருளி

இவற்றுடன் சிந்தனைக்கு வழிகாட்டப் பாடல்களில் இன்னும் சில குறிப்புகள் துணை செய்கின்றன. அவை முறையே:

(ஈ)

(3) அடியார்கழக நடு எனை இருத்தி அவர்க் கெல்லாம் திருநீறுகளித் தருளி என்னளவிற் கருணை முகமலர்ந்து குழகிய செஞ்சுடர்ப் பூவைப் பொக்கணத்தில் எடுத்துக் கொடுத்தருளி.

(5) அங்கு வந்திருந்தவர்கட்கெல்லாம் அலர்ந்த திருநீறு அளித்துப் பின்னர் என்றன் கரத்தில் அருள்மணப்பூ அளித்தனை.

ஆண்டவனுக்கும் அடிகளுக்கும் இந்நிகழ்ச்சியில் உரையாடல் நடந்ததாகத் தந்திருக்கும் இரண்டு பாடல்களின் விளக்கமும் நமக்கு அறிவுச்சுடர் கொளுத்துகின்றன. அவை முறையே:

(உ)

(1) தயாநிதியே! திருநீறும் தருக எனக் கேட்ப மருவுருக் கொண்டன்றளித்தாம் திருநீறு, இன்றுனக்கு மகிழ்ந்தளித்தாம் இவை.

(2) மின்வடிவப் பெருந்தகையே! திருநீறும் தருதல் வேண்டுமென முன்னரது விரும்பி யளித்தனம் நாம் உன்வடிவிற் காண்டியென உரைத்தருளி.

மேற்கண்ட குறிப்புகளுடன் இன்னும் ஆதாரங்கள் கிடைக்கின்றனவா எனப் பார்க்கும்போது பாடல்களில்

Koviloor Digital Library

திருவருட் குறிப்பை அறிந்திலனே அறிந்திலேனே எனப் பேசி அருளிய அடிகள் 9ஆம் பாடலிலும் 10ஆம் பாடலிலும் சில விளக்கம் தந்தருளுகின்றார். முறையே:

(ஊ)

(9) "கண்விருப்பம் கொளக் கரணங்கனிந்துகனிந்துருகக்
கருணைவடிவு எடுத்து அருளிக்கடையேன் முன்
கலந்து
மண்விருப்பம் கொளுமணப்பூ மகிழ்ந்தெனக்குக்
கொடுத்து வாழ்க என நின்றனை

(10) "துன்னுதற்கிங் கரிதாம் நின்திருவுளக் குறிப்பைத்
துணிந்தறியேன் எனினும் ஓர் துணிவின்
உவக்கின்றேன்."

இவ்வகைக் குறிப்புகள், இந்தத் தன்னேரில்லாத் தனிப் பெரும் ''பூ'' தான் என்ன என்பதை உறுதிப்படுத்தப் பேர் அரண் செய்கின்றன என்ற நிலையை உணரும்போது "வள்ளலார் கழல் வாழ்ந்தல் வாழ்வரவதே" என்ற அருள்நிலை வடிவில் திளைத்தின்புறுவதைத் தவிர என்ன வேறு சொல்லக்கிடக்கிறது?

எனவே இவ்வறுவகைப் (அ முதல் ஊ வரை) பகுதிகள் கொண்டு ''பூ'' வின் நிலைக்குப் புகுவோமாக! அருட் பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை!

(இ, ஈ, உ)

சுவாமிகளுக்குச் செஞ்சுடர்ப்பூ வழங்கப்பெற்றபோது ஏனைய அடியார்களும் உடனிருக்கிறார்கள், அத்திருக்

Koviloor Digital Library

கூட்ட நடுவில் அடிகளும் திருவிருக்கை கொண்டெழுந்தருளி யிருக்கின்றார். அளப்பரிய திருமேனி தாங்கி அங்கு அருள் பாலிக்க எழுந்தருளிய ஆண்டவன் அனைவருக்கும் திருநீறு வழங்கி அடிகளுக்கு மட்டும் ''செஞ்சுடர்ப்பூ'' அளித்தான். ஏன் இவ்வாறு மாற்றம்? திருச்சந்நிதியில் சமரசமாக வல்லவோ யாவருக்கும் ஒருபடித்தாய் வழங்கல் வேண்டும்! செஞ்சுடர்ப்பூ என உருப்படியாக ஒரு பூவை அருளியிருந் தால் அடிகள் ஏன் மீட்டும் திருநீறும் தருக எனக் கேட் கிறார்? ஏற்கெனவே திருநீறும் வழங்கப்பெற்றதாக இறை வனாரும் பதில் கூறி '' உன் வடிவில் காண்டி'' (பார்!) என அதை ருசுப்பிக்கின்றார். இதை அடிகள் மறுத்த தாகவுமில்லை. அன்றளித்தாம் திருநீறு என்பது (உடலை யும் குறிக்கும். போகப்போக அந்நிலை விளக்கம் பெறும்.) அடிகள் கருவுற்ற நிலையையும் கட்டும். ஆகவே அது முன் கொடுத்து முடிந்தது. இப்போது மகிழ்வோடு இது அளிக்கப்பெறுகிறது எனத் திருவாய் மலர்வர் ஆண்ட வனார். அடிகள் ஏதோ ஒன்றில் அமைதியுற்றுவிட்டார்கள் (உன்வடிவில் காண்டி என்றதும்) என்பது மட்டும் தெள்ளத் தெளிய அறியக்கிடக்கிறது, வடிவத்தில் கண்டு முடிந்தது. அதுதான் அப்பூவின் நிலை. அவ்வாறாயின் இதில் உள்ள சூதுதான் என்னை?

இங்குப் பேசப்பெறுவது திருநீறுமல்ல, ஒருவகைப் பூவு மல்ல! எனத் துணிய வேண்டியதேற்படுகிறது. இப்போது ஆலயங்களில் தரப்பெறும் திருநீறு எதை உணர்த்தி நிற் கின்றதென்றால் நம் மேனி ஒளி வண்ணமாதல் வேண்டும் என்ற பொன்னுடலப்பேற்றை. இத்தகைய நோக்குடன் தருபவர் தருவதுமில்லை, பெறுபவர் பெறுவதுமில்லை, வெற்றுச் சடங்குகளாகி விட்டபடியாலும், வடிகட்டிகள் போல் சாற்றைக் கீழே ஒழுகவிட்டுச் சக்கையைப் பிடித்து

Koviloor Digital Library

வளர்த்துக் கொண்டோமாகையாலும்தான் வள்ளற் பெருந்தகை திருஅவதாரம் செய்ய இந்தத் திருநீற்றையே (வள்ளலாரின் திருகருவுதிக்க) சிவபரம் பொருள் ''பிரசாத மாகப்'' பெருமானின் தாயிடத்துச் சேர்த்துச் சென்றது. அப்போதிருந்தே திருநீறு அதன் பணியைத் தொடங்கி விட்டது.

திருநீற்றுச் சிறப்பை வள்ளற்பெருமான் குருமூர்த்தி களாகக் கொண்ட ஆளுடைய பிள்ளையாராம் திருஞான சம்பந்த சிவக்கொழுந்து ஞானச் செல்வம் திருக்கடைக் காப்பில் திருநீற்றுப்பதிகமே அருளிச் செய்துள்ளமை நாமனைவரும் அறிந்தது. அச்சிறப்பெலாம் ஒருங்கேயடைந் தவர் நம்பெருமானார். ஒளிவடிவாகி ஒளியில் தான்வேறு தன்வடிவுவேறு என்பதில்லாமல் ஒளியேயானதால்தான் திருமணநல்லூர்ப் பேரொளியில் ஆளுடையபிள்ளைப் பெருந்தகை சேர்ந்தருள முடிந்தது. குரு வழி சீடரன்றோ!

மேலும் முன் ஒரு முறை ஆண்டவனால் அடிகளுக்கு நேரே திருநீறு வழங்கப் பெற்றதாயும் தெரியக்கிடக் கின்றது. கேட்கவா வேண்டும். நிலையைப்பற்றி! அருளி யவர் யார்? ஏற்றவர் யார்? என்பதை நாம் நினை விலிறுத்த வேண்டும். ஒரு முறை பிரசாதம் தந்தருளி முடிந்தது. அதன் பலன் இப்போது நிறைவெய்துகிறது. அதை விளக்கியருளுகின்றார் அடிகள்! இந்தப் பூவயையும் திருநீறு போல் ஒரு பிரசாதமாக்க் கருதினால் முன் ஆண்டவர் அருளிய திருநீற்றுக்குப் பொருள் என்ன? நம் போன்றவர்களுக் கல்லவா, நம் போன்றவர் கள் திருநீறு தரும் தடவைகள் (நிகழ்வுகள்) எண்ணிக்கை கடந்துவளரும்! மேலும் திருநீற்றின் பொருளே வெறொன்றுண்டு. அதன் விளக்கம் அனைத்தும் பின்னர் இதன் கீழ்ச் சிந்திக்கப்பெறும்.

Koviloor Digital Library

ஆகவே முன் அருளப் பெற்ற திருநீறு என்ன செய்தது? வள்ளற்பெருமானின் குறிக்கோள் என்ன? சுத்தப் பிரணவ ஞான வடிவாக வேண்டுமென்பதொன்றே முடிந்த முடிவு. அதற்கெனக் கருவிலுற்றவர் அது நிறை வெய்தும் தருணம் இது! அதுதான் பிரசாத சித்தி. அது குறித்துத்தான் இந்தப் பத்துப்பாடல்களும் பிரசாத மாலையாக மிளிருகின்றன. (ப்ர-மேலாம் (சிவ) பரம் பொருள்; ஸா-கதி; தம்-தருவது) ஏனைய அடியார்களுக்கு இப்போதுதான் திருநீறு வழங்கப் பெறுகிறது (சுத்ததேக வடிவுகள் பெறுவதற்குரிய பக்குவநிலைகள் அவ்வடியார் களுக்கு இனித்தான் தொடங்க வேண்டுமென்பது குறிப்பு). திருநீறு வழங்கியவுடனே அந்நிலையில் முடிந்த நிலையில் ஆகிவிடுவதுமுண்டு. திருநீறு வழங்காமலே நிலை யெய்துவதுமுண்டு. அடிகள் தம்முடைய அனுபவத்தை விரித்தருளுகிறார்கள். இதிலும் ஓர் உண்மை புலனாக வேண்டும்.

எதெது குறித்துத் தவமியற்றுகிறோமோ அது நிறை வெய்தும் பக்குவத்தில் பரமகருணாநிதியாம் இறைவன் அருள் புரிந்தே தீர்வான். இங்குக் குறிப்பெல்லாம் அடைய வேண்டிய லட்சியத்துக்கு நாமியற்றும் தவமேதான். அதன்முடிவுக்குப் புற அடையாளமாகப் புறப்பொருள் ஒன்றை வைத்துப் பேசுவது மரபே தவிர வேறல்ல.

நாம் பெறும் திருநீறு இதுவரை உலகபோக காரியங்கள் சித்தியடைய வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டது. அக் குறிக்கோளை மாற்றியமைக்கத் திருவுளம் கொண்டார் அடிகள்.. முதன் முதலில் திருநீறு பெறும்போதும், பிறகு அடிக்கடி விபூதி நாம் பெறும் போதும் அல்லது நாமாகத் தரிக்கும்போதும் அந்த உறைப்பு தவமாக மாறவேண்டும், ஒளியுடலாவதற்கு என்று காட்டியருள்வரடிகள். இதில் ஒரு சிறப்பு,

Koviloor Digital Library

திருநீற்றுக் கோயில் விரித்தருளி எனப் பாடலில் வருவதை மேலே காண்கின்றோம். திருநீற்றுப்பை, பொக்கணம் என்பன நமக்குப் பழகிய சொற்கள். திருநீற்றுக்கோயில் என ஏன் திருச்செவ்வாய் மலர்ந்தது? கோயில் என்பது உடலைக் குறிக்கும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே."

—(திருமந்திரம்-1823.)

திருநீற்றுப்பை எல்லோரும் வைத்துக் கொள்வது மரபு. சிலர் பை கொள்ளாது சம்புடங்கள் பொட்டலங்கள் வைத்துக் கொள்வர். இது குறிக்கவே பொக்கணமென்று இயம்பியருளினார். அபூர்வமாக மிகப் பெரியவர்கள் தங்கள் இருக்கையில் புத்தகங்களுடன் கோபுரம் போன்று ஒரு வடிவம் மரத்தாலோ - செம்பினாலோ, தங்கத்தாலோ தங்கள் வசதிக்கேற்ப வைத்துளதைக் கண்டோர் ஒப்புவர். அதிலிருந்து திருநீறு எடுத்து வழங்குவார்கள்! அதற்குத் திருநீற்றுக் கோயில் என்ற வழக்கு இன்றும் மருவுகிறது. வேறு மாற்றுப் பெயரே இல்லை. பெருமான் மெல்ல மெல்லத் தெரிந்தது காட்டித் தெரியாததுணர்த்துகின்றார்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே."

—(திருமந்திரம்—1666)

Koviloor Digital Library

இவ்விடத்து ''மங்காமல் பூசி'' எனப்பேசி யருளியதை நன்றாகச் சிந்திக்க வேண்டும். மங்காமல் என்றால் திருநீறு அழியாமல்-கலையாமல் - பூசுவதென்பது பொதுமை. அது வல்ல நோக்கம். ஒளிக்குத்தான், மங்கிய ஒளி, மங்காத வெளிச்சம், தூய ஒளி யெல்லாம் பேசுவோம். எந்த ஒளி மங்காமல் உளது என்பது இங்குக் கேள்வி. உள்ளொளியே மேலோங்க ஓங்க - மங்காமல் வளர வளரப் பொன்னொளி யாகி அம்முதிர்ச்சியே கண் கூசும் வெள்ளொளியாகிவிடும் உடலம். அவ்வொளி மங்காமல் பூசிப் பூசி அவ்வொளி யைப் பெருக்கவேண்டும் என்பது திருமூலதேவரின் உட் கிடக்கை. வள்ளற்பெருமான் திருநீற்றுப்பை-பொக்கண மென்று சொன்னவர்-திருநீற்றுக் கோயிலெனச் சிறப்பால் சிவனுறை கோவிலாகக் கொண்ட இறைவன் நம் உடம் பையும் கோயிலாகக் கொண்டு அவன் இருப்பை விளக்கி வைக்க வேண்டு மெனக்கருதுகின்றார்.

திருநீற்றுக்குப் பஞ்சாட்சரமெனும் ஒரு மரபுண்டு. பஞ்சாட்சரம் ஐந்தெழுத்தாகும். ஐந்தெழுத்து நம் உடலைக் குறிக்கும். உடல் இறைவனால் அருளப்பட்டது. ஆகவே உடலம் வந்ததையே திருநீறு தந்ததாகக் கொள்வர் ஞானானுபவ மஹான்கள். உடலம் எவ்வாறு இப்படி ஆகும் என்பதைப் பின்னர் காண இருக்கும் கீழ்ப் பகுதிகளில் விளக்கிக் கொள்வோமாக. இந்த அளவு இவண் குறிக்கப் பெறும் காரணமும் நன்வடிவத் திருநீற்றுப்பை அவிழ்த்து எனப் பேசப் பெற்றிருப்பதால், கோயில் இறை வனுக்கு இருக்கை; ஆகவே வடிவம் கோயிலாகியது. உள்ளிருக்கும் இறைவன் தன் சக்தியை, தன் ஆற்றலை, தன் அருளை எடுத்து அருளுகிறான். ஒன்றிலிருந்து ஒன்றை எடுத்துக் கொடுப்பதை எவ்வாறு புறத்தே சொல்லிக் காட்டுவது?

Koviloor Digital Library

"அருளது சத்தியாகும் அரன்றனக்கு அருளை இன்றித்
தெருள் சிவம் இல்லை; அந்தச்சிவம் இன்றிச் சத்தியில்லை
மருளினை அருளால் வாட்டி மன்உயிர்க்கு அளிப்பன்
கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்."
—(சிவஞான சித்தியார்—239)

அருட் பெருஞ்சோதி ஆண்டவனின் பேராற்றலை பேரருளைத்தான்—தனிப்பெருங் கருணை யென்றும் சத்தி யென்றும் அம்பாளென்றும் பேசி வருவது வழக்கு. 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்துநீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' என்பது நாமறியும் மணிமொழி. பிரிக்கமுடியாத பேரருளைத் தன்னிடத் திருந்து எடுத்து வழங்குவதைக் காட்டியருள வேண்டிப் பிரித்துப் பேசி அருளப் பெறுகிறது. அவ்வளவுதானே யன்றி அங்குச் சோதி வேறு, கருணை வேறாக இரண்டு பொருளாக ஒன்றுமில்லை. அடிப்படையில் கருணை ததும்பி வாழ்வு தழைக்குமேயானால் வளர வளர அதுவே முடிந்த நிலையாம் முத்தேக சித்தியைத் தந்து விடுகிறது. ஆகவே தன்வடிவத் திருநீற்றுப் பையிலிருந்து (தன் ஆற்றலாகிய முத்தேக சித்தியை) சுடர்ப்பூவை அருளினன் என்பது சாலும். திருநீற்றுப்பைக் குறிப்புகளை ஓரளவு கண்டோம். இனி ஆண்டவன் திருக்கோலம் பற்றிய குறிப்புகள் காண்போம்.

(அ)

உருவம் கடந்த அருட்சோதி இறைவன் அடிகளுக் காகத் தாங்கி வந்த உருவச்சிறப்பைக் காட்டியருளுவதே தனிச் சிறப்பாகின்றது. சாதாரணமாக நாம் செய்யும் பணிகளுக்கு ஏற்ப உடை தரிக்கின்றோம். வீட்டுக்கோர்

Koviloor Digital Library

உடை, தொழிலுக்கோர் உடை என. ஆண்டவனார் பணி எத்தகையது? வரும் வடிவம் கொண்டே தெரிய வேண்டு மல்லவா? நமக்கு வேடம் நம் உடம்பில் பிறபொருள் சேர்த்தால்தான் முடியும்? ஆண்டவன் தான் கொள்ளும் திருமேனியதனாலே வேறாகிவிடுவான். அதுவே அச் சிறப்பை உணர்த்தும்! எந்தெந்தக் குறிக்கோளுடைய அடியவரை எந்தெந்த வகையில் வேடம் தாங்கி ஆட்கொள வேண்டுமோ அந்தந்த வடிவத்தில் வந்தாட் கொள்வான்.

இங்கு அருளும் செயல் முத்தேக சித்தி. மணி ஒளி வீசும் பொன்னுடலம். ஊத்தையாம் இவ்வுடலைப் பொன் னாக்குவதென்றால் சாதாரணத் தவத்தாலோ சாதாரண சிறு தெய்வங்களாலோ ஆகவே ஆகாதன்றோ? பெறுப வரான அடியாரும் தலைசிறந்த நிலையாதல் வேண்டும். அதிலும் அதற்கெனத் தவமியற்றி யாதல் வேண்டும். கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்பதொன்றே-அஃது ஒன்றேதான்-வள்ளல் பெருந்தகையின் ஒப்பற்ற இலட்சியம். தன்னையே கொடுப்பவன் அல்லவா ஆண்டவன்!

ஆகவே அவ்வளவு ஒப்பற்ற செப்பரிய திருமேனி தாங்கி வருகிறான். இதற்கொப்ப இன்னொரு வடிவு கற்பனையிலும் இருக்கக்கூடாது. அப்படி வரவேண்டும். 10 பாடல்களிலும் தவறாது இந்நிலை பேசப் பெறுகிறது. கண்டோரால் விருப்புறும் திருமேனியாம் அது. யார் யாருக்கு எப்படியிருந்தால் அழகோ அவ்வாறு காட்சி யளிக்கும் பெற்றித்தாய சுடர்வண்ண மணி ஒளிப் பொன் வடிவு. நாம் இங்குக் காணும் பொன் நிறமல்ல சுவாமிகள் பெற்ற பொன் வண்ணம்! கிளிச்சிறை, ஆடகம் சாதரூபம் சாம்புநதம் என்ற ஒப்பற்ற நால்வகைப் பொன்னொளி

Koviloor Digital Library

யாம் அப்பேரொளிப் பெரும் நிலை! விலை மதிக்க முடியாத, பொள்ளப்படாத முழுமணி விளக்கம் வடிவ மெனச் சொன்னதேயன்றி அது அள்ளி விழுங்கும் அமுதாம்! அமுதமெனில் சாவா மருந்தாம்!

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

—(திருக்குறள்-82)

சாவா மருந்துதான் இங்குப் ''பூ'' எனச் சுட்டியருளப் பட்டது பற்பல வகையில். மருந்து என்றாலே அமுதம்! அது உருப்படியாகப் புறத்தே பிறர் கொடுத்து விளங்கும் பொருள் அல்ல! தனக்குத் தானே உண்டல்! தானே தன் முயற்சியால் பெறுவதுமல்ல! இறைவன் ஊற்றுகிறான். பல்லூழி காலப் பக்குவ முதிர்ச்சியால்! தன்னுள்ளிருந்தே! பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிப் பழமாகிக் (அமுதாகிக்) கனிகின்றான்! அப்பொருள் நல்க அதே வடிவாகி வருதல் தானே முறை! ''தெள்ளமுதமனைய ஒரு திருவுருவம் தாங்கி'' என்றருளுவரடிகள் பெருமகனார்! குருவடிவு கொண்டு வந்தாராம் ஆண்டவன்! நமக்குத்தான் எத் துணை குருமார்கள்! எந்தெந்த வகைக் காணிக்கைகள் வள்ளற் பெருமான் கொடுத்த காணிக்கைதான் என்ன? ''என்று நீ அன்று நான்'' என்பது போல் இப்பூவுலகில் அடிகள் என்று தோன்றினார்களோ முதன்முதலில் அவ் வேளையிலிருந்தே ஆற்றிய சொல்லொணா — சிந்தித் தறியா — கற்பனை கடந்த — மாதவமே காணிக்கை; உடல் பொருள் ஆவி என்ற மும்மையும் சமர்ப்பணம் — பரிபூரண காணிக்கை! செயலால் முக்கரணக் காணிக்கை; ஆகவே இனிக் குருநோக்கம் கொள்ளும் மரபே இல்லை. தலையாய குருவடிவு!

Koviloor Digital Library

"சாகாக் கல்வியின் தரமெலாம் கற்பித்து
ஏகாக் கரப்பொருள் ஈந்த சற்குருவே."

(வரி 1065-66)

என்ற திரு அகவலில் உள்ள குருநிலைப்பகுதிகளின் பெரு விளக்கங்களுள் ஒன்று மட்டும் இங்குக் கூறி இனி அடுத்த வடிவம் சிந்திப்பாம்!

தில்லையம்பதியில் நடந்த வரலாறு (கதை அல்ல). திருச்சிற்றம்பலவப் பெருமானுக்கு நித்திய வழிபாடாற்றி வரும் தீக்ஷிதப் பெரு மக்கள் பூசை முடிந்தவுடன் இல்லம் ஏகும்போது சிவிகையூர்ந்து தீவர்த்திகள் சகிதமாய்ச் செல்வது மரபு. இது மன்னர்களால் ஏற்படுத்தப் பெற்ற முறை. அதன் அறிகுறியாக இன்றும் அர்த்தயாமப் பூசை முடிந்து பூசகர்கள் வீடு திரும்பும்போது ஒரு சிறு கைத் தீபம் உடனெடுத்துப்போகப் பெறுகிறது கண்கூடு.

பகலிலும் இரவிலும் மரியாதையின் பொருட்டு இவ்வாறு நடைபெற்று வந்த அக்காலத்தில் ஒரு நாள் தீக்ஷிதப் பெருமகனார் அன்றைய முறை முடித்து வீடு செல்லும்போது உச்சிக்காலவேளை. தீவர்த்திகளுடன் பல்லக்கில் சென்ற தருணம் சைவசமய ஞான குரவர்கள் நால்வருள் ஒருவரான மறைஞான சம்பந்தராம் மூன்றாவது குருபெருமகனார் எதிர்ப்பட்டார்கள் சீடர்களுடன். பல்லக்கில் ஊர்ந்து வரும் தீக்ஷிதரவர்களை நோக்கி அவர்களுக்குக் கேட்கும்படியாகச் சொல்லியருளினார்கள்; "சீடர்காள், பட்டப் பகலில் பகற் குருடு பட்ட மரத்தில் ஊர்கிறது" என்று, அவ்வளவுதான், தீக்ஷிதப் பெருமகனார் சட்டெனக் குதித்தார். மறைஞான சம்பந்தரை அடியற்ற மரமென விழுந்து வணங்கினார். சும்மா விருப்பார்களா ஞானகுரவர்? ஓடினார் பாவு நெசவுத் தொழிலாளர் பகுதியில். அவர்கள் வார்த்த பாவுக் கூழை அருந்தினர்ர். கைவழியே வழிந்த

Koviloor Digital Library

கூழை சிவப்பிரசாதமாக தீக்ஷிதர் பெருமகனார் உண்டார். அவ்வளவுதான், ஞானபக்குவம் முதிர்ந்து பயன்பெற்றார். இவர்தாம் நாலாம் சைவசமய ஞானகுரவரான உமாபதி சிவ்தேவ நாயனார் என வழங்கும் உமாபதி சிவமாவார். இவர்தாம் பெத்தான் சாம்பானாம் பண்புடைப் பெரு மகனுக்குச் சத்யோநிர்வாண தீக்ஷயளித்து உடனடியாகச் சோதிமயமாக்கியவர். இனி வரலாறு மேலே வேண்டாம். இப்போது நடந்த அளவில் கவனிப்போம்.

பட்டமரம்-பல்லக்கு. வெட்டப்பட்ட காய்ந்த உலர்ந்த மரம். பகற்குருடு-ஞான சூன்யம். பட்டமரம் பாலூறித் தழைக்க வேண்டுமாம்! அகக் கண்ணான நெற்றிக்கண் திறக்கவேண்டுவதை உணர்த்தப் பகற்குருடுத் திரு வார்த்தை! நாமெல்லாம் பட்டமரம். செத்துப் பிறப்பது பட்டமரந் தொழில். பட்டமரமாம் நம் உடல் தழைப்ப தென்பது இனிச் சாவாமை. சாவாமை என்பது இவ் வூத்தை உடலுடன் வாழ்வதல்ல. என்றும் நிலவும் இறை ஒளிமயப் பொன்னுடலம் ஆவது. இதற்கு நெற்றிக்கண் திறந்து தவவலிவு உச்ச நிலையாகிச் சுத்த உஷ்ணத்தால் ஊன்உடலம் உருகி உருகி ஒளிமயமாதல்! இனியும் விரித்தல் பெருவிரிவாகும்.

இந்தப் பட்டமரம்தான் வள்ளற் பெருமான் கூறி யருளும் ''உலர்ந்த மரம் தழைக்குமொரு திருவுருவம் தாங்கி'' என்பது. பக்குவ முதிர்ச்சியின் காரணமாக இறைவனே குருவடிவில் எழுந்தருளி நோக்குகின்றார் பட்டமரம் தழைத்துப் பால் வடிவதுபோல் இவ்வுடலம் சாகாநிலை பெறுகிறது. இவ்வாறு திருவாய்மலர்ந்து செப்பிச் செப்பி அமைதிகாண முயலுகின்றார் அடிகள். முடியவில்லை! எல்லை வேண்டாமா? ஒரு சில வார்த்தை களில் முடிவு காணுகிறார்கள் வேறு வகையின்றி. ''உன்னு

Koviloor Digital Library

2285 R65

தற்கும் உணர்வதற்கும் உவட்டாத வடிவம்" என இனிச் சொல்ல என்ன உளது?

சிற்சில சமயங்களில் சங்கீத வல்லவர்கள் உச்ச ஸ்தாயியில் ஓங்கிப் பாடும்போது குரல்கொடுக்க ஆற்றாதவர்களாய்க் கைகளை மேலே. தூக்கிக் காட்டி விடுவதை ரசிகமணிகள் பார்த்து ஆனந்திப்பதைக் காண்கிறோம்! என்ன செய்யமுடியும், சொல்லும் அபிநயமும்! எல்லாம் கடந்த ஏழிசையாய் இசைப்பயனாய் நின்றொளிரும் பரம் பொருளை எப்படி வெளிப்படுத்த முடியும்! சொற்கழிவு பாத மலரன்றோ! திருப்தியை வெளிப்படுத்த முடியாத நிலை. உணர்ந்தார்க்கும் உணர்வரியோன் அல்லவா? "உன்னுதற்கும் உணர்வதற்கும் உவட்டாத வடிவமென" அருமையருமையான ரத்தினச் சுருக்க அமுத மொழிகளால் முடித்தருளும் பெருமையுன்னியுன்னி மகிழ்வதற்குரிய தாகும்! இவ்வளவில் கட்டுரையின் அடுத்துப் பார்க்கும் பகுதிக்கு வருவோம்.

(ஆ)

"பூவாம் அது சுடர்விடும் பூவாம்!" பூ எப்படிச் சுடர் விடும்? பூவாயிருந்தால் செந்நிறப் பூவாக ஒருவாறு கொள்ளலாம். அது செம்மையான ஒளியாம்! நால்வகைப் பூக்களுள் ஏதேனும் ஒன்றைக்கூடக் கொள்ள வாசகம் பொருந்தவில்லை. அப்பெயர்களின் போக்குகள்! கண்டது மிலை, கேட்டதுமிலை! 'வைத்தவன் எடுத்தல் வேண்டும், வழிதெரிந்தோன் நடக்க வேண்டும்' எனப் பெரியோர் கூறுவர்! நமக்கு என்ன தெரியும்? ("நாம்மக்கு" என்பதில் நம்மைப் பொறுத்தவரையில் நகரத்தின் பக்கமுள்ள கால் குறுகி நடக்க முடியாமல் கால் (ா) எடுபட்டு "நமக்கு" என ஆயிற்று).

Koviloor Digital Library

ஆகவே அடிகள் உணர்த்தும் "பூ" நாம் கண்ட பூவல்ல வென்பது வெளிப்படை, இதற்கு வேறு ஆய்வுகளே வேண்டாம்! பட்டப்பகற் சூரியன், வெயிற் காலம், மேகமே இல்லை, சூரியனைக் கண்ணாடி கொண்டா பார்ப்பது நல்ல கண்ணுடையோர்! நாம் தண்ணீர் விட்டு வளர்க்கும் செடிகொடி வகைப் பூ வகையல்லவாம், இயற்கைப்பூவாம்! அன்புப்பூவாம்! இளமையாயிருக்கு மாம்! தழை அரும்பு பூ என்ற வளர்ச்சி கடந்ததாம்! ஆகவே வாடாத கோடாத பூவாம்! இதற்குத்தக இன்னொரு "பூ" இல்லையாம்! கடலில் மலர்ந்ததாம். அதுவும் அலைகடந்த கடலாம்! அது தென்றல், வாடை, மணமெல்லாம் கடந்ததாம்! இந்நாட்டில் இல்லை எனின் கற்பக நாட்டுப் பாரிஜாத வகைப் பூவோவெனின் அது வும் இல்லையாம்! தேவர்களும் இப்படிப் பூ பார்த்த திலையே என்று ஆசைப்படும் பூவாம் அது! அரியது அரியது என்று அறைவார்களாம்!

பூதான் பார்த்ததிலை, மணம் பற்றிப் பேசினாலோ அது அருள்மணப் பூவாம்! சுவாமிகள் அநுபவித்து வைத்த அருமைத் திருப்பெயர்! ஆகவே புதுமலராகயிருக் கின்றது ஒப்புயர்வு கடந்த இந்த ஒளிப்பூ; இத்துடன் பெயர்வகை முடிந்ததா? பெரிய ஒரு புதிர் இனிவரும் திரு நாமம்! மண் விருப்பம் கொளுமணப்பூவாம் அது! நமக்குப் புதிர். அடிகளுக்கு அதீத அநுபவப் பொருள்! அந்தப் பூவை மண்ணானது விரும்புமாம்! அப்படியானால் நாம் விரும்ப மாட்டோமா? நாம் விரும்பாத பூவானால் நாமும் மண்தானோ! "மண்" என்றும் "பூ" என்றும் சுவாமிகள் எதைச் சுட்டுகிறார்கள்?

"கற்பூர மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர் திரு மேனியிலே கலந்தமண மதுதான்!

Koviloor Digital Library

இற்பூத மணம்போல மறைவதன்று கண்டாய்
இயற்கை மணம் துரியநிறை இறைவடிவந் துளதே
பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் திருவடியில் நண்ணியவா றதுவே
நற்பூதியணிந்த திருவடிவு முற்றும் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நான் அது
ஆனேனே.”
— (5723)

அடிகளின் திருமேனியில் கற்பூர மணம் வருகிறதாம் (மலம்நாறும் மானும் உடம்பில் எங்காவது மணம் வருமா?) செத்த பிறகுதான் பிணம் எனப் பெயர். நாம் உயிருடனிருக்கும்போதே நாம் சாம்பிணங்களாம்! ‘‘செத்த பிணத்தருகே சாம்பிணங்கள் சென்றழுது’’ என்றாற் போல், நம்மீதும் வாடை உண்டு, குளித்துச் சுத்தமாகி நறுமணங் கமழும் வாஸனாதி திரவியவகைகள், பொடி வகைகள் தடவினாலும் ஒருவித வாடை உண்டு. வாடை எனின் வடதிசைக் காற்றல்ல ஒரு வகை நாற்றம் (நாற்றம் = மணம்) என்ன நாற்றம்? - என்ன மணம்? கற்றாழை மணம்! இது என்ன புதிருக்குள் புதிராகயிருக்கிறதே, ஒரு புதிருமல்ல! ஒரு புதிருமல்ல! அநுபவமே! நம்மவர்களில் ஒரு சிலருக்குக் கற்றாழை மணம் இயல்பாயுண்டு. அதைப்போக்க எவ்வளவோ முயற்சிகள். நடவாது! உடலில் என்ன பூசினாலும் அது உடனடியாக மணக்கும், உள்ளிபோல (உள்ளி = பூண்டு-வெங்காயம்) அந்தந்த உடலங்களின் இயற்கை மணமாகும் இதுபோல ஒவ்வோர் இயல்பு கொண்டது உடல்வகை. இவ்வாறு இந்த அநுபவம் நமக்கு இருக்கும்போது ஏன் உயர்ந்த ஞானமணிகளுக்கு அந்தந்த நறுமணம் இருக்காது? அம்

Koviloor Digital Library

முறையில் தந்தையெம் பெருமானுக்கு மணந்தது கற்பூர மணம்

நாம் மோப்பக் கிடைத்தது கற்றாழை மணம் போன்ற தியலூழ்தந்த திருமணமே! என் செய்வோம்! இந்த நம் தவமிலாமையைக் கொண்டு சிவாநுபூதிச் செல்வங்களை அளக்க முயலுதல் எவ்வளவு அறியாமை! இதற்குரிய தவமாற்றின் ஏன் அந்தக் கற்பூர மணம் வராது? அறிவுச் செல்வம் ஒப்பமுடிகிறதே! சரி எப்படித்தானய்யா அந்த நறுமணம் வந்தது? இறைவனோடு இரண்டறக் கலந்ததால் பெற்ற நறுமணமாம் அது! அது செயற்கை மணமல்லவாம்! நாம் பெறும் புற மணமெல்லாம் செயற்கை. பூவிலிருந்து வரும் மணம் பூவிற்கு இயற்கை, நமக்குச் செயற்கை! ஆகவே இந்தப்பூமணம் புறமிருந்து பெற்றமணம் போல் அழிவுடையதல்ல! தோழி! கண்டு தெரிந்து கொள்வாயாக! அப்பர் பெருமானாம் நாவரசப் பெருந்தகை திருவாய்மலர்வார் திருத்தாண்டகங்களில் காண் காண் என்று! பார், தெரிந்து கொள்க என நிச்சயப்படுத்தி, அநுபவம் கொள் என்ற உறுதிச் சொல் வகை அவை. அவ்வாறு அடிகள் தோழியிடத்து உறுதிப் படுத்துகிறார், கண்டாய்! என்று. திருநீற்றை உன் வடிவில் காண்டி! என முன்னர் உறுதிமொழி கூறிக் காட்டியவாறு.

பாண்டியன் தேவிக்கு இயற்கை மணம் வந்தது கூந்தலில். இச்சூது வெளிப்பட அரசவை கூடியது. சங்கப் புலவர்களுக்கே தடுமாற்றம்! பூப்பணி அந்தணர் தருமி என்பார் இறையருளால் கவிகொணர்ந்தார், பொற்கிழி பெற! இறையனாரே நேரே வந்தார் கற்ற அறிவு வாதம் செய்தது! திருமுருகாற்றுப்படை

Koviloor Digital Library

நல்கியருளிய நக்கீரர் பெருமகனை நாம் காண முடிந்தது என்றாலும் அவ்வாதம் இன்றும் கற்றறி புலவர்களிடை அமைதியுற்றபாடில்லை! தேவாரம் கண்டாலும் அறிவு ஒப்புக் கொண்டால் தானே!

"மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன் காண்பொருப்புவலிச் சிலைக்கை
யோன்காண்,
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்,
பொன்காட்டக் கடிக் கொன்றை மருங்கே நின்ற
புனக் காந்தள் கைகாட்டக் கண்டுவண்டு,
தென்காட்டும் செழும்புறவிற் றிருப் புத்தூரில்
திருத்தளியான் காண் அவன் என் சிந்தையானே!"

(— திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
திருப்புத்தூர்த் திருத்தாண்டகம்-3)

'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி' என அப்பர் மூர்த்திகள் திருவாய்மலர்ந்தருளிய பின்னரும் "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி" (குறுந்தொகை-2) திருப்பாடலுக்குச் சங்கை இனியும் ஏனோ! தெரியவில்லை. ஆய்வின் முதிர்ச்சி நல்வழியில் இருக்க வேண்டுமெனச் சான்றோர் சாற்றுவர்! எனவே இயல்பான மணம் ஒன்றும் தனிமையாகந் தானே செயற்படுகிறது வேளை வரும் போது எனத் துணிவோமாக! பொன்னாலாகிய பூ வென்று தன் உடலத்தையே சுட்டியருளுவர் அடிகள்! பொன்னாலாகிய பூ மணம் பெற்றதாக நாம் உவமை காட்டுகிறோம்! ஆனால் நாம் காணா இவ்வுவமைச் செல்வத்தை நம் பெரு

Koviloor Digital Library

மானார் வாரி வழங்கியருளுகிறார்கள்! அநுபவ பூர்வமாக! ''பொன்மலர் நாற்ற முடைத்து'' என்பதை அடிகளிடம் காண்கின்றோம்!

நல்லதொரு திருமேனியில் புறமிருந்து பூசப்பெறாத திருநீறு இறைவன் கலப்பால் பூசாமல் பூசியருளிக் காட்டப் பெற்றது இயற்கைத் திருநீறு. ஆகவே தோழி நான் பெற்றது என்ன தெரியுமா? அது அது ஆனதுதான் என்றறைந் தருளுகிறார்கள்! அது அதுவானால் அங்கு என்ன உண்டு? என்ன இல்லை? இறைவனாருமில்லை, வள்ளற் பெருமானும் இல்லை. அநுபவமாம் இன்பநிலை மட்டும் எஞ்சியது. அப்படியானால் இரு பேரும் கலவாமல்—கலந்து இருக்காமல்—இருக்கிறார்கள்! கலத்தல் புறவடிவச் சேர்க்கையே அல்ல; அல்ல; அல்ல! ஓரளவு புறக்காட்சி தோற்றமாகக் கொண்டு அதன் உண்மையைச் சங்கையின்றி அமைதி காணும் இதய அறிவால் ஒப்பப் பழக வேண்டும்! இன்பநிலையைத்தான் சுகவடிவு என்றே பிற இடங்களில் வள்ளற் பெருந்தகை அருளுவார்கள்.

இந்தச் சுகவடிவின் உண்மை உய்த்து உணரப் பெறாமையாலோ, இப்படிச் செய்தாலாவது கேட்டுணரட்டும் என்றோ அருணகிரி முனிவர் பெற்ற சுக வடிவைக் கிளி வடிவாக்கி விட்டனர் மக்களாம் முன்னோர். மனிதப் பிறவி தந்து அதன் பயனடைந்த அருணை முனிவரை கிளி வடிவாக்கி ஏனோ இறைவன் மகிழ்கிறான்! பிறவான் இறவான் எனச்செப்பியருளப் பெற்ற முருகப் பெருமானே, இறவாப் பிறவாநிலை பெற்ற அருணகிரி நாதரைக் கிளியாக வைத்துளராம் திருக்கையில் (சுகம்-கிளி). தூல வடிவத் தோற்றக் கருத்துகளை உணர்ந்து சொற் பதங்களை மறந்து அவற்றுக்குரிய மூலம் தெரிந் தாதல் மனித அறிவின் மாண்பு! இங்கு முருகனும் இல்லை

Koviloor Digital Library

அருணகிரியும் இல்லை. அநுபவித்த சுகம்தான் எச்சப் பொருள்.

(இ)

நிற்க, அடுத்து ஆய்வுக்குரியது நம் உடலம் ஐம் பூதக் கூறுகளால் ஆக்கப்பட்டது. உடலுக்கு நாற்றக் கூறுண்டு. மண் நாற்றத் தன்மை கொண்டது. ஆகவே நாற்றத் தன்மையுடைய உடலம் இதுவரை கொண்டிருந்த பல்வகை நாற்ற வகைகளெல்லாம் மாறி நறுமணமாம் கற்பூர மணம் பெறுகிறது! இதில் என்ன தடை காணமுடியும்? இது வாடாத மணமாம்! இது துரியநிலை இறை வடிவத்தி லிருந்து அருளால் மணப்பது!

பூ என்ற ஓரெழுத்துச் சொல்லுக்கு

இடம், விளைவுப்போகம், இருக்குதல், தீப்பொறி, பிறப்பு, பூமி, நிறம் மென்மை, அழகு எனவும்,

பூமி என்ற சொல்லுக்கு

உடம்பு, ஊன், சித்தி, சுத்தம், வேளை, பிறப்பு புலால், பூமி மகத்துவம் என்ற பொருள்கள் உண்டு.

"மலர்நலையுடையது-பூவும் உடம்பும் உலகமும்!
மணமுடையது-பூவும் உடம்பும் உலகமும்!"

என்ற உண்மையை உற்று நோக்குவோமாக:-

"ந" வ்விரண்டு காலதாய் நவின்ற "ம" வ்வயிறதாய்
"சி" வ்விரண்டு தோளதாய் சிறந்த "வ" வ்வுவாயதாய்
"ய" வ்விரண்டு கண்ணதா யமர்ந்து நின்ற நேர்மையிற்
செவ்வை யொத்து நின்றதே சிவாயமஞ் செழுத்துமே"!

— (சித்தர் சிவவாக்கியர்-90)

Koviloor Digital Library

என்ற திருப்பாடலைச் சற்று சிந்திப்போம். பஞ்சாக்கர மென்றால் திருவைந்தெழுத்தாகும்! திருவைந் தெழுத்தின் விளக்கம் எண்கடந்தது. அறிவார் அறியுந்தர மொப்ப அது ஆழ்ந்து அகலும்! அதில் ஒரு பகுதி, ஐந்தெழுத் தாலாயது உடலம். ஐம்நெழுத்து ஐம்பெரும் பூதத்தைச் சுட்டி நிற்கும்!

''ந''	எழுத்து	-	இருகால்கள்,
ம	''	-	வயிறு
சி	''	-	இருதோள்கள்
வ	''	-	வாய்
ய	''	-	இருகண்கள்
ந	''	-	மண்
ம	''	-	நீர்
சி	''	-	தீ
வ	''	-	காற்று
ய	''	-	வெளி

இதற்கு எண்களும் அடையாளக்குறிகளுமுண்டு விரிவஞ்சி விடுத்தாம் இதன் நேர்மை உய்த்துணருதற் குரியது. ஐம்பூதத்தாலாய உடல்ம் ஐம்பூத நிலைகளை வெல்ல வேண்டும்! அதுதான் வள்ளற் பெருந்தகை கூறியருளும் முத்தேக சித்தி.

''பூ'' என்ற ஓர்எழுத்துப்பொருளை நம் அடிகள் பெருமான் எவவெவ்வாறு ஐம்பூத நிலைகளில் வைத்துப் பேசியருளுகின்றார்கள் என்பதைக் கீழ்வரும் திரு அகவல் மூலம் காண்போம். இந்தக் கட்டுரையே ''பூ'' என்ன ''பூ'' என்று தெரிவிக்க எழுந்ததால் கூடியவரை சுருக்கமான இத் தொகுப்பை விரிவு எனக் கொள்ளாதவாறு இறைஞ்சு கிறேன் வாசகர்களை!

Koviloor Digital Library

(ஈ)

விரிவாம் அகவலில் குறிப்பாகவே உள்ளது மட்டும் வருமாறு:-

(1) "மண்ணினில் ஐம் "பூ" வகுத்ததில் ஐந்திறம்
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் சோதி".
(371-372)

(2) "நீரிடைப் "பூ" வியல் நிகழுறு திறவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் சோதி". (407-408)

(3) "தீயிடைப் "பூ" வெலாம் நிகழுறு திறமெலாம்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் சோதி." (435-436)

(4) "காற்றிடைப் "பூ" வியல் கருதுறு திறவியல்
ஆற்றலின் வகுத்த அருடபெருஞ் சோதி."
(463-464)

(5) "வெளியிடைப் "பூ வெலாம் வியப்புறுதிறனெலாம்
அளியுற வமைத்த அருட்பெருஞ் சொதி".
(495-496)

ஐம்பூத வகைபற்றிய திரு அகவலை அப்படியே கொள்வது இங்குச் சாலும். விரிக்கிற் பெருகும் மண் இயல்பு பற்றிய அதிமுக்கியமான மூன்று மட்டும் அடுத்துக் காண்போம்.

"மண்ணினிற் பொன்மை வகுத்ததில் ஐம்மையை
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் சோதி.' (369-370)

"மண்ணினில் நாற்றம் வகுத்ததில் பல்வகை
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ்சோதி. (373-374)

Koviloor Digital Library

"மண்ணிடை அடிநிலை வகுத்ததிற் பன்னிலை
அண்ணுற அமைத்த அருட்பெருஞ்சோதி." (379-380)

எனவே ஐம்பூதத் தொடர்பால் ஆக்கப் பெற்ற யாக்கையின் நாற்றத்தன்மையைப் பற்பல வகைகளில் பூவெனச் சுட்டி "மண் விருப்பம் கொளு மணப் பூ" எனக் காட்டியருளியது பெருவகைக் குரியதேயாகும்! எனவே மேலே சொல்லப்பட்ட ஐம்பூதநிலைகளை வெல்ல வேண்டு மெனச் சொன்னதற்குச் சான்றாக வென்று அடைந்த நிலையை அடிகளின் திருப்பாடலிலே காண்போம்:-

"காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ் செயல்களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்
தான் எனக்கே!
ஏற்றாலே இழிவென நீர் நினையாதீர் உலகீர்
எந்தையருட் பெருஞ்சோதி இறைவனைச்
சார்வீரே!" (5450)

இப்பாடலுக்குப் பொருள் விளக்கம் வேண்டுவதில்லை

"கூற்றம் குறித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு." (திருக்குறள்-269)

"கொல்லாமை மேற் கொண்டொழுகுவான் வாழ்நாள் மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று" (ஷை 326)

Koviloor Digital Library

"நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளி காணில்
முற்று மறியா துடம்பு" (ஔவைக்குறள்-238)

என்ற குறட்பாக்களுக்குச் சான்றாக விளங்குபவர்கள் நம் அடிகள் பெருந்தகை.

''எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் மெய்யளிக்க வேண்டியதும், விரைந்தளித்ததும்'' என்ற மேற்கண்ட திருவருட்பா நிகழ்ச்சி தான் இக்கட்டுரைப் ''பூ'' வின் உள்ளடக்கச் செறிவு. அடிகளுடைய பிரசாத மாலைச் செஞ்சுடர்ப்பூவுக்கு விளக்கம் கண்ட பூ வகைகளில் அருள் மணப்பூ என ஆறாவது பூவாகச் சுட்டிய அடிகள் 5-ஆவது பூவாகச் சுட்டிய பூவின் திருநாமத்தை நோக்க வேண்டும். ''பூ'' என்ற ஓரெழுத்துச் சொல்லை முன்னர் காட்டி "விளக்கம்'' என்ற சொல்லைப் பின்னர் வைத்துக் காட்டி நிற்கும் பெற்றியில் "அருள் மணப்பூ விளக்கம்'' என்றருளிய அருமை, அருமைக்கு அணிகலமிட்டாற் போல் தெள்ளத் தெளிய நெஞ்சத்தை உருக்குகிறது. இவ்வாறு காட்டும் முறை வழக்காற்றிலிருப்பதையும் சிந்திப்போமாக! விளக்கம் என்பது உருப்படியாகத் தரும் பொருள் அல்ல. விளக்கு என்ற சொல் ''விளக்கித் தருக'' என்றும் வழங்குகிறது.

அதே சமயத்தில் ''விளக்கு எடுத்து வா'' என்றால் விளக்கம் தரக்கூடிய ஒரு விளக்கான பொருளைக் கொண்டு வருக என்றும் பொருள்படுகிறது. இப்படிப் பொருள் கொள்ளல் இவ்விடத்து ஏற்புடைத்தல்ல. பின் எவ்வாறெனின், ''கருத்துக்குப் புரியாத ஒன்றை நல்லபடியாக விரித்து விளக்கம் தந்தார்கள்" என்று கூறும்போது ''விளக்கம்'' எப்படிப் பொருள்படுகிறதோ அவ்வாறு பொருள் கோடலே மரபு. அடிகள் உணர்த்தும் பெற்றியே

Koviloor Digital Library

ஒரு தனி அமைப்பு! செய்யுள் நடைபோடும் அழகே ஒரு தனி அழகு. ஒரு தனிச் சுவை. சிந்தனைப் பசிக்குச் செழுமையான அமுது. உள்ளபொருளை உள்ளபடி மகிழ்வோடு தந்து நிற்கும். இவ்வளவில் இப்பகுதியை நிறைவு செய்து எஞ்சி நிற்கும் ஈற்றுப் பகுதிக்கு வருவோம்.

(உ)

செஞ்சுடர் என்று ஏன் தலைப்புப் பெயர் தந்தருளி னார்கள்? இந்தச் சிந்தனையில் முன்னைய சிவானுபூதி ஞானமணிகளின் திருநாமங்கள் நம் அகக் கண்முன் நிற்கின்றன.

"அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமாய வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ!"

—(திருவாசகம், திருத்தெள்ளேணம்-4)

பரஞ்சோதி ஆண்டவனைக் குறிக்கிறது. என்ன நல்கியது? செஞ்சுடரை நல்கியது. அஃது என்ன செய்தது? "நாம்" ஒழியச் செய்தது. நாம் ஒழிந்ததும் மேலும் என்ன செய்தது? சிவமாகச் செய்தது. இதுதானே பாடலில் பெறுகிறோம்! வரம் தந்தார் என்றால் "வரம்" ஒரு கண் காணும், கையில் வாங்கும் பொருள் அல்ல. அது அருளின் வல்லபம். உடனே சித்தி, சித்தி வகைகள், தருபவர் எண்ணியவுடனே ஆவது, சொன்னவுடனே ஆவது, பார்வை மாத்திரத்தில் ஆவது என்றெல்லாம் வகை பிரியும். தொட்ட மாத்திரத்திலே நிறைவு எய்துவதும் "ஸ்பரிஸ தீக்ஷை" எனப்பெயர் பெறுகிறது. இவ்வளவே

Koviloor Digital Library

யன்றி மற்ற 'பூ'க் கொடுத்தல் திருநீறு தருதல் முதலான வெல்லாம் சொல்லிக் காட்டிப் புரிய வைக்கவந்த மரபுகள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகவுள்ள தெளிவு.

வாதவூர் அடிகளிடம் வடலூர் அடிகள் கொண்டிருந்த ஈடுபாடு சொல்லும் தரமன்று. ''அருட்பெரும் தீ'' என்ற அருள்மொழி திருவாசகம் திருவண்டப் பகுதி அகவலில் 160 ஆவது வரியில் காட்சியளிப்பதுதான் 'அருட்பெருஞ் சோதி' என அருட்பாவில் திருவுருக் கொண்டது. இவ்விரு பதங்களுக்கு விளக்க ஒற்றுமை வேண்டற் பாலதன்று! எடுத்த எடுப்பிலே "வான் கலந்த மாணிக்க வாசக" என்ற வள்ளற் பெருமானின் விளி விளக்கம், மணிமொழி அருளாளரின் உடலம் என்ன ஆயிற்று என்பதிலே திளைத்த நோக்கமே!

"புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடும் கோயிலாப் புகுந்து
என்பெலா முருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே!
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதி
இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

—(திருவாசகம், பிடித்த பத்து-10)

அற்பமான இந்த யாக்கை அற்புதமாக மாறவேண்டும். கனிந்து கனிந்து அனல் மெழுகென நீராளமாதல் வேண்டும். இறப்பே கழிந்தது சாகாநிலை. பிறப்புக்கு இடமெங்கே? விளிகளை உற்று நோக்குவோம்.

Koviloor Digital Library

சோதியே!—இன்பமே!

இவைதாம் எஞ்சி நிலவும் பொருள்களின், சொல்லிக் காட்ட உதவும் சொற்கள். பொற் கோயிலாக உடலங்கள் மாற்றம்! அப்போது கோயிலுக்குரியோன் குடியிருப்பான்! இங்குக் கோயிலாகும் ஒருநிலையும் அது முடிந்தவுடன் குடியிருக்கும் நிலையுமென இரண்டு நிகழ்வுகள் தனித் தனியே கால நேரம் கடந்து ஆவது அல்ல. ஒரே சமயம், ஒரு நொடி. இரண்டு செயலுக்கும் இடைவெளியோ, இடை நேரமோ கிடையாது. கீழிமை மேலிமை கூடும் ஒரே சமய ஒரே நிலை!

''ஆ கறக்குமந் நேரம், அம்பு விடுமந் நேரம், நோக் கிமைக்குமந் நேரம் நொடிப்பொழுது'' என்று ஆன்றோர் கூறுவர். இவ்விதத் திடீர் செயலுக்குத்தான் ஊழி ஊழி யாகத் தவம்! அந்நிலை எய்தியதும் ரசகுளிகை வேதிகை! ரச குளிகை பட்டதுமே மாற்றம், குளிகை போய்ப் பக்குவப் படுத்தும் காலம் இடமெல்லாம் ஈண்டில்லை!

"எளியவாது செய்வர் எங்கள் ஈசனை
ஒளியை உன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய ஓதிச் சிவாயநம வென்னும்
குளிகை யிட்டுப் பொன்னாக்குவன் கூட்டையே."

—(திருமந்திரம்-2709)

இக் கருத்துக்கு வழிமொழிந்தன்ன மணி மொழி அடிகள் அருளுவதையும் உடன் காண்போமா?

"நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்

Koviloor Digital Library

நானே வந்தெனது உள்ளம் புகுந்தடி யேற்கருள் செய்நான்
ஊனாரு முயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே!"

—(திருவாசகம், திருவேசறவு-10)

காணாறியாதன, கேட்டறியாதன எல்லாம் நேர்முகமாய் மாணிக்க வாசகப் பெருந்தகை பெற்ற அநுபவசித்தி. பன்னாள் பட்டதுன்பம், தவம், நொடியில் மறக்கிறது. (கவான் மகற்கண்ட தாயன்ன) ஒப்பற்ற அமுத வடிவு உட்புகுந்தது. சிவாய நம வென அடிகளை ஆக்கி விட்டது. புகுதலும் ஆக்கலும் ஒரே சமய நிகழ்ச்சி! உடனடிச் செயல். சிவாயநம வெனப் பெற்றேன் எனின் இம் மந்திரத்தைச் செபித்தல் அல்ல. உன்னுவதுமல்ல. நம் போன்றோர்க்குத்தான் இப்பயிற்சி நிலை. அடிகளுக்கு ஈதெல்லாம் எப்போதே முடிந்தது.

அப்படியானால் ''எனப்பெற்றேன்''—பொருள் என்ன? ''சிவாய நம'' என்றால் என்ன பொருளோ என்ன முடிவோ அது ஆனேன். அது அவன் புகுந்த பெருமையின் சிறப்பு, (சி சிவ பரம்பொருள்: வா - உடன் பிரியாத்தாய்; ய - உயிர்; ந - மாயை; ம - ஆணவமலம்) நகர மகர மலங்களில் சார்ந்திருந்த யகரமாய உயிர் அவற்றை நீங்கி ''வ'' கரமாம் தாயின் கருணையால் ''சி'' கரமாம் பரம்பொருளிடத்துச் சேர்தல். இந்நிலையில் யகர, நகர, மகரங்கள் கிடையாது. ''ய'' கரம் சிவத்தில் சார்ந்து ''சிவ'' தான் இருப்பு: இன்பம் மங்கலம் நித்தியம் என்றெல்லாம் கூறும் ஒப்பற்ற நிலை. அன்பு மயம். அன்பே, சிவம்.

''செஞ்சுடர்'' சொல்லை வாதவூர்ப் பெருமகனார் கூறியருளியமை மேலே கண்டோம். அதே பதம் திருமூலதேவர் கையாளும் பெற்றியும் காண்போம்!

Koviloor Digital Library

"செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புற
மஞ்சன மெழுறை யேறி வழிக்கொண்டு
துஞ்சு மவன்சொன்ன காலந் திறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே"

(திருமந்திரம்-2719)

மேற்கண்ட அநுபவநிலை அடைந்த வள்ளற் பெருந்தகை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து பயிற்சி முற்றி ஊற்றெழுங் கண்ணீரதனால் உடலம் நீராடப் பெற்று, தோல் சதை என்பு நரம்பு வகையான யாக்கை எப்படிக் கரைந்து பொன் வண்ணமாகின்ற வரலாற்றுப் பெரு விளக்கத்தைத் திருஅகவல் வரி 1449 முதல் 1480 வரை சொல்லியருளிய அநுபவப் பெரும் பேறு வேறு எங்கணுமே காண இயலாதென்பதை இமயத்து உச்சியிலிருந்து பறை சாற்றலாம்.

(ஊ)

இந்நிலை தொடங்கத்தான் சமயத் துறைகளில் வழிபாடு பேசப் பெறுகின்றது. பிறரைக் கொண்டு வழிபாடியற்றிப் பயன் பெறுவது காமியத் துறை. தானே மூர்த்தி வழிபாடு எழுந்தருளச் செய்து கொள்வது சற்று உயர்ந்த நிலை. இவ்வழிபாட்டில் தன் எதிரிலே உள்ள மூர்த்திக்கு "அஷ்டபுஷ்பம் சாத்துதல்'' என்பது ஒரு முறை, அட்டபுட்பமிட்டு அருச்சிக்கும்போது சொல்லப்பெறும் நாமங்களாவன:—

1. பவாய தேவாயநம:
2. சர்வாய தேவாயநம:
3. ஈசாநாய் தேவாயநம:

Koviloor Digital Library

4. பசுபதே தேவாயநம:
5. ருத்ராய தேவாயநம:
6. உக்ராய தேவாயநம:
7. பீமாய தேவாயநம:
8. மஹாதோ தேவாயநம:

இவ்வாறு எட்டுவித நாமங்கள் சொல்ல வேண்டும். இது முடிந்தபிறகுதான் வழிபடும் மூர்த்தியின் நாமத்தை உச்சரித்து அதாவது வழிபடும் மூர்த்திக்குத் தானிட்ட பெயர், ''தனிப்பெருங் கருணா நாயகி சமேத ஸ்ரீ அருட் பெருஞ்சோதிஸ்வரர்'' என்றிருந்தால் அந்தப் பெயரைச் சொல்லும்போது நம: என்று சேர்த்துச் சொல்லி வழி பாடு நிறைவெய்தும். இது குறித்து அப்பரடிகள் தேவாரம் காண்போம்:

"எட்டுநாண்மலர் கொண்டவன் சேவடி
மட்டலரிடு வார்வினை மாயுமால்
கட்டித்தேன் கலந்தன்ன கெடிலவீ
ரட்டனாரடி சேருமவருக்கே.

—(திருஅதிகை வீரட்டம்—1)

''வினைமாயுமால்'' என்று உறுதி கூறுகிறார்! எப்படி மாயும், இவ்வாறு வழிபாடியற்றிச் சாகும்வரை செய்து பூசைப் பெட்டியைத் திறந்து திறந்து மூடி உலகியல் புகுவதல்லவாம். உலகியல் புகாமல் வேறு எட்டுப் போக்கு தான் என்ன என்பது பற்றி மேலும் நம்மை ஏறாநிலை மிசை ஏற்றியருள்வர் இந்நிலைக்கு அத்திருப்பாடலையும் உடனாகவே காண்போமாக!

Koviloor Digital Library

"புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும்
பூதலங்கள் அவையெட்டும் பொழில்கள் எட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சி எட்டும்
கழற் சேவடியடைந்தார் களைகண் எட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
"நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும்"
திகை எட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே."

— (திருவாரூர் திருத்தாண்டகம்-9)

இத் திருத்தாண்டகம் நோக்குழி முன் சொன்ன வழிபாட்டின் எட்டு மலர்களின் பயன் எப்படி ஆக வேண்டுமாம்! எட்டு மலர்களும் வாழ்வில் மலர வேண்டுமாம்! அஃது என்ன எட்டுவகை:-

(1) கொல்லாமை, (2) பொறியடக்கம், (3) பொறுமை. (4) இரக்கம், (5) அறிவு, (6) மெய், (7) தவம், (8) அன்பு எனப் பொருள் பெறுகின்றன. இந்நிலைதான் சமயச்சடங்குகளின் உட்கிடக்கை. உட்கிடக்கை மறந்து புறச் சடங்கு தான் குறிக்கோளாகி விட்டபடியால் குளிக்கப் போய்ச் சேறு பூசிய நிலையை எய்துகிறோம், எய்தி விட்டோம், எய்திக் கொண்டுள்ளோம். இது பற்றித்தான் வள்ளற் பெருமான் ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்று சொன்னார்கள், அலறிக் கதறுகின்றார்கள். எட்டும் ஒன்றுக்கொன்று சங்கிலிப்பின்னல் தொடர்புள்ளன என்பது சொல்லாமலே விளங்கும்! இந்நிலை பூரணமாய் எட்டும் எட்டி அநுபவம் வந்தபோது உயிரின் நிலை என்ன? கருணாமயம்? கருணை வடிவு! கருணையே யுயிரன்றோ! ஆகவே அகப்பூ மலர வேண்டுமாம்! அப்போது புறப்பூ

Koviloor Digital Library

என்னவாகும்! அகப்பூ புறப்பூ வொளியை, பூ நிலையைப் பேசி முடியுமா? அகமும் புறமும் பூத்து அனகமாதல் வேண்டும். வள்ளற் பெருமான் வாய்மொழி கொண்டே இந்த அகப்பூ புறப்பூ பற்றிப் பார்ப்போமாக!

"அகப்பூ அகவுறுப்பாக்க அதற்கவை
அகத்தே வகுத்த அருட்பெருஞ்சோதி
புறப்பூ புறத்திற் புனையுருவாக்கிட
அறத்துடன் வகுத்த அருட்பெருஞ்சோதி
அகப்புறப்பூ வதிற்புறப்புற உறுப்பியற்றிட
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்சோதி
புறப்புறப் பூவதிற் புறப்புற உறுப்புற
அறத்திடை வகுத்த அருட்பெருஞ்சோதி."

— (திரு அகவல்: 683-690)

எனச் செம்பவள வாய்திறந்து "பூ" மயமாகவே மலர்ந் தருளும் பேரருள் நிலை நம்மை எங்கோ கொண்டு போகின்றது. இதில் அகமும் புறமும் சங்கையின்றித் திட்ட வட்டமாகப் புரியவைத்து நிற்கின்றது, "பூ" எதைக் குறித்து நிற்கிற தென்பது! வாய்மை-உண்மை-மெய்மை யால் மறுக்கப்பட முடியாத பூ மண நிலை. தந்நேரில்லா ஒப்புயர்வற்ற நாற்றம் கமழ் இப்பூ பற்றி ஏதோ ஒரு சில காண வாய்ப்பு அளித்த வள்ளற் பெருந்தகை மலரடி வாழ்த்துவோமாக!

ஆகவே இவ்வாய்வுக்கு வகுத்துக் கொண்ட அறுவகைப் பகுதிகளைச் சுருக்கமாக அமைந்த அளவு கண்டோம். இனிப் பொதுமையாக முடிப்புரையாக இப்பிரசாதமாலை

Koviloor Digital Library

அமைப்புப்பற்றிச் சிறிது சிந்திப்போம்! இவ்வாய்வு செஞ்சுடர்ப்பூ விளக்கத்துக்குத் தக்க பேரரணாக அமைந்திருக்கின்றது.

3029 முதல் 3225 வரை 197 பாடல்களைக்கொண்ட 8 மாலைகளில் 3 ஆவது மாலையாக அடிகளே அமைத்தருளியுள்ளார்கள்:

1.	அன்பு மாலை	3029	முதல் 3059	வரை	பாடல்கள்	31
2.	அருட்பிரகாச மாலை	3060	,, 3159	,,	,,	100
3.	பிரசாத மாலை	3160	,, 3169	,,	,,	10
4.	ஆனந்த மாலை	3170	,, 3179	,,	,,	10
5.	பத்தி மாலை	3180	,, 3189	,,	,,	10
6.	சௌந்தர மாலை	3190	,, 3201	,,	,,	12
7.	அதிசய மாலை	3202	,, 3215	,,	,,	14
8.	அபராத மன்னிப்பு மாலை	3216	,, 3225	,,	,,	10
						197

3 ஆவது மாலையான கட்டுரைக்குரிய பிரசாத மாலை 10 பாடல்களையும் பழமாகக் கொண்டால், முன்னும் பின்னும் அமைந்திருக்கும் 7 மாலைகளுக்குரிய 187 பாடல்களும், இந்தப் பழம் பெறும் நிலை, அதை மறுத்த நிலை, பின் பெற்றுய்ந்த நிலை. இந்தப் பழம்தான் என்ன? இதன்

Koviloor Digital Library

ருசி விளக்கம் தான் என்ன? என்பனவற்றிற்கு எழுந்த தன்ன அமைந்துள்ளன.

வெகு சுருக்கமாக ஒவ்வொரு மாலைக்கும் ஒவ்வொரு குறிப்புக் காட்டியமைவோம்!

1. 3052 ஆம் பாடலில் எனக்குப் புத்தியொடு சித்தியும் நல்லறிவும் அளித்தழியாப் புனித நிலை தனிலிருக்கப் புரிந்த பரம் பொருளே.

2. 3128-ல் ஆதியிலே கலப்பொழிய ஆன்ம சுத்தி யளித்தாங்கு அது அது ஆக்குவதொன்றாம் அது அதுவாய் ஆக்கும் சோதியிலே தானாகிச் சூழ்வ தொன்றாம் என்று சூழ்ச்சி அறிந்தோர் புகலும் துணையடிகள் வருந்த வீதியிலே நடந்தடியேன் இருக்கும் இடம் தேடி விரும்பி யடைந்தெனைக் கூவி விளைவு ஒன்று கொடுத்தாய்.

3. கட்டுரைக்குரிய பிரசாத மாலை.

4. 3178-ல் புறங்கவியப் பாடுகின்றேன் அகங்கவியப் பாடும் புண்ணியரெல்லாம் "இவன் ஒர் புதியன் எனக்" கொளவே,

5. 3184-ல் அற்புத நின்னருளருமை அறியேன் நான் சிறிதும் அறியாதே மறுத்தபிழை ஆயிரமும் பொறுத்து.

6. 3193-ல் பத்தியெலாம் உடையவர்கள் காணுமிடத் திருக்கும் படிதான் எப்படியோ இப்படி என்ப தரிதே.

7. 3202-ல் தன்வணம் ஒன்றளித்தான். 3206-ல் தப்பாத ஒளி வணம் தந்தென்னை அளித்தான்.

Koviloor Digital Library

3211-ல் தன்னோடும் இணைந்தவனம் ஒன்றெனக் குக்கொடுத்தான். 3212-ல் சையோகமுற எனக்கும் வலிந்தொன்று கொடுத்தான். 3215-ல் தாகோ தரம் குளிர்ந்த தன்மை ஒன்று கொடுத்தான்.

8. 3224-ல் தேர்ந்துணர்ந்து தெளியாதே திருவரு ளோடுடிச் சிலபுகன்றேன் திருக் கருணைத் திறஞ் சிறிதும் தெரியேன்.

ஆகவே எட்டு மாலைகளையும் தொடர்ந்து சிந்திப்பது செஞ்சுடர்ப்பூ இன்னதென விளக்கிப் பேரமைதியைத் தந்தருளி நிற்கும்! ஞான சபையைச் சுற்றி அமைக்கப் பெற்றிருக்கும் சங்கிலித் தொடர்பாயமைந்து அதற்குள்ளே இழுத்து நிறுத்துகிறது புறம் போகவொட்டாது. எங்கிருந்துதான் வந்ததோ அடிகளுக்கு இந்தக் கொஞ்சு தமிழ் மிஞ்சு தமிழ்ப் பேரூற்று! அள்ளிக் கொண்டு கொள்ளை கொள்கிறது இம்மாலையில் திளைப்போர் களை. அப்படி ஓட்டம். ஆறாம் திருமுறைக்கு ஒரு தோற்றுவாய் போல் இவை ஐந்தாம் திருமுறையில் பதிப்பு அமைந்திருப்பது எண்ணி எண்ணி உவத்தற்குரியது! பெரிய தோர் அருமைப்பதிப்பு வைப்பு! சொல்ல என்னவுளதினி! 'வள்ளலார் கழல் வாழ்ந்நல் வாழ்வாவதே' என அமைவதை விட வேறேதுளது!

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி

"செஞ்சுடர்ப்பாச் சூததனைச் செப்பவந்த வள்ளலே!
கெஞ்சுகிறேன் உன்னடியில் கேண்மையுடன்
—பிஞ்சுமனம்
கொஞ்சியெனைக் கூத்தாட்டக் கோனாகி மிஞ்சையிலே
தஞ்சம்நந் தாள்க தழைந்து."

Koviloor Digital Library

4. கைபிடிக்கக் கால் பிடித்தேன்!

"சுத்தசன் மார்க்கச் சுகந்தரு ஏடுகளில்
ஒத்தகருத் தோம்பும் ஒருநியே—அத்தனம்
சித்தன் பெயர்தாங்கும் செம்மைக் குருகுலமே
உத்தமமே! ஓங்குகவே! ஓம்"

—(பழ. சண்முகம்)

பிறந்துள்ளோம், வாழ்கின்றோம். செத்து மடிகின்றோம் செக்குமாடென. இச்சுழலில் சிக்காதவர் யாரையும் எந்நாட்டிலும் பார்க்க முடியவில்லை. இந் நிலையில் ஒரு சிலர் மட்டும், ஏன் பிறந்தோம் என்ற சிந்தனையை எழுப்பி அதற்கு விடையும் கண்டுள்ளார்கள். அவ்வாறு கண்ட விடைக்கேற்ப வாழ்ந்தோர் சிலரே. இச் சில ஞானிகளும் ''பிறவாமையை'' முக்கியமாகக் கருதி, வாழ்ந்து ஏனைய மக்களைப் போல் சாவுக்கு ஆளானாலும் ''பிறவாமை'' உண்டு என்றே முடிவு கட்டினர்.

(சாவு என்பது உயிர் நீந்து உடலம் பிணமாகி விடுவதாகும்.) தவராஜயோகிகள் சிலர், பிறர் கைப்படாது தாம் தாமே நாள் குறிப்பிட்டு சமாதியாகியுள்ளதும், சிலர் இயல்பாக பிறர் காணா வண்ணம் தாமே நீரிலும் மண்ணிலும் ஆழ்ந்து மறைந்துள்ளதும் சரித்திரம் பேசுகிறது. இந்தகைய சமாதியானோர்களும் அப்படியே என்றென்றும் மண்ணுக்குள்ளோ, நீரின் கீழ் உள்ள மண்ணுக்குள்ளோ அல்லது எங்கோ நிலைத்து வாழ்கின்றார்கள் என்பதை நடுநிலைமை வரலாறு ஒப்பவில்லை.

Koviloor Digital Library

அப்படியானால் இவர்கள் நிலை என்ன? ''பிறவாமை'' என்பதின் செயற்பாட்டுக் கருத்துத்தான் யாது? அறிவு உசாவுகிறது அன்றோ; ''பிறவாமை'' வேண்டும், ''பிறவாமை'' வேண்டும்! வேண்டுங்கால் வேண்டும் ''பிறவாமை'' ஒன்றே என்று பேசிப் பேசி அழுது அழுது காமுற்றுத் தம் தம் உடல்களைத் துச்சமாய் மதித்து, உண்மை உழைப்பின் பயனாகச் சித்தாடல் சில பல புரிந்து (சித்தாடல் என்பது இந்திர ஜாலம் மஹேந்திர ஜாலம் அல்ல இங்குக் குறிப்பிடுவது. இவற்றைத் துப்பிய எச்சில் என மதித்துத் தள்ளி எதார்த்தமான உண்மைச் சித்தையே பேசுகிறோம்) ஆடி ஓடி யாக்கையை மேல் எழுதியவாறே முடித்துக் கொண்டனர்.

ஆயினும் விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கை யில் அருள் வயத்த ஞானிகள் ஒரு சிலர் ''ஜோதி''ப் பிழம்பில் கலந்து மறைந்ததாக ஒரு பரம்பரை தனித்தே இயங்குகிறது. இவ்வகையில், இறைவன் எழுந்தருளியுள்ள கோவில்களில் சென்று ஆங்கு உண்டாகிய ஜோதியில் கலந்ததாகவும் ஆங்குள்ள மூர்த்திகளில் (சிலாத் திரு மேனி) கலந்து விட்டதாகவும் தெரிந்து கொள்கிறோம். தம் தம் உடலுடனேயே விண்ணில் சென்று விட்டதாகவும் வரலாறு கூறுகிறது. பொதுவாக இரண்டறக் கலந்து விட்டார்கள் என்றே முடிவும் எழுதப்பெறுகிறது.

எனினும் இத்தகைய பரம்பரை வழியே வாழையடி வாழையாக 'வருவிக்கவுற்ற' ஒப்பற்ற ஒரே அருளாளர் இறைவனை தாம் வாழ்ந்த மண் சுவரின் சிறு குடிசைக்கு வரவழைத்து, இந்த ஊத்தை உடலில் புகச் செய்து உள்ளக் குடிலிலும் குடியிருக்கச் செய்து, இவ்அழியும் யாக் கையையே. அழியாத மெய்யான, என்றும் வாழ்கின்ற நித்திய பொன்னுடல பிரணவ உடல வான் வடிவமாக்கி

Koviloor Digital Library

(சுத்த, பிரணவ, ஞான வடிவம்,) அருட்பெருஞ்ஜோதி செங்கோலையும் ஆண்டவர் அருளப் பெற்றுக் கொண்டு, தனிப் பெருந்தலைமை தாங்கி சுத்தசன்மார்க்க அருளரசு நடத்தி வருபவர்தாம் 'திருவருட்பிரகாச வள்ளலார் என்ற சிதம்பரம் இராமலிங்க அடிகள்' 'மரணமிலாப் பெருவாழ்வு' என்ற புத்துயிர்ப்புப் புதுமைத் தமிழ்ச் சொல்லைத் தமிழ் மொழிக்குத் தந்து, தமிழ் வரலாற்றையே புதுமணமாக்கிய ஒப்புயர்வற்ற பெருந்தகை. ஆன்மிக வளர்ச்சியிலே தன்னேரில்லாத் தலைசிறந்து வாழ்ந்து வருபவர்கள்.

''எல்லோர் உடம்பிலும் புகுந்து கொள்வோம்'' என்று ஞான உலகிலே பேசியருளிய பெரும் அருளாளர், 'கருணை வடிவர்'. இவ்வாறு உயர்த்துவதால், முன்னைய அருள் வயத்தவர்கள் சிறப்பற்றவர்கள் என்று சொல்வ் தாகப் பொருள் கோடல் பொருந்தாது. சமயாதீத வளர்ச்சியேயாகுமிது.

ஆன்மிகத்தின் தலைசிறந்த தகைமையையே சாற்றி 'சாறு' கொள்ள வேண்டும். சக்கையைப் பிடிப்பது 'சழக்கர் சமயம்'. எந்தெந்தக் காலத்துக்கு எத்தகைய பெரியோர்கள், ஞானிகள், அருள் வயத்தவர்கள். அருளாளர்கள் தேவை என்பது இறையருள் வயத்தது ஞானப் பரம்பரையில் உயர்வு தாழ்வு பேசி ஆபத்துக்களாகி வாத முடவர்களாகக் கூடாது.

விஞ்ஞானம் தலைதூக்கி வளரும் காலம் பிறந்து உயர்ந்தே செல்கிறது. முன்னைப் பழமறைக்கு முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியதாய் மிஞ்சி வளர்ந்து அளப்பரும் நிலையாகும் ஆன்மிகம். அத் தகைய நிலையில் முன்னைப் பழமறைக்கும் முதல்வன் தான்

Koviloor Digital Library

இப்படிப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நந்தமக்குக் காட்சியாகின்ற ஒருமையையே உன்னி உன்னி உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து கண்ணீர் மல்கிக் 'கனக வுடல்' பெறல் வேண்டும். முன்னைய ஞானவான்களின் கூற்றை ஒப்புக் கொள்ளக் கூசிய விஞ்ஞானம் இன்றைய நம் அடிகளின் **விஞ்ஞான மய மெஞ்ஞானத்தை** ஒப்புக் கொள்ளத் துணிந்துள்ளது. ஒரே ஒரு சான்று மட்டும் காட்டி மேற்செல்வோம்.

''உள்ளபடி உள்ளது வாயுலகமெலாம் புகினும் ஒரு சிறிதும் தடையிலதாய் **ஒளிமயமே**'' என்பது திருவருட் பாச் செந்தேன் பிலிற்றும் சிறுசொட்டு. **ஜெர்மானிய விஞ்ஞானம்** இதை ஒப்புக் கொண்டு முடிந்தது. இன்னும் அடிகள் பேசியருளிய மெஞ்ஞானத்தை விஞ்ஞானம் தேடுகிறது. தேடத்தேட அது எட்டியே நிற்கும். என்பினும் அதற்குந் தகஒத்தே மேற்செல்லும். எனவே கண்மூடிப் பழக்கம் கடந்த கண்கண்ட **விஞ்ஞானமய மெஞ்ஞான** அருளாளர் நமதருட் **தந்தைபிரான்.**

அடிகள் பெருமகனார் கண்ட சுத்த சன்மார்க்கம் மற்றைய சமயங்களில் சாற்றப் பெரும் சன்மார்க்கம் கடந்தது. எனவேதான் ''சுத்தம்'' என்ற அடை தந்தருள்வர் (சுத்தம் எவ்விதக் கலப்பு மற்ற சுத்தம் சுத்த ஸ்படிகம்) என்றாலும் மற்ற சன்மார்க்கங்கள் புறக் கணிக்கப்படமாட்டாதென்ற நிலை விளங்க, ''சமரசம்'' என்ற அடையைச் ''சுத்தம்'' என்பதற்கு முன்னே வைத்தருள்வர். இது பொய்யாகாது ஒருபோதும். என்பது விளங்கச் ''சத்தியம்'' என்ற செம்மாந்த சீரிய சொல்லால் சங்கப் பெயர் காட்டுவர். ஒருங்கே முறைப் படுத்தினால் **''சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்''** என்ற திரு வோங்கு திருப் பெயர் பெற்றுத் தித்தித்து வளருகிறது.

Koviloor Digital Library

இத்தகைய சங்கம் சார்ந்து பெறும், பெரும் வாழ்வைப் பல்வேறு துறையில் பாடியருளி—பேசியருளி—எழுதியருளி (ஆயிரம் ஆயிரம் பாடல்களாகவும் கோடிக் கணக்கான சொற்றொடராலான உரை நடையாகவும்) அதற்குத் தக வாழ்ந்து வருபவர்கள் அடிகள் (முந்தேக சித்தி வாழ்வு முதல்வர்). "நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன்" என்று முதல் முதலில் அருள் முரசு கொட்டியருளிய என்றும் இளையா இளவரசப் பேரரசு வள்ளற் பெருமானைத் தவிர மற்ற எந்த முன்னவர்களும் அந்தந்தச் சமயத்தை, அந்தந்த மதத்தை நானே நடத்துகின்றேன், என்று பேசி யுள்ளதாகச் சான்று கிடைக்கவில்லை என அவ்வவ்வழி நூலோர் நுவல்வர்.

இத்தகைய சுத்த சன்மார்க்கம் "விளங்க உலகத்திடையே விளக்குக; இதற்காக நீ வாழிய!" என்று அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் நம்மடிகளின் (திருக்கரம்) செங்கைப் பற்றினாராம். ''கைபிடித்தார்'' என்ற மந்தணம் கொள்ளும் அந்தரங்க சூசகச் சொல்லால் சொல்லி யருள்வர்:

"பொய் பிடித்தார் எல்லாரும் புறத்திருக்க நான் போய்ப்
பொது நடங் கண்டுளம் களிக்கும்போது மணவாளர்
மெய் பிடித்தாய் வாழியநீ! சமரச சன்மார்க்கம்
விளங்க உலகத்திடையே விளக்குக என்றெனது
"கைபிடித்தார்"! நானும் அவர் கால் பிடித்துக்கொண்டேன்!
களித்திடுக! இனியுனைநாம் கைவிடோம்! என்று
மைபிடித்த விழிஉலகர் எல்லோரும் காண
மாலையிட்டோம் என்றெனக்கு மாலை அணிந்தாரே!"

—(*அனுபவமாலை-56*)

Koviloor Digital Library

உரைவெள்ளிடைமலை. ''கைப்பிடித்தல்'' என்பதின் விளக்கம் பற்றிச் சற்றே சிந்திக்கத் திருவருள் கைகொடுத் தருளுவதாகுக! இருவர் ஒன்று சேர்ந்து மகிழும் குறிப்பைக் ''கைகுலுக்கிக் காட்டுகிறோம் (1). என்னை விட்டு விடாதீர்கள் என்று கேட்பவர் ''கைநீட்ட மற்றவரும் கை கொடுத்து உனைக் ''கைவிடோம் எனக்காட்டுகிறார் (2). அடுத்த நிலை என் ''கையில் சத்தியம் செய்து கொடு என்று முதல்வர் கேட்க மற்றவர் சத்தியம் செய்கிறேன் எனக் 'கையடித்துக் காட்டுகிறார் (3). அடுத்த பாங்கு திருமணத்தில் பெண்ணின் ''கையை'' மாப்பிள்ளை 'கையில்' ஒப்புக் கொடுத்து விடுவது (பாணிக் கிரகணம்) (4). இந்நான்கு வகைகளும் "கைபிடித்தல்" என்ற ஒரு சிறு சொல்லில் உள்ளீடாகச் சூழ்ந்திருக்கிறது.

இவ்வகைகளும் ஒன்றுக்கொன்று இயைபு கொண்டு சங்கிலித்தொடர்பாகத் தொடர்பு பற்றி வளர்ந்து ஒன்று வதை உய்த்து மகிழவேண்டும், ஈற்றில் இரண்டுள்ளம் ஒன்றான திருமணப் பேற்றை அளிக்கின்றது. இந்தக் கைப்பிடித்தல், திருமணம் தான் என்பதை உறுதி செய்ய மாலைஅணிவித்தல் நிகழ்ச்சியைச் சுட்டுகிறது. அதுவும் வாய் பேசாது சும்மா செயலளவில் மாலையிட்டுவிடாது மாலையிட்டோம் என வாய்விட்டுச் சொல்லிச் செயல் படுவதை உற்று நோக்குவோமாக!

பாடலின் சொல்:	நம் உரையின் சொல்:
களித்திடுக	மகிழ்ச்சிக்குலுக்கு
கைவிடோம்	விட்டு விடாதீர்கள்

Koviloor Digital Library

மெய் பிடித்தாய்	சத்தியம் செய்தல்
மாலையிட்டோம்	திருமணம்

உரை சரிதான், ஏனோ இவ்வளவு நிலை! சுத்த சன் மார்க்கம் இதுவரை காணப்படாத 'கற்கண்டு', கற்கண்டானாலும் யுகாந்த காலமாக மூழ்கிப் பிடித்த வரட்டுப் பழக்கத்தை மாற்றுவதென்றால் அது கற்கண்டானாலும் 'கருங்கற் பாறையாம்' இரும்புக் கடலையைக் கடித்து மெல்லுவ தொக்குமன்றோ! சமயவாதிகள் மதவாதிகள் இதனை முழு மூச்சாக எதிர்த்து மலைவர். அதைத் தாங்கி நின்று நயமாக எடுத்துரைத்து ஆதரிப்பது அவ்வளவு எளிதா? (இப்போதும் கண்கூடாகப் பார்க்கின்றோமன்றோ).

இந்த அமைதியான சீர் கொண்ட பொன்னான புரட்சி "கால்" கொள்ள வேண்டாமா? ''அதற்குத் தக்க அருளாற்றல் பெற்ற மகன் நீ ஒருவன்தான் என் அருமைக் கண்மணி இராமலிங்கமே,'' என்று இறைவன் தன் வண்ணம் அனைத்தையும் அடிகள்பால் மாற்றி ஒப்புக் கொடுத்தருளுகின்றார்!

இக் ''கால்'' கொளும் குறிப்பை (கால் கோள் விழா அஸ்திவாரம்—வாய்க் ''கால்'' வழி தடைபடாது நீர் ஓடி சன்மார்க்கப் பயிர் தழைக்க வேண்டும் என்ற அருமைக் குறிப்பு) குறிப்பால் உணர்ந்து ''அப்பனே! அப்படியே கால் கொண்டு நின்றுஊன்றி வளர்ப்பேன்" என்பதைக் காட்டவே "கால் பிடித்துக் கொண்டேன்,' என்ற செயற் பாட்டுச் சொல் செப்பி நிற்கின்றது. "கால்பிடித்து" என்று மட்டும் சொல்லி விடலாம் தான். ஆனால் அடிகள் கால் பிடித்துக் "கொண்டேன்" என்று மேலும் பேசி யருளுவர்.

Koviloor Digital Library

கொள்ளுதல், ஏற்றல், கடைப்பிடித்து அப்பால் விட்டுவிடுதலும் கூடும்தானே! ஆனால் அப்படி அல்ல நான் "கொண்டேன்". என்னகத்தும் புறத்தும் என்றென்றும் ஏற்று நடப்பேன் என்ற உறுதிப்பாட்டை ஊக்கி நிற்கிறது. மற்றபடி உலகியலில் "கால்பிடித்தல்" நிகழ்ச்சிதான் முதன் முதலில் நடைபெறும். அவ்வாறு கால்பிடித்த பின்னர் தான் மற்றவர் கை பிடித்துக் காக்கும் முறை மரபு.

ஆனால் இங்கோ, கைபிடித்தல் நிகழ்ச்சி முந்தி விடுகிறது. ஏன்? அடிகளின் அருள் தகுதியை முன்னரே தெரிந்து வலிந்தாட்கொள்ளும் பெற்றி தெற்றெனத் தெரிகிறது. சுத்த சன்மார்க்கம் ஒப்பிக்கப் பெற இறைவன், அருளாளர்களைத் தேர்ந்தெடுக்க விழைகின்றார். நமதய்யனைக் கண்டவுடன் முந்தி விடுகின்றார் இறைவனார்! (மற்றபடி கால் பிடிப்பதும் கைபிடிப்பதும் இவ்வுலக இந்நாள் நிலையில் பலவாகப் பெருகும். அதன் விரிவு எதற்கு இங்கு?)

இப்படிக் ''கைபிடித்தல்'' நிகழ்ச்சியை மேலும் ஒரு பாடலில் பாடி மகிழ்வர். மணமகன் திருத்தமுற அருகணைந்து கைப்பிடித்தாராம். அப்படி முதலில் கைபிடித்த பின்னரே உயிர்த்துணைவனின் காலை மணமகள் கெட்டியாகப் பிடித்தநிலை தெரிகிறது. இவ்வாறு தெய்வத் திருமலரடி பற்றிய நம் தலைவியாம் இராமலிங்க அடிகளான அருள்தெய்வநாயகியிடம் அருள் தெய்வநாயகன் திருவாய் மலர்கின்றனர்; கைபிடித்தது வீணாகாது; தவறிவிடுமோ என்று வருந்துதற்கில்லை; அழியாமெய் வாழ்வு வந்துவிட்டது.

ஏழுலகும் ஜெய ஜெய போற்றி செய்து மதிக்கின்றது கைபிடித்தலை என்ன என்று கருதுகிறார், நாயகி

Koviloor Digital Library

விட்டாய். நாதனிலிருந்து பிரிபவள் அல்லவே நாயகி. பிரிவுற்றறியாபெரும்நிலை அன்றோ? திருமணமல்லவா இது! கைவிரலை நீட்டு என்று கையைப் பிடித்துக் கணையாழி விரலில் மோதிரம் போடுகின்றார் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை ஆண்டவர். அதோடு நின்றதா? கங்கணம் கட்டுகின்றார் (ரட்சாபந்தன்). பொன்மேனி அல்லவா? பொற்கங்கணமாம் அது? கங்கணம் கட்டி கணை யாழி போடுதல் திருமணம் தானே? ஏது ஐயம்! மாலை அணிதல் முதற் பாடலில் உள்ளது. அடுத்த நிலை இப் பாடலில் உள்ளது. இனி என்ன? கைபிடித்தலுக்கு விரி வுரை சுவாமிகளே இவ்விரு பாடலில் திருமணம் என்றே திருத்தமுற உரைத்தருளியுள்ளார்களே. பாடலைப் பாடி பார்ப்போமா?

"பொருத்தமிலார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்ப்
 போதுநடங் கண்டுளங் களிக்கும்போது தனித்தலைவர்
திருத்தமுற அருகணைந்து கைப்பிடித்தார் நானும்
 தெய்வ மலரடி, பிடித்துக் கொண்டேன் சிக்கெனவே

வருத்த முறேல் இனிச் சிறிதும் மயங்கேல் காணழியா
 வாழ்வுவந்த துன்தனக்கே ஏழுலகும் மதிக்கக்
கருத்தலர்ந்து வாழியஎன் றாழிஅளித் தெனது
 கையிற் பொற் கங்கணமும் கட்டினர்காண் தோழி!"

—(அனுபவமாலை-57)

அருகணைந்து, கைபிடித்தல், கால்பிடித்தல், கங்கணம் கட்டல்; மோதிரம் போடல் என்ற நிகழ்ச்சிச் சொல்லோட்டம் நாமனைவரும் சொல்லிச் சொல்லி நாமணக்க உளமினிக்க நானிலம் கேட்டு மகிழ நாமும் மகிழ்வோம். இவ்விரு

Koviloor Digital Library

பாடலும் அடுத்தடுத்து ஒருசேர சுவாமிகள் அருளிய நயம் திருவருட்பாத் தொண்டர்களுக்குப் பட்டெனப் பளிச்சிடும். இப்படிக் கைப்பிடித்தல் நிலையைப் பல்வேறு செயல்களிலும் அதன் பலனிலும் வரிசைப்படுத்தித் திருமணத்தை உறுதி செய்யும் பெற்றியைச் சிலவிடங் களில் ''கைபிடிக்கின்றார்?'' என்று மட்டும் பாடிவிதந்து பேசி மகிழ்வர். கை பிடிக்கும் நிலையை அவ்விடங்களில் மன்றல் நிகழ்ச்சியெனவே கொண்டாதல் வேண்டும். திருமணத்தின் குறிப்பே ஈருயிர் ஒன்றாதல் தானே! இங்கு இறையவனும் இராமலிங்கப் பெருமானாரும் ஒன்றாகிவிடுகின்றார்கள், அவ்வளவுதான். பெருமானின் பாசுரங்களை அவர்கள் அடியொற்றிப் பொருள் காண முயன்றால்தான் இன்பம் பெருகி ஊற்றெடுக்கும்.

அணுவளவும் பிறழாமல் பாடலில் ஒன்ற வேண்டும். பெருமானும் திருவருள் புரிய வேண்டும். பாடலுக்குரிய விளக்கமே அடிப்படை புரியாவிடில் செயற்பாடு எப்படி நடைபெறும்! செயற்பாடு என்பது வாழ்வில் கோணர்வதே! நயவோடு கூடிய செயல்களே வாழ்வாதல் வேண்டும். உயிர்க்கருணையாம் ஜீவகாருண்ய அடிப்படையில்லாத சன்மார்க்க சாதக முறை விழலுக்கிறைத்த வெறும் நீரே. தயவுக் கண்ணீர்களுக்கு அருட்பா அருமை வெகு எளிமை யாய்ப்பொருள் புரிந்து செயற்படும்; பலன் தரும். திருவருட்பா முத்துக் குளிக்கப் பாதையே தயவுதான்.

பெருமான் அழியா உடல் பெற்ற காரணமே உயிர்ப் பணி என்றென்றும் தொடர்ந்தியங்கவேதான். மற்றபடி திருவருட்பாவிற் பொதிந்துள்ள சொற்களுக்குப் பொருள் மட்டும் (அகராதிப் பொருள் மட்டும்) பார்த்து உரிய உண்மைப் பொருள் காணாது சென்றால் சிவணிய

Koviloor Digital Library

KOVILOOR - 630 307 (NEAR) KARAIKUDI (PHONE: ...-486846)

கருத்துக்குப் பதிலாக முரணிய கருத்தே முந்துறும். பாடல்களோ வெகு எளிமை. சொற்களோ பெரும்பாலும் வழக்குச் சொற்கள். ஆனால் கொண்டு கூட்டி. உரிய உண்மைப் பொருள் காண தயவு வாழ்வு முக்கியம். தயவே திரு அருட்பாவின் உயிர் நாடி.

இவ்வகையாகப் பொருள்காணமாட்டாமல், தெரிய வில்லையே என்றும் பெருமானிடமும் முறையிடாமல் நோக்கம் போல் பொருள் கோடல் உடையவனுக்கும் பிழையாவதோடு கேட்போருக்கும் துன்பம் பயக்கப் பாதை உருவாகி விடும். அப்பால் 'பெருமான் எங்கே? நாம் எங்கே?' என்ற கேள்விக்குப் பதில் கிடைக்காது. தெரியாப் பொருளைத் தெரிந்ததாகப் படித்த கல்வியை வைத்து (வாழ்வனுபவமில்லாத நிலை) நிச்சயப்படுத்துதல் பிழையினும் அல்லுருவப் பெரும் பேழைப் பெட்டகமாகும். தெரியாப் பொருளுக்கு, தெரியும்வரை காத்திருந்து, எதிர் பார்ப்பதே தூயவறிவின் போக்கு. தயவு வழிப் பார்வை தகுதி தரும் என்று இவ்வகைத் துறையோர் இங்கிதமாய் இசைக்கின்றார்கள். நாமும் ஏற்றுப் பார்ப்போமாக!

சமயச் சார்புள்ளோரையும் தழுவ வேண்டும். தழுவா விடில் சுத்த சன்மார்க்கம் பரவாது என்ற நிலையிலும் ஒட்டிப் பாடி கூட்டிச்சென்று அப்பால் சுத்த சன்மார்க்க உண்மையை நிலை நிறுத்தியருள்வர். இந்த இலாவகம் அடிகள் பெருமானார்க்கு கைவந்த கலை. அடிகளா பாடு கின்றார்கள்? அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனல்லவா பாடுகின்றார்! இவ்வகையிலும் ''கை பிடித்தல்'' பாடு கின்றார்கள்.

திருவாதிரை நாள் (ஆருத்ரா தரிசனம்) ஜீவான்மப் பசுக்களான ஆண் பெண் கூட்டம் சிற்றம்பலவாணனைப்

Koviloor Digital Library

பாடி மகிழும் காலம். இல்லங்கள் தோறும் சென்று துயிலெழுப்பி ஆடிப்பாடி ஆனந்தமடைகின்ற காலம். இக் கட்டுரை எழுதும் காலமும் பூர்வ ஞான தில்லைச் சிற்றம்பலத்தில் திருவாதிரைத் திருவிழாக் (சாறு பெறும் உத்சவம்) கொடி ஏறி நடராசப் பெருமான் திருவுலாக் காலம். பசுக்களெல்லாம் பசுபதியை நாடி நிற்கும் காலம்.

எல்லா மக்கள் பசுக்களுமா பதியைத் தேடுகின்றன! குறிப்பிட்ட அச் சிறு கூட்டத்தில் நம் பெருமானாரும் இருக்கின்றாராம். நம் திருநங்கைப் பெருமானார் திரு நம்பியாம் இறைவனாரை நாடுகின்றார். அகத்தில் எத் துணை தூரம் நாடியுள்ளாரோ அவ்வளவு தூரம் புறத்திலும் நாடுகின்றார். ஆகமே புறம் அடிகளுக்கு மார்கழித் திருவாதிரை நாள் என்பதே இல்லாமல் என்றென்றும் சிற்சபை (சிற்றம்பலம்) பொற்சபை (பொன்னம்பலம்) சொந்தமாக்கிக் கொண்ட தோன்ற லன்றோ!

ஆனால் ஏனைய பசு மங்கையர்கள் அப்படி அனக நிலை அடைவது எளிதா? அதற்காக அவர்களையும் விட்டு விட முடியுமா? ''அம்பலத்தரசே அருமருந்தே'' பாடிக் கூட்டம் செல்கிறது. இச் சூழலில் பெருமானார் ஒரு ''புதிர்'' பாடல் அருளுகின்றார். அப்புதிரைத் தாமே சொன்னால் (அதாவது தாமே சுயமாகச் சொல்வதாக) ஏனைய மங்கையர்கள் நம்புவார்களா? தோழிப் பசுக்கள் கேட்குமா செவி கொடுத்து? ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். பெருமனார்க்கு இது சத்தியமே! எனவே உண்மையான புதிர்தான் பூத்தது. ஆனால் மற்றையோருக்கு? என்ன புதிர் அது?

Koviloor Digital Library

ஆண்டவர் திருவாய் மலர்கிறார்; "இராமலிங்கப் பெண்மணியே! புறப்பற்று என்ற உலகை நீத்து உயிர்க் கருணைச் செயல் மறந்து புறக்கணித்து ஒதுக்கி வெறுமனே கோவிலில் திரிந்து ஆடிப்பாடி உடலை வருத்தியது போதும்! இனி அப்படிப் புறக்கணித்த புறப்பற்றை அகற்றி விடாதே! புறப்பற்றென்பது புறத்தே உள்ள மக்களுக்குச் செய்யவேண்டிய ஜீவகாருண்யச் செயல்கள். "**உயிருள் யாம் எம்முள் உயிர்**" என்று தெரிந்த ஆன்மா நிறை ஆண்டவன் உண்மை புரிந்த பிறகு புறப்பணி செய்வது எப்படி அகற்றும் செயலாகும்?

"**ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவு கோல்**" என்று நீயே உணர்ந்து பாடி விட்டாயே முன்னமே! விடயக் காதலால் யான், எனது என்ற அகப்பற்றுக் கொண்டு, என் மனை, என்பொருள், எனதுயிர், என் சமயம்; யானே சிறந்தவன், மனையும் மக்களும் பாசம் வளர்க்கும் 'புறமாகிய உடலைப் பேணல்' பந்தம் என்ற துறையில் பாசாந்தகாரமாகச் செய்வதுதான் புலை அகப் பற்று. இந்த அற்பமான உள்ளத்துப் பற்றை நீதான் ஏற் கெனவே நீக்கி முடித்து விட்டாயே! யான், எனதற்ற நிலையில் தானே சிறுபோதிருந்தே நீ பயின்றுள்ளாய். **அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணி, எவ்வுயிர்த் திரளும் என்னுயிரெனவே, எத்துணையும் பேதமுறாது ஒத்துரிமை யுடையவளாய்** ஆகிவிட்ட பிறகு உனக்குப் புறப்பற்று பற்றாகாது, மற்றவர் போல்.

கருணையே வடிவாய் நீயாகி அனைத்தையும் காண் கின்றாய். உனக்கு ஏன் இந் நிலை! உனக்குப் புலை அகப் பற்றே இல்லை. எனவே புறப்பணி தாராளமாகச் செய்து வருக. அதற்கெனத்தான் உன்னை **வருவித்தோம்**. பற் றென்றும், பற்றற்ற நிலை என்றும் உனக்குப் பேதமே

Koviloor Digital Library

இல்லை இவ்வளர்ச்சியின் முதிர்ச்சியால்தான் நீ இறப்பற்ற நிலை எய்தி '**மரணமிலாப் பெருவாழ்வு**' வாழ்கிறாய், தெரிந்ததா?'' புறப்பணியால் உள்ள விடயப் பற்று உன்னைப் பற்றமுடியாது.

இந்த நிலையைத்தான் வியந்து சமயச்சார்புகளோடு புலனாகுமாறு, ''சிற்றம்பலம் பாடிச் செல்கின்றபோது'' என்றருள்கிறார். புறத்தே உள்ள திருவிழாக் காட்சியைக் காட்டாமல் காட்டுவது போல் காட்டி, அம்மாதிரி நிலை இனி வேண்டாமென்றும் பொருள் பட சூசக மறைமுகமாகச் சொல்லும் நிலையில் தொடங்குகின்றார். மிக நயமாக நவின்றருள்கிறார்.

பொய்ம்மையிலிருந்துதான் மெய்ம்மைக்குச் செல்லுதல் வேண்டும். ஏன்எனில் நாம் பொய்மைவாழ்வு வாழ்கிறோம், பொய்ம்மை என்ற போதே அது இயல்பாய் இல்லாத ஒருநிலையில் செல்வதென்பதே பொருள், மெய்மைதான் என்றும் உள்ளது: ஆனால் பொய்ம்மையை மெய்ம்மை என்று பல்லூழி காலம் பயின்று மாற்ற முடியா அளவில் கெட்டியாக இறுகிவிட்டோம் தன் உடலை உறுதிப் படுத்தப் பேணுவதும் அதனால் உயிர் நிலைத்து வாழ்வோங்கித் தயவுச் செயல் கொண்டு சுய விடயக் காதலற்று உயிர்ப்பணி செய்வதும் ''பற்று'' வகையே அல்ல. அதுதான் சாகாக்கலைத் தொடர்பாம் தத்துவ நிக்ரகத்துக்கும் உயிர்நாடி.

புறப்பற்று அறுக்கத் **தொடங்காத** பெண்ணே என்று ஆண்டவன், அடிகளை விளிக்கின்றார். சில பதிப்பில் 'அறுக்கத் தொடங்காதே பெண்ணே' என்றிருக்கிறது. எதுவாயினும் மென்மையான கருத்து 'புறத்தில் செய்யும் உயிர்க் கருணைப்பணி அகற்றக்கூடாது' என்பதே

Koviloor Digital Library

இதை ஐயம் திரிபுஅறத் தெளிவதுதான் சுத்த சன்மார்க்கம். தயவு வழி மித மிஞ்சிய நிலையில்தான் உடலம் மாறும்.

இரக்கமே இல்லாத யோக தியான வழிபாடு வறட்டுப் பசுவாகும். கடின சித்தமாகி என்புருக வழியே பிறக்காது புலால் நாற்றமுள்ள சுயநல அகப்பற்று தீர்ந்தவர்கள் களிம்பு நீக்கப் பெற்றுப் பொன்னாக வேதிக்கப் பெற்ற வர்கள். 'அப்படி வேதிக்கப் பெற்ற இராமலிங்கப் பெண் மணியே! உனக்கு இந்த பாசபந்தப்பற்று பற்றாது. பொன்னில் களிம்பு ஏது? எனவே நீ புறப்பணிக்கு ஆளானவள்தான் எனச் சொல்லி **என் கை பிடிக்கின்றார்** இறைவன்' எனச் சொல்லிக் காட்டுவர்.

கை பிடித்தல் என்பது முன் பாடல்களில் விரித்த விரிவுரையே இங்கும். ஆனால் சுருக்கமாக ''என் கை பிடிக் கின்றார்'' என்று பாடி இது ஒரு புதிரைப்போல, ஆச்சரிய மாக ''என்னடி அம்மா''! என்று தலைவி தன் தலைவன் செயலைத் தாய்க் குரைத்துத் தயவாகின்ற துறையில் சாற்றி மகிழ்வர், நினைப்பு மறப்பு நிலையைக் கடந்து மனம் என்ற எண்ண ஆற்றலே அருள் வடிவமாகிய நிலையில் இராப்பகல் அற்றவர்கள். இவர்களுக்கு மலப் பற்று ஏது இவர்கள் நெஞ்சில் வாழ்பவராம் நம் அடிகளின் மணவாளர். அப்படியாயின் நாமும் மலப்பற்றறுத்து நெஞ்சம் நெகிழ்ந்து மறப்பற்றநெஞ்சினராய் உயிர்கருணை வழி நடப்பின் நம்மிடமும், வள்ளற் பெருமானின் மணவாளனான அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வாழ்வர் என்ற நிலையில் பாடல் அமைந்து பால் சோற்றுத் திரளாகப் பரிமளிக்கின்றது.

''கை பிடித்தல்'' வகைக்காக இப் பாடலையும் சேர்த்துக் கொண்டோமே தவிர மற்றபடி திருவருட் பாவுக்குப் பொருள் கேட்டல் அநுபவிகளிடம் தான்

Koviloor Digital Library

கேட்க வேண்டும். அனுபவமற்ற இலக்கிய இலக்கணப் படிப்பாளிகள் எவருமே எதார்த்த உட்பொருள் கூற முடியாது. எனவே இந்த "இரண்டுமிலித் தனியனேன்" இக்கட்டுரை தந்த காரணம் "வள்ளலார் குருகுலம்" ஆசிரியப் பெருந்தகையின் ஆணையை மீறுதல் அறமாகாது என்ற ஒரு காரணத்தால்தான் என்பதைத் தயவினொடு சாற்றுகிறேன். மற்றும், பாடலை நம்மவர் அனைவரும் பாடி மகிழ்வோமாக!

"மறப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற வள்ளல்
மலப்பற்றறுத்தவர் வாழ்ந்து மணாளர்
சிறப்புற்ற மங்கையர் தம்மோடு நான்தான்
சிற்றம்பலம்பாடிச் செல்கின்றபோது
புறப்பற்ற கற்றத் தொடங்காத (தே) பெண்ணே
புலை அகப்பற்றை அறுத்தாய் நினக்கே
இறப்பற்ற தென்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா"!

—(தலைவி தலைவன் செயலைத் தாய்க் குரைத்தல்-9)

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி!

Koviloor Digital Library

5. அறியாமையின் அருமை

உலகம் தோன்றிய நாள்முதல் அறிவின் வளர்ச்சிக்கு அளவே இல்லை. தோண்டத் தோண்ட அறிவொளி ஆழ்ந்து பரந்து பூ மண்டல வாசம் போதாதென வான் மண்டலம் எட்டியுள்ளது. ஆசைக் கடலின் ஆழமும் பரப்பும் அளவிட முடியுமோ? ஆசையால் பெறுஞ்சுகம் எவ்வளவோ அதைவிடப் பன்மடங்கு துன்பமும் அதிலே பிரிவற அடங்கியுள்ளது. இந்த இன்ப துன்பத்திற்கு முற்றுப் புள்ளி ஒன்று உண்டா என்பதை மூளைமய விஞ்ஞானம் காணமுடியாது. காரணம், இதனால் வரும் துன்பத்தைத் துன்பமென்றறியாமல் ஆய்வின் காரணமாக மேலும் மேலும் கண்டுபிடிக்கப்பெறும் நூதனங்கள் மூலம் வெளிக்கொணரப் பெறும் புதுமைகளையே மெச்சித் தொடர்ந்து அருமையிலும் அருமையெனக் கருதும் ஆய்வைக் கண்டவன் இறந்துபடினும், பின்னவன் அதை மேலும் ஆய்ந்தாய்ந்து தொடர்வதால் புதுப்புதுப் புதுமைகள் பூத்த வண்ணமாய் உலகம் முன்னேறுகிறது. (விஞ்ஞானத்தை மறுப்பதாக இங்கு கொள்ளப்படாது)

எவ்வுலகத்திலும் இதற்கே முதன்மை கொடுத்து உடற்செல்வம், பொருட்செல்வம், உயிர்ச் செல்வம் அனைத்தையுமீந்து நாடனைத்தும் முந்திக்கொண்டு போகிறது. இதில் நன்மை அதிகமா? தீமை அதிகமா? என ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் கட்டுரையின் நோக்கம்தான் என்னையெனின், இந்த நன்மை, தீமை என்ற இரட்டை விலங்கையும் நமக்குத்

Koviloor Digital Library

தருவது எது என்பதே. நன்மையென்பது நாமாகவே வடித்துக்கொண்டதால் அது உறுதிப்பாடான நன்மையுமல்ல, தீமையென்பது நாமே வகுத்துக் கொண்டதால் அது உறுதிப்பாடான தீமையுமல்ல. ஒருவனுக்குத் நன்மையெனக் கூறப்பெறுவது மற்றொருவனுக்குத் தீமையாகிறது. இந்தத் தீமையையொழிக்க மேலும் தீமை கையாளப் பெறுகிறது. இத்தீமையால் முன்னவனுக்குத் தீமை விளைகிறது, பின்னவனுக்கு நன்மை உண்டாகிறதா? இல்லையா? யென்பது கேள்விக்குறியே. கொஞ்சம் அழுந்தி நினைத்தால் பின்னவனுக்கும் தீமையே. தான் சமாதானமடைவதாக மனத்தின் ஒரு பொய்யான பாவனைப் பாங்குதான் இது.

முன்னவன் வெற்றி கண்டால் அதுவும் ஒரு பொய்யான பாவனை மகிழ்ச்சியும், தோல்வி கண்டால் ஒரு பொய்யான பாவனைத் துன்பமுமேயாகிறது. இருதரத்தாரடையும் நன்மை தீமையிரண்டும் பொய்யான பாவனையே யொழிய சாசுவத உண்மையாகாது. ஏன்? இரண்டும் மனத்தால் வந்தவையே, மனத்தால் வந்தவையனைத்தும் காரண காரியத்திற்கு உட்பட்டதால் சாசுவதமல்ல. உலக இன்பத்தைக் கண்ட மனம் அறிவைத்தூண்ட "சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின் பால்" செலுத்துமறிவு கைவரப்பெறாததால் விஞ்ஞான அறிவு வளர்ந்து வளர்ந்து ஓங்கிய வண்ணமாயிருக்கிறது. எங்கு, எந்நிலையில், எப்படி முடியுமோ தெரியாது. இத்தகைய நிலைமை விஞ்ஞான வளர்ச்சியால் வந்துள்ள உலகச் சேதமும் பொறாமை மிகுதியும் கண்கண்ட பலனாயிருப்பதோடன்றி, அகத்தாலும் கண்டு மருண்டு துன்பப் படுகிறோம். அனைத்திற்குங் காரணம் ஆசையும் பயமுமே உடற்துன்பம் எளிமையாக மாற்றமுடிவதொன்று. மனத்

Koviloor Digital Library

துன்பமோ சாவோடு தீருகிறது. ஆனால் மீண்டும் தொடருகிறது பிறவியினால்

இவ்வாறான விஞ்ஞான, ''பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியாய்'' விளங்கும் ஒப்புயர்வற்ற பேராற்றலே ''முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளா''யிருந்த அருட்டன்மையை உணர்ந்த மெய்ஞ்ஞானம் இக்கால விஞ்ஞானத்தைத்துப்பித் தள்ளி விட்டது. வெறுப்பினாலல்ல, பண்டமான பயனில்லை யெனக்கருதியே! இருந்த இடத்திலிருந்தே இக்கால விஞ்ஞானத்தையும் வருங்கால விஞ்ஞானத்தையும் அடிகள் அருமையருமையாய்த் திருவாய் மலர்ந்துள்ளார்களே! மெய்ஞ்ஞானம், விஞ்ஞானத்தைக் கடந்த சாசுவதமான இன்பநிலை யென்னையெனத் தேடியது. இது தேடொணாப் பொருள், அந்த தேடொணாப் பொருளின் பேரருளாற்றலினால்தான் கதிரவனும், நிலவும், விண்மீன் களும் விண்ணொளியும், கடலும் மண்ணும், விண்ணும், தண்ணீரும், காற்றும் ஒரு நியதியில் உயிர்வாழ்வன அனைத்திற்கும் பேருபகாரமாயிருந்து வருவதை விஞ் ஞானியை மிஞ்சிய மெய்ஞ்ஞானிகளுணர்ந்தார்கள். தங்கள் தங்களுடைய அருளாற்றலால் விஞ்ஞானத் தினாலாகும் நன்மைகளை ஒரு விநாடியில் கண்டார்கள். எனவே பேரருளாளர்கள் தாம்தாம் பெற்ற சாசுவத இன்பத்தை உயிர்க்குலம் அனைத்தும் பெற விழைந்தார் கள். இந்த இன்பம் சொல்லொணாப் பொருள் தன்மையது.

கருண்ணை காரணமாக எவ்வளவோ துறைகளில் சொல்ல, காட்ட, உணர்த்த முயன்றார்கள். பூரணத்தைப் பூர்ண நிலையில் சொல்ல முடியுமா? சர்க்கரையின் தித்திப்பை எவ்வாறு சொல்ல இயலும்? சர்க்கரையைச்

Koviloor Digital Library

சொல்லலாம், பக்கம் பக்கமாய் எழுதலாம். தித்திப்பைச் சொல்ல முடியுமா? இவ்வாறே நாவினால் வரும் இன்ப நிலை போல ஏனைய நான்கு பொறிகளால் பெறும் இன்ப நிலையைச் சொல்ல முடியாது. சாசுவதமின்றி அழியுந் தன்மைத்தாய இச்சிறு இன்பமே சொல்லொணா தென்பதை அனுபவப் பூர்வமாக நாம் ஒப்புக் கொள்ளும் போது பொறி புலன் காரணங் காரியங் கடந்த இன்பப் பொருளை எப்படிச் சொல்ல முடியும்?

இப்படிச் சொல்ல முயன்றவையே (கருணை காரணமாக) மதங்கள், சமயங்கள் எனப் பெயர் கொண்டன. சொல்லொணாப் பொருளைச் சொல்ல முயன்றதன் அடிப்படைத் தன்மையையுணராத காரணத்தால் முரண் பாடுகள் முட்டி மோதிப் போர்க் கோலமாயின, மேலுமாகி வருகின்றன, ஏனிப்படியாயின? இவற்றைச் சொல்லியருளிய மூதாதையர்களின் சொற்களைப் பிடித்துக் கொண்டு, சொற்களைக் கட்டியழுது கொண்டு, சொல்லிய சொற் களையே முடிவாகக் கொண்டோம். சொற்களின் உள்ளீடான முடிவுப் பொருளைப் பற்றிய சிந்தனையே யில்லாமல் வளர்ந்து விட்டோமாகையால் சாற்றை விட்டு விட்டோம். எஞ்சியது சக்கையே. உண்மைப் பொருளுக்குச் சொற்களே தடையாவதை நடுநிலை கொண்டு கூர்த்த மதியால் ஒப்பவேண்டும். இதை ஓர் அனுபவ வாயிலாகக் காண்போம்.

''அப்பா, அந்தப் புத்தகத்தை யெடுத்துவா'' வெனச் சொல்லுகிறோம். புத்தகம் நம் எதிரே வரும்வரை இச் சொற்களிலே நிற்கிறோம். புத்தகம் கண்முன் வந்து விட்டால் அச்சொற்களைப் பற்றிய சிந்தனையில்லை. அந்தப் புத்தகம் (உருப்படியாக) வருவதற்கு அச் சொற்கள் எவ்வளவு உதவியாக இருந்தனவோ அதே சொற்கள்

Koviloor Digital Library

அந்தப் புத்தகம் வந்த பின்பு உதவியின்றி மறைந்தன அல்லவா? இதைத்தான் ''வாசாஞானம்'' (VERBAL) எனப் பகருகிறோம். புத்தகம் கண்ணுக்குப் படாதவரை நமக்குப் பொருள் ஞானமில்லை. புத்தகம் காணாதவரை நமக்கிருந்தது சொல்ஞானமே. இந்த ''கண்முன் வாராத'' புத்தகத்தைப் பற்றி, புத்தகமே தெரியாத ஒருவரிடம் அதையெடுத்துவாவென்று புத்தகத்தைப் பற்றி எவ்வளவு விளக்கப் பேருரை செய்தாலும் பயன் படாது.

புத்தகம் என்ற உருப்படி பொருளாக வரும்வரை எவ்வளவு நிலைகள் ஏற்பட்டனவோ, அதே போன்றுதான் கருவி கரணங் கடந்த இன்பத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது பற்பல நிலைகள் வந்தடைகின்றன. எனவே விவரிக்கப்பெற்ற வார்த்தைகள் ஒரு போதும் அவ் வார்த்தைகளுக்குரிய பொருளாக மாட்டாது. ஆகையால் பரம்பொருளென்ற சொல்லுக்குரிய உருப்படிப் பொருள் வேறு: அதைக் குறிக்கும் சொல் வேறு, காரிய காரணங் கடந்த இப்பொருள் அனாதி.

ஒரு சொல்லுக்கு மூலம் எண்ணம். இவ்வாறான எண்ணக் குவியல்கள் யியங்குமிடமான மனமுங் கடந்தால் தான் அந்த மாபொருளின் அனுபவம் ஏற்படும் இந்த மனம் செயல் படும்வரை புறத்தே சொல்லும் செயலும் நடைபெறு கின்றன. சொல்லற வேண்டுமானால் எண்ணங்களுக்கு மூலாதாரமான மனம் அறவேண்டிய நிலை தேவை யென்பது சொல்லாமலே விளங்குகிறது. மனம் சாகும் நிலைதான் மோனம். ''மோனம் என்பது ஞானவரம்பு'' என்ற தமிழ் மூதாட்டியின் திருவாக்கு இங்கே பொன்னே போல் போற்றற்குரியது. இதை அச்சுறுத்தி நிலை நிறுத்துவ தொப்ப ''மாற்றம் மனங்கழிய நின்ற மறை யோனே'' யெனத் திருவாதவூர்

Koviloor Digital Library

அடிகள் பெருமகனார் வாழ்த்தியருளுவர். (மாற்றம்-சொல்' மனம் சொல்லுக்குக் காரணமான எண்ணத்தின் இருப்பிடம்).

இந்தச் சொல்லொணாப் பெருமோனத்தை உத்தர ஞான சிதம்பரத்து வள்ளல் "காட்சியே, காண்பதுவே, ஞேயமே, உட்கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே, மாட்சியே, உண்மையறிவு இன்பமென்ன வயங்குகின்ற வாழ்வே, மாமௌனக் காவியாட்சியே" என்று ஆனந்தக் கூத்தாடிக் களிப்பர் (உண்மை, அறிவு, இன்பம்=சத்து சித்து, ஆனந்தம்) இந்த மோன நிலையைக் கருவி கரண முதலான எவையுமே தீண்ட முடியாது. ஒருவாறு சிந்தித்துத் தீண்டியதாக, பின்னரே மனோநிலையால் நினைத்துச் சொல்ல முயலலாமே தவிர மோனநிலை உள்ளது சுத்த சூன்யமே.

சூன்யம் என்றால் ஒன்றுமில்லாத, வறட்டு வெற்று இடமல்ல. எல்லாவுலகையும் அனைத்தாற்றலையும் தன்னகத்தே யடக்கிய "நிறை சூன்யம்" எனத் தாயுமானவச் செவராஜயோகியார் செப்புவர். இந்த அருள்வடிவ சூன்யத்தைக் கண்டு, கண்டோன் என்ற கண்டவன் அற்றிருக்கும் நிலை எப்போது வரும்? இதற்கு என்ன செய்ய வேண்டுமென்ற கேள்வி இங்குப் பிறக்கிறது.

காண்பவனற்றுக் காண்பதுதான் நிலை. ஏனெனில் காண்பவன் என்ற ஒருவன் மனத்தினால் கற்பிக்கப் பட்டவன். மனத்தினால் கற்பிக்கப்பட்டவன் இருக்கும் வரை அனுபவ உண்மையில்லை. இந்தக் காண்பவன் எப்படி அறுவது? எப்படி அறுவதென்பதற்கு ஒரு வழி சொல்லப் பெற்றால் அந்த வழியைப் பின்பற்றிக் கேட்போன் அவ்வழியைப் பின்பற்றத்தொடங்குகிறான்.

Koviloor Digital Library

இவ்வழித் தொடக்கத்திற்கு முடிவு காலம் எவ்வளவு எனக் கேட்டால் அது அவரவர் முயற்சியின் தகுதிக்குத் தக்கது என விடை வருகிறது.

இந்த முயற்சியை ஏற்போமானால் இந்த முயற்சி, காலம், இடைவெளி (Time & Space)க்குக் கட்டுப்பட்ட தாகிறது. கால இடைவெளிக்குட்படும்பொழுது இதற்கு முடிவே கிடையாது. காலங்கடந்த பொருள் காலத் திற்குள் எப்படிக் கட்டுப்படும்? மனத்தாலாய ஒருவகை வெற்றுச் சமாதானமாகவே இம்முயற்சியைக் கொள்ள லாமேயன்றி உண்மையாகாது,

எந்த மனம் மடை மாறவேண்டுமென்றோ, கடக்கப் பட வேண்டுமென்றோ. சாக வேண்டுமென்றோ சொல்லு கிறோமோ அதே மனத்தைக் காலத்தாலும் இடவெளி யாலும் விதவிதமான உரங்களூட்டி வளர்த்தவர்களாகவே யாகின்றோம். இதை நடுநிலை கொண்டு அமைதியாக நிதானித்து ஏற்கவேண்டும். கற்ற வெறும் வார்த்தை களால் உரையாட முயலக்கூடாது. சொந்தமான யதார்த்த ஆழ்ந்த சிந்தனைகளால் ஆடாமல் அசை யாமல் இருந்து புரிந்து உணர்ந்து உறுதிப்படுத்த வேண்டும்.

வழியொன்றுமில்லாமல் பின்னே என்னதான் செய்வது என வினவின், ஒரு முயற்சியும் வேண்டாம். தேடுபவனுக் குள்ளே தேடப்படுபவன் ஒளிந்து கொண்டிருக்கும்பொழுது எப்படித் தேடுவது? தேடுபவனையே தேட வேண்டும் அன்றோ! ஒளிந்து நிற்குமவனையே தேடினாலும் தேடு பவனும் கூடவே இணை பிரியாமல் பின்னிப் போயிருக் கிறானே! எவ்வாறு மனங்கடந்த ஒருவனை மனங்கடக்காத ஒருவன் இரண்டுமொன்றாக (லட்டும் தித்திப்பும்போல) இருப்பவனைத் தேடுவது? இங்குத்தான் நம் கருத்தின்

Koviloor Digital Library

தொடக்கம். தேடுபவனென்பவன் எப்படி நமக்குக் கிட்டினான்? இதைக் கொஞ்சம் அலசிப் பார்க்க வேண்டும்.

தொன்றுதொட்ட காலமாகப் பரம்பொருள் என்ற ஒன்று என்று உண்டோ அன்றிருந்து எத்தனை கோடானு கோடி (வரையறையற்ற காலம்) யுகயுகமாக நம்மறிவில் புறத்தேயிருந்து தேடிக்கொண்ட அறிவு மூட்டைப் பொக்கிஷமிருக்கிறதோ அதுதான் உருவெடுத்து ''நான், நான்'' என மனத்தகத்தே குளறிக்குளறிப் பிதற்றிப் பிதற்றிக் கூத்தாடிக் கூத்தாடித் தானல்லாதவற்றைத் ''தான், தான்'' எனப் பெருக்கி வளர்த்து ஆணவத் திமிரகமாய் வடிவெடுத்துக் கப்பிக்கொண்டு பிரிக்கமுடியா வண்ணம் நம்மை வாட்டி வாட்டி அற்ப சுகத்தைக் காட்டிக் காட்டிப் பசப்பிப் பசப்பி, ஏய்ந்து ஏய்ந்து, மருட்டி மருட்டி, மயக்கி மயக்கி, முந்திரிக்கொட்டையாய் முந்திக் கொண்டு வாழ்கிறது.

இவ்வாழ்வை நாம் ஐயம்திரிபறப் புரிந்து கொள்ள வேண்டும். கற்ற அனைத்தையும் அல்ல அல்லவென்று தள்ளவேண்டும். ''என்ன இப்படிச் சொல்கிறீர்களே? அறிவீனமாயிருக்கிறதே'' யென்றால், ''வருக வருக! இருவரும் முன் கற்றவற்றை நீக்கி நடுநிலை நின்று களங்கமற எதார்த்தத்தைச் சொந்தப் படிப்பால் சிந்திக் கக் கலந்துரையாடுவோம்'' எனச் சொல்லி உரையாடல் வேண்டும்.

உரையாடல்

கேள்வி : பரம்பொருளையறிய இடைவிடாத சிந்தனை வேண்டாமா?

Koviloor Digital Library

விடை : பரம்பொருளை நாம் பார்த்ததேயில்லை. பார்த்த ஒன்றைத் தானே சிந்திக்கமுடியும்! பார்க்காத வொன்றைச் சிந்திப்பதென்பதெப்படிப் பொருந்தும்? சிந்திக்க வேண்டுமென்ற சொல் வறட்டுச் சொல்தானே! இந்தச் சொல் முன்னே கூறப் பெற்ற 'புத்தகத்தையெடுத்து வா' வென்ற கதையாகாதா? சிந்திப்பவனையும் தெரியாது; சிந்திக்கப் பெறுபவனையும் தெரியாது யார், யாரை எப்படிச் சிந்திப்பது?

கேள்வி : யோகத்துறை முதலான சுவாச பந்தனங்களால் காணாத பரம்பொருளைக் காண முடியாதா?

விடை : சுவாச பந்தனத்தைச் செய்பவன் யார்? சுவாச பந்தனத்தைச் செய்பவன் சாகாமலிருக்கும் வரை சுவாச பந்தனம் சாசுவதமாக முடியுமா? சுவாசம் வேறு, இதை இயக்குபவன் வேறு என்பது சாதாரணமாகப் புரிகிறதே.

கேள்வி : யோகத்துறையால் பயனே இல்லையா?

விடை : பயன் பற்றிய பேச்சே இங்கில்லை. எவ்வளவோ பயன்கள் இல்லாமலா அத்துறை வளருகிறது? உரோமம் கறுக்கும், மேனி சிவக்கும், மணி மந்திர சித்திகள் எய்தும். இப் பயன்களும் முறையானயோகத்தை அணுவளவும் தவறாது விதிப்படி இயற்றினால்தான். இப்பயன்களை எதிர்பார்த்தால் எதிர்பார்ப்பவனென ஒருவன் சாகாமலிருக்கிறானே என்பது நன்றாகப் புரிகிறதே. இவன் சாகாதவரை சாசுவத இன்பம் இருக்க முடியுமா? எதிர்பார்ப்பவன், பயன் என்ற இரட்டை துவந்துவம் இருக்கின்றதே!

Koviloor Digital Library

கேள்வி : யோகத்தால் விதியை வெல்லலாமே?

விடை : இந்த விதியைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு விதிவிதியெனச் சொல்வது யார்? சொல்பவனைப் பார்த்தால்தான் அந்த விதி விவரம் புரியுமே யல்லாது அவனை விட்டு விட்டுச் சொல்லை மட்டும் பிடித்துக் கொண்டால் விதி விளங்குமா, ஆண்டவனும் நானும் ஒன்றாகிறோம் என இதுவரை தெரியாத ஆண்டவனுடன் புரியாத நான் செய்யும் ஆட்டம் எத்தகையது?

கேள்வி : கைம்மாறு கருதாத அறங்கள் செய்தால் அடையலாமன்றோ?

விடை : அறம் என்பது எது? அது எங்கே பிறக்கிறது? அறத்திற்குக் கைமாறாகப் பரம்பொருள் கிட்டுமென்றால் பரிவர்த்தனைப் பண்டமாகவல்லவோ அப்பரம்பொருள் ஆகிவிடும்; பண்டமாற்றுக்குக் கட்டுபட்டதா அது? அப்படி வருவதாகக் கருதினால் அது ஏமாற்றமல்லவா?

கேள்வி : ஆச்சரியமாயிருக்கிறதே! என்ன! ஒரேயடியாய் வாசித்தும், பூசித்தும், யோசித்தும், நேசித்தும், ரேசித்தும் காணொணாதது என்று வெட்டிப் பேசலாமா? எங்கெங்கோ என்னைக் கொண்டு போய்த் திணற வைக்கிறீர்களே!

விடை : ஒருவரை ஒருவர் என்றும் எங்கும் கொண்டு போவதுமில்லை, திணற வைப்பதுமில்லை.

கேள்வி : நீங்கள் நாத்திகவாதியா?

விடை : நாத்திகவாதியென்றும், ஆத்திகவாதியென்றும்

Koviloor Digital Library

நம்முள் இருந்து சொல்பவன் யார்? இந்த இரண்டும் சொற்சிலம்பனுபவமாக இருக்கிறதே யல்லாது, பொருட்சிலம்பனுபவமாக இல்லை.

கேள்வி : நம்முள் இருந்து சொல்பவன் புறத்திருந்து கற்ற அறிவேதான் எனப் புரிகிறது.

விடை : நலமே சொன்னீர்கள்! விதியென்றும், மதி யென்றும், ஆண்டவனென்றும், ஆன்மா வென்றும் நந்தமக்குத் தந்தது கற்ற அறிவு தான். அவையெல்லாம் நமக்குண்டா இல்லையா என்பது நமக்கு இங்கு ஆய்வுப்பொருளல்ல, கற்ற அனைத்தையும் ஆய்வையும் அறவேவிட்டு விட்டுத் தான் தானாயிருப்பது ஒன்றே நிலை. காண்பவன், காட்சி காணப்படும் பொருள் என்ற மூட்டை முடிச்சுகளெல்லாம் அறவே விடுபட்டு விட்டால் அதுதான் ''சும்மா இருக்கும் சுகம்''. சுமைகளை நாமே வலிந்து தூக்கி, 'சுமையாயிருக்கிறதே, சுமையாயிருக்கிறதே', என்று அலறுகிறோம். எனவே அனைத்தையும் அறவே விட்டுவிடுவோம்.

கேள்வி : எப்படி விடமுடியும்? எப்படியோ அறிந்தோ அறியாமலோ மூளை காலியாக இல்லையே. ஒன்றுமே தெரியாத நிலையில் இருப்பதுபோல் உள்ள நிலையிலுங்கூட அனைத்தும் தெரிந்த தாக அல்லவோ முந்திக்கொண்டு விடுகிறோம்.

விடை : அப்படி முந்துவதுதான் நம்மைக் கூத்தாட்டு கிறது. கொஞ்சங்கூட, ''நான்'' தெரியாதவனா! நான் அவ்வளவு அடிமுட்டாளா? என்ற நிலை தொடக்கமே ஆசாபாச வம்புகளின் வித்து.

இந்த நிலையில்தான் 'கற்றாரை யான் வேண்டேன்'' என்று மணிவாசகப் பெருந்தகை நந்தமக்கு அருளுரை வழங்குகிறார். இப்படிப் பார்த்தால்தான் அருளாளர்களின் அருளுரைக்குப் பொருள் விளங்கும்.

கேள்வி: கற்பது பிழையா? ''கற்றாரை யான் வேண்டேன்'' என்ற கூற்று எப்படிப் பொருந்தும்?

விடை : பிழையா? சரியா? என்பது இங்கு வாதமல்ல. கற்றதனாலாய பயன் அடங்குதல்தானே. அடங்குதல் என்பது, எது அடங்குவது? அடங்கும் பொருள் அடங்கிவிட்டால் பிழையென்றோ, சரியென்றோ சொல்லுவதற்கு ஆங்கு எது உளது, யார் உளார்? ''மனம் அடங்கும் திறத்தினில் ஓர், இடத்தே இருந்தறியேன்'' என்ற வள்ளற்பெருமான் அருள்வாக்கு இங்கு உணரப்பெறும்.

கேள்வி : ஒன்றுமே புரியவில்லையே, மனம், புத்தி, அறிவு, அனைத்தும் மயங்குகிறதே?

விடை : ஒரு மயக்கமுமில்லை. ''தெளிவு ஒன்றே'' தான் யாண்டும் ஆளுகிறது. என்றும் அழியாதது தெளிவு ஒன்றேதான். அதுதான் அசைக்க முடியாத சாசுவதம். அது களங்கமில்லாதது. களங்கமாகாதது. அப்புனிதத்தை அனுபவித்தறியா நம்முடைய கற்ற அறிவு வாதத்தால் கருத்தளவில் கலக்கிக் களங்கமாக்கி விட்டோம். இதற்கு மாற்று எந்த முயற்சியுமில்லை. ''உளவு'' ஒன்றேதான்.

Koviloor Digital Library

''உளவினிலறிந்தாலொழிய மற்றளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி.''
என்பது திருவருட்பிரகாசரின் திரு அகவல்.

கேள்வி : அந்த உளவுதான் என்ன?

விடை : அறிந்த எவற்றினின்றும் முழுமையான சத்திய மான விடுதலை யொன்றே. 'சட்டி சுட்டது கை விட்டது' என்பது போல ஒன்றுந் தெரியாதவன் என உண்மையாக முழுமையாகச் செயல்வழி அனுபவபூர்வமாக ஆதலே நிலை. அந்நிலையே அந்த நொடியே அனைத்தும் தெரிந்தவனாகிறான். விட்ட நிலையே தொட்ட நிலை சொல்லளவில்தான் இரண்டு நிலையே தவிர அங்கு விட்ட நிலையும், தொட்ட நிலையுமொன்றேதான். அங்கு இரட்டை யென்பதே கிடையாது. ''பிறிவுற்றறியாப் பேரருள் நிலையது.'' 'கற்றாரை யான் வேண்டேன்' என்ற அனுபவ நிலையிலேயே ஒன்றாகச்சேர்ந்து கற்பனவுமமைகின்ற நிலை பின்னிக்கிடக்கின்றது. நமக்கு ஒன்றுமே தெரியாது, நமக்கென ஒன்றுமேயில்லை என்ற அனுபவ நிலையைச் சொல்லளவில் சொல்லும்போதே ஓர் உணர்வு பிறக்கிறதே, அவ்வுணர்வில் பாரங்கழிந்த சுகம் தெரிகிறதே; ஒன்றை அனுபவிக்க நாமும் சொற்கடந்த நிலை ஆகவேண்டுமன்றோ

கேள்வி : அப்படியானால் அறியாமை கைவர வேண்டுமென்று சொல்கிறீர்களா?

விடை : ஆம் இந்த அறியாமை அறிவீனமல்ல. அறிவு அடங்கி அது கடந்த மோனத்தின் வித்து. சர்வ

Koviloor Digital Library

அறிவையும் தன்னகத்தே யடக்கிக் கொண்டி ருக்கிறது. இந்நிலை தெரிந்தோமென்று சொல்ல வே சொல்லாது தன்செயலனைத்தையும் அரு ளொளியாய்க் காட்டிச் சுடர்விடும். அறி தொறும் அறியாமை காண்பதன்ன அறிய அறிய அறியாமையே மிகுந்துள்ளபடியால் எஞ்சிய அந்த அறியாமையையும் அறிகின்ற அறிவினையே அறிந்து முடிந்த படியால் அறிந்த அறிவையும் அறியவேண்டிய அறிவை யும் சிந்திக்க வேண்டி நிலையில்லாது சுற்றறி வால் வந்த நானென்பதற்று தான் தானான அறிபவனும், அறிவும் அறியாமையும் ஒன்றாகப் பூரணமான மாமோனநிலையே இத்துணை யறியாமைச் சொற் சித்திரப் பாவையாக வெளிப்போந்து அனைத்துமறிந்த பேரருள் நிலையைத் தன்னகத்தேயடக்கி உலகையாளு கின்றது. இருளுக்கும் ஒளிக்கும் இடம் ஒன்றான ஒன்றிலேயே தான் ஒன்றிவிடும் நிலையே இது.

"மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்திலோ ரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை யேத்திடவு மறியேன்
எந்தைபிரான் மணிமன்ற மெய்தவறி வேனோ!
இருந்திசை சொலவறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதுமறித்
திலனே!"

Koviloor Digital Library

6. சும்மாயிருக்கும் சுகம்

ஒரு கோயிலில் சுற்றுப் பிராகாரத்தில் உணவுக்காகப் பலர் இருந்து வந்தனர். அவர்களுக்கு ஒவ்வொரு வேளை யிலும் ஒவ்வொரு பட்டைச்சாதம் வழங்கப் பெற்று வந்தது. இவர்கள் சாதம் வழங்கி முடிந்த பிறகு கிளம்பி விடுவார்கள். மறுநாள் அவ்வேளைக்கு வந்து உட்காரு வார்கள் பட்டைபெற. மற்ற வேளைகளில் அங்குமிங்கும் திரிவர். இஃது இவ்வாறாக, கோவில் மூலையிலே ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு மட்டும் இரண்டு பட்டைச் சாதம் வழங்கப் பெற்று வந்தது. அவர் அங்கும் இங்கு மாக அலைவதில்லை. ஏகதேசம் வெளியில் சென்று பின்பு வந்து அமர்ந்து விடுவார்.

ஒரு நாள் பட்டை வழங்குவதைக் கண்காணிக்க வந்த மேலதிகாரி, பட்டை வழங்கி வந்த சிப்பந்தியைப் பார்த்து, ஏன் ஐயா, உனக்குச் சொந்தக்காரரா இவர்? இவருக்கு மட்டும் இரண்டு பட்டை ஏன்? மற்றவர்கள் வாங்கிய வுடன் கிளம்பி விடுகிறார்கள். அவர்களாவது வேற்றிடம் மறுவேளைக்குப் பார்ப்பார்கள். இவர் இங்கே அசையாமல் இருப்பார் போலிருக்கிறதே. இன்னும் வேளா வேளைக்கு இங்கிருந்தே உண்பாரா—பிறருக்குக் கொடுக்கும் பிரசாதத்தைத் தடைசெய்து ஒருவருக்கே கொடுக்க என்ன நீதி உண்டு?'' என்றார்.

சிப்பந்தி சொன்னார்: ''ஐயா எஜமானரே, இங்கு இவ்வாறு முறையாக சாதம் வழங்கி வரும்போது ஒரு

Koviloor Digital Library

மகானும் வந்து வாங்கிச் சென்றார். அந்த மகான்தான் இவருக்கு இரண்டு பட்டைச் சாதம் வழங்கும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார். பின்னர் அவர் வரவே இல்லை. இவருக்கு அன்றிருந்து இரண்டு பட்டை வழங்கி வருகிறோம். மற்றவர்களும் (ஒரு பட்டை பெறுவோரும்) இது பற்றிக் கூச்சல் போடவுமில்லை. வருவோர் போவோரும் இவருக்குக் காசுகள் நிறையப் போடுகிறார்கள், இவர் பெரும்பாலும் கண்மூடியிருப்பார் சில போது வெளியிற் சென்று வருவார். யாருடனும் பேச்சுகள் மிகையில்லை. இவருக்கு முன்னே கிடக்கும் காசுகளையும் இவர் பார்ப்பதில்லை. அந்தக் காசுகளையும் சிலர் எடுத்துச் செல்வார்கள். சில வேளை பட்டைச் சாதமுமே போய்விடும். சிலபோது ஒரு பட்டையிலும் ஒரு பகுதி உண்பார். இப்படியே நாள்கள் ஓடுகின்றன'' என்றார்.

உடனே மேலதிகாரி அவ்வேற்பாட்டை நிறுத்திவிட ஆணையிட்டுப் போய்விட்டார். வீட்டின் தோட்டத்தில் சில சச்சரவுகள் பணியாட்கள் இருவருள் நடந்தன. இவர் வீட்டின் உள்ளேயிருந்தார். சச்சரவு நடந்தபோது ஒருவன் சொன்னான்: ''டேய் சும்மா கிடடா'' என்று. மாற்றான் பதில் உரைத்தான்: 'நான் என்ன சாமியாராடா? 'சும்மா கிடக்கும் கோவில் சாமியாருக்குத் தாண்டா சோத்துப் பட்டை இரண்டு. நம்மாலப்படியிருக்க முடியுமாடா? நான் என்ன சாமியாராடா?' என்று. இச்செய்தி வீட்டினுள்ளிருந்த மேலதிகாரி காதில் விழுந்தது. சிந்தித்தார். சும்மாயிருந்து கண்மூடி வரப் பயின்றார் கொள்ளித் தேளாக மனம் இவரை கொட்டி அரைமணித்துளி கூட சும்மாயிருக்க விடவில்லை,

புதிதான இந்தப் பயிற்சியைப் பார்த்த மனைவியார் கேட்டார்: ''என்ன இதெல்லாம் புதிதாகக் கண்ணை

Koviloor Digital Library

மூடுவதும் திறப்பதுமான புதுப் பழக்கங்கள்'' என்று. கணவன் சொன்னார்: 'சும்மாயிருக்க முயன்று முயன்று பார்க்கிறேன் முடியவில்லை. அதனால் தான் கண்ணை மூடுவதும் உடனே திறப்பதுமாக இருக்கிறேன்' என்று உடனே மனைவியார், கண்மூடி உடனே திறந்து—உடனே மூடி—உடனே திறந்து—இப்படி ஒரு பொம்மை கடையில் நேற்றுப் பார்த்தேன். இன்னொரு பொம்மை கண்மூடியே செய்யப் பெற்றிருந்தது. விலை கேட்டேன் நம் பிள்ளை களுக்காக. அவன் கூறிய விலை கண்மூடிய பொம்மைக்கு 20 காசுகள் கூடுதலாக இருந்தது. காரணம் கேட்டேன். ''அம்மா இவைகள் எல்லாம் கருத்துப் பொம்மைகள். காட்சியில் கருத்துண்டு, அதற்காகக் கூடுதல் விலை'' என்றான். ''எனவே இரண்டு தினுசுப் பொம்மைகளும் வாங்கிவந்து நம் பிள்ளைகளிடம் கொடுத்தேன். கண்மூடி பொம்மையை ஒருவரும் நோக்கவில்லை. அது அப்படியே பழஞ்சாமான் பெட்டியிலிருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு கடைக்காரரிடம் போனால் ஏதேனும் உங்களுக்கு மேலும் தகவல் சொல்வார்'' என்றாள்.

உடனடியாக அதிகாரி கடைக்காரரிடம் சென்று வினவினார். அவர் சொன்னார்: ''ஐயா, சும்மாயிருத்தல் என்றால் வலிந்து கண்ணை மூடுவதல்ல. மனம் சும்மா யிருத்தலே இதன் உட்கிடக்கை. மஹாத்மா காந்தியடிகளின் சபர்மதி ஆஸ்ரமத்தில் 3 குரங்குகள் ஒன்று கண் மூடியும் ஒன்று வாய் மூடியும், ஒன்று செவி மூடியுமிருக்கின்றது. இவை பொம்மைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொருகருத்தைக் காட்டுகின்றன. கண்ணும், வாயும், செவியும் சும்மாயிருக் காது. எதையாவது தான் அனுபவிக்க, கண்கள் எதை யாவது பார்க்க, வாய் எதையாவது பேச, எதையாவது சுவைக்க, செவி எதையாவது கேட்க அலைந்து கொண்டே

Koviloor Digital Library

யிருக்கும். எனவே, அவற்றை அப்படிச் செல்ல வொட்டாது தடுப்பதற்காக அப்பொறிகளைப் பொத்திக் கொண்டிருக்கின்றன.

இச்செயல்களை ஏன் ஒரு குரங்கில் காட்டியிருக்கிற தென்றால் மனம் குரங்குக்கு ஒப்பாகும். குரங்கு 'சும்மாவே' இருக்காது. ஏதாவது சேட்டை செய்து கொண்டே யிருக்கும். அப்படிச் சேட்டை (அலைந்துகொண்டே இருக்கும்) செய்தே வளரும் மனம்தான் 'சும்மா' இருத்தல் அவசியம். அது சும்மாயிருந்தால் கண்ணும் வாயும் செவியும் இயல்பாகவே சும்மாயிருக்கும். எனவே, கண் முதலான பொறிகள் செயற்படுவதைத் தடுக்க மனத்தைத் தடுக்க வேண்டும்'' என்றார்.

இது இலேசான காரியம் அல்ல. இது அடங்கினால் உலகம் தன் வசப்படும். இது அடங்காவிடின் உலகத்தின் வசம் நாமடங்க நேரிடுகிறது என்ற குறிப்பை உணர்த் தினார் கடைக்காரர். அப்படியானால் அன்று கோவிலி லிருந்த அந்தச் சாமியாருக்குச் சோத்துப்பட்டை இரண்டு போதாது என்று போய், 3 பட்டை ஆக்கி, சும்மா இடக்கும் சாமியாருக்கு 'சோந்துப்பட்டை மூன்றாகக் செய்நார்' என்பது ஒரு வழக்காறு.

இனி, நம் தலைப்புக்கு வந்து அதுபற்றிச் சிறிது தொட முயலுவோம். ஏன் இப்படிச் சும்மா யிருக்க வேண்டும்? இப்படிப் படைக்கப் பெற்ற பொறிகளும் மனமும் சும்மாயிருக்க வேண்டுமெனின் ஊமைகளாய், செவிடர்களாய், குருடர்களாய்ச் சில படைப்புகளைக் காண்பதுபோல் அனைவரையும் படைத்திருக்கலாமே அன்றோ! குருடர்களுக்கும் ஊமைகளுக்கும் செவிடர் களுக்கும் மனம் சும்மா யிருப்பதே இல்லை. 'மோனம் என்பது ஞானவரம்பு' என்றார் அவ்வைப் பிராட்டியார்.

Koviloor Digital Library

இப்போது சிலர் 'மௌனம்' என்று எழுதிக்காட்டி விடுகிறார்கள். வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டு நாள், சிலர் மாதத்தில் ஒருநாள் இரண்டு நாள், சிலர் வாரக்கணக்கு, மாதக்கணக்கு, வருடக்கணக்கில் இவ் விரதம் அனுஷ்டிக்கின்றார்கள். ஆனால் பெரும்பாலோர் அவரவர்கள் தேவையை எழுதிக்காட்டிச் சமிக்கை காட்டிச் சிலபோது சமிக்கை மற்றோருக்குப் புரியாமல் பக்கம் பக்க மாய் எழுதி, (சிலர் சிலேட்டில் எழுதி) எழுதிக் கை சலித்துப் போய் விடுவதையும் காணமுடிகிறது. ஏன் இந்த நிலை?

வாய் பேசாமலிருப்பவர்களான விரதிகளை ஊமைகள் எனச் செப்புவது அனுபவத்துக்குப் பொருந்தும். காதைப் பொத்துபவர்களைச் செவிடர்கள் எனவே செப்பலாம். கண் புதைப்பவர்கள் குருடர்கள் என்றே சொன்னால் தவறொன்றுமில்லை. உண்மைக் குருடர்களுக்கு உள்ள படியே பார்வையில்லை. செவிடர்களுக்குக் காதுகளிருந்தும் கேட்கவில்லை. ஊமையர்களுக்கு வாயிருந்தும் பேச இயல வில்லை. ஆனால், இந்த விரதிகளுக்கோ முறையான பொறிகளிருந்தும் வலிந்தடக்கித் துன்புறுகிறார்கள். ஏனோ இந்த அவல நிலை?

கேட்கத்தகாதவற்றைக் கேளாமலும், பேசத்தகாத வற்றைப் பேசாமலும், தின்னத்தகாதவற்றைத் தின்னா மலு மிருந்தாலே போதுமே! நல்லவை கேட்க; நல்லவை உண்ண; நல்லவை பேச; நல்லவை பார்ப்பதற்குத்தானே படைப்பு. (இதுபோல் மற்ற இரு கருவிகளான-மூக்கும்-தோலும்). இவற்றை முறையே கற்பன கற்று, கற்கும் முறை கற்று, நிற்கும் முறை தெரிந்து நிற்காவிடின் படைப்பின் பலன் என்ன ஆகும்? கல்லாய்ப் பேயாய் மற்ற மனித தரத்துக்குக் கீழ்ப்பட்ட படைப்பாகாமல் நாம் வந் துள்ளதற்கு நன்றிக்கடன் என்ன? என்பனபற்றிச்

Koviloor Digital Library

சிந்திக்கும்போது இந்த ''மோன'' விரத உட்கிடக்கையைப் பற்றி முழுதும் தெரிய வாய்ப்பில்லாவிடினும் அதன் அரிச்சுவடி (L.K.G) யாவது தெரியத்தானே வேண்டும், இந்தத் தைப்பூச மாபெரும் விழாவில் இந்த மணி மண்டபத்தில் இந்தத் தனிப்பட்ட பேச்சில்!

மனம் சும்மாயிருத்தல் என்றால் செயலற்று உலக காரியங்களில் ஈடுபடாமல் மனை, மக்கள், சுற்றம், பொருள் அனைத்திலும் வெறுப்புற்று நகர்நாடுகளை விட்டுவிட்டுத் தன்னந்தனியே தவமியற்றி மடிவதல்ல. ஏதோ ஒருவாறு இந்த நிலையில் தன்னை மூழ்கடித்துச் சமாதியாய் விடுதலும் அல்லது இயல்பாயிறந்தபின்னர் பிறரால் எரியூட்டப்படுதலும் நடைமுறையிலிருந்து வந்தாலும் அருளாளர்கள் கருதும் ''சும்மாயிருக்கும் சுகம்'' இது அன்று எனக்காணக் கிடக்கின்றது.

முனிபுங்கவ அருணகிரிநாதர் பாடியருளிய திருப்புகழ் அனைத்திற்கும் இன்னும் அதனதன் புராண வரலாறு சரியாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை என அத்துறை நிற்போர் கூறுகிறார்கள். அவ்வளவு கதைகள் உள்ளன வாம். அப்பால் அம்முனிவரே நினைத்திருப்பார் போலும்! ''இத்துணைத் திருப்புகழ்களும் படித்து நின்று பயில மக்கள் பயப்பட்டு விட்டால் என் செய்வது என இரங்கி, திருப்புகழ்சாற்றை வடித்து நந்நான்கு சிறுவரிகளான அநுபூதிப் பாடல்களில் வடித்தருளுவர். அதன் பாடல் தொகையும் ஐம்பத்தொன்றே, அந்த 51-ம் அதிகமெனக் கருதி ஒரே பாடலில் ஒப்புயர்வற்ற ஓர் உபதேசம் ஒரே வரியில் அருளுவர். என்ன சொல்கிறார்:

''சேம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்

Koviloor Digital Library

சும்மாயிரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே."

—(கந்தரநுபூதி-12)

எண்ணிறந்த செயல்கள் புரிந்த முருகப்பெருமான் பிறக்கவுமில்லையாம்! இறக்கவுமில்லையாம்! கதைகள் எல்லாம் ஒரே வரியில் ஒழிந்து முடிந்தன. பின் என்னாவது? ஒரு திருவார்த்தை திருவாய் மலர்ந்தானாம் அழகுக்கடவுள். என்ன வார்த்தை அது? "அருணகிரி! சும்மாயிரு, சொல்லற!" இந்தச் சொல்லின் செயல்நிலையே, "வீடு பேறு". பிறப்பின் பயனாம்!

இச்சொல்லின் அருமைக்குத் தாகமெடுத்துத் தயாராக விருந்தாராம் அநுபவநிலையாளர் தாயுமானவப் பெருந்தகை! இவர் என்ன சொல்லியருள்வர்:

"ஐயா, அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாய் ஒருசொல் விளம்பினர்யார்?-வையகத்தோர்
சாற்றிதுஎன்று ஏசற்றார், தன் அனையாய் முக்கண்எந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டினான்."

—(உடல் பொய்யுறவு-26)

"சட்டிசுட்டது கைவிட்டது" என்ற பக்குவ ஞானிக்குப்பட்டது சட்டென நிலைத்தது முன் அருளப்பெற்ற உபதேசப் பலன். அப்படியானால்தானே இப்படிப் பாடல் மலரமுடியும்,

வையகத்தோர் "சொல்ல முடியாது" என்று வகையற்றுக் கைவிட்டு விட்டார்களாம் (அவ்வளவு அரிது என்பது உட்கிடக்கை). தன் அனையாய்! என்று ஆண்டவனை விளித்தருள்வர். தனக்குவமையில்லாதவன் எனப்

Koviloor Digital Library

பொய்யாமொழி சாற்றும் நிலைதான் இந்தத் ''தன் அனையாய்'' தனக்குத்தான் ஒப்பு. பிற எதுவுமே ஒப்பாகாது. இன்னொரு உவமையிருந்தால் அந்தப் பொருளுக்குச் சிறப்பில்லையன்றோ!

''சும்மாயிரு சொல்லற'' என்ற பொருள் பொதிந்த உபதேசத்தைப் பக்குவநிலையிலுள்ளோர் அப்படியே ஏற்று அதுவாகி விடுகிறார்கள். பக்குவமில்லாதோர் இதை வியாக்கியானம் செய்துகொண்டே ஆய்விலிறங்கி விடுகிறார்கள். எம்போல்வாரையே இதற்கு உவமை கொள்ளலாம்.

உண்மைப் பசியுடையோன் உணவு உண்டு விடுவான். சோற்றைக் கண்டவுடன் அதன் ருசி ஆய்வே இருக்காது. ருசியாய் விருந்து புசித்து, உப்புக்குறைவு காரமே போடவில்லையோ எனக்கேட்டுக் கேட்டுப்புசிப்பவன் முழுப் பசியுடையவனெனச் செப்புவது செழுமதியுடையோர் செயலாகாது. ''நாக்கு ருசி பார்ப்பவர்க்கு நாறிய பிண்ணாக்கு'' என்பது திருவருட்பாவின் செம்மையுரை, படைத்த சோற்றை, ''இது பொன்னி அரிசியா, எந்த உரம்போட்டு விளைவு. என்ன விலை, தினசரி இப்படி உணவு தான் கொள்கிறீர்களா, நீங்கள் கொடுத்து வைத்தவர்கள், எங்களுக்கு இப்படிக் கிடைப்பதே இல்லை'' என்ற ஆய்வு விரிவுரைகளிலிறங்கி உடனடியாக, புசிக்காதவன்-முழுப் பசி இல்லாதவன்; உண்மைப்பசியற்று நாவின் இனவுக்கு உண்பவன். பசி அருமை உணராதவன் என்று தானே பொருள். எனவே இந்தச் 'சும்மாயிரு' நிலை அவ்வளவு அருமையாக அமைந்து விட்டது தாயுமானவச் சிவயோக சிவராஜ சிம்மத்திற்கு.

''ஒழிவில் ஒடுக்கம்'' என்ற சமய மதாதித உத்தமப் பெருநூலின் பாயிரவிருத்தி சிறப்புப்பாயிர நேரிசை

Koviloor Digital Library

வெண்பாச் செய்யுளுக்கு நம் அருட்தந்தைபிரான் உரை எழுதியிருப்பது திருவருட்பா வாசகர்களுக்குத் தெரிந்திருக்கு மென்பதில் ஐயமில்லை. இந்த நூலை வடலூரில் ஒரு பெரியவர் படித்துக் கொண்டிருந்தார் நம் நம் தந்தை பிரானார் அதைக் கண்டு "என்னங்காணும் படிக்கிறீர்" என்றார்கள். அப்பெரியவர், "ஒழிவில் ஒடுக்கம்" என்று அந்நூலின் பெயரைத் திருச்செவி சாற்றினார். உடனே. அடிகள் அந்நூலை அவர் கையிலிருந்து வாங்கிக் கொண்டு அறிவுச்சுடர்கொளுத்தினார்கள்;—

"போங்காணும், இந்நூல் படிக்கத் தகுதி உமக்கு வந்துவிட்டதாக எண்ணமா? கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்தாடுவதுபோல் இந் நூலைப் படிக்க ஆரம்பித்து விட்டீரா?" என்று கூர்ந்த பார்வையில் அருளுரை வழங்கினதாக நேர்மையான முறையான கர்ணபரம்பரைச் செய்தி கூறிநிற்கின்றது. இக்கூற்றின் காரணம் என்ன? தகுதியற்றோர் பெருநூல் படித்து, உள்ளதும் இழந்து போகக் கூடாதென்ற கருணைக்கருத்துதான். இது அவ்வளவு பெருமை வாய்ந்த ஒப்பற்ற பெருநூல். அவற்றில் ஒரு பாடல் காண்போம்;

"என் ஆணை என்ஆணை என்ஆணை ஏகமிரண்டு
என்னாமற் "சும்மா யிரு" என்று — சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவினோதன்".

இப்பா, நூலாசிரியப் பெருந்தகைக்கு அருள்ஞான குருவான ஆளுடையபிள்ளையாம் சீகாழி திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது (உபதேசம்) பேசப்பெறுகிறது என்ன அது, "சும்மாயிரு." இதுதான் திருவாக்கு, ஆணையிட்டுக் கூறப்படுகிறது. நம்

Koviloor Digital Library

பெருமானார் எத்துணை ஆணைகள், எந்த எந்த வகை ஆணைகள், திருவருட்பாவில் திருவாய் மலர்கின்றார்கள். ஆணையிடுவதில் உங்கப்பன் ஆணை, எங்கப்பன் ஆணை. என் பிள்ளை ஆணை என்று ஆணை வகைகளைப் பெருக்கிப் பேசுவதிலும் சிறந்த ஒப்பற்ற உறுதிப்படுத்தும் ஆணை ''என் ஆணை'' என்பதே தான். தன்னையே அழித்துக் கொள்ள யாரும் சம்மதி யாரன்றோ? அதனால் உறுதிப்பாட்டுச் சத்தியஞ் செய்தல் ''என் ஆணை'' என்பதில் தான் அழுத்தம் அதிகமுண்டு. அப்படி ஆணை யிட்டருளினாராம் அருள்ஞானப் பாலுண்ட உலகன்னை யின் புதல்வர். அப்படி அறுதியிட்ட அருள்வாக்கு ''சும்மாயிரு'' என்பதாகும்.

''சும்மாயிரு'' என்பது பற்றி அருளாளர்கள் திருவாய் மலர்ந்த எடுத்துக்காட்டுகளை இத்துடன் நிறுத்தி, வாழையடி வாழையாய் வந்த திருக்கூட்ட மரபினர் என்று தம்மை அறிமுகம் செய்து, நம்மை நம்ப வைக்க முயலும், புதுமரபுக்கர்த்தாவான, அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் வருவிக்க உற்ற பேரருளாளரான நம் தந்தை பிரான் அருளியுள்ள இந்தச் ''சும்மாயிரு'' என்ற ஒப்பற்ற மந்திரோபதேசத்தையும் சிந்திப்போமாக! இல்லை இல்லை, சிந்திக்க முயலுவோமாக! ஐயன் அருள் துணை நிற்க!

"இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே-துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மாயிருக்கும் சுகம்."

''சும்மாயிரு'' என்ற முன்னைய அருள்வயத்த ஞானியர்களுடைய உபதேசத்தை அந்தச் சொல்லின்

Koviloor Digital Library

அநுபவ விளக்கத்தை அதாவது, சும்மாயிருத்தல் என்றால் அது ஓர் ஒப்பற்ற சுகநிலை என்ற இன்பத்தையும் சேர்த்துச் 'சும்மாயிருக்கும்' சுகம் என்றருளுகிறார்கள். சும்மாயிருக்கவே முடியவில்லையே? நாம் எப்படி அதன் பயனை வெளிபடுத்த முடியும்? அநுபவித்த பேரருளாளர் களுக்கு அது மரபு.

> "ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
> நாடாதீர் பொய்உலகை நம்பாதீர்—வாடாதீர்
> சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினிஇங்
> கென்மார்க்க மும்ஒன்றாமே."
>
> —(திருவருட்பா சுத்தசிவ நிலை-41)

இப் பாவை நோக்குழி, தியானத்துக்குத் தயாராக உட்காரும் நிலை மாதிரி கொஞ்சம்கூட அசையாமல் ஆடாமல் இருக்கச் சொல்வதாக ஒரு பொருள் கொள்ள வாய்ப்புண்டு. இப்படியிருப்பதற்கு வேறெதையும் நெஞ்சம் நாடாமலிருந்தாக வேண்டும். அப்படி நாடாதிருந்தால் தான் ஆடாமல் அசையாமலிருக்க முடியும் உலக வாதனை யில் மனம் தோய்ந்தால் ஆடாமல் அசையாமலிருக்க முடியாது. பயிற்சி மிகுதியால் வேறெதையும்—பற்றிக் கொண்டுகூட காலும் கையும் அசையாமலிருக்க முடியும். ஆனால் மனம் ஆடாமல் அசையாமலிருப்ப தென்றால் எதையும் பற்றா திருக்கும் நிலை அதுதான். ''தான் தானாக'' இருக்கும்நிலை எனவேதான் வேறொன்றை நாடாதீர் என்று எச்சரிக்கப் பெறுகிறது. அதனால் தான் ''பொய் உலகை நம்பாதீர்'' என்று அதற்கு ஓர் ஆணி அறைந்தாற் போல் ஓர் அரண்சமைத்தருள்வர்.

இந்த நிலை வருவதற்கு எந்தவிதமான வாட்டமும் மனத்திலிருக்கக்கூடாது என்று அறிவுறுத்த ''வாடாதீர்''

Koviloor Digital Library

என்று ஒரு வழி வகுத்தருள்வர். இதற்கு வழி என்ன இப்படி வாடாமலிருக்க, என்பதற்குச் சமரச சுத்த சன்மார்க்கத்தில் சேர்ந்துவிடுங்கள் என்று பொதுப்பலனாக ஒரு பெருவழியைக் காட்டியருளுகிறார். தற்சேர்ந்தாரை உய்விக்கும் வழி. அவ்வழி நடப்போர் பல அருமைகளை இடையிடையே கண்டு இன்புறுவர் எல்லையில் மரணமிலாப் பெரு வாழ்வில் சேர்த்துய்க்கும் ''சும்மா யிருத்தல்'' இவ்வாறு நிறைவு பெறுகிறது.

என்ன ஐயா, தொடக்கம் ''ஆடாமல் அசையாம லிருந்து தியானம் வலுப்பெற்று சமாதி நிலைக்குக் கொண்டு போவது போலிருக்கிறது. அப்பால் நித்தியமான உடல் விடா வாழ்வு'' என்று முடிகிறதே என்று. இங்கு தான் ''சும்மாயிருத்தலின்'' உள்ளீடு பொதிந்து கிடக் கிறது. சும்மாயிருத்தல் என்பது கண்மூடி மவுனியாகிச் சமாதி செல்வதல்ல பெருமானார் காட்டும் ''சும்மா யிருத்தல்.'' மனம் சும்மாயிருத்தலே இங்குச் சும்மா யிருத்தலாகும். மனம் சும்மாயிருத்தல் என்றால் ஒரு செயலும் செய்யாமல், உண்ணாமல், உழைக்காமல் இருந்த இடத்திலே ஆடாமல் அசையாமலிருப்பதன்று. எச்செயலிலும் எப்பொருளிலும் மனதைப் பறிகொடுத்து விடாமல் புலன் இன்பத்திலும் வருத்தத்திலும் ஆழ்ந்து விடாமல், செயலில் முழுப்பற்றாக ஆனால் அதன் பலனில் எள்ளளவேனும் அணுவளவேனும் பற்றில்லாமல் செயற் படுவதே (Action) சுத்த சன்மார்க்கச் செந்நெறி. தயவு நெறி அருள் நெறி.

ஒரு பணி செய்கிறோம். ஆபீசுக்குப்போகிறோம். அங்குப் பணியில் முழுக்கவனமாக பணி ஆற்றுகிறோம். ஆபீசுக்குப் போகும்போது வேண்டிய பொருள்கள் அதாவது பணிக்குரிய பொருள்கள், போக்குவரத்துக்குரிய

Koviloor Digital Library

பணம் (பஸ் சார்ஜ்), உணவு, (டிபன்) முதலியன எடுத்துக் கொள்கிறோம். இப்போது இவற்றில் முழுப்பற்றோடுதான் செய்கிறோம். அப்போதுதான் செயல் ஒழுங்குபடும். இப்படி எடுத்து முடிந்தவுடன் பேருந்துவுக்கு நடக்கிறோம். இப்படி நடக்கத் தொடங்கும்போது நடையும் மனமும் ஒன்றாகி இருக்க வேண்டுமே யல்லாது, இச் சமயத்தில் முன் எடுத்துக்கொண்ட பொருள்களிலோ அல்லது ஆபிசில் போய் என்ன செய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டு சென்றால் அது நெறிபிறழ்ந்த நிலை. சரி, பேருந்துவில் (காரில்) ஏறிவிட்டோம். கார் ஆபீஸடையும் வரை அந்த மனம் என்ன செய்கிறது? சும்மாயிருப்பதில்லை. அவரவர் இடத்தில் அவரவர் அமர்ந்திருக்கிறோம் அல்லது இடமில்லாமல் கார் நடுவிலும் ஓரத்திலும் நின்று கொண்டு தொத்திக் கொண்டிருக்கிறோம்.

அப்போது அதில் கவனமாகயிருக்கிறோம். இது பிழையாகாது. ஆனால் அப்படியிருக்கும் போதும் மனம் ஏதேதோ சிந்தித்துச் சிந்தித்துக் கோட்டை கட்டுகிறது. இப்படிக் கோட்டைகட்டும் நிலை சும்மாயிருக்கும் நிலை அல்ல. அந்தந்தக் காரியத்தில் முழு “விழிப்போடு” இருப்பதே சும்மாயிருக்கும் நிலையாகும். இப்படி யில்லாததால் தான் நடந்து போகும்போது தடுமாறி வரும் வண்டிகளில் மோதுவதும், பேருந்துவிலிருந்து விழுவதும். எனவே அந்தந்தச் செயல்களில் முழுமையாக ஈடுபடும் போது ‘‘மனம்வேறு செயல் வேறு’’ என்பதே அல்ல; இரண்டற்ற அத்துவித நிலையாகிறது.

சரி, அந்தந்தச் செயல்கள் முடிந்துவிடுகிறது; வேறு பணி இல்லை. இப்போது மனம் சும்மாயிருக்க வேண்டியது தானே! அப்படி இருப்பதில்லை. ஏதேனும் ஒன்றைப்

Koviloor Digital Library

பற்றிக்கொண்டே தொன்றுதொட்டு வந்தமனம் ஒரு செயலுமில்லாமல் (Without any action) கற்பனையில் தொடங்குகிறது. இந்நிலை சும்மாயிருக்கும் செயலுக்கு முரண். இப்படி ஒரு பற்றுமில்லாமல் சும்மாயிருந்தால் இந்த நிலையே அதிக வலுத்தரும் நிலை (வலு - Energy).

வழக்கில் உள்ள ஒன்று சிந்திப்போம். இரவில் தூங்குகிறோம். காலையில் துயில் எழுகின்றோம். அப்போது எப்படி இருக்கிறது மனம்? புதியதாக வலு உள்ளதாக (Fresh&Strong) சுறுசுறுப்பாக உள்ளோமல்லவா! இதற்கு என்ன காரணம்? மனம் ஓய்வுபெற்று நிம்மதியாக இருந்தது. எனவே இந்த நிம்மதி ஓய்வான சும்மாயிருத்தலாலே வந்த பலன்தான். காலையில் உள்ள புதுமையான உற்சாகமான தெளிவான நிலை, நம்மையறியாது களைப்பினால் வந்த தூக்கத்துக்கே இத்துணை ஆற்றல் உள்ள தென்றால், நனவிலே சும்மாயிருத்தலான "அறிதுயிலின்" அதாவது விழிப்புணர்வுத்துயிலின் ஆற்றல் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

இங்கு ஒரு செய்தி நினைவுகூர்வது தவறாகாது. பணிகள் முடிந்த பிறகு வேறு வேலையில்லையென்று நூல் பார்க்கிறோம். நூல் பார்க்கும் போதும் அதில் மனம் ஒன்றி விடுகிறது. செயலும் மனமும் தனியாக இல்லை. அச்செயலும் முழுக் கவனமில்லாது மனத்தைச் சிதற விட்டுப் படித்தலாலே தான் நூலின் உட்பொருள் சரியாக விளங்குவதில்லை. எந்தச் செயலிலும் சொல்லிலும் சிந்தனையிலும் இரண்டற்ற (அத்வைத) நிலையிருக்குமானால் (முழுமையும் அது அதுவாக ஆகிவிடுதலே) சும்மாயிருக்கும் நிலைதான். இரண்டு என்று, அதாவது பிளவு, அது வேறு நாம் வேறு, அவன் வேறு, நாம் வேறு என்ற

Koviloor Digital Library

(துவித பாவனை) நிலையே சும்மாயிருக்கும் சுகத்துக்கு முரண், முரணேயாகும்!

சொல்வதும் எழுதுவதும் எளிதே. செயலில்? நான் வேறு, நீ வேறு, அவன் வேறு என்பதின் ஆணிவேர் தான் ஆன்மநேயத்துக்கு முற்றிலும் பகை. இந்த அடிப்படை தான் 'ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவு கோல்' என அடிகள் அருளுகிற நிலை. இதற்காகத்தான் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் கடைப்பிடிக்குமாறும் அதன் பயனே ஜீவஒழுக்கம் ஆன்ம ஒழுக்கமாகி இறைவன் இரங்கி அருள்புரிவான் எனச் சிறப்புறச் செப்பி மகிழ்வர் நம் தந்தை பிரான். இப்பழக்கம் கைவந்த கலையா வதற்குத் தான் இறை வழிபாடு, பாராயணம், தியானம் முதலான பல துறைகள்.

எங்கு இரண்டென்ற நிலை வேர் விட்டதோ அங்கே அப்போதே அந்த நொடியே வந்தது வம்பு. பிறகு வம்பு களை மூட்டை கட்டுவதற்குத் தும்பு; அந்தத் தும்பு திரிக்கக் கம்பு என்று பேரன் பேத்தியர் சுற்றமெலாம் தொடர்ந்து சூழ்கிறது. இவ்வாறு முழுமையான சும்மா யிருத்தலே ஆண்டவனாரின் அருள் தொடங்கும் நிலை (Creative Energy) இதைத்தான் "பேசறிய பெருமாமோன" வைப்பு என்று பேசுவர் பெரியோர். இந்த நிலை முற்றுவது சுத்த உஷ்ண நிலையாகும்.

இப்போது நம்மனோர்க்கு எவ்வளவு மிகையான ஞான நிலையிருக்கிறது என்றாலும் உடல்வேறு உயிர் வேறாகவன்றோ உள்ளது? இதன் இரட்டைநிலை (duality) செத்துமடிந்தால் சாகாக்கலையாகிய உயிர், ஆன்மா, உள்ளம், மனம் அறிவு, உடலம் என்ற அனைத் தும் ஒன்றாகி, ஒளி, ஒலி, வான் வடிவம் பெறும்.

Koviloor Digital Library

இதனைத்தான் ரத்தினச் சுருக்கமாக "நன்றுமல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து" என்று பாடலில் பகர்ந் தருள்வர். இந்நிலையை இன்னும் சுருக்கி, சுருக்கத்துள் சுருக்கமாக:

"பிரிவுற் றறியாப் பெரும்பொரு ளாய்என்
அறிவுக் கறிவாம் அருட்பெருஞ் ஜோதி"

—(திரு அகவல் 113-114)

என்று நயமாக, இலாவகமாகத் தாலாட்டி அகவிச் பேரானந்தநித்திரையில் நம்மைச் சேர்ப்பார்கள்.

நம்முள் பின்னமறக் கலந்து நம்மை இயக்கிவரும் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருள் தொடக்கம், இந்தச் "சும்மாயிருந்நலான" முழு நிலையே. இந்த முழு நிலையின் அடிப்படைத் தொடக்கமே திருவருள் அரும்பும் நிலை. இந்த இடம், இந்தநிலை, அநுபவமில்லாத ஆன்ம நேயப் பேச்செல்லாம், எழுத்தெல்லாம் போலியே. "சும்மாயிருந்த" லாகிய முழுநிலை என்பது சும்மா யிருப்பதுபோல் மனம் பசப்பி நம்மை ஏமாற்றும் நிலை அல்ல. இந்த நிலை வேறு

தளும்பாமல், சஞ்சலமடையாமல், மகிழாமல், இயல் பாயிருக்கும் ஒரு தெளிவுநிலை. இந்த நிலைதான் பிரி வுற்றறியாப் பெரும் பொருளாய் நம் அறிவினுள் அறிவாய் அறிவுக் கறிவாயும் நம் உடலாயும் நம்மை அணுவளவும் நீங்காத மாமோன நிலையாய், மாமோன வஸ்துவாய் அண்டசரா சரங்கள் அனைத்திலும் நீக்கமறக் கலந் துள்ளதான பேரருள் நிலைக்கும் உய்க்கும். உய்த்தபோது அனுபவிக்கும் "சுகநிலை"—புலன்கள் கடந்த சுகநிலை. இந்தச் சுகநிலைதான் மூவுருவ சித்திநல்கும் ஆற்ற லுள்ளது. இந்த நிலை நமக்குக் கொஞ்சமாவது இருக்

Koviloor Digital Library

கிறதா என்று சான்று தெரிய அவரவர்களும் தங்களைத் தாங்களே தொட்டுப்பார்த்துத் தெளிய வேண்டும். இதற்குப் புறத்தே தெரியும் சான்று "கனிவு, இரக்கம், தயவு" இந்தநிலை கைவர நான் நான், எனது எனது என்ற தன்மை பூண்டோடு அழியவேண்டும்.

இந்நிலை நம்பெருமானை இளம் பருவத்திலே தெருவிலே விளையாடும்போது (Playing) பேரருள் விளையாட்டாம் (Cosmic Dance) கலந்துவிட்டது. எனவேதான் ''ஆடையிலே எனை மணந்த மணவாளா'' என்று மகிழ்ந்தருளுவர். இது வித்துநிலை. வித்தே அவ்வாறானால் பூத்துக் காய்ந்துப் பழுத்த நிலை பகரவும் வேண்டுமோ! இந்த வித்தானது எல்லாத் திருமுறைகளிலும் ஆங்காங்கே மின்னுகிறது. பின்னர் சாசுவத மின்னலாக, ஒளியாக, வெளியாக மாறுகிற பாடல்களின் உள்ளீடு உள்ளங்கை நெல்லிக்கனியாக ருசித்து என்றென்றும் பொன்மேனி விளக்கங்காட்டி, நம்மையெல்லாம் ஆட்கொள்கிறது. ஆடை என்பது சித்திரை நட்சத்திரம் சுவாமிகள் பிறந்தருளியது சித்திரை விண்மீன். பிறவியிலேயே (ஆடையிலே) மணந்துவிட்டார், கலந்து விட்டார். கருவிலே கலந்த திருவாகும்.

இந்த மாபெரும் நிலையை நம்மனோர் விளங்கிக் கொள்வதற்காகத் திருமந்திர ஆசிரியர் திருமூலதேவர். ''அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம். தாய் தன் மணாளனுடன் ஆடிய சுகத்தை மகட்குச் சொல்லுமாறு எங்ஙனம்?'' என்று முகத்தில் கண்கொண்டு பார்க்கும் நம் போல்வார்க்கு ஒருசவால் விடுகின்றார். இந்த ஆடிய சுகம் அற்பமான, அழிவுக்கு வித்திடுவது.

இந்தச் சுகத்தை எப்படி வாய்விட்டுச் சொல்வது? இந்தப் பாலுறவு சுகம்தரு நிலையோ; ஒரு நொடி நேரம். இதை யாராலும் சொல்ல முடிகிறதா? சொல்ல முடியா

Koviloor Digital Library

மைக்காக அந்த அனுபவச் சுகம் போலியா அல்லது தவறா? இதைக்கொண்டு காணாத அதை உய்த்துணர வேண்டும். இந்த நொடிச்சுகத்தில்தானே மாய்ந்து மடி கிறோம். சுகம் இருப்பது பொய்யலவே. இதே சுகம் அழி யாது என்றென்றும் நிரந்தரமாய் வாழ்வதைத்தான் வெளிக்குள் வெளிகடந்து சும்மாயிக்கும் சுகம் என அனுபவ அருளாளர்கள் ஆற்றொணாச் சொற்களால் சொல்லிக் காண்பிக்கின்றார்கள். ஏட்டளவில் கற்றவர்கள் எப்படிச் சொல்ல முடியும்? 'மல்கோவா-இமாம்பசந்த்' என்ற மாம்பழச் சுவையின் சுகத்தை எப்படிச் சொல்லிக் காட்ட முடியும்? அவரவர்களும் ஒரு துண்டு கீறி அல்லது வாய்ப்புக்குத் தக அப்படியே கத்தி படாமல் கடித்துச் சுவைத்து இன்புறுதல் தானே நியாயம்! எனவே அழியும் ஒரு சுகநிலை காட்டி ஊழூழியாக அழியாச் சுக நிலைக்கு நம்மனோரை அழைக்கின்றார்கள் அருள் பழுத்த அடிகளார். அழுக்காறு, அவா 'வெகுளி, இன்னாச் சொல் முதலான குற்றங்களும் அறவே ஒழிதல்தான் பெருமானார் கூறியருளும் 'உண்மை நெறி'. இவை கை வர வேண்டும் முதலில், தியாக புத்தியும் நயவொழுக்க முமில்லாமல் இவை கைகூடாதென்பது ஒருதலை.

இந்த நிலைகள் கைவந்து எல்லோரையும் நம்மவராய், தான் வேறல்ல அவர்கள் வேறல்ல என்ற அனுபவச் செயல்களும் கைகூடும்போது, மாயையான படலம் (Cataract) கிழித் தெறியப்படும். அப்பால் ஒவ்வொரு வெளியாய் வெளிக்குள் வெளிகடந்த நிலைதானே ஏற் படும்! அதல்லாது இப்போது சொல்ஞானமாக வெளிகளை ஆய்ந்து என்ன செய்யப்போகிறோம்? திரு அகவலில் வெளிவகைகள் பற்றிப் பல்வகையாய் நமதருட் தந்தை கொஞ்சி விளையாடுகிறார்கள். நந்தமக்கு என்ன புரிகிறது? அரிச்சுவடியை ஆழமாகப் பயில்வோமாக!

Koviloor Digital Library

7. ''விளங்குகவே''

திருவிளங்கச் சிவயோக சித்தி எலாம் விளங்க
சிவஞான நிலை விளங்கச் சிவா நுபவம் விளங்கந்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர் விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந் தொருபால் விளங்க
வயங்குமணிப் பொது விளங்க வளர்ந் தசிவக்
கொழுந்தே.

(திருவருட்பா-6 ஆவது திருமுறை — பரசிவ வணக்கம்-1)
நம்மவரீர் !

வந்தனம். ஒப்பற்ற கருணை வடிவ திருவருட் பிரகாச வள்ளற்பெருமான் திருவாய் மலர்ந்தருளி வாழ்வளித்து வரும் இத் திருப்பாடலில் உலகமெலாம் விளங்கும் விளக்கம் பேசியருளப் பெறுகிறது. சிற்றறிவுடையேனான அடியேனுக்கு விளக்கம் எவ்வளவு தூரம் திருவருள் விளங்க வைக்கின்றதோ அந்த அளவில் தானே விளக்கப் பெற முடியும்? மற்றப்படி அவரவர்கள் தவத்துக் கேற்ப மென் மேலும் விளங்கியே வளருமாகுக!

உலகம், அவன், அவள், அது, (ஒருவன், ஒருத்தி ஒன்று,) என்ற மூவகைத் தோற்ற இயக்கத்தால் விளக்கம்

Koviloor Digital Library

செய்யப் பெறுகிறது. அனைத்துலகும் இவ்வகையில் அடங்கி நிற்பது தேற்றம்.

"விளக்கு" என்று சொல்லும்போது விளக்கக் கூடிய ஒரு பொருளுக்கு அவ்வாறு பெயர் சொல்லுகிறோம். ஏற்றியிருக்கும் விளக்கினால், இருளில் தெரியப் பெறாத பொருள்கள் காட்சியாகின்றன. ஆனால் அதே விளக்கு ஏற்றப்பெறாமல் இருக்கும்போதும் அதற்கு விளக்கு என்றே பெயர் சொல்லுகிறோம். "விளக்கை" எடுத்துவா என்று நாம் சொல்லும் போதும் ஏற்றிய விளக்காகத்தான் அது இருக்கவேண்டும் என்பது பொருள் அல்ல. ஏற்றப் பெறாத விளக்கையும் எடுத்து வருவது தான் மரபு, பிறகு விளக்கில், எண்ணெய், திரி சரிபார்த்து ஏற்றிக் கொள் வதும் இயல்பு. இவ்விளக்கு ஏற்றப்பெறாத நிலையிலிருந் தாலும் வெளிச்சம் தரக்கூடிய ஆற்றல் அதனிடத்தில் பொதிந்து இருப்பதால் அதையும் விளக்கு என்றே ஐயம், திரிபு இன்றியே பேசிப்பழகி வருவது கண்கூடு.

இவ்வாறு நம் வீட்டகத்தே, தெருவகத்தே, ஊரகத்தே இருளில் விளக்கம் பெறுவதற்குப் பற்பலவகை விளக்கு களை உபயோகித்துப் பயனடைகிறோம்.

பகலில் விளக்கம் பெறுவதற்குக் கதிரவன் ஒளி துணை செய்கிறது. இரவில் திங்களின் ஒளியும் துணையா கின்றது. இவை யிரண்டும் உலக விளக்குகள் ஆகும். ஒரு நாட்டில், கதிரவன் ஒளி இல்லை என்றாலும் மதியின் ஒளி இல்லை என்றாலும் பிறநாட்டில் அவை இருக்கவே செய்கின்றன. எனவே இவ்விரண்டுக்கும் ஓய்வும், உறக்கமும் இல்லை. விளக்கம் என்ற தன்மையில் ஒரு நிலையேயானாலும் இவ்விரண்டும் அதன் அதன் பெற்றி யில் வெட்பமும் தட்பமுமாயுள்ளன. முன்னைய விளக்கு களைப் போன்று பொருள்களை விளக்குவதோடு நின்று

Koviloor Digital Library

விடாமல் சூடும், குளுமையுமான இரண்டு வித உயிர் இயக்க ஆற்றலையும் பெற்றிருப்பது புலனாகிறது. நம்மால் ஏற்றப்படும் விளக்குகளுக்கு இவ்வாற்றல் இல்லை. சூரிய சந்திரருக்கும் இந்த ஆற்றலைத் தருவதற்கு ஒரு பேராற்றல் இருக்கிறது. இவ்விரண்டு கோள்களை நாம் கண்ணால் பார்க்குமாறுபோல அவ்வாற்றலைக் கண்ணால் பார்க்க முடியவில்லை. கண்ணால் பார்க்க முடியாமைக்காக அவ்வாற்றல் இல்லை என்று நாம் சொல்ல முடியாது. மின்சாரத்தைக் கண்ணால் பார்க்க முடிவதில்லை. ஆனால் அவ்வியக்கத்தால் இயங்கும் அனைத்துப் பொருள்களையும் பொறிகளையும் கண் கூடாகக் கண்டு ஒப்புகிறோம். இதுதான் ஓரளவு விளங்கிக் கொள்ளும் (சுருக்கமான) உலக வாழ்வின் நுட்பம்.

இவ்வாறே நம் யாக்கை நிலையுமிருக்கின்றது. கண்ணுக்குத் தெரியாத நம்மை இயக்கும் ஆற்றல் நம்முள்ளே யிருந்து இயக்குகின்றது, அதை விளக்குவதற்கு, விளங்கிக் கொள்வதற்குத்தான் உடம்பும் மற்ற கருவி கரணங்களும் தந்து அருளப்பெற்றன. இன்ப, துன்பங்களை உணர்வதற்கு இவ்வுடம்பு உதவுவது போல் வேறு உதவும் பொருளைக் காண முடியவே இல்லை. ஆயினும் எவ்வளவு உணர்ந்தாலும் உடனுக்குடன் அவ்வுணர்வு மாறி விடுகிறது. உணர்வு மேலெழுந்த வாரியாக இருப்பதால் அது உணர்வு போல் தெரிகிறதே அல்லாது, உண்மையில் உணர்வில் அவை பதியவில்லை.

மனத்தில் தாக்குவதை உணர்வில் தாக்கியதாக, மாறுபாடாகக் கொண்டு பேசிவருகிறோம். உணர்வில் ஒரு முறை ஒழுங்காக இன்ப துன்பம் தாக்கினால் இவ்விரண்டு 'நிலைபேறான' நிலை இல்லை என்பது புரியவரும்.

Koviloor Digital Library

இவ்விரண்டு, இன்பதுன்பமும் நிலையாகவுமில்லாமல் மாறி மாறியும் வந்து நம்மையாட் கொள்கின்றன. எனவே இவ்விரண்டையும் கடந்த ஒரு நிலை இருக்கின்றதா அல்லது இப்படியே மாறி மாறி வரும் வஞ்சப் புலனைந்தால் மயங்கி மயங்கித் திரிவதுதான் மரபா என்ற ஐயமும் எழாமல் இல்லை! இதனைச் சிந்தித்தால் இவ்வின்ப துன்பங்கள் மனத்தால் வருவது தான் என்று சங்கையற முடிவுக்கு வர முடிகிறது, ஆகவே மனம் கடந்த, மனம் கரைந்த வாழ்வு பெறுவோமானால் அத்தகைய வாழ்வே இன்ப துன்பம் கடந்த ஒரு நிலை எனப் பேசலாம்.

இந்த மனங்கடந்த நிலையைத்தான் 'அன்பு' நிலை என ஆன்றோர்கள் பேசி யருள்வர். மனம் என்ற ஒரு பொருள் ''அன்பு''ப் பெட்டகக் கதவைத் திறக்க முடி யாது. கருவி கரணங்கள்; காரிய காரணங்கள், கடந்த நிலையே "அன்புநிலை"

இவ்அன்பு நிலை விளக்கமாகிச் செயற்படத்தான் முதல் விளக்கமான உடல், விளங்கி நிற்கின்றது· இவ்வுடல் 'உருவாக' பளிச்செனத் தெரிகிறது. இதை விளக்கம் செய்ய உயிர் உள் அடங்கி விளங்குகிறது. இவ்வுயிர் இல்லாவிடில் உடல் இயங்காது. காட்சிப் புலனான யாக் கை மண்ணாகி, தீக்கிரையாகி மடிகின்றது. எனவே "உயிர் விளக்கத்தால்" "உடல் விளக்கம் பெறுகிறது." இவ் வுயிரிலும் உள்ளீடாக உணர்ச்சி என்ற நிலை விளங்கு கிறது. இந்த உணர்ச்சி என்பது சொல்லுக்கு வரும்போது தான் இப்பெயர் பெறுகிறது.

இந்த உணர்ச்சியின் மூலப்பொருள்தான் "உணர்வு" இந்த உணர்வும் "உணர்வோன்" என்ற ஒருவனில்லாது

Koviloor Digital Library

உணரும் நிலையில்தான் அதன் பூரண அநுபவம் பெற முடிகிறது. அதாவது சிந்திப்போன் என்ற ஒருவனில்லாது சிந்திப்பது—பார்ப்போன் என்ற ஒருவனில்லாமல் பார்ப்பது—என்ற இவைபோன்ற அனைத்தும் அநுபவப்படுகின்ற நிலைபோன்று. "பார்ப்பறப் பார்த்து" "நினைப்பற நினைந்து" என்பது போல "உணர்வு அற உணரும்" நிலையையே குறிக்கின்றது இந்நிலை.

இந்த உணர்வுதான் உயிர்ப்பையும் (சுவாசத்தையும்) அதை நிறுத்திக்கொள்ளவும் மீண்டும் உயிர்காக்கவும் (சுவாசத்தை இயக்கவும்) செய்கின்றது. இந்த உணர்வு ஒருபிழம்புநிலை. இதில் நான், எனது என்பது எள்ளளவு கூட இல்லாத செயல்நிலையே பூர்ணமாக நின்று செயல்படுகிற அதிக நுண்ணிய பேசற்கரிய, கருதற்கரிய, உணருவதற்கரிய ஒரு பெருநிலையுள்ளது. இந்நுண்ணிய அணுவிற் கணுவாம் ஆற்றலே மகத்துக்கு மகத்தாம் ஆற்றலாகின்றது. இந்த இயக்கமே உலக இயக்கம். இது அனைத்துயிர்க்கும் பொது, தனிப்பட்டதல்ல, ஆனால் ஒப்பற்ற தனிப்பெருந்தனிதான், இதுதான் பொது நடனம்.

இந்த விளக்கம் விளங்குவதற்கு ''நான்'' வேறு, ''என்னை'' இயக்கும் ஆற்றல் வேறு என்ற நிலை மாறி நான் என்றும் அவன் (இயக்கும் ஆற்றல்) என்றும் நினைக்க அங்கு மனமும், ''நான்'', ''தான்'' என்ற பிளவுபட்ட உணர்வும் இல்லாத நிலைதான் சிவானுபவம். இதற்குச் சிவஞான நிலையும் அதற்குச் சிவயோக சித்தியும் விளங்க வேண்டும்.

ஒன்றுக்கொன்று படிகள் போல் தோன்றினாலும் ஒன்றில் ஒன்று பின்னிப்போய் ஒரே ''திரு'' வாக விளங்குகின்றதாம். ''திரு'' என்ற ஒரு சொல்லுக்கு ஒப்பாக ஒரு

Koviloor Digital Library

சொல் யாண்டும் கிடையாது. "திரு"வைப் பல்வகைச் செல்வமாக நாம் பிரித்துப் பேசுவதால் (புரிந்து கொள் வதற்காக: கல்விச் செல்வம், பொருட்செல்வம். மக்கட் செல்வம் என்று இவ்வாறு) இவை அனைத்திற்கும் மூல மான ஒப்பற்ற தனித்திருவை உன்ன முடியாமல் போய் விட்டோம். "திரு" அனைத்துக்கும் "திரு"வாம். அந்த அனைத்தாற்றல் "திரு" எனவே இந்தத் "திரு" விளக்க மாக ஆக மற்ற திருவெல்லாம் விளங்கப் பெறுகின்றது. இந்த முதலாம் (CAPITAL) "திரு" உலகவர் புறத்திலே விளங்கிக் கொள்வான் வேண்டித் தில்லைப்பதியிலே சிதம்பரமென்ற கோவிலிலே கூத்தப்பெருமானாகச் சிவகாமவல்லித் தாயுடன் நட்டம் புரிகிறான்; திருச் சிற்றம்பலம் என நட்டம் புரிகின்ற இடத்துக்குப் பொது வாகப் பெயர்.

அறிவுமய ஞானவெளியாம் அவ்வம்பலத்திலே நடம் புரிகின்ற பெருமான் தான் நம் ஒவ்வொருவர் சென்னியுள் நின்று, ஒளிமய உருவில் ஊன்றி இயக்குகின்றான். இப் பெருமான் தான் அனைத்துயிரிலும் விளக்கம் தந்து விளங்குகின்றான். அனைத்தையும் விளங்குவதால் "விளக்கு" இவன் தான், விளக்கும் ஆற்றலே "மருவிளங்கு குழல் வல்லியாம்" உலக அன்னை. இருவரும் வெவ் வேறல்லர், ஒருவரே! சூரியனும் ஒளியும் போல். பூவும் மணமும் போல். அப்பனையும் அம்மையையும் பிரிக்க முடியாது.

"மருவிளங்கு" என்பதைப் பக்கத்தில் விளங்குவதாய்ச் சொல்வது ஒரு மரபு. ஆனால் "மருவிப்போய்" என்பதை ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி "அருளும்" "ஆற்றலும்" ஒன்றாகி (சொல் அளவில் வேறாகிப்

Koviloor Digital Library

பொருள் அளவில் ஒன்றாகி) ''வைரத்தைப் பொன்னில் மருவுதல்'' என்பதில் உள்ள ''மரு'' வாகக் கொள்ளுதல் சாலும். பிரிவற மருவி வாழ் உலக அன்னையாம் அருள் எனக் கொள்ள வேண்டும்.

தில்லைவனம் என்பது ''தில்லை'' என்ற ஒருவகை மர மடர்ந்த காடு. இந்தக் காட்டிலே தான் திருச்சிற்றம்பல மென்ற சிதம்பரம் விளங்குகிறது. அதிலே நடனமிடு கின்றான் அனைத்துலகநாயகன். நம் உடலந்தான் தத்துவக் கூட்டமடர்ந்த தில்லைவனம். இதில்தான் திருச்சிற்றம்பலம் விளங்குகிறது. ஞானவெளி! இதில் ஆடுகின்றவன்தான் "அகச்சிற்றம்பல அருளாளனான நடன சபேசன்''. ஆடலரன்

எனவே ஆடுகின்ற நடன சபை எல்லோருக்கும் பொது, தனித்தனி ஆடரங்கு அல்ல. ஆடுபவனும் தனித்தனி தனியன் அல்ல. அனைத்துப் பொருள்களிலும் ஒருபடித் தாய்த்தான் ஆடுகின்றான் ஒரு நிலையாக. ஆடுபவனுக்குச் சபையும் ஒருமித்ததுதான். ஒரே விளக்கமாக ஒரே படித்தாக விளங்குவதால் விளக்கே என்று விளிக் கின்றார்கள், அது சாதாரண விளக்கமன்று என்பதற்காகத் ''திருவிளக்கே'' என்று விளித்தருளுகின்றார். தில்லைக் கூத்தனின் நுண்ணிய வடிவம், ஒளிதான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளும் நிலையைப் புறத்தே ஒப்பத் தான் வடற்பதியில் கோயிலை சபை என்றும் அதில் மூர்த்திக்குப்பதில் உள்ள ஒளி என்றும் தெற்றெனப் புலப்படப் புராதன உண்மையைப் புதுமையாய்ப் புதுக்கி உத்தரஞான சிதம்பரம் என்றும் திருநாமம் சூட்டினார்கள்.

எனவே இத்தகைய பேராற்றற் பெருந் "திருவை' சிவகொழுந்தே என்று அழைத்து இறுமாந்து செம்மாந்து

Koviloor Digital Library

நித்தித்து தேனித்துக் களிக்கின்றார்கள். கொழுந்து விட்டெரிகின்றது என்று "ஜோதி"க்குத் தான் சொல்லும் மரபை இந்தத் திருப்பாடலில் சொல்லாமல் சொல்கிறார்கள். சுடர் விட்டெரியும் "சிவமாம்" அது. அதனால் சிவகொழுந்தாகிவிட்டதாம்? வேரில் போட்ட உரம், தளிரும் கொழுந்தில் தானே புலனாகின்றது! அடிப்படையாம் வேரிலிருந்தே வலுப்பெற்று "கருணைஊற்று" வளருவதால் விளக்கம் தந்து நிற்கின்ற உலகத் தோற்றத்திலும் அந்த வளம், கொழுந்தாகப் படருகிறது.

இவ்வளவு விளக்கங்களாகிய சகல உருவங்களும் விளங்க, அவை விளக்கப்பெற, அதனதன் உள்ளீடாகிய உயிர்ப்பாற்றல் விளங்க, அவ்வாற்றல் விளங்க, உணர்ச்சியை உள்ளீடாகக் கொண்ட உணர்வு விளங்க, இவ்வளவு வகைகளும் விளங்க, சிவயோக சித்தி விளங்க, அது விளங்க, சிவஞானநிலை விளங்க, அது விளங்கச் சிவானுபவம் விளங்க, அருள்மயத்தாயான தனிப்பெருங் கருணை விளங்க, அதைப் பிரிவற, பிரிவுற்றறியாப் பேரறிவு நிலையாம் அருட்பெருஞ்ஜோதி விளங்க, இதையே அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணையாம் மூலத் "திரு" விளங்க என்று போற்றி மகிழ்கின்றார் சுத்தப் பிரணவ ஞானவடிவ வள்ளற் பெருமான்

இத்தகைய, ''விளங்க, விளங்க'' என்ற பெரு விளக்கம் வள்ளற் பெருமான் தந்தருளாதிருந்தால்:

திருமந்திரமாலையில் அருளொளித் தலைப்பில் உள்ள:—

"விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்

Koviloor Digital Library

விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும்விளக்கவர் தாமே."

—(திருமந்திரம்-1818)

என்ற பாடலை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

நம் பெருமான் செம்பவளவாய் மலர்ந்த "பிள்ளைப் பெரு விண்ணப்பம்" பாடல் 118-ல் "உருவளர் திரு மந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்மொழிப் பொருளும்" என்ற இரண்டாவது திருவரி எண்ணி எண்ணி இறும்பூதெய்தச் செய்து விளங்குகிறது அன்றோ! சமய சன்மார்க்க அடிப்படை தெரிந்து கொள்ளுதற்கே விளக்கம் சமயாதீத சுத்த சன்மார்க்கம் வளருகிறது என்று சொல்வது மிகையாகாது

"போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ் சீர்
ஆற்றலில் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி.

—(திரு.அகவல்-1583-84)

Koviloor Digital Library

8. "செத்தார் எழுதல்" எனச் செப்பியதும் தீதாமோ?

சுத்த சன்மார்க்கச் செந்நெறி நில்லாரிடம் இத் தலைப்புப் பற்றிய சங்கை எழுவது இயல்பாகலாம். சுத்த சன்மார்க்கிகளிடையே இவ்வினா, வெளிப்படையாய்ச் சொல்லிக் கேட்க முடியாமல் அகத்தே தடுமாறி நெளிகின்றது. ஏதொன்றையும் தங்குதடையின்றி, உள்ளே புரையோடாமல், வாய்விட்டுப் புறத்தே பேசுதல் வேண்டும். உரையாட வேண்டும். சிந்திக்கவேண்டும். ''நாம் சன்மார்க்கத்திலிருக்கின்றோம். இந்த ஐயத்தை வெளியிட்டு உசாவினால் நம்மை மதிப்பார்களா?'' என்ற மானம் நம்மைக் கவ்வுகிறது. இவ்வகை வெட்கம் தழைத் தோங்கினால் உள்ளே வளரும் புன் சீழ்வைத்துப் புற்று நோயாக (Cancer) ப்பரவி உயிருண்ணும் கூற்றாகிவிடும் அன்றோ!

நம் தந்தைபிரான் ''மானம் போனவழி விடுத்தோம்'' என்று சொல்லிக்காட்டும்போது நம்மனோருக்கு என்ன மானம் வேண்டியதிருக்கிறது? 'விசாரவசத்த'ராயிருங்கள் என்று ஏன் நம் பெருமானார் சொல்லியருளுகின்றார்? சங்கை உடைபட்டாலன்றோ தெளிவு பிறக்கும்? தேறான் தெளிவும் தெளிந்தான்கள் ஐயுறவும் தீரா இடும்பை தரு மன்றோ இதுபற்றிக் கொஞ்சம் சிந்திக்க முயல்வோமாக!

நம் அறியாமையைச் சற்றே உணர முற்படுவோம். இதுவரை போந்த அருளாளர்களின் திருவாக்குகளை நம்

Koviloor Digital Library

போன்றோர் ஓரளவு அறிவுத் தெளிவுக்குப் பகுத்துப் பார்க்கலாமே தவிர ஆய்வுத் துறையில் பூரண நிலையில் ஊடுருவி அணுவணுவாக ஆய்தல் பொருந்தாது. ஏனெனில் அவர்கள் அநுபவ வாயிலாக அருளிய அவை ஒருவர் அநுபவத்துக்கும் மற்றொருவர் அநுபவவகைக்கு மாறுபடக் கூடும். நாம் அநுபவ அரிச்சுவடியையே பெரும் பாலும் எட்டிப் பார்த்ததில்லை. ஏட்டளவில் எழுத்துக் கூட்டிப் படிப்பதை வைத்து ஆராய்தல் பொருந்தாக் கூற்றாகும். படித்த அளவில், அதை அநுபவமாகப் பொய் மையில் கருதி முடிவுகட்டி விடுகிறோம். கற்றறிந்த மேதைகள் கேட்கிறார்கள்:—

1. ஏன் ஐயா, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைக் குருவாகக் கொண்ட வள்ளற் பெருந்தகை ‘செத்தார் எழுதல்’ பற்றி அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார் களே, ஏன் பூம்பாவையை எழுப்பியது போல் ஒரு நிகழ்ச்சி செய்து காட்டவில்லை?

2. போகட்டும், அப்பர் பெருமானைப் பற்றித் தோத் தரித்திருக்கும் பாடல்கள் அற்புத அற்புதமாகவிருக் கின்றனவே, அப்பர் மூர்த்திகள், மூத்த திருநாவுக்கரசு என்ற அப்பூதியடிகளின் திருமகனாரை எழுப்பியதுபோல் ஒருவரையும் வள்ளலார் எழுப்பவில்லையே?

3. சரி, சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பாடும்போது, முதலையுண்ட பாலனை அழைத்தமை பற்றி இவ்வளவு பேசிய வள்ளலார் செத்தார் ஒருவரை, எங்காவது எழுப்பியிருப்பின் அவர்களோடு ஒன்றாக வைத்துச் சிந்திக்க முடியும். அவ்வாறில்லாதபோது...? வெறுமனே பாடல்களை வைத்து ஏற்றுவதில் பயன்யாது என்கிறார் கள். இத்தகைய கேள்விகள் பெருமகிழ்ச்சிக் குரியவையே.

Koviloor Digital Library

புரையோடி மாண்டு விடாமல் கேட்டார்களே! வரவேற்கத் தக்கவர்கள், வாழ்க, வளர்க, இக்கேள்வித் திருவுடையவர் கள்.

நல்லது, வள்ளற் பெருந்தகையும் இவ்வாறு ஒரு அருளாடல் நிகழ்வு செய்தருளினார்கள் என்று வைத்துக் கொள்வோம், அதனால் நாம் பெறும் இலாபம் என்ன? திருக்கடைக்காப்பு-தேவாரம்-திருப்பாட்டு அருளிய மூவர் முதலிகளின் திருவுருவங்களோடு வள்ளலார் திருவுரு வையும் ஒன்றாகச் சேர்த்து மலரிட்டு வழிபடுவோம். அவ்வளவுதானே! அம் மூவர்களும் நாம் அவர்களை வழிபாடு செய்வான் வேண்டி அச் சித்தாடல் புரிந்தார் களல்லர். மூவர்களின் அருளிப் பாடுகளைப் பற்றிக் கொஞ்சம் சிந்திப்போம்:

1. ஆளுடைய பிள்ளையாரான ஞானசம்பந்தர் எழுப் பியது, சேமித்து வைத்திருந்த பூம்பாவையின் எலும்பை.

2. ஆளுடைய அரசுகளான திருநாவுக்கரசர் எழுப் பியது கண்ணுக்கு நேரே இருந்த மூத்த திருநாவுக்கரசான அப்பூதியடிகளின் மகனாரின் யாக்கையை,

3. ஆளுடை நம்பிகளான சுந்தரர் எழுப்பித் தந்தரு ளியநிலை எலும்புமில்லை, யாக்கையுமில்லை, என்றோ முதலையுண்டு மடிந்தநிலை, உருப்படியாக ஒன்றுமே இல்லை. உண்ட முதலையும் இல்லை. முதலை வாழ்ந்த நீரும் இல்லை.

இவ்வகைத் தன்மைகளை நன்கு கவனித்தாதல் வேண்டும். இந்த மூன்று நிலையிலும் (எலும்பு 1) யாக்கை 2) ஒன்றுமே இல்லாத நிலை 3) உயிர் நீத்தவர்கள் உயிருடன் மீண்டும் வந்தமை ருசுப்பிக்கப்பட்டது. திருவருள்

Koviloor Digital Library

வல்லபம் வெளிப்பட அதற்குரிய தக்கார்களான அருளாளர்களைக் கொண்டு காட்சிப் பட்டதே அன்றி வேறு யாது காரணமும் பற்றியதே அன்று.

இந்த நிலையை மீண்டும் வள்ளற்பெருமான் வழி வெளிப்படுத்தவேண்டிய இன்றியமையாமை திருவருளுக்கு இல்லை. ஏன்? இனி எவ்வகையில் மாண்டோரை எழுப்பிக் காட்டுவது? மூவகையும் முடிந்தது. எவ்வகைச் சாவும், மீளலும் இவ்வகைகளுள் அடங்கக் கூடியதே. மீண்டும் மீண்டும் செய்வதையே செய்வதில் இலாபம் என்ன? அதே ஆற்றலை வெளிப்படுத்துவதில் மன்பதைக்குப் பயனில்லை என்பதைத் திருவருள் தெரிந்து கொள்ளாமலா இருக்கும்? மூவர் பெருமக்களுக்குத் திருவுருவம் செய்து பூப்போட்டு வணங்கிப் பேழையில் வைத்துப் பூசிக்கக் கற்றோமே தவிர, அவர்கள் வழி தெய்விகம் ஒருவரும் பெறவில்லையே என்பதை உன்னியது இறையருள்.

செத்தார் எழுதலான இந்நிகழ்ச்சியைப்பற்றிப் பேசி யாவது வந்தோமா? புராணம் படித்ததில்—கதையாக—இதை ஓட்டினோமே தவிர சிறிதேனும் அழுந்தினோமா? எனவே மீண்டும் அருளாடல் புரிந்து ஆட்கொள்ளாத நிலையில், ஆனால் இந்நுட்பம் வெளிப்பட அறிவுத்துறை கூடிய அருட் பிழம்பு ஒளிவிட உள்ள அருளாளரை நமக்கு அறிவுச்சுடர் கொளுத்த திருவருள் திருநோக்கம் கொண்டது.

முன்போந்த அருளாளர்களைக் கொண்டு மீண்டும் திரு அவதாரம் செய்வித்து மக்களைத் திருத்த நினைக்காமல் திரு அருள் தாமே திருக்கருவுற்றது வள்ளற் பெருமான் திரு (வடிவ) உருவில். அவ்வளவுதான். பெருமானின் திருவருட்பாக்கள் மலர்வதற்கு முன்பு நம்மில்

Koviloor Digital Library

எவராகிலும் ஒருவர் செத்தார் எழுதல் பற்றிச் சிந்தித்தோமா? இப்படிக்கருத்தாக இல்லையே!.

நம்மனோருக்கு நால்வராதிகளையும் தெரியாது. வள்ளற் பெருமானையும் தெரியாது. ஏதோ முன்செய் தவத்தால் அவ்வருளாளர்களின் எச்சங்களான திரு நூல்கள், மூதாதையர்கள் கண்டெடுத்த புதையல் கருவூலங்களாகக் கிடைத்துள்ளன. அவற்றின் ஆதாரங்களைக் கொண்டே நடுநிலை பிறழாது மேற்செல்ல வேண்டும். அவ்வாறு மேற்செல்வதிலும் அவர்கள் எந்தத் திருநோக்குடன் அருளியுள்ளார்கள்; அதன் உண்மைப் பொருள் நான் யாது, என்று தவங்கிடந்து உணரப் பெறவேண்டும். இலக்கிய அறிவால் பொருள்கோடலோடு நின்றுவிடக் கூடாது. ஆட்பட்ட அறிவோடு தவங்கிடக்கவேண்டும்.

காலவளர்ச்சிக்கேற்ப அருளாளர்கள் திரு அவதாரம் நடைபெற்றுவருவது கண்கூடு. இறையுணர்வு அருகிக் கிடந்து, சமயநிலைகள் தடுமாறிக் கெட்டழிந்து, நிலை புரண்டு தான்தோன்றித்தனமாய் அவனி ஆட்டம் கண்ட போது ஆங்காங்கு அவதரிக்கப் பெற்றவர்கள் அருளாளப் பெருந்தகைகள். இதன் பயன் இறையுணர்வு நிச்சயிக்கப் பெற்று தனிப்பெருந்தலைமைப்பதியாக ஒருவன் உண்டு என்றும், அவன் ஆணையால் அகிலம் நடைபெறுகிறது என்பதும் உறுதியாயிற்று. வகுத்தான் ஒருவன் இல்லாமல் நம் முயற்சி மட்டும் கைகூடாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று. இம்முறையும் காலத்துக்கேற்ப சடங்கு முறைகள் கூட்டியும் குறைத்தும் மெய்ப்பொருள் உண்மை மேலோங்கி வரலாயிற்று.

இம் முறையில் நம் தமிழகத்துத் தோன்றியருளிய திருவள்ளுவப் பெருந்தகையாளர் உலகியற் பொருள்கள், நிகழ்ச்சிகள், வாழ்வுகள் காட்டி ஆதிபகவன் உண்மையைத்

Koviloor Digital Library

நிலகம்போல் காட்டியருளினார். அது போதவில்லை மன் பதைக்கு. எனவே சமயாசாரியர்களின் அவதாரம் அவசிய மேற்பட்டது. அகச்சமயம் அகப்புறச் சமயத்திலும் இந்த உண்மைக்குப் பங்கமேற்படவில்லை. விரிவஞ்சி அகச்சமய நிலையை மட்டும் பற்றி இரண்டொரு வரி கூறி மேற் போவோம்.

சிவசமயச் சான்றோர்களுள் குறிப்பாக நால்வராதிகள் அவரவர்கள் பாங்கிற்கேற்ப இறையுணர்விருப்பும் அதன் வழிபாட்டு முறைகளும் சொல்லியருளினர். அவ்வழி பாட்டில் எட்டு நாண் மலரான அஷ்ட புஷ்பம் சாத்து மாறு கூறியருளினர். அக்கூற்றுடன் நின்றார்களல்லர். அதன் உட்பொருளான அகமலர் எட்டாக ''நலஞ் சிறந் தார் மனத்தகத்தில் மலர்கள் எட்டாய்'' என்று உள்ளீட்டு வைர மின்னற்பொன் என முத்துக்களையும் பதித்தே தந்துள்ளார்கள். ஆடு தழை மேய்ந்ததன்ன நாம்தான் நுனிப்புல் மேய்ந்தோம். இந்த எட்டு மலர்களில் முதல் மலர், ''கொல்லாமை'' யாகிறது. அடுத்த ஏழு மலர்களும் பொறியடக்கம், இரக்கம் உடைமை, பொறுமையுடைமை, அறிவுடைமை, மெய்யுடைமை, தவமுடைமை, அன்புடை மை என நிறைவெய்துகிறது. இத்தொடர்ச்சியை ஆழ்கடல் மூழ்கி முத்துக்குளிப்பதன்ன நாம் முயன்று நோக்கிக் கண்டு கொண்டு வாழ்வு நடத்த வேண்டும்.

கொல்லாமை என்ற முதற் பூ கைவரின் மற்றவை வெகு எளிமையான சங்கிலித் தொடராக ''அன்பில்'' முடியும். கடைப் பூவான பூதான் முதற் பூவாகத் தொடரும். இதுதான் ஆதியும் அந்தமும் ஒன்றான நிலை. தொடக்கம், முடிவு என்பதொன்றில்லா அருள்நிலைப்புப் பரப்பு இதுவே, இதைச் சுட்டவே 1330 அருங்குறள் தந்த வள்ளுவத்தில் நல்லது எது என்று ஒரே குறளில் பேசிக்

Koviloor Digital Library

காட்டிய நிலையும், அதிலும் ஒன்றாக நல்லது எது, அதாவது வேறொரு நல்லது என்ற ஒரு பொருள் இல்லாத நிலையில், ('ஒரு') ஒன்று என்று உணர்த்துகிறது, ''ஒன்றாக நல்லது கொல்லாமை'' என்று. இந்த ஒரு திரு நடம்புரி உத்தமத் திருக்குறளை மட்டும் நாள்தோறும் ஓதி ஓதிச் செபித்து வாழ்வில் நடைமுறையில் கொண்டு வந்து விட்டால் ஞானமெனும் மோனப் பொருள் வடிவமாகவே நாம் ஆகலாமன்றோ!

சரி, வழிபாட்டுச் சிறப்பை உச்சநிலைப்படுத்திப் போந்த மூவர் முதலிகளினின்றும் சன்மார்க்கம் தந்தருளிய வாதவூர் அடிகளாம் மணிவாசகப் பெருமானான ஆளு டைய அடிகள் நிலை மாறுபடுகின்றதையும் பேசாமல் நாம் விட்டுவிட முடியாது. தல யாத்திரைகள் குறைந்தும் பாடற்றொகை குறைந்தும் யாக்கை பொன்னுடலமாகும் பெற்றியும் அற்புதமான அமுத தாரைகளின் ஏற்றமும் பட்டப் பகலாகத் தெரிகின்றனவே! அழிதரு யாக்கை அளிதரு மேனியாக மாற்றிக்கொள்ளப் பெற்று ''புன்புலால் யாக்கை புரை புரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து'' ஆண்டருளிய என்புருக்கும் ஏற்றமிகு எளிவந்த திருமறைச் சொற்பாவாம் திருவாசகம் நாம் நெட்டுருச் செய்து பூப்போட்டுக் கும்பிடும்பாடல் வரிசை களில் ஒன்றுதானே! அதைப்பற்றி வள்ளற் பெருமான் திரு அவதாரத்துக்கு முன்பு என்ன சிந்தித்தோம்!

அஷ்ட புஷ்ப வழிபாட்டின் அநுபவ ஆநந்தாதீதச் சொல்லொணாப் பெரும்பயன்தான் யாக்கையை இங்கு விடாது வான்வடிவாக மாற்றிக்கொள்வது. முதற்பூவான கொல்லாமை, ஜீவகாருண்ய அடிப்படையன்றோ? இதனாற்றான் ''உயிரிரக்கமே மோட்ச வீட்டின் திறவு கோல்'' என நம் பெருமானார் நவின்றருளினர். இதை

Koviloor Digital Library

எல்லாம் கொஞ்சம் சாவதானமாகப் பார்த்துச் சாதிக்க வேண்டுவது நம் கடமையன்றோ!

இவ்வாறு வரலாறிருக்க, நாம் சாற்றைவிட்டுவிட்டுச் சக்கையாம் சடங்குகளையே கட்டிக்கொண்டு மாரடிக்கும் பழக்கம் முற்றிக் குருடும் குருடும் கூடிக் குருட்டாட்டம் ஆடியதால் திருவருட் பிரகாசப் பெருந்தகையின் திருவரவு இன்றியமையாமை யாகியது. இளமைக்காலம், சமய ஆசார, ஒழுங்கு தவறாத நிலை. (அப்போதுதான் மக்கள் கவிவார்கள். புற ஆசாரமே ஆண்டவனின் நிலை என்று நாம் தடுமாறிய இன்றும் தடுமாறிவரும் நிலையில் நம்மையடுத்து ஓதிச் சொன்னால் தானே நாம் சற்றுக் கண்ணெடுத்துப் பார்ப்போம். மான்காட்டி மான் எய்தல்போல்.)

நாளேற ஏறச் சமயப் போலி ஊழலாம் ஆசாரம் உடைபட்டு நொறுங்கவும், உண்மைப்பேரருள் திடமாக ஊன்றவும் பெரும் பெரும் நிலைகளைச் சிறுசிறு எளிமைப் பாடல்களால் பாடி, நடந்து காட்டி நம்மையெல்லாம் ஈர்த்தார்கள். தெரிந்தோ தெரியாமலோ தெருப் பாட்டாக ''அம்பலத்தரசே அருமருந்தே ஆநந்தத்தேனே அருள்விருந்தே'' என்ற திருப்பாட்டு நெடுநாள் முன்னரே பரவி விட்டது. ''ஒருமையுடன், நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'' என்ற பாடல் அருட்பா என்பது கூடத்தெரியுமோ தெரியாதோ, முருகன் திருமுன்னர் பாடிவரும் மரபாக பரவிவிட்டது.

என்றாலும் ''உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமை'' யான அடுத்த அடியான கரவிலா வாழ்வு நிலை கைவந்ததா? இது நடைமுறையில் வரவேண்டுமென வற்புறுத்த வந்தவர்களே அடிகள். அல்லது செத்தார்களை எழுப்பிச் சித்தாடல் புரிந்து நம்மைக் கவரவந்தார்

Koviloor Digital Library

களல்லர். இதன் உண்மை கைவரச் செய்ய வந்தவர்கள் அடிகள். எம். ஏ. படித்த ஆசான் மாணவனுக்கு ஏ. பி. சி. டி. கற்றுக் கொடுத்தால் ஆசானுக்கு இதற்கு மேல் தெரியாதெனல் எவ்வளவு மடமை பாருங்கள்!

இரக்கம் அடிப்படையாக அமைய ஒவ்வொருவரும் இதயம் மாற வேண்டும் என்பது வள்ளற்பெருமானின், மாறாத, வற்றாத அருள் ஊற்று. அனுபவத்தில் மக்களுக்குக் கை வரவேண்டுமென்பதுதான் அவர்கள் அவதாரச் சிறப்பு. வாழ்வு மாற்றியமைக்கப்பெறல் வேண்டும். அவர்கள் பெற்ற மாறிலா இன்பம் யாவரும் பெற்றாதல் வேண்டும். அதற்கான செயல்முறை செய்ய வந்த செம்மலாம் வள்ளலார் (சாலை, சங்கம், சபையின் உள்ளீட்டை உற்று நோக்குவோமாக). ஒவ்வொருவரின் வயிறும் அன்னமுண்ணும் தருமசாலை: புலனைந்தும் ஒன்றாகச் சிந்தித்து ஒருமையாகி அறிவு சிதறாமல் ஒருவனைப்பற்றி ஏகந் திருந்தல் சங்கம்! சென்னியாம் கபாலத்தில் உச்சிக்குக் கீழே உள்நாக்கு மேலே நிலைப்பது ஞானசபை!. செத்தாரை எழுப்பும் வித்தை சுவாமிகளுக்கு ஒரு சிறு துரும்புத் தூசு. அதைச் செய்துகாட்டி ஆட்கொள்ள வரவில்லை. அதன் உண்மை தெரிந்து அனைவரும் சாகாமலிருக்க வழிகாணக் காட்ட வந்த கருணைக்கடல். அறிவு ஒப்புக்கொள்ளும் வண்ணம். விஞ்ஞானம் மாறுபடாவாறு நந்தமக்குத் திவட்டி பிடித்துச் சுத்த சன்மார்க்கமாம் பாதை காட்டிக் கூட்டிச்செல்லும், கூற்றவனுக்கும் கூற்றுவனாய் வந்த கார்மேகக்கொண்டல்.

பிறருடைய தவ ஆற்றலின் வலுவால் நாம் மேல்நிலை ஏறுவது நிலைபெறாகாது. மீண்டும் பழமைக்கு வந்து விடுவோம். வரப்பெறும் வலுவின் பெற்றியும் மாறாது

Koviloor Digital Library

தான்; இதிலும் ஐயமில்லை. வாழ்வு முடிந்த பின்னர் தகுதியால் சுருங்கி விடுவோம். பிறப்புகளின் தொடர்பு கள் சங்கிலிப் பின்னலாகப் பின்னும்போது ஏற்ற இறக்கம் வெகு எளிமையாக அக்கார அடிசில் தொண்டையில் சிக்காமல் எவ்வளவு நயமாக உட்செல்கிறதோ அவ்வளவு எளிமையாக மாறிவிடுவோம். உள்ளுணர்வு மாறிச் சுயமாக முன்னேறுவதுதான் அழியாப்பேருடல் பெற ஒரே வழி.

செம்பிற்களிம்பை நாள்தோறும் போக்கிப் போக்கிச் செம்பைப் பொன்னாக்கி விடவேண்டும். பிறர் வலுவில் ஏறுவது பின்னர் விழுந்து விடும். மீண்டும் வந்து விடும் களிம்பு. செம்பு என்றால் உடன் பிறப்புக் களிம்பு. பொன்னாக மாற்றும் வரை அது மாறவே மாறாது. களிம்பு அறவே, மக்கள் அவரவர்களாகவே வாழ்ந்து ஆக்கிக் கொள்ள வழிதுறை காட்டிக் கைப்பிடித்துக் கூட்டிப் போக வந்த நம் கூட்டாளிதான் வள்ளலார். மகனோடு மகனாகக் கட்டித் தழுவி நம்மைக் கரையேற்ற வந்த தோணியப்பர் திருவருட் பிரகாசர்.

செத்தாரை உயிர்ப்பித்துத் தந்தால் அவர் என்னாவர்? மீண்டும் முன்னைய அறிவு, பழக்க வழக்கங்களோடு தானே மீள்வர். முன்னையப் பண்போடு உயிர்ப்பிப்பதில் பயன் யாது? வினையின் கூறுதான் அத்தொழிலைச் செய்து உதவக் காத்து நிற்கிறதே. இதை ஏன் அருளாளர்கள் செய்ய வேண்டும்? செத்தாரை எழுப்பும் ஆற்றலை வள்ளற் பெருமானுக்கு நிறைய அருளியுள்ளது இறையருள். காலம் இடம் நோக்கியன்றோ அதைச் செயற்படுத்த வேண்டும்? இதற்கு மாறுபாடாகத் தம் ஆற்றலைக் காட்ட இறையருளும் விரும்பவில்லை,

Koviloor Digital Library

காட்டவேண்டிய நிலை வந்தபோது முன்னைய அருளாளர்கள் வழிகாட்ட முடிந்தது.

சுத்த சன்மார்க்கச் செந்நெறி யாண்டும் பரவி அவரவர்களாகவே பாடுபட்டு மூவகை நிலையான சுத்த (ஒளி) பிரணவ (ஒலி) ஞான (வான்) வடிவ உடலம் பெற்றுய்ய வேண்டுமென வலியுறுத்திப் பேசிப்பாடி எழுதி நடந்து காட்டிய அருள்வெளிப்பாடுகள் திருவருட்பாவில் அகல் விசும்பெனப் பரந்து விரிந்து எண்ணிறந்த கதிரவர்கள் கூடியதன்ன ஒளிவிட்டுக் கொண்டிருப்பதை என்றும் பார்த்துத் தெளியலாம்.

செத்தார் எழுதல் என்று பெருமான் முரசம் முழக்கியதும், மக்கள், கொஞ்சமேனும் உள்ளப் பக்குவப் பண்பாடில்லாது சவங்களைக் கொண்டு வந்து எழுப்பித்தர மன்றாடியபோது பெருமான் பாடியருளியதை நாம் பார்த்துப் படித்து உண்மையுணர வேண்டாமா?

"யான் புரிதல் வேண்டுங்கொல் இவ்வுலகில் செத்தாரை
ஊன் புரிந்து மீள உயிர்ப்பித்தல்—வான் புரிந்த
அம்பலத்தான் நல்லருளால் அந்தோ நான் மேற்போர்த்த
கம்பலத்தால் ஆகும் களித்து.' — (திருவருட்பா-5525)

பாடல் பச்சையாகத் தெளிவாகப் பளிச்சென மின்னுகிறது. அங்குள ஒரு சொல்லை இங்குச் சேர்த்து, இங்குள ஒரு சொல்லை அங்குச் சேர்த்துக் கொண்டும் கூட்டியும் அசைச்சொல்லெனக் கழித்தும் பார்த்தாக வேண்டிய பா அல்ல இது. தங்கு தடையின்றி ஆற்றொழுக்குப் போல ஓடுகிறது.

"நான் போர்த்த கம்பலத்தால் ஆகும் களித்து" என்ற அடியைச் சற்றே சிந்திப்போம். நான் மேற்

Koviloor Digital Library

போர்த்திய வெள்ளாடை (லாங்கிளாத்-மல்) என்று பகர வில்லை. அடிகள் உடுத்திய ஆடை வெண்மை நிறத்தது என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை. அப்படியானால் மேற்போர்த்திய கம்பலம் என்பது யாது? கம்பலம் என்பது வடசொல். இதன் தமிழ் உரோமம் (மயிர்) கம்பலம் என்பது திருமேனியிலுள்ள உரோமமே. தம் உடம்பி லுள்ள உரோமம் ஒன்று மட்டுமே செத்தாரை எழுப்பி விடுமென்பது கருத்து.

வெகு எளிமையாகச் செயற்படும் நிலையைச் சொல்லி யருளும் பெற்றியிது. இகழ்ச்சியாக, ஏளனமாகத் தள்ளு படி செய்யும் பாங்கு இது. ஆங்கிலத்தில் ignore என்று மொழியும் பாங்குடைத்தது இது. அலட்சியக் குறிப்பு. அப்படிச் செய்வதும் (உயிர்வருவிப்பது) தன் ஆற்றலால் வந்தது என்று பொருள் படக் கூடாது என்று மிக உயர்ந்த தன்னடக்கத்தில்-அடக்கத்திலும் அடக்கமாகப் பூரண அடக்க நிலை தாண்டி பரிபூரண சர்வ அடக்க மாக-அந்தோ, திருச்சிற்றம்பலமாடும் (சிற்சபையாடும்) பொற்சபையாடும் புனிதப் பெருமானான தனித்தலைமைப் பெரும் பதியான அருட்பெருஞ்சோதி ஆண்டவனின் ஒப்பற்ற தண்கருணை நல்லருளாலந்தோ நடைபெறுகிறது என்ற தற்சுதந்தரமற்ற தன்மை தவழ்வதை நாம் வெகு எளிமையாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் ஒரு சான்று. நாம் நன்கு தெரிந்து கொள்ள லாம். இன்றும் மேட்டுக் குப்பத்தில் சித்திவளாகத் திருமாளிகைக்கு அருகில் அ. முத்தைய படையாச்சி என்பவர் வசித்து வருகிறார். இவருடைய தந்தை அப்பாவுப் படையாட்சி என்பவர். இவரின் தந்தை முத்தைய படையாட்சி என்பவர். இந்த முத்தையன் என்பாரின் பேரன்தான் இப்போதுள்ள அ. முத்தைய

Koviloor Digital Library

படையாச்சி. இவர்கள் வீட்டுத் திண்ணையில் சிலபோது வள்ளற் பெருமான் அமர்வது வழக்கம். பெருமானால் தந்தருளப் பெற்ற திருவருட்பா அச்சிட்ட நூல் ஒன்று நான்கு திருமுறைகள் கொண்டது இன்றும் இவர்களிட மிருந்து வருகிறது. இதனைப் பொன்னே போல் இக் குடும்பத்தார் போற்றி வருகின்றார்கள்.

ஒரு நாள் பெருமானார் வெளிப்போந்துள்ள போது பாட்டனாரான முத்தைய படையாச்சி காலமாகி, சவம் அடக்கத்துக்குக் கொண்டு போகப்பட்டு விட்டது. சுவாமி களும் சித்திவளாகம் வந்து சேர்ந்தார்கள். உடனடியாகச் செய்தி தரப்பெற்றது. பெருங்கருணை வடிவரானபடியால் உடனே கைப்பிரம்புடனும் ஒரு செம்புத் தண்ணீருடனும் சவ அடக்க இடத்திற்குப் புறப்பட எத்தனித்தார்கள். உயிர்ப்பிக்க என்பதை இங்கு சொல்ல வேண்டியதில்லை. ஆனால் உடனடியாக நின்று விட்டார்கள். ''சரி, சவம் அடக்கமாகட்டும்'' என்று சொல்லி வழக்கமாய் அமரும் அத்திண்ணையில் உட்கார்ந்து விட்டார்கள்.

இதனை நாம் சிந்திக்க வேண்டும். கருணா மூர்த்திக்கு இரக்கம் தவிர வேறொன்றுமே செயற்படவில்லை. ஆகவே உயிர்ப்பிக்க எத்தனித்தார்கள். ஆயினும் திருவருள் உடன் பாடாகவில்லை. அனுமதிக்கும் பதில் தடையாயிற்று. இந்தத் தடுப்பும் உடனடியாக ஒரே நொடியில், உயிர்ப் பிக்க எண்ணிய எண்ணத்தோடே சமவேளையில் உருவாகும் ஆண்டவன் ஆணை அனுகூலமில்லாமை உணரப்பெற்று நிறுத்தி விட்டார்கள். இதைமீறிச் செய்தாலும் குறைவு ஒன்றுமில்லை. உயிர்ப்பித்து விடவும் முடியும். அதற்கும் துணையிருப்பான் செல்லபிள்ளையின் அருட்தந்தையான அருட்பெருஞ்சோதி ஆண்டவன்.

Koviloor Digital Library

ஆண்டவனருள் அடியவர்களை ஒரு நாளும் காட்டிக் கொடுக்காது. என்றாலும் மீறி தொடர மாட்டார்கள் அருளாளர்கள். தமக்கென ஒன்றுமே இல்லாதபோது ஏன் ஆணையை மிஞ்சுகிறார்கள்? அருள் நிலை சாதகமா யிருப்பதும் பாதகமாயிருப்பதும் அவர்கள் ஒருவருக்கு மட்டுமேதான் தோன்ற முடியும். ஏனையோர் இதில் தலையிட்டு ஆய முடியாது, ஆயக்கூடாது. உதாரணமாக ஒன்று கவனிப்போம்.

காந்தியடிகள் ஒரு முறை, பசுங்கன்று ஒன்றிற்கு மருத்துவர்களைக் கொண்டு உயிர் அகலச் செய்ய அவ் வாறே அதுவும் உயிர் நீத்தது. எப்படியும் கன்று செத்து மடிந்துவிடும் இன்னும் கொஞ்ச நேரத்தில் என்று திட்ட வட்டமாகக் காந்தியாருக்குத் தெரிந்ததால் அதில் முழு நிறைவு கொண்டு செயற்பட்டார்கள். கன்றும் இறந் தொழிந்தது. என்றாலும்கூட நம்மனோர் செயல் இத் தகைய உணர்வுக்கே இடங் கொடுக்காது. வேளை வந்து கன்று மடியும் வரை நாமிருப்போமே தவிர வலிந்து உயிரைப் போக்கும் செயலில் ஈடுபடவே மாட்டோம்.

இது ஏன் இங்குச் சொல்லப் பெறுகிறதென்றால், ஒரு சிலருக்குத்தான் உள்ளுணர்வு உணர்த்துவது புரியும். எல்லாருக்கும் உணர்த்தியேதான் வருகிறது என்றாலும் அவ்வுணர்வை உய்த்து நடப்பதற்கு ஏதுவின்றிக் காலம் கழிந்து விடுகிறது. ஓர் ஆன் கன்றின் உயிரை வலிந்தே பிரிப்பதென்றால் அதுவும் காந்தியடிகளால் என்றால் அதிலுள்ள உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டுமே அன்றி அது தகாது என்று அறிக்கைகள் விடக்கூடாது. அச்சமயம் பல எதிர்ப்புகளுமிருந்தது யாவரும் அறிந்ததே.

மனித தரத்திலேயே 'அந்தராத்மா' சொல்லியது என்று காந்தியார் சொல்லும் நிலையில்—இறையருள்,

Koviloor Digital Library

சவத்தை உயிர்ப்பிக்க ஆணை தாராமல் தடையாயிருந்த தென்பதை நாம் ஏன் நம்பாமல்—பிதற்றிப் பேதலிக்க வேண்டும்? எனவே ஆணைமீறிச் செயல்பட மாட்டார்கள் அருளாளர்கள். முயன்றிருந்தால் ''கைவிடமாட்டான் என்றூதூது சங்கே'' என்ற திருவருட்பாவின் வண்ணம் கைகொடுத்து உயிர் வந்தே முடிந்திருக்கும். இப்படி முயன்று என்ன பெறப் போகிறார்கள்? அனைத்தையும் பற்றறவிட்டு இரக்கவுருப் பெற்று முடிந்தவர்கள். எவ்வாறாயினும் ஆணை மீறார்கள் என்பது ஒரு தலை.

வள்ளற் பெருந்தகைக்கு உயிர்வேறு இரக்கம் வேறு அல்ல. உயிரே இரக்கம்—இரக்கமே உயிர். ''வருமுயிர் இரக்கம் பற்றியே உலக வழக்கில் என் மனஞ் சென்ற தோறும்'' (3506) என்று தொடங்கும் பாடல்முதல் 3507, 3508, 3509 பாடல்கள் வரை உள்ள திருவருட்பா செய்யுள்கள் நான்கும் தொடர்ந்து இரக்கமும் வள்ளலும் வேறு வேறல்ல என்று உணர்த்தி நிற்கின்றன. 3509 ஆம் பாடலின் ஈற்றடி ''இன்னவாறென நீ சொன்னவாறு இயற்றாது இருந்ததோர் இறையும் இங்கில்லையே'' என முடிவு கூறுகிறது. எனவே இறைவனோடு உள்ளுரப் பேசி மகிழும் பெற்றியுடையவர்கள். சொற்கடவாத் தொன்மை யாளர் வள்ளலார் என்பது உறுதிப்படுகிறது.

இது போன்ற பற்பல பாடல்கள் காண முடிகிறது திருவருட்பாவில். மேற்கூறிய முத்தையன் பரம்பரை மணியக்காரக் குடும்பம். இன்றும் சித்திவளாகத் திருமாளிகையில் சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொண்ட அறையின் திறவுகோல் இவர்களிடமே இருந்து வருகிறது. தைப்பூசத் திருநாளில் இப்போதுள்ள பேரன் முத்தைய படையாச்சி சாவி தந்து திறக்கப் பெற்று தெரிசனம் முடிந்த பின்னர் பூட்டப் பெற்று சாவி மீண்டும் இவர்

Koviloor Digital Library

களிடமே கொடுக்கப் பெற்று வருவது மரபாயிருந்து வருகிறது. இந்த மணியக்காரர் இப்போது புது வீடு கட்டிக்கொண்டு வசித்து வருகிறார். செங்கற்கட்டு மாடியுள்ள வீடு என்றாலும் சுவாமிகள் அமர்ந்து வந்த திண்ணையைப் புதுப்பிக்காது அப்படியே சாணம் போட்டு மெழுகி அப்போதிருந்த கீற்று வேய்ந்த நிலையிலேயே அப் பகுதியை இன்னும் பழுது பார்த்து வருகிறார்கள். நேரே சென்று உசாவித் தெரிந்து கொள்ளவேண்டும் இதைக் கண்ணுற விழைவோர்' இதுபுராணம் அன்று வரலாற்று நிகழ்ச்சி

மேலும் ஒரு பொருள்! நாம் உயிருடன் வாழ்ந்து வந்தாலும் எம் போன்ற பலர் நடைப் பிணங்களே. காரணம் உணர்வு விழிப்பின்றிச் செக்கு மாடெனச் செய்த தையே திரும்பத் திரும்பச் செய்து சுற்றிச் சுற்றி வந்து மாய்கிறோம். இதில் புத்துணர்வுக்கு வழியே இல்லை. உலகில் எங்குப் பார்த்தாலும் சிந்தித்தாலும் இறை யருளின் ஆற்றொணா, சொல்லொணாச் சித்து வெளிப் பட்டுக் கொண்டேயிருக்கிறது. இதனை உணர்ந்தால் நம் சிறுமை மனம் செயலற்று ஒடுங்கி அடங்கி விடுகிறது.

மனம் அடங்கும் இடம் தெரிந்து திறனுற்றால் தன் முனைப்பே தலை தூக்காது. தன் முனைப்பு அற்று விட்டால் காட்டாதனவெல்லாம் காட்டப் பெறும், கேளாதனவெல்லாம் கேட்கப்பெறும். இவ்வுடலத் துடனிருக்கும் போதே அவ்வுணர்வு பெறுவது செத்தார் எழுதலின்பாற்படும். இவ்வுணர்வு விழிப்படைவதே புதுப்பிறப்பு. கருவுற்று வந்தால் தான் புதுப்பிறப்பு என்பதல்ல. புதுப் பிறப்பின் பயனை ஈண்டு இவ் உடலுடன் பெறுவதே உயரிய பிறப்பு. அதற்கு முடியாமையால் தான் இயல்பாக கடைத்தேறும் போது

Koviloor Digital Library

கடைத்தேறுவோம் எனச் செத்துப் பிறந்து பிறந்து செத்து இதே தொழிலாகக் கொண்டுள்ளோம்.

புத்துயிர்ப்புப் புத்துணர்வு தொழிற்படின் நம் வாழ்வின் போக்கே மாறிவிடும். இதற்கு ஆய்வுக் கருவிகள் எதுவுமே வேண்டியதில்லை குரல். செயல், வாழ்வு, உணவு அனைத்துமே மாறிவிடும். பிணப்போக்கு மாறி மணப் போக்கு உதிக்குமென்றால் சவந்நன்மை செந்து சிவந்நன்மை பிறக்கும். இப்போதுள்ள உடலத்தோடு கூடிய உயிர் நந்தமக்குச் செத்தேயிருக்கிறது. செத்திருக்கிறதென்பது சுடுகாடு இடுகாட்டுக்கு தூக்கிப் போகப் படுவதல்ல. உயிர் இருக்கும்போது சவமாம் தன்மையில், விழிப்புணர்வற்று உண்டுடுத்துப் படுத்துறங்கிக் கதை பேசிக் களிப்பதுதான்..

இதைத்தான் "செத்த பிணத்தருகே இனிச்சாம் பிணங்கள் சென்றழுது" என முன்னைய அருளாளர்கள் கூறியருளினர். இதனை வற்புறுத்தவே 5258 ஆம் பாடலாகத் தொடங்கும் "கையறவிலாது நடுக்கண் புருவப் பூட்டு" என்ற வரிசையில் 5263 ஆம் பாடலினடுவே "உயிரோடு செத்தார் எழுவார் என்று கைத்தாளம் போடு" என்று அருள் முரசார்த்தருள்வர் அடிகள். இதனை நன்கு ஆய்ந்து ஏற்க வேண்டும். நூதன விவேகியின் உள்ளத்தில் இது நுழைவதும் சிரமம்தான். உரையாடலாலும், கேள்விச் செல்வத்தாலும், சத்விசாரத்தாலும் இதனை ஒப்பமுடியும்!

மேலும் இதற்கு முன்புசொன்ன நிலையில் உள்ளபடியே செத்தவர்களையும் எழுப்ப வேண்டிய இன்றியமையாமையும் ஏற்படுவதால்தான், அம்முறையும் பேசப் பெற்றது. எது எப்போது அவசியமாகிறது என்றால்—யோகத்தில்—பக்தியில்—மூச்சுக்காற்று சிலபோது உள்

Koviloor Digital Library

ளடங்கி விடுகிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் தீ மூட்டி அல்லது புதைகுழிவாய்ப்படுத்தி விடுவதுமுண்டு.

அவ்வாறு நேரின் அதாவது நீண்ட கால மூச்சடங்கிய நிலையிலுள்ளோரை எழுப்பி அப்போக்கை மாற்றுவதற்காக, அதாவது பக்குவிகளாயுள்ளவர்களை மட்டும் உடனடியாக மாற்றினால் நிலைமாறப் பெறும் என்று முடிவுள்ளவர்களை மட்டிலும் எழுப்பித் திசை திருப்ப அருள் துணை நிற்கும். இப்பிறப்பிலே நிலை சேர்ந்த அநுபவம் பெற வாய்ப்புள்ளவர்களுக்கு மட்டும்தான் இந்த வாய்ப்பு. இது இறையருளால் வலிந்து அச்சமயம் தக்க அருளாளர்களை அங்கு எழுந்தருளப் பண்ணி நடைபெறும். அது அருளாளர்களுக்கு மட்டுமேதான் புரியும். உயிரடங்கிச் சவம்போல் கிடக்கும் மகாப் புண்ணிய சாலிகளுக்கு மட்டும் தான் இப்பேறு கிடைக்கும்.

பல்லாண்டு முன்பு தவத்திலிருந்து மண் மூடியவர்கள், ஆற்று நீரால் அடித்தேகப்பட்டவர்கள், மீண்டும் வருவதை ஏகதேசமாக இன்றும் செவிமடுத்து வருகிறோமே. செய்தித்தாள் வாயிலாகவும் காண முடிகிறதே. இத்தகைய புனித உயிர்களுக்கு வகுக்கப் பெற்றதே இம்முறையல்லாது இதைப் புரிந்து கொள்ளாது பெரியோர் பாட்டில் பிழை காண்பது கீழ்நோக்கமாகும். நிமிர்ந்து நேரே வளர்பவன் மனிதன். குறுக்கே வளர்வது பகுத்தறிவில்லா விலங்கின மன்றோ! அருளாளர்களை நம் சிற்றறிவு கொண்டு அளக்கவும் துலாக்கோல் போடவும் தொடங்கக் கூடாது. நாம் மண்ணெண்ணெய்ச் சிமிணி அடக்கி வைத்த பெட்ரூம் விளக்கு அவர்கள் ஆயிரமாயிரம் கோடி சூரியப் பிரகாசப் பெரும்பிழம்பு.

1. அசுத்தத் தொல்லுயிர்.
2. சுத்தமும் அசுத்தமும் தோயுயிர்.

Koviloor Digital Library

3. சுத்த வகையுயிர்.

என உயிர்த்தன்மையை மூன்று வகைகளாகப் பிரித்தருள்வர் அடிகள்.

1. அசுத்தத் தொல்லுயிர் எம்போன்ற பெரும்பான்மையுடையவர்கள். இவர்களுக்கு அப்போதைக்கப்போது அல்லல் தந்து உணர்த்தி அவ்வல்லல்களையும் காத்தருள்கிறது அருட்பெருஞ்ஜோதி. எத்தனை முறை இடுக்கண் வரினும் அது காக்கப்பெற்றவுடன் பட்டைக்கட்டிய குக்கல் நெடுவால்போல் அல்லலில் வேண்டி அது தீர்ந்தவுடன் செக்குமாட்டுக் கதை. முன்னேற்றமே தெரியாத நிலை. உண்டு, உறங்கி, செத்துப் பிறப்பதே தொழில்.

2. சுத்தமும் அசுத்தமும் தோயுயிர்களை அடுத்தடுத்த பிறப்பிலாவது நடுநிலை நிற்குமாறு அருள் புரிந்து காப்பது. முதலாவது சொல்லப் பெற்ற நிலையிலிருந்து பலகோடி மடங்கு மேலோங்கிய உயிர்வகை. இவர்களுக்குப் பிறப்பு வகை நீளாது நிலை எய்தமுடியும். விழிப்புணர்வுக்குப் பக்குவப்படக்கூடியவர்கள்.

3. சுத்த வகையுயிர்கள் — இவர்கள் அருளுக்குத் தருணம் பார்த்து நிற்பவர்கள். அருட்பெருஞ் ஜோதித் தனிப்பதியின் தனித்திருநோக்கு ஒன்றுக்கே எதிர்பார்த்திருப்பவர்கள் எந்த நேரம் என்று சொல்ல முடியாது.

மூன்றாம் தரத்து இவ்வகையுயிர்கள் தன்னுணர்வின்றி அடங்கி முடிந்திருந்தால் (தெய்வாதீனமாக) இவர்களை எழுப்பிப் பயன்பெறச் செய்ய முடியும். இதுவன்றி இரண்டாம் தரத்தவர்களை எழுப்பினால்கூடப் பயன் பெற என்ன ஆகுமோ? நம்மால் அறுதியிட்டுக் கூற முடியுமோ?

இவை கடந்து முதல் எண்ணில் தந்த அசுத்தத் தொல்லுயிர் தரத்த எம்போல்வாரை எழுப்பி யாது

Koviloor Digital Library

பயன்? வள்ளற் பெருந்தகையிடம் வந்த சவம் அனைத்தும் எம்போல்வார் தரத்தன என்பதை மறவாமல் நினைந்து நினைந்து தொடர்ந்து நினைந்து கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன உயிர்வகை தரும் திரு அகவல் வரி; வரிசையாக; 775 முதல் 780 முடிய உள்ளன. இவற்றைச் சிந்தித்து அவரவர்கள் முடிவுக்கே வருமாறு விழைகிறேன்.

சுத்த வகையுயிரைச் சொல்லும்போது ''வாய்ந்திடுஞ் சுத்த வகையுயிர்க்கு ஒருமையின் ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி'' என்று அகவி அருளுகின்றார்கள். வாய்ந்திடும் என்ற சொல்லாட்சி உள்ளத்தை அள்ளிக் கொண்டு ஒளிருகிறது. ''ஒருமையின் ஆய்ந்துறக் காத்து என்ற அடுத்த அடியின்—"ஒருமை-ஆய்ந்து-உறக்காத்து'' என்ற சொற்றொடர் சிந்தித்துச் சிந்தித்து அணுவளவு கூட அக்கம்பக்கம் அறிவு அசையாமல் நிலை நிறுத்துவதை உற்று நோக்கி உய்த்துணர்வோமாக!

"ஏதுக்காளலும் எடுத்த மொழி யாலுமிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்க நீங்கல் உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண்மிக்கீர் இறையே வந்து சார்மின்களே!''

என்ற திருக்கடைக்காப்பின் அருண்மொழிக் கிணங்க ஆய்வுத்துறையில் கொஞ்சம் அச்சங்கொண்டு எதையும் நம் சிறுமையை உணர்ந்து ஆய்வுத்துறையை அளவோடு அமைத்து, முற்றுப்புள்ளி வைத்து முடித்துவிடாமல் அரைப்புள்ளி வைத்து உண்மை புலனாகக் காத்திருந்து வேகம் கெடுத்தாளும் வேந்தனடி பரவி உய்வோமாக!

இப்பாடலில் ''மிக்குச் சோதிக்க வேண்டா'' என்ற சொற்றொடரைச் சிந்திப்பதுடன், சுடர் விட்டுளன் எங்கள் சோதி'' என்று இறைவனைச் சுட்டும் திருவாக்கின்

Koviloor Digital Library

அற்புதத்தை ''அருட்பெருஞ்ஜோதி'' மந்திரம் தந்தருளிய பெருமானின் இக்கட்டுரையில் தொட்டுக் காட்டுவதுடன் நிற்கமுடியவில்லை. மேலும் என்ன உள்ளது?'' மாதுக்கம் நீங்கல் உறுவீர்'' என்று அமைந்த அமைப்புக்கு ஈடும் இணையுமுண்டுகொலோ!

துக்கத்தில் எல்லாம் தாங்கமுடியாத மாபெரும் துக்கம் ''மரணம்'' ''மரணமே''! இதனை ''மாதுக்கம்'' என்று ஆழமாகக் கருத்தில் உறையுமாறு அழகு பெற மொழிந்தருளியமை உய்த்துணரற்பாலது. (மா—இறப்பு) இது ''நீங்கல் உறுவீர்'' என எச்சரிக்கை செய்தருளு கின்றார்கள். செத்துவிடக்கூடாதென்பது பொருள். ''மரணமிலாப் பெருவாழ்வு'' என்ற ஒப்புயர்விலா ஒரு பெரும் உணர்வுத் தமிழ் வாக்குத் தந்தருளிய ஞான வள்ளலாம் அடிகள் பெருமானாரை எம்மொழி கொண்டு எத்துறையில் ஏத்தி நிறைகாண இயலும்! வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு என்பது இறவா நிலை பெற்ற உத்தமோத்தம ஞானிகள் மரபையும் குறிக்கமுடியும் என்பதை ''செத்தார் எழுதல்'' எனும் இக்கட்டுரையில் குறிப்பிட முயலலாம் தானே!

இவ்வரிசை அருளாளர்களின் தொடர்பு சங்கிலித் தொடர்பாகப் பின்னிக்கொண்டு ஆநந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்வதை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து ''அருளமுதே! நந்நிதியே! ஞான நடத்தரசே! என்னுரிமை நாயகனே!'' என்று வனைந்து வனைந்து ஏத்தி ஏத்தி இறும்பூ தெய்திக் கருணை இன்பக் கடலாடுவோமாக!

''பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி.''— மணிமொழி

Koviloor Digital Library

9. கனவுகாண் கருத்து

உண்ணுகின்றோம், உடுக்கின்றோம், உறங்குகின்றோம், இந்த மூவித நிகழ்ச்சிகளில் மூன்றாவது நிலையில் கனவு காண்கின்றோம். முன்னைய இரண்டு நிகழ்ச்சிகளின் உண்மை போல் இந்த மூன்றாவது நிலையின் கனவுக் காட்சிகள் அனைத்தும் செயலுக்கு வருவதில்லை' சில போது ஏகதேசமாகச் சில நிகழ்ச்சிகள் செயற்படுகின்றன. அப்படிச் செயல் படும்போது ஒரு கனவில் கண்ட காட்சிகளின் தொடர்பு விடாமல் முழுமையும் செயற்படுவதில்லை.

அக்காட்சிகளுள் சில தொடர்பிழந்து ஒரு பகுதி செயற்படுகிறது. சில கனவுகளில் ஏற்கெனவே செயற்பட்ட காட்சிகளே தோன்றுகிறது. சில கனவுகளில் அக்கனவுக்குரிய காட்சியின் செயற்பாடு உடனடியாகப் புறந்தே செயலுக்கு வருகிறது. அஃதாவது சில நாள்களிலே, சில, சமயம் மாதம், வருடமென்று கூடத் தள்ளுகிறது. சில செயலுக்கு வருவதேயில்லை. பலநாள் நாம் நனவிலே நினைத்து எதிர்பார்த்தவை கனவிலே வருகின்றன. சில கனவுகள் இன்பம் தருகின்றன. சில துன்பச் சூழலில் ஆழ்த்திவிடுகின்றன. இன்பக் கனவில் சிரித்தும், துன்பத்தில் அழுதும் விடுகிறோம். இந்தக் கனவுகளில் ஒன்றிரண்டு உடனடியாக அப்பவே செயற்படுவதும் உண்டு. இதுநம்முள்ளே நிகழும் கூறு. இவ்வகைக் கனவுகளில் கற்பனையில் கூட காண முடியாதனவும்

Koviloor Digital Library

வருவதுண்டு, கனவு வகைகளை விரிக்கின் எட்டில் அடங்காது.

கண்ணால் பார்க்கின்றோம், காதால் கேட்கின்றோம். இப்படி ஐம்புலப் பொறிகளால் செயற்படும்போது அவற்றில் மனம் கலவாத போது அவை செயற்படுவ தில்லை. செயற்படாமல் வாளாவிருக்கின்றன. இந்த மனம்தான் அவற்றைத் தூண்டும் கருவியாக இருக்கின்றது. இந்த மனம் ஏன் தூண்டுகிறது அச்செயல்களுக்கு? பழக்க வழக்கங்களே இதற்குக் காரணம் ஆகின்றது. பழக்கம் என்பது யாது? வழக்கம் என்பது யாது? இந்த இரண் டினை ஐயம் திரிபு அறத் தீர்க்கமாகப் புரிந்து கொள்வது இங்குச் சாலும்.

பழக்கம்:

ஒரு புதிய செயலை முதன் முதலாகக் கற்றுக்கொள்ள முயல்வது பழக்கம். இப்படிக் கற்க முயலும் போது அதிக முயற்சி வேண்டியுளது. இந்த முயற்சியின் தன்மை, அதாவது அதன் போக்கு எளிமையாகச் சிலபோதும், மிகக் கடுமையாகச் சில போதும் அமைவதும் உண்டு. பேருந்து வண்டி (மோட்டார், பஸ், கார்) களை ஓட்டக் கற்றுக்கொள்ளத் தொடங்குகிறோம், முதலில் கை, கால் கள், கண்கள், மனம் முதலானவை அதிக விழிப்பாகவும், தயாராகவும், மிக்க கவனமாகவும் ஆதல் வேண்டும்.

அடுத்துக் கூட்டல் வாய்பாடு, பெருக்கல் வாய்பாடு; கழித்தல் வாய்பாடு தொடங்கும் போது விரல் விட்டு மெல்ல எண்ணிப்பார்த்துக் கற்றுக் கொள்ளுகிறோம்.

Koviloor Digital Library

அடுத்து ஒரு செய்யுளை மனனஞ் செய்யும் போது முதலில் மறதி முதலான இடையூறு தடைசெய்து எளிதில் மனத்தில் பதிவதில்லை. மேலும், எழுதிப் பழகத் தொடங்கும் போது எழுத்து ஒழுங்காக அச்செழுத்துப் போல் அமைவதில்லை. இப்படி ஒவ்வொரு துறையிலும் அனைத்துச் செயற்களுக்கும் பயிற்சி கொடுத்துத் திரும்பத் திரும்பப் பழகுவதனையே 'பழக்கம்' என வழங்குகிறோம்.

வழக்கம்:

மேற்கண்டவாறு செயல்கள் அனைத்தையும் பழக்கமென்ற பயிற்சி வாயிலாகப் பயின்று பயின்று (பழகிப் பழகி) பின்னர் எத்தொழிலையும் மிக எளிமையாக விரைவாக ஒழுங்காகப் புரிந்து கொள்கின்றோம். இவ்வாறு செய்வதில் தவறுகளும் மலிவதுண்டு. தவறுகள் மலிவதின் காரணம் விழிப்பின்மையே. இப்படி எளிமையாகச் செயல்கள் கைவந்த நிலையைத்தான் 'வழக்கம்' என வழங்குகிறோம். விழிப்பின்மை காரணமாக ஏற்படும் தவறுதல்களும் வழக்கத்தின்பாலே சாரும், அவ்வாறு செய்தே அதுவும் வழக்கமாகி விட்டது, எனவே பழக்கம் முதிர்ந்த பிறகு உள்ள நிலையே வழக்கம்.

இந்த இரண்டு நிலைகளின் வேறுபாடுகள் முறையே செம்மையாகத் தெரிந்து கொள்ளாத நிலையில் (ஒன்று போலிருப்பதின் காரணத்தால்) இரண்டையும் சேர்த்தே ஒன்றாகப் பழக்க வழக்கமெனப் பெரும்பாலும் பேசி வருவது மரபாகி விட்டது. இவ்விரண்டையும் நன்றாக விவரமாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், புதியதாக ஒன்றைப் பழகும் போது அப்பழக்கத்தை எளிமையாக விட்டு விடலாம் மறக்கச் செய்யலாம். ஆனால் அப்

Koviloor Digital Library

பழக்கம் வழக்கமாகக் கைவந்தபின்னர், அதைக் கைவிடு வதோ, மறப்பதோ அவ்வளவு எளிமை அன்று. கடினமாக இருப்பது கண்கூடு. அப்படி வழக்கமான ஒன்றை மறப் பதற்கு பெருமுயற்சி வேண்டியதிருக்கிறது. இந்த முயற்சி யின் காரணமாக செயல்கள் விடுபட்டாலும் ஒரோர்கால் அதன் விதை அழியாமல் அகத்தே முளை விடுவதும் பின்னர் அதைக் கிள்ளி எறிந்து மறப்பதும் அனுபவமே. இப்படிப் பல்கால் முயன்று அவை தாம் தாமாக இயல்பாக நழுவும் நிலை வந்தபின்தான் அவ்வழக்கம் செத்து மடிந்த தாகக் கொள்ள முடிகிறது. (உண்ணுகிற, அருந்துகின்ற வழக்கத்தையும் சேர்த்துச் சிந்திப்பது சட்டெனத் தெளி வடைய வாய்ப்பு.) நாமாக இவ்வழக்கத்தை விட முயலும் போது அதுவே முந்திக் கொண்டு கைவிடமுடியாமல் நம் முன்னிற்பதையும் புரிந்து கொள்கிறோம்.

ஆகவே இவ்வாறு பகுத்துப் பார்க்கும் போது பழக்கத் துக்கும் வழக்கத்துக்கும் உள்ள தொலைவு (நெருக்கம், தூரம்) புலனாகிறது. ஆனால் 'பேச்சு வழக்கென்ற' சொல்நடையே பயிற்சியில் பேசிப் பேசி அதாவது பயின்று பயின்று அது வழக்கமாகி (எளிமையாகி) வந்து விடுவது கண்கூடு. பேசப்பெறுவது (ஒரு சொல்லை ஒழுங்காகச் சொல்வதும்) பேசப் பயிற்சி செய்த பின்புதான் வழக்க மாகிறதன்றோ!

இவ்வாறு நம் மனம் நெடுங்காலமாக (எல்லை கடந்த ஆண்டுகளாக, கற்பங்களாக)ப் பழகிப் பழகி (பயின்று பயின்று) கை வந்த வழக்கம் நம்மில் குடி கொண்ட (இருப்புக் கொண்டு) அதாவது அந்தச் செயல்களின் சாரம் நம் மூளைப்பெட்டகத்தில் உறைந்து விடுகிறது.

Koviloor Digital Library

இந்த உறைப்பு, மனத்தோடு கூடிப் பின்னர் அந்தச் சாரம் சார்ந்த மனம் புலன்களுடன் கூடிப் பிறகுப் பல்வகைப் பொருள்களில் சார்ந்து நம்மைக் கூத்தாட்டுகின்றது. (இந்த மனம், கரணம் புலன், பொறிகளின் சேர்க்கை பற்றியோ அது செயற்படும் நிலை விவரம் பற்றியோ இங்குச் சிந்திப்பது நோக்கம் அன்று. இது வேறு பகுதி யாகும்.)

இந்த மனம் இல்லாமல் எதுவும் செயற்பட முடியாது என்பதும், இந்த மனத்தால்தான் இன்பதுன்ப நுகர்வு உண்டாகின்றது என்பதும் நாம் நன்றாகப் புரிந்து கொள்ளக் கூடியதே, இன்ப துன்பங்களுக்குக் காரணமான இந்த மனம் செத்து விட்டால் இவ்விரண்டு (இன்ப துன்பம்) நிலைகளுமே இல்லாமல் போய்விடும். இவ் விரண்டு நிலைகளும் அற்று விட்டால்—அந்நிலை ஏதோ என்னவோவென்று—நாம் பயப்படுகிறோம்! இது ஏன்?

துன்பம் அற்றுவிட்டால் மட்டும் மகிழ்ச்சிதான். இது விரும்புவதும் மரபாகிவிட்டது. ஆனால் இன்பம் அற்று விடுவதை ஒப்புவோமா? இந்த இன்பத்தின் நிலைபற்றிப் புரிந்தோமானால் இதையும் துன்பம்போல் தள்ளியே விடுவோம்! இந்த இன்ப நிலையும் துன்பநிலைபோல் புலன் களால் வருவதுதானே! இந்தப் புலன்களும் 'மனத்தால்' தூண்டப்பட்டதுதானே! எனவே துன்பம் எப்படியோ அப்படியே அணுவளவும் பேதமற்றதுதான் இன்பமும். இப்படியிருந்தும் துன்பத்தை மட்டும் வெறுத்து இன்பத் தை விரும்புவதற்குக் காரணம். இவ்வின்பத்தை நிலை பேறான இன்பமென்று ஏமாந்து, இந்த மனம் கருதி அதில் அதிகமாக ஈடுபட்டு, மெய்யில்லாத பொய்யை மெய் யென்று மயங்குவதே இம்மயக்கத்தின் உண்மை, உணர்வில் தைக்கும்போதுதான் இவ்வின்பமும், துன்பம்போல் கசந்து விடுகிறது.

Koviloor Digital Library

எனவே புலன்களால் பெறும் இன்பதுன்பம் இரண்டும் தள்ளப்படுகின்றன. இவ்விரண்டும் ஒதுக்கித் தள்ளப்பெற மனம் அறவே தலைஎடுக்க வொட்டாத நிலையில் மனம் கடந்த நிலைக்குச் செல்லவேண்டும். மனம் அற்று விட்டால் செயற்பட முடியாது என்பது நன்றாகப் புரிந்து கொண்ட நிலையாகாது. மனம் அற்ற நிலையை நாமே நம்மை யறியாமல் ஒரொருகால் விழிப்பு நிலையிலேயே உணர முடிகிறது.

அச்சமயம் ஓர் அமைதிக்கூறின் அணுத்திவலை அரும்பு கிறது. என்றாலும் அந்த உணர்வை உணர்ந்தது யார், என்று அதே தருணம் (உடனடியாக) ஒரு கேள்வி வந்து விட்டால், அக்கேள்வியைக் கேட்கும் போதே விலகியிருந்த மனம் வந்துவிடுகிறது. இந்த மனமின்றி எக்கேள்விக்குமே அங்கு இடமில்லை. இக்கேள்விக்கு இடமன்னியில் இக் கேள்வியின் பூண்டே முளைக்காமலிருக்கும் வரை உள்ள நிலையே நிலைபேறான இன்ப ஊற்றின் வித்து (தொடக்கநிலை). எனவே மனமற்ற நிலை, மனம் கடந்த நிலையை அடைவது என்பது சங்கையற ஒப்பப் பெறுகிறது.

இந்நிலையில் அந்த நிலையை அநுபவிப்போன் என்ற ஒருவனும் அங்கு இல்லை. சுத்த அனுபவமே அதாவது அனுபவம் மட்டுமேதான் உள்ளது. **(Only experience without experiencer).** அனுபவிப்போன் **(experiencer)** என்ற ஒருவன் அங்கு இருக்கும் வரை உண்மை அநுபவமும் கிடையாது. அப்படியிருந்து (அனுபவிப்போன் என்ற ஒருவன் இருந்தால்) அநுபவிப்பது போலி இன்பம். மயக்கம் ஒழியாமலிருந்தால் உண்மை இன்பாநுபவச்கூறே அன்று.

Koviloor Digital Library

ஆகவே, மனத்தின் செயல் இவ்வாறானால், புறச் செயலே அற்று, மனம் தனக்குத்தானே காணும் கனவுக் காட்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்னே வியப்பு? இக்கனவு பற்றிச் சிந்திப்பதும், கனவுநூல் பயின்று அதற்கு விடை காண்பதும் கனாச்சோசியம் பார்ப்பதும் அது காரியத்துக்கு வரும் காலங்களைச் சிந்திப்பதும், துன்பக் கனாவானால் அதற்கு வருந்தி மாய்வதும் இன்பக் கனாவானால் அதற்கு மகிழ்ந்து அது செயற்படத்துடிப் பதும் எவ்வாறு நெறியுடைமையாகும்?

ஆகவே அமைதிக் கூறு வளர்க்க விழைவோர்களுக்கு மனம் சாகவேண்டிய அவசியம் எவ்வளவு முக்கியத்துவம் ஆகின்றது. சிந்திக்க வேண்டிய பெருநிலையாகின்ற தன்றோ! பாவபுண்ணியம், இன்பதுன்பம், ஏற்றத்தாழ்வு, நன்மை தீமை, ஏற்பு மறுப்பு, நினைப்பு மறப்பு, பகல் இரவு போன்ற இன்னவகை இரட்டைத்தன்மை அதாவது இருமைநிலை (Duality) போன்ற அனைத்தும் விலங்குகளே, கட்டுகளே, தளைகளேயாகும். சில பொன்னாலாய விலங்கு; சில இரும்பாலாய விலங்கு: விலங்கு விலங்கே. கைகளை இறுக்கிக் கட்டிவிட்டது; கட்டப்பட்டது, கட்டப்பட்டதே. கைகளைப் பொற்சங்கிலியால் கட்டினா லென்ன? இரும்புச் சங்கிலியால் கட்டினாலென்ன? பார்ப்பதற்கு மகிழ்ச்சிதான். புகழ்வதற்கும் மகிழ்ச்சி தான். ஆனால் செயற்பாட்டுக்கோ? இவ்வகை விலங்கும் தடையே! தடை தடையேதான் அன்றோ!

"சினமிறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே!"
—(பராபரக்கண்ணி-169)

என்று சிவராஜயோக தவராஜத் தாயுமான சுவாமிகள் தாய்மையுரையாற்றுவார். சினமிறத்தல் பற்றிச் சொல்

Koviloor Digital Library

லாத ஞானிகளே இலர். சொல்லும் தரம் வேறு வேறாக லாம். மனம் கரைதல் என்றும், வேறொரு வஸ்துவில் மறைந்துவிடுவதென்றும், அருள் மயந்நாகி விடுகிற தென்றும் இப்படிப் பலப்பல வகையில் பேசப்படுமேயன்றி மூலக் கருத்தில் அணுவளவு கூட மாற்ற மிருக்க முடியாது. ஆகவே மனம், மனம் என்று ஒரு தனிக்கருவி தனியே இருந்து இயங்கும் வரை நிலைபேறான இன்பத்துக்கு வித்திட முடியவில்லை, முடியாதென்பது உள்ளங்கை நெல்லிக் கனி. பாசக்கட்டாகிய தளையிலிருந்து விடுபட முடியவே முடியாதா? தொடருவோமாக!

> "ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
> கோடியுமல்ல பல." —(திருக்குறள்-337)

என்ற திருவள்ளுவத்தின் கருத்து என்பது மனத்தின் செயலைக்குறிப்பதுதானே! வாழ்வைப் புரிந்து கொண்டோ மானால் — சரிவர அறிந்து கொண்டோ மானால்— மனத்துக்கு வேலையே இல்லை. அவ்வப்போது உள்ள செயல்களுக்கு (காரியங்களுக்கு) அவ்வவ்வளவில் மனம் ஈடுபட்டுச் செயல்வேறு மனம் வேறு என்ற பிரிவினை இல்லாமல் இரண்டற ஒன்றாகி (செயலுக்கும் மனத்துக்கும் பேதமின்றி) ஒன்றிப்போய் செயல் முடிந்தவுடன் மனமும் செயலற்று விடும். சும்மாயிருக்கும் செயல்களும் மனமும் தனித்தனியாகாது செயலே மனமாய் மனமே செயலாய் அமைவதைத்தான் வாழ்வு எனச் செப்புகிறோம். இதனைப்பிரித்து வாழ் வதைத்தான் வாழ்வதறியார் (வாழ்வைப் புரிந்து கொள்ள வில்லை) எனப்பேசப்பெறுகிறது. ஆனால் மனம் அப்படிச் சும்மாயிருக்கிறதா? செயற்பாடுகள் முடிந்த பின்னரும் இதைச் செய்யலாமா?

Koviloor Digital Library

இதை நாடுவோமா? என்று அலை பாய்ந்த வண்ணமாய்த் தாண்டவமாடுகிறதே! இது ஏன்?

இதைப்போல, கருதுப கோடியுமல்ல பல என்று பொய்யா மொழியார் புகன்று மெய்யை நிலைநாட்டு கிறார். இவ்வாறு கருதிக் கருதி ஓங்கி ஏங்கிச் சிலபோது வெற்றியும் பலபோது தோல்வியும் கண்டு மகிழ்ந்தும் துன்ப முற்றும், சாகாமல் இந்த மனம் வளர்ந்து கொழுத்துப் பெருகியே வருகிறது. இந்த மகிழ்ச்சியும் ஏக்கமும் நிலையிலாமை ஆகுவது காண்கிறோம்! செயற் பாடான நிகழ்ச்சி நிலைகளின் (Fact) பயனே இவ்வாறாகும் போது செயற்பாடின்றி அகத்தில் தனக்குத்தானே காணும் ஒருவகை மாயக்கனவு பற்றி ஏனோ சிந்தனை! சில நற்கனவு செயலுக்கு வந்தபோது கடவுள் அருள்பாலித்து முன்னே அறிவித்தாரென்றும், சில தீயகனவு செயலுக்கு வந்தபோது அருள் பாலிக்காது கெடுத்தாரென்றும் வெறுப்பு விருப்பில்லா நடு நிலைமை ஆண்டவனான அனைத்துலக நாயகனைக் கருதுவது என்ன மதியீனம்!

நடுநிலை அறிவு இந்தப் பாழ்மனப் போக்கை ஏனோ அறியவில்லை?

இக் கருத்துகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது நண்பர் ஒருவர் பாடினார்:

"பண் ஏறும் மொழி அடியார் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினை இப்பாவி பார்க்கில்
கண் ஏறு படும் என்றோ 'கனவி' லேனும் .
காட்டேன்றால் காட்டுகிலாய் கருணைஈதோ
விண்ஏறும் அரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கே! என் கண்ணே! மெய்வீட்டின் வித்தே!

Koviloor Digital Library

தன் ஏறு பொழில் தணிகை மணியே! ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே!
—(திருவருட்பா-103)

இப்பாடலில் வரும் ''கனவு'' பற்றி நண்பர்க்கு எழுந்த ஐயமே இப்பாடலை பாடவைத்தது. அருமையான பொருந்தமான சங்கையே! வள்ளற் பெருமானே கனவுக்கு விழைந்த நிலையல்லவா! விளக்கத்துக்கு ஆவல் உறுவதும் நியாயம்தானே! வள்ளற்பெருமானுக்கு திருதணிகை மணியின் மூலத்திருக்கோலம் கண்டு மகிழப் பன்னாள் மனம் துடித்தது. இந்தத்துடிப்புப் பழக்கம் நாளடைவில் முற்றிப்போய் வழக்கமாகிவிட்டது. வழக்க நிலைக்கும் செயற்பாட்டில் பலன் கண்டார்களல்லர். நாம் ஒரு கடவுளின் திருமேனி உருவத்தைக் கோவிலில் போய் பார்த்துப் பணிந்து வணங்கி அது மனத்தில் ஊறி விட்டது. நேராடி அத்திருமேனியை அது இருந்த இடம் சேர்ந்துச் சேவிக்காவிடினும் இருந்த இடத்திலேயிருந்து அந்தத் திருமேனியை அகக்கண்ணால் பார்ப்பது மரபு. இவ்வுருவம் சில போது வராது. காரணம் அதனிடத்தில் உள்ள ஈடுபாட்டுக் குறையே.

நாம் சில நண்பர்களுடன் ஏக தேசமாகப் பழகுகிறோம். சில நண்பர்களிடம் அடிக்கடி உறவு பூண்டு தொடர்ந்து நட்பு நெருக்கமாகி விட்டது. இவரைக் காணாவிடினும் அகத்திலே இவர் உருவைக் காண்பது எளிமை. ஆனால் ஏகதேசமாகப் பழகிய முன்னைய நண்பர் உருவைச் சரிவரக் காண இயலுவதில்லை. காரணம் இவர் அடிக்கடி பழகி வழக்கத்தில் வந்தவர் அல்லர். இதை ஒத்தே கடவுளர் திருமேனி உருவங்கள் அகக்கண்ணில் வருவதும்

Koviloor Digital Library

வாராமையும் அமையும். அகக் கண்ணில் வாராத திருமேனி பற்றி மீண்டும் காதலுறுகிறார். இக்காதல் எண்ணத்தில் சிக்கி விட்டது. இதன் வளர்ச்சியே கனவில் வருவது. இப்படி வாராத போது வருந்துவதும் பக்தர்களது இயற்கை. இஃது ஒருவகை.

அடுத்து மகாத்மாகாந்தி அடிகள் உருவைப் பற்றிப் பேசுவோம். இப்போதுள்ளவர்களில் காந்தி அடிகளை நேரில் கண்டவர்களிருக்கிறோம். அதே சமயத்தில் அடிகளுடைய நிழலோவியங்களையும் பார்க்கிறோம். ஈடுபாட்டுடன் அடிகளை நேரில் கண்டு கவனித்தோர்களுக்கு நிழலோவியம் சிறப்பாகாது. அடிகளின் செம்மேனி, கூர்ந்த பார்வை, விரைவான நடை, இடது கை ஊன்றி மண்டியிட்டு அமர்ந்த கோலம், இடையிலே தொங்கும் (பாக்கெட் வாட்ச்) கெடிகாரம், ஆன்மீகம் கலந்த சத்திய அரசியல் இந்த வகைகளுடன் அடிகளிடம் உறவாடிய கருத்துகளும். சில சமயம் அந்தக் குரல் ஓசை (தொனி) முதலான அனைத்தும் அகக்காட்சியில் உருவெடுக்கும். இது இவ்வாறாக அடிகளை நேரே காணாது வாழ்ந்துவரும் இக்காலச் சிறுவன் ஒருவன் காந்திஅடிகள் வாலாறு பார்த்தும். நிழலோவியம் பார்த்தும் அடிகளை நேரே காண நினைத்தால் என்னாகும்? இந்த வேட்கை ஏற ஏற அது எண்ணமயமாகவே மாறி, அது வாராத நிலையில் "காந்தி அடிகளே! உங்களை நேரில் பார்க்க முடியாது; என்றாலும் கனவிலாவது வரக்கூடாதா?" என்ற ஏக்கம் வருவது இயல்பே!

இத்தகைய நிலையில் வழிபடு கடவுளர்களின் உருவத்திலே மயங்கி, மயங்கி, "ஆண்டவனே உம்முடைய இயல்பான திருவுருவை (அதாவது அருவநிலை என்றும், ஒளி நிலை என்றும், பெருவெளி நிலை என்றும் பேசுகிறார்

Koviloor Digital Library

களே, நூல்களெல்லாம் ஓலமிடுகின்றனவே அந்த நிலை யை) காட்டக் கூடாதா? உண்மை நிலையைக் காணுமாறு நான் தவமிலியெனினும் கனவிலேனும் காட்டக்கூடாதா?'' என்று ஏங்கும் நல்லடியார்களும் உண்டு.

இதன்னியில் எதிர்ப்பாராது தியானக் காட்சிகளில் கண்ட அற்புதக் காட்சிகளை மீண்டும் காண ஆசைப் படுவதும், அது வாராது அடியவரை வாட்டி வதைப்பதும் பின்னர் இத்துறை (ஏக்கம்முற்றி) வளர்ந்து அதே காட்சி யைக்கனவில் கான்போரும் உண்டு என்றும் வேறுகாட்சி கண்டதாகவும் சொன்னோரும் உண்டு என்றும் அத்துறை நிற்போர் கூறுவர்.

இவ்வகை எல்லாம் ஒரு புறமிருக்க, சுற்றுலாவில் மிக உயர்வான இயற்கைக் காட்சிகளான மலைகள் அவற்றின் மேலே வானத்தில் தவழும் மேகங்கள் விரைவான மேகங் கள் இவற்றால் மறைந்து மறைந்து பின்னர் ஒளிவிடும் கதிரவன்: மலைப்பகுதிகளில் ஓடும் நீர் ஓட்டங்கள்; உடலங்களைத் தழுவி உள்ளத்தில் இன்புறுத்தும் மெல்லிய பூங்காற்று; அலைதவழ் கடல்கள் பொங்கி எழும் பேரலை கள்; கடலோசை, முழுநிலா, உதிக்கும் கதிரவன். இந் நிலைகளைக் கண்டநுபவித்து இல்லம் திரும்பியோர் மீண்டும் அக்காட்சியைக் காண விழைந்து அவ்வளவு பொருட்செலவு செய்து போய்வர இயலாமையால் ஏங்கு வோர்களுமுண்டு. இந்த ஏக்கம் முற்ற இந்நிலை கனவில் வருவதுமுண்டு. எனவே கனவுக்கு ஏங்குவது தவறு ஒன்று மில்லை. ஆனால் இங்குச் சிந்தித்து முடிவுக்கு வர வேண்டியதானது. அனைத்தும் மனத்தின் சேட்டையே. இதன் விரைவேயன்றோ!

இனித் திருவருட்பாவின் பாடலுக்கு வருவோம்:

Koviloor Digital Library

வள்ளற் பெருமான் விழைந்த கனவுக் காட்சி மிக அற்புதமானது. ''பாத மலர் அழகினை'' என்பது நாம் ஆலயங்களில் காணும் உருவத் திருமேனியில் உள்ள சிற்பியால் செய்யப் பெற்ற திருவடிகளின் உருவம் அன்று. திருவடி என்பது திருவருளாகும். ஒரு திருவடி உணர்வையும் மற்ற திருவடி அவ்வுணர்வுச் செயல்நிலையும் குறிக்கும். உணர்வு வேறு அச்செயல் வேறு என்பது பொருள் நிலையில் இரண்டல்ல, இரண்டும் ஒன்றே. பல கோடி வடிவத் தெய்வ உருவங்களுக்குக் கைகள் கண்கள் மூக்குகள் அளவு அலைகடந்தாலும் கால்களாம் திருவடிகள் இரண்டே இரண்டு தான் நுட்பம் என்றதை ஏற்போமாக, அடியென்பது தொடக்கம். முடிவும் அடியும் அடி முடி காணும் ஆதாரவைப்பு முறை. முடிவு என்பது இது சொல்லிக் காட்ட அமைந்த நிலையே அல்லாது இன்பாநுபவத்தில் தொடக்கம் முடிவு என்பதே இல்லை.

அடியே முடி, முடியே அடி. இரண்டு பொருள் இல்லை. ''அடிநடு முடியிலாதது இதுமகனே. படிமிசை அடிநடு முடி அறிந்தனையே, பதியடி முடிவிலாப் பரிசையும் அறிவாய்'' (திருவருட்பா-3697) என்ற சொற்றொடரால் அறியப் பெறும். சாதாரணமாக வெட்ட வெளிப் பொட்டலில் நின்று கொண்டு நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தால் வானம், பூமியில் தொடும் ஓர் எல்லையைக் காணமுடியும். இது புறக்கண் புறத்தே பார்க்கும் அளவு. இன்னும் பூகோளப் படங்களில் பார்த்தால் எல்லை விரியும் என்றாலும் விரிந்த அளவுக்குட்பட்ட ஓர் எல்லையே ஆயினும் கணக்குக்கு உட்பட்ட எல்லை தானே காண முடிகிறது.

ஆனால் இறையின்ப, அருட்பெருவெளிக்கு ஆதி அந்த எல்லையும் உளதோ! தணிகைமலைக் கடவுளரின்

Koviloor Digital Library

பெயரால் ''பதியடி முடிவிலாப்'' பாதமலரைக் காண விழைகிறார்கள் அடிகள். ''இனித்த சுகம் அறிந்து கொளா இளம் பருவந்தனிலே என்புருவ நடுவிருந்தான் பின்பு கண்டேனில்லை'' (3026) என்று பாடிப்பரவச நிலைக்கு ஏங்குவதைப் பன்னூறு பாடல்களில் பரக்கக் காண வாய்ப்பிருக்கிறது. தெருவிலே (விளை) யாடையிலே (சிறு தேருருட்டும் பருவம்) மணந்த மணவாளன்; கைக் குழந்தையாகத்தாயின் தோளிலேயிருந்து தில்லைச் சிற்றம்பலத்தில் திரை தூக்கித் தரிசித்த போது புரிந்த புன்னகை ஈர்ப்புப் பெரு வெளிக்கு, இப்போது திருத் தணிகையை முறையாகப் பாடும்போது ஏங்குகிறார்கள்.

உருவத்திருமேனிக் காட்சிக்கு அல்ல ஏக்கமும் கனவு நிலையும். பாதமலர் என்று சொல்லி நிறுத்தாமல் ''அழகினை'' என்ற ஒப்புயர்வற்ற சொல்லை எளிதில் விட்டு விட இயலாது. ''அழகு'' என்ற தனித்த நிலையில் ஈடுபடும் போது மனம் மாய்ந்து விடும் அன்றோ!

ஞான விளக்கே! என் கண்ணே! மெய்வீட்டின் வித்தே! என்ற விளிகள் நம்மை உலுக்கு உலுக்கென்று உலுக்கு கின்றதே! என் கண்ணே என்றபோது இந்தச் சதையோடு கூடிய கருவிழி அன்று, அதன் மணி, இது விண்ணொடு தொடர்புடையது (விரிக்கிற் பெருகும்),, ''தணிகைமணி'' என்ற சொற்றொடரின் உள்ளீடு:

தணிகை என்பது திருத்தணியில் எழுந்தருளியுள்ள திருமேனிக்காட்சிக்கு மட்டும் அடிகள் விழைந்தார் எனக் கொள்வது சிறப்புடைய தாகாது. எப்பாடலாயினும் தகுதி மறவாது பொருள் கோடலே பொருத்தம். ஆறா இயற்கை அவாவை நீக்கி (தணித்து) பேரா இயற்கையைச் சேர்ப்பது மணி என்பது. ஒளியையும் ஓசையையும்

Koviloor Digital Library

மகோன்னத மாட்சிமையையும் குறிப்பது! அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற ஜோதிப்பிழம்பின் அறிகுறியாகத்தான் திருத்தணியில் உருவத் திருமேனி உள்ளது. நாம் உள்ளீட்டுப் பொருளிலே நினைக்க இன்றியமையாதது 'ஜீவசாட்சி' என்பது. ஜீவனுடன் பின்னி நின்றும் தனக்கொன்றுமில்லாத 'சாட்சி' நிலையில் உள்ள உத்தமோத்தம உன்னதப் பேரருள் பெற்றியே!

மேலும் ''சுப்பிரமணிய'' விளக்கத்தில் புருவநடு ஆறு பட்டை உருட்சிமணிப் பிரகாசத்தையும்; ஒருங்கே சேர்ந்த ஆறுஅறிவையும், சுத்தவிவேகமென்ற ஷண்முகம் என்னும் தத்துவங்களினது அந்தத்தில் உள்மனத்துக்கப் பால் சாந்தநிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம் எனவும் சொல்லி யருள்வார்.

பெருமானின் கால வரலாற்று வளர்ச்சி அடிப் படையில் மூலம் ஒன்றே அல்லாது புறத்தில்தான் கந்தகோட்டம், திருத்தணிகை, திருவொற்றியூர், பூர்வ ஞான சிதம்பரம், உத்தர ஞான சிதம்பரம் என்று வளர்ந்து ஈற்றில் சித்திவளாகப் பேறாக ஆயிற்று. இந்தப் புற வளர்ச்சியும் அகவளர்ச்சியின் பெருமைக்குச் சான்றாக அமைந்திருக்கின்றனவே அன்றி மாறுபாடாகவுமில்லை. முற்றிலும் ஏற்புடைத்ததே! உரு; உரு அரு; அரு ஒளி ஒலியான வடிவு (சுத்தப் பிரணவ ஞான) தான் அக வளர்ச்சி புறவளர்ச்சி ஒற்றுமை!

திருத்தணிகையைப் பாடிய திருவாய்தான்:—

"ஏகமோ அன்றி அநேகமோ என்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ

Koviloor Digital Library

தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
 நிகழ்ந்திடும் ஆணதோ அதுவோ
போகமோ பிரிவோ ஒளியதோ வெளியோ
 உரைப்பதேற்றோ என உணர்ந்தோர்
ஆகமோ டுரைந்து வருந்த நின்றோங்கும்
 அருட்பெருஞ் ஜோதி என்னரசே!"

—(திருவருட்பா-4622)

என்ற வகையில் பன்னூறு பாக்களையும் பாடி அருளியது. எவ்விதனும் அடிகள் கூறிய கனவும், மனத்தால் வருவதே ஐயமில்லை. எங்குவதும் எண்ணுவதும் மனத்தின் செயலே. இந்த ஏக்கமனம் மாண்டு நிறைமனமாகும் போதுதான், வேண்டப்படுபவனும் வேண்டுபவனும் என்ற இரட்டை (Duality) இல்லை. இது அருளின்பானுபவப் பெருநிலை. 'ஈசனோடாயினும் ஆசை ஒழிமின்' என்ற திருமந்திரமாலை செப்பும் தெய்விகப் பாவின் சொற்றொடரைச் சிந்திப்போமாக.

இக்கனவு இவ்வளவு இவ்வாறாகயிருக்க இந்த கனவின் போராலே இந்தக் கனவை எவ்வளவு ஆவலுடன் விரும்பினார்களோ அவ்வளவுக்கவ்வளவு எதிர்மறையாகப்பாடும் நாளுமொன்றுளதோ!

"பகலிரவடியேன் படுத்தபோ தெல்லாம் தூக்கமாம்
 பாவி வந்திடுமே
இகலுறு "கனவாம் கொடியவெம் பாவி" எய்துமே
 என் செய்வோம் என்றே
உகலுற உள்ளே நடுங்கிய நடுக்கம் உன்னுளம்
 அறியுமே எந்தாய்!

Koviloor Digital Library

நகவுறச் சிறியேன் "கனவு" கண்டுள்ளம் நடுங்கிடா
நாளும் ஒன்றுளதோ!"

—(திருவருட்பா-3444)

என்ற இந்தத் தீந்தேன் திருவருட்பாவையும் செப்பியருள் கிறார்கள். இதை உற்று நோக்க வேண்டாமா? நல்ல ஆக்கக் காட்சிக்கு ஏங்குவதும் கனவில் விரும்புவதும் அது வந்தாலும் வாராவிட்டாலும் "கனவு" உண்மை (சத்திய) யனுபவமில்லை. அது மனச்சேட்டை என்பதுதான் சரி என்பதற்கு என்ன மாற்றமிருக்க முடியும்? மேலே கண்ட பாவிற்கு உரைநடையே வேண்டாம். பாடலே எளிய உரைநடை, கனவை இகழ்ந்த நிலை கற்கண்டு இனிப்பது போல் அநுபவமாகிப் புரிகின்றதன்றோ?

கனவை வரவேற்றதாகப் பாடியுள்ள முன்னைய பாடலாலும் "கொடும்பாவியாகப்" பாடியுள்ள இப்பாட லாலும் நாம் எந்தவிதமாவது ஒரு நிலைக்கு வர வேண்டியது அவசியமன்றோ! இவ்விருமுரண்பாட்டுக்கும் இடையே ஓர் அமைதி காண்பதன்றோ அறிவுடைமை யாகும்; நெறியுடைமையு மாகும். மகிழ்ச்சிக்காக ஏற்றும், வேறுப்புக்காகத் தள்ளியும் நடப்போமானால் நம் கதி என்னாகும்? எதில் ஊன்றுவது? மகிழ்ச்சியிலா? வெறுப்பிலா? சற்றே சிந்திக்க முயல்வோம்.

ஒரு பொருளை முதன் முதலில் மனம் கலந்த கண் பார்க்கிறது. அருமையான ரோஜா மலர் அந்தப்பொருள். கண்கவரும் காட்சி சுகந்தம் அநுபவித்தாகி விட்டது. இந்நிலை மலரானது செடியிலிருந்தபடியே முடிந்தது. சரி என்று மனம் அதை விட்டுவிடுவதில்லை. அதைச் செடியி லிருந்து கிள்ளி மூக்கிற்குக்கொண்டு போகிறது கை; அல்லது சட்டைப் பித்தான் துவாரந்திலோ அல்லது சட்டைப்

Koviloor Digital Library

யையிலோ வைத்து அழகு பார்க்கிறது. அல்லது இன்னும் என்னென்னவோ சேட்டைகள். இது ஏன்? சிலர்! அடடா ஏன் இதைக் கிள்ளிச் சிதைக்கிறோம் எனக் கிள்ளாமலே விட்டுவிடுவது. இயற்கை எழிலை மடியச் செய்தோமே! எனச் சிந்திக்கின்றார்கள். இவ்வகையாக மூன்று நிலைகளில் மனம் செயற் பட்டுள்ளது. (1) பூவைக் கண்டது (2) கிள்ளியது (3) கிள்ளாமல் விட்டு விடுவது.

முதல்நிலையும் மூன்றாம் நிலையும் சரியே எனக் கொள்வோம் ஒருவாறு. இரண்டாம் நிலை ஏன் வந்தது? முதல் நிலை அநுபவமாகி விட்டது. மூன்றாம் நிலை, அநுபவம் இது தான் எனப் புரிந்துகொண்டு முடிந்து அது அது அதன் இயல்பாய் இயற்கையாய், இயற்கையே நடத்திக் கொண்டிருக்கிறது என உணர்ந்தாகி விட்டது. இரண்டாவதான நிலைதான் ''தனக்கு'', ''தன் சொந்தம்,'' ''என்னுடையது'' என்றநிலை, பொதுமை இயற்கை எழிலைச் சிதைத்தது அன்றோ! முதல்நிலை மனத்தைத் தோழனாகக் கருதலாம். மூன்றாம் நிலையைத் தோழனும் தானும் ஒருவனே; அவன் வேறு நான்வேறல்ல என்ற ஒருமையாகக் கருதலாம். இரண்டுங் கெட்டான் நிலையான இரண்டாவது நிலையை என்னென்று சொல்வது? மூன்றும் மனம் தான் என்றாலும் மூன்றாம் நிலை மனமற்ற அல்லது மனம் கடந்த உணர்வு நிலை.

இந்த உணர்வு நிலைக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. இந்த மனமற்ற நிலைதான் வள்ளற் பெருந்தகை ''அது அதில் விளங்கும் அருட்பெருஞ்சோதி என் அரசே'' என்ற முறையில் பற்பல துலையாகப் பல்வேறு சான்றுகளாய்ப் பகர்ந்தருள்கிறார்கள். முதல் நிலை, இரண்டாம்நிலை, மூன்றாம் நிலை எல்லாம் உய்த்துணர வேண்டிய பகுதிகள். இந்த ஊன் பொதிந்த யாக்கையும் மூன்றாம் நிலையான

Koviloor Digital Library

முழு உணர்வு நிலைக்கு (எப்பொருளைக் கண்டாலும் கேட்டாலும், ஐம்புலப் பொறிகளால் அனுபவித்தாலும் கூட) வந்துவிட முடிகின்றது. உயிர் வேறு பொறிபுலன் கரணங்கள் வேறு, உடல் வேறு என்ற பிரிவினையில்லாமல் ஒரே பேரருள் பிழம்பாகப்—பேரொளிப் பிழம்பாக—வந்தமைந்து விடுகிறது. இந்நிலைக்கு மூலம், மனோ நாசம் என்று கூறினாலும் சரி, அல்லது அருள் மனோவெலி என்று கூறினாலும் சரி, சொற்பேதமேயன்றிப் பொருள் பேதமே இல்லை. ஒரே மனம்தான் வேஷம் போட்டு நம்மைக் கூத்தாட்டுகிறது.

மனத்தின் நிலை இவ்வாறாக மாயமாக ஆகும் போது இருளில் காணும் கனவுக்கும் ஏதேனும் பொருளிருக்க முடியுமா? சிந்தனா சக்தி நடு நிலையிலிருந்து பார்க்க அருள்வானாகுக!

தூக்கமே மூவுருவ சித்திக்கு முதற்றடையாம். உடலும் மனமும் ஒன்றாத போது அதிலுறும் கனவுக்கென்ன வாழ்வு வேண்டியிருக்கிறது.! திருமணமே ஆகவில்லை எனின், பிறந்தது ஆண்மகவோ பெண்மகவோ? (கற்புடைத் திருமணம்) அதன் திருநாமம் என்ன? என்றாற்போல் அல்லவா இருக்கிறது கனவின் மாட்சி.

திருவருட்பாவில் கனவு நனவுப்பற்றி இன்னும் சில குறிப்புகளும் உள - திருவருட்பாவின் கண்ணான திரு அகவலிலேயே பேசப்பெறுகிறது. அவை சிந்திப்போர் பண்பு நலன்களுக்குத் தகப் பொருள் தருமே அன்றிக் கனவை உறுதிசெய்து அது ஆட்சி செய்வதாகக் கொள்வதற்கில்லை. கனவு நனவு என்று இருநிலை அருள்நிலையில் இல்லவே இல்லை, நனவையே போலி என, அது வரும் போகும் என, இலையுதிர் நிலையாக ஒதுக்கி விடும் அருள் நிலை.

Koviloor Digital Library

வள்ளற்பெருமான் பாடல்களுக்கு அவர்கள் பாடல் களுக்குள்ளேயே விளக்கங்கள் மின்னுகின்றன. ஒரு பாட லுக்கொரு பாடல் முரணாகப் புரியாமலிருக்கலாம். ஆனால் அமைதியாகப் பொறுமையோடு பார்ப்போமாக (காத்திருந்து), பூட்டும் அருட்பாவிலே, அதன் சாவியும் அருட்பாவிலே யிருக்கிறது. பிற நூல்கள் கொண்டு மேற் கோள்கள் காணமுயலுவதைவிட அருட்பாவிலே நிளைத் தால் ஐயங்கள் காலத்தால் தீர்ந்து புத்துயிர்ப்பு உயிர்க்கும் திருவருட்பாவுக்கு விளக்கம் திருவருட்பாவே! அநுப வத்துக்குத் தகப் பொருள் விளங்கும். திருவருட்பா அனுபவநூல், அநுபவ நூலே.

சங்கை எற்படின், முற்றுப் புள்ளிவைத்து விடாது அரைப்புள்ளி (கமா) வைத்துக் கொண்டே வந்தோமானால் நாளடைவில் (இரட்டையில்லாததாய் அதுவா, இதுவா என்ற தடுமாற்றமில்லாததாய்) ஒருநிலை உறுதியாக ஒளி விடும். முழுமை, பொதுமை, முற்றிலும் புலனாகும். அருள் அநுபவத் திருவாக்குகள் அவை, நம்போன்ற பிறப் பல்ல அடிகள், அடிகளின் வரலாற்றுத் தாய் தந்தையர் (உபசார உலகியலில், காரியத் தாய் தந்தையர்) உள்ளபடி இருக்க, காரணத்தாய் தந்தையரைத்தான் சத்தியமாக அப்பா என்று அழைப்பதும் பதிலுக்கு மகனே என்று மறு மாற்றம் வந்ததுமாகும். அருட்பெருஞ்ஜோதித் தந்தையும் தனிப் பெருங்கருணைத் தாயும் ஈன்றெடுத்த திருமகனாரே நம் வள்ளற்பெருந்தகை. ஏதோ நாம் செய்த புண்ணிய வசக்கூறு எங்கோயிருந்து மின்னி அந்தகார நள்ளிருளில் ஒரு மின்னலென தோன்றாது தோன்றி ஒளி விட்டருளுவர் அடிகள் பிரானார். உண்மையில் அடிகள் இதுவரை அவ தரித்த அருளாளர்கள் வரிசையில் வைத்து எண்ணக் கூடியவர்கள் அன்று தன்னடக்கமாக அப்படிச் சொல்லிக்

Koviloor Digital Library

கொள்ளுகிறார்கள். விஞ்ஞானமொப்பவும் இன்றும் வளரவும் வழிகாட்ட வந்த பிறப்பு. பல சான்றுகள் உள, அதன் விளக்கத்துக்குள்ள கட்டுரை அன்று இது.

இனிச் சுருக்குவோம் செய்தியை;

மனம்

காமக்குரோதம் மோகம் ஆதிகளால் தூண்டப்பெற்று விருப்பு, வெறுப்பு, பேராசை, லோபம், பயம், மகிழ்தல், துன்புறுதல் இவற்றிற்கு ஆளாகி நன்மை, தீமை, நினைவு, மறதி, நேற்று, நாளை, இம்மை மறுமை, பகல் இரவுக்குட்பட்டு ஆட்டவைக்கும் நீ, நான் என்பன போன்ற பாகுபாடுகளைப் பிரிப்பதே, எண்ணக் குவியல்களைத் தாங்கிச் செயற்படுவதே மனம். இதனுடையமூலம் மேற்கண்டவையே அல்லாது வேறு எதுவுமே இல்லை. இவை சத்தியமாக உணரப்படின் அந்நிலையே தான் மன மற்ற நிலையாகிறது. உணர்வோமாக!

இவ்வாறான மன நிலையை, மனங்கடந்த, மனம் செத்த (அல்லது சிலர் கருதுமாப்போல மனம் அருள் வயத்தாதல், என்று எப்படிக் கூறினும் சரியே) நிலையே ஆன்மநிலை. இந்நிலை உணர்வில்-உணர்வோன் என்ற ஒருவனிருக்க முடியாது. இந்நிலையை வருணிக்க வராது, வருணிக்க இயலாத ஒன்றுக்குச் சொற்கள் எப்படி அமையும் அது அதுவாவதே! அதுவாதல் என்பது கூடச் சொற்பிழையாகும் ஏன் என்றால் அது ஆதல் எது என்ற கேள்வியும் அன்றோ பிறக்கிறது.!

அது மோனம் மாமோனம்! இது பேசா அநுபூதி நிலை. வார்த்தைகள் கொண்டு அதன் பெருமையைச் சாற்ற முயலலாம். முடியவில்லை. எனவே அதனைச் சாற்ற இயலாது. ருசியின் அநுபவத்தை எப்படிச் சாற்ற

Koviloor Digital Library

முடியும்! இன்பானுபவம் கிடைக்க இயையுமா? எனவே மனோநிலை இப்படியிருக்கக் ''கனவு''க்கு முக்கியத்துவம் கொடுத்து அது கடவுள் அருள் என்று கழறுவது தகுமா? சிந்திப்போமாக; ''எல்லாம் கடவுளருள்'' என்று சொல்வதின் பொருளேவேறு. சொற்றொடர்களைச் சந்தர்ப்பம் சூழ்நிலை கருதிப் பொருள் கோடாவிடில் அது பேராபத்தாய் விடும். வீணே மடிந்து படுவோம்! மடியவா வாழ்கிறோம்! வாழ் வதற்கன்றோ பிறந்தோம்! வாழாமல் மடிந்தால் என்னாம்! என்னாம்! என்னேயாவோம்?

மனம் செயற்படும் வரை ''அன்புத்திருமாளிகை'' யின் திறவுகோல் கிட்டவே கிட்டாது. அன்பு ஒளிமயம் (சுத்தவான் இன்பவெளி) மனம். இருள்மயம் என்றால் எப்படி இருள் ஒளியை நெருங்கும்? மனம் சுக்கு நூறாகச் சிதறி மடியமடிய அன்பாம் மொட்டு மலரத்தொடங்கி மணக்கத் தொடங்கும்! அன்பு என்ற சொல்லை வெறுமனே உபயோகித்து 'வருகிறோமேயன்றி (Verbal) அதன் அநுபவப்பொருள் நிலைக்கூறே அணுத்துணையும் நம்மிடம் இல்லை. அன்பானது ஒரு பொருளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாது. ஆய்வு பிரிவுடைமையின் அடிப்படை. அன்பு பிரிவுற்றறியா பேரருள் வயத்தது. அன்புடையீர் அன்புடையீர் என்று விளிப்பது நமக்குப் பொருளற்ற செக்குமாட்டுப் பழக்கச் சொல்லாகிப் போலியாகி விட்டது. செயலுக்கும், சொல்லுக்கும் எழுத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ''வெறும் வெற்று வேட்டு!'' இப்படிச் சொன்னால்தான் புரிந்து கொள்ள வாய்ப்பு.

சிந்தனை என்பதே இல்லாது. நன்மை தீமைகளை பிரிக்காமற் செயற்படுவதே அன்பின் அநுபவநிலை. அதற்கு ஓய்வே இல்லை. கருணையே அதன் இயக்கம்.

Koviloor Digital Library

காரண காரியம் கடந்த செயல்நிலை அது. இங்கு மனம் என்பதின் பூண்டே கிடையாது.

"அன்புக்குமுண்டோ அடைக்கும் தாழ்!

இக்கட்டுரையில் ஐயம் புலப்படுத்தி மாற்றம் தருவோரை இருகரங்கூப்பி வரவேற்கின்றோம். ஏன்? மேலும் இருசாராரும் ஒருமித்துக் கூடி உள்ளத்தில் ஒன்று பட்டு உண்மையை மேன்மேலும் காண்பதற்கே.

வாழ்க அன்புத்தாய்: வளர்க அருள்சேய்!
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி

Koviloor Digital Library

10. திருமுறைக்கும் தீட்டுண்டோ!

திருவருட்பிரகாச வள்ளல்பெருமானாரால் திருவாய் மலரப்பெற்றுள்ள பாக்கள் அனைத்தும் ஆறு திருமுறை களாகவும் உரைநடைப் பகுதி தனி நூலாகவும் வகுக்கப் பெற்றிருப்பது சன்மார்க்க சங்கத்தார் அறிந்ததே! இவ்வாறு செய்யுட்பகுதிகளாக உள்ள 5 திருமுறைகள் சுத்த சன்மார்க்கிகள் பார்ப்பதற் குரியதன்று என ஒரு மரபு பேசப்பெற்றும் எழுதப்பெற்றும் வருகிறது.

இதைக்கொண்டு திருவருட்பாப் பயில்வோர்களும் (தொடக்கத்திலுள்ளோர்களும் கூட) 6ஆம் திருமுறை யையே படித்து வருகின்றார்கள், இந்த மரபு எப்படி வந்தது? இதற்கு அருட்பா ஆதாரம் ஏதேனும் உளதா என்று நாம் ஒருவருக்கொருவர் கலந்து சிந்திக்கத் தூண்டுவதே இக்கட்டுரையின் கருத்து.

பெருமானார் பாடத்தொடங்கியது முதல் பெருகி யுள்ள செய்யுட்களையும் உரைநடைகளையும் பார்ப்போ மானால், "பேருபதேசம்" என்ற தலைப்பில் "நான் முதலில் சைவசமயத்தில் லக்ஷ்யம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்லமுடியாது.........அந்த லக்ஷ்யம் இப்போது எப்படிப் போய்விட்டது? ....அந்த லக்ஷ்யம் தூக்கிவிடவில்லை'' .... "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக'' என்ற பகுதி

Koviloor Digital Library

யான செம்மைசால் வாசகங்களை வைத்து 5 திருமுறைகள் ஒரு சாராருக்கும், 6 ஆம் திருமுறை மற்றொரு சாராருக்கும் என நிகழ்முறை வந்து வளர்ந்துவிட்டது போலும் எனக்கருத இடம் தருகிறது. இதைத் தவிர செய்யுட் பகுதிகளிலும் உரைநடைப் பகுதிகளிலும் சமயமெனும் மதங்களைப் பெருமானார் சாடி வருந்துவது நாம் நன்கு அறியப் பலப்பல வாய்ப்புகள் உண்டு. இத்தகைய திருமுறைப் பேதங்களை நாம் ஆழமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பெருமானார் ஓதாதுணர்ந்த அருளாளர். அப்போதைக்கப்போது திருவாய்மலர்ந்த அனைத்தும் அவ்வப் போதிருந்த திருவுள்ளத்தின் திருநிலையே. இதுதானே நியாயம்! அந்தந்த நிலைகளைப்பற்றி ஏகதேசமாக ஓர் அளவுதான் நம் சிற்றறிவு பகுத்துணர முடியுமே அல்லாது செய்யுள், உரைநடைகளின் சொற்பொருள்களை மட்டும் கொண்டு நம் கற்றறிவுத் துணையால் ஏதேனும், தீர்மானிக்க முயன்றோமானால் ''குளிக்கப்போய்ச் சேற்றிலாடிய'' கதையாகவே முடியும்.

நெற்கதிரில் ஒரு மணியானது நாத்து, செழித்து வளர்ந்து கதிர்மணியாகத் தோற்றுவதற்குரிய தொடக்கத்திலேயே ''நெல்லினுக்குத் தவிடு உமிகள் அநாதி'' என்றாற் போல் முளையிலேயே பூரணச் சத்துக்களும் அரிசி, தவிடு, உமி எனப் பிரிக்கமுடியாதிருந்து செறிந்து வளர்ந்து முத்தி ஈற்றில் மணியைத் தனியாக ஆக்கி அரிசி கொள்வது போன்று பெருமானாரின் தொடக்கம் தொட்டுச் சுத்த சன்மார்க்கச் செந்நெறி யிடையீடு அன்றி வளர்வது செய்யுள், உரைநடைகளைக் கூர்ந்து கவனிக்கும் போது புலனாகின்றது. ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டேயிருக்கிறது. கதிர்மணி முத்தமுத்தத் தோற்றப்

Koviloor Digital Library

பொலிவு தெரிவதுபோல் விளக்கம் நன்கு தெரிகிறது பாடல்களிலும் உரைநடைகளிலும்.

அருளாளர்களின் திருவாக்குகளை அநுபவமில்லா ஏட்டுக்கல்வியாளர்களாகிய நாம் அநுபவக்கூறு ஒரு சிறிதுமில்லாது ஆழமில்லா அறிவினால் மட்டும் நோக்கினால் நான் 5 திருமுறைகள், சுத்தப் பிரணவ ஞானதேகம் பெறா முன்னர் பெருமானார் பாடியதென்றும், ஆறாம் திருமுறை ஒன்று மட்டும்தான் முத்தேக சித்திபெற்ற பின்பு பாடிய தென்றும் சொல்லத் தோன்றும்! இப்படிச் சொல்வதற்குக் கூட 'அநுபவம்' வேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. கூர்த்த மதியினால் நோக்கினால், உத்தேச மாகப் பரவலாகக் கூட இப்படிச் சொல்ல வாய்ப்பே கிடையாது.

இன்றைய சன்மார்க்க வழிபாடுகள் தொன்று தொட்டு தருமசாலை ஆதியாக திருவடிப்புகழ்ச்சி, திருஅகவல், அட்டகம் மஹாதேவ மாலை, இவற்றால் பெரும்பாலாக நடந்து வருகின்றன. இவற்றில் இரண்டு 5 திருமுறை களுக்குள் உள்ளன. இரண்டு ஆறாம் திருமுறைக்கு உரியன! இதில் கூட சமமாகத் தான் திருமுறைகள் பங்கு பெற்றிருக் கின்றன, வழிபாட்டுப் பாடல்களின் தலைப்பு எண்ணிக்கை யில்! ஆனால் சில சன்மார்க்கிகள் அகவல், அட்டகம் இரண்டைத் தவிர எஞ்சிய இரண்டைத் தீண்டுவதுகூட இல்லை என்பதை உண்மை கூறுவோர் மறுக்கமுடியாது!

'பரசிவம் சின்மயம்' எனத் தொடங்கும் திருவடிப் புகழ்ச்சியில் பெருமானார் பாடியருள வேண்டியது பாக்கி யுள்ளது என்ற நிலையேயில்லாது சமயம் பேசி, மதம் பற்றிப் பேசி, சமயமதங் கடந்த நிலைபேசி சுத்த சன்மார்க்கச் செந்நெறியும் பேசியுள்ளார்கள். 128

Koviloor Digital Library

வரிகளைக் கொண்ட இப்பாடலில் சமபாகமான 64 வரிகள் தாண்டி 65 ஆவது வரித்தொடக்கம் ''மரபுறு மதாதீத வெளிநடுவில் ஆநந்த மாநடனமிடும் பூம்பதம்'' என்று வருவதை நாம் சிந்தித்தால் இது ஆறாம் திருமுறைக்கும் மேலே ஒரு திருமுறையிருப்பின் அதில் சேர்த்து மகிழலாம் போலிருக்கிற தல்லவா? இந்த ''ஆநந்த மாநடனம்'' சுத்த சன்மார்க்கத்தைக் குறிக்கவில்லையா? இம்மாதிரிக் குறிப்புகள் பலப்பல ஏனைய நான்கு திருமுறைகளிலும் ஒளிவிட்டு மிளிர்கின்றன. சிந்திப்போருக்கு இப்படிப் பேருக்கம் தரும் சுத்த சன்மார்க்கச் செந்நெறியின் அரிச்சுவடியும் அதன் வளர்ச்சியும் 5 திருமுறைகளில் பெருகிக் கிடப்பதை நாம் உற்றறிய வேண்டும்!

ஆறாம் திருமுறையின் பெரும்பகுதி அநுபவ விளக்கங்கள், ஆண்டவன் நிலையும் வள்ளற்பெருமானாரின் தந்நிகரற்ற பேராற்றலும் வெளிப்படுவதை நாம் புரிந்து கொள்ளலாமே தவிர நமக்கு அநுபவங்கள், அநுபவமில்லாததால் உள்ளீடாக ஈடுபாடு வரமுடியாது என்பது தெள்ளத் தெளிந்த உண்மை. அந்த நிலை இயல்பாக வரவேண்டியதை யாரே மறுப்பர்? அவற்றைப் படிக்க வேண்டாமென்று யாரேனும் சொல்வார்களா? அப்படிச் சொன்னால் அவர்கள் ''மண்டுகங்களைத்'' தவிர வேறென்னவாகயிருக்க முடியும்? நம் தகுதிக்குத் தக்க கொள்ளவேண்டியவை எவ்வளவோ அகவலிலும் உள! அருளநுபவ மில்லாதவர்களை அநுபவப் பாடல்கள் ஈர்க்க முடியுமா! அகவலைப் பார்த்துப் புரிந்து, தெரிந்து படித்தால் கூசுகிறது உள்ளம். அதைத் தீண்டக்கூட நமக்கு (எம்போல்வார்க்கு) அருகதை கூட இல்லை. ஆனால் அருள் ஆற்றல் புரியமுடியும்! பெரும் பாலானவை வள்ளல் பெருந்தகையின் பேரநுபவப் பெருமை. பெருமானாருக்கு முன்தோன்றிய அருளாளர்களுள் ஒருவர் கூட:

Koviloor Digital Library

"உலகுயிர்த்திரள் எலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான் செயத்தந்தனை."
(1577-78)

"மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல்எனக் களித்தனை."
— (1581-82)

என்று இப்படிச் சொன்னதில்லை என்பதை இமயமேறிப் பறை சாற்றலாம்!

படிக்குந்தோறும் உள்ளம் நடுங்குகிறது. இப்படிச் சொல்வதினால் முன்னைய அருளாளர்களையும் வள்ளற் பெருமானையும் ஒப்புயர்வு காண முற்படுவதும் அறியாமையாகும். எவ்வெக்காலத்தில் எவரெவர்கள் மூலம் எத்தகைய விளக்கம் அவசியப்படுகிறதோ அதற்குத்தக மெய்ஞ்ஞானநிலை வெளிப்பட்டு வருகிறது. ''ஒப்புமை'' என்ற நிலையே இரட்டைத் தன்மையைத் தந்து அறிவைப் பேதப்படுத்த ஆயத்தம் செய்கிறது. விஞ்ஞான காலம் ஓங்க ஓங்க மெய்ஞ்ஞானம் இடம் தந்து ஒளி விடுகிறது.

சுத்த சன்மார்க்க நெறியாம் ஒப்பில் பெருநெறிக்கு வள்ளற்பெருமானார் ஒருவரே சான்று. மேலைநாட்டில் அடிகள் அவதரித்திருந்தால் ஞான சபை பொற்றகடு வேய்ந்து வைரமணிகளால் ஒளி விட்டிருக்கும்! எப்பாரும் எப்பதமும் சுத்த சன்மார்க்கம் இப்போதுதான் பிரகாசிக்கத் தொடங்குகிறது. அரசியல் புரட்சிகளே கால்கொள்ளப் பன்னூற்றாண்டுகளாகின்ற முறையில் ஆன்மீகப் புரட்சி வேரூன்றுவது எளிதல்ல. குருதியில் கலந்து யுகயுகமாய் வந்த சமய சாத்திர அழுத்தம் ஒரு நூற்றாண்டுக்குள் கால் கொள்ள முடியாததில் வியப்பொன்றுமே இல்லை. தனி ஒரு நபர் சுத்த சன்மார்க்க அடிச்சுவட்டில் இன்னும் அடி எடுத்து வைக்கவில்லை என்ற அவ்வளவு பெருநெறி எனச்

Koviloor Digital Library

சொல்லலாம். பெருநெறி என்ன? தன்னிழப்புக்கே தயாராகவில்லையே?

பொன்னையும் பெண்ணையும் மண்ணையும் துறக்கலாம் போலிருக்கிறது. புகழையும் தன் முனைப்பையும் துறக்க ஒத்துவர முடியாதது கண்கூடு என்று தாராளமாகச் சொல்லலாம். வள்ளற்பெருமான் காட்டியருளிய இவ்வளவு எளிமையான நெறியும் வேறு கிடையாது. சரியை—கிரியை யோகம்—ஞானப்படிகளே இதில் இல்லை. அப்படியானால் என்னதான் உள்ளது மர்மம்! தயவு! தயவு! அணுவளவுகூட தயவுக்கு மாற்றமில்லாப் பூரண சுதந்திரத்துடன் மனம் மொழி மெய்களால் இயங்கினால் சுத்த சன்மார்க்கம்; நாக்கினில் உள்ள சர்க்கரைப்பாகே! நெஞ்சம் தயாராகவில்லையே! தங்கள் தங்களுடைய பொருந்தாக் கூற்றுக்கு அருட்பாவிலிருந்தே சான்று தேடுகிறதே வறட்டு அறிவு! வள்ளலே காத்தருள்க! கைவிடேல் நம்பினேன் உனையே! ஆறாம் திருமுறையிலும் பிள்ளைச் சிறு விண்ணப்பம், பெருவிண்ணப்பம் எல்லாம், கணம் தவறாது ஈடுபாடுடன் ஓதி ஆற்றாமையை அழுது கொட்டிப் புலம்ப வேண்டியவையே! இப்படிப் பாக்கள் முன்னைய திருமுறைகளிலும் நிறைய உள்ளன!

ஆறாம் திருமுறைக்கு முன்னைய திருமுறைகளிலேயே பெருமான் ஒளி வடிவம்பெற்ற நிலை குறித்தருளப்பட்டுவிட்டது. ஒரு திருமுறை முழுவதும் இக்குறிப்புகளே. 8 பதிகங்கள் அத்துடன் சைவ சமயாச்சாரியர்கள் நால்வருக்குரியன துதி 4 பதிகங்கள் ஆக 12 பதிகங்களுடன் ஒரு திருமுறை முடிவடைகிறது. இத்திருமுறையின் மொத்தப் பாடல்கள் 237, நால்வருக்குரியன 41 பாடல்கள். எஞ்சிய 196-ம் ஒளிவடிவம் பெற்ற குறிப்பே! இதற்குரிய முதற் பதிகம் 31 பாடல்கள் கொண்ட ''அன்பு மாலை'' தலைப்பே

Koviloor Digital Library

நெஞ்சை அள்ளுகிறது. இதில் 25ஆவது பாடல். ''தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்து திரு அருள் மெய்ப் பொதுநெறியில்செலுத்தி'' என வருகிறது. இவ்வரிகளை 6 ஆம் திருமுறைக்குள் வைக்கப்படாதா? வைக்கவில்லை ஏன்? நெல்லினுக் குமி தவிடு வருவதை எப்படிப் பிரிக்க முடியும்?

2.ஆவது பதிகம் 100 பாடல்கள் கொண்ட ''அருட் பிரகாச மாலை.'' எப்படிப் பெயர் தலைப்பு! சிந்திப்போ மாக! உணருவோமாக! அது அதுவாகத் திகழுவோமாக! பெருமான் இருக்குமிடம் தேடிவந்து அருட் பெருஞ்சோதி ஆண்டவர் கதவம் திறப்பித்து ஒளிவண்ணமாக்கும் பகுதி ''ஒன்று கொடுத்தாய், ஒன்று கொடுத்தாய்' என்று சொல்லாமல் சொல்லி நம்மை எல்லாம் ஏறாநிலைமிசை ஏற்றச் செய்யும் ஒப்பற்ற பகுதி.

3 வது பதிகம் 10 பாடல்கள் கொண்ட ''பிரசாத மாலை.'' திருநீற்றுப் பிரசாதம் அல்ல, புஷ்பம் பிரசாதம் அல்ல, எலுமிச்சம் பழம் குங்குமப் பிரசாதமல்ல, சர்க்கரைப் பொங்கல் பாயச நெய்வேத்தியப் பிரசாத மல்ல, மனிதப் பிறவி பெற்ற பயனுளப் பிரசாதம்! முத்தேக சித்திப் பிரசாதம். இதை அனேக சன் மார்க்கிகள் திருநீறு என்றும் புஷ்பம் என்றும் பேசி எழுதி வருகிறார்கள். பூவும், நீறும், பொங்கலும் இங்கு இவ்விடத் தில் ஏது? ஆனால் திருவாய்மலரும் சூசகம் சூசகமே! தந்தது ''பூ'' என்றே பகருகிறார்கள். இந்தப் பதிகத்தில் ஆழ்ந்து பார்க்க வினையின் வலிமை துணை செய்யாததால் தடுமாறுகிறோம். பெருமானாருடைய பாடல்களுக்கு பிற நூல் சான்றுகள் தேடவே கூடாது. தெரியாத இடங்களில் பெருமானைச் சிந்தித்து (கால் வயிறு அரை வயிறு உண வுடன்) பெருமானே! இவ்வளவு எளிய தமிழ்ச் சொல்லின்

Koviloor Digital Library

உள்ளீடு புரியவில்லையே என்று முட்டி மோதி உணர்ந்து நெகிழ்ந்தால் பக்குவத்துக்குத் தக பொருள் தரும்படியே அருளுகிறார் என்று அவ்வகைத் துறையுள்ளோர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு 4, 5, 6, 7, 8 ப:திகங்களில் அந்த ''பூ'' என்ன என்பதைச் சாங்கோபாங்கமாக விளக்கியிருக்கிறார்கள். ஒரு திருமுறை முழுவதும் இதே தொடர்பு. 196 பாடல்களையும் பார்க்க பொறுமை ஏது? மேலும் இது ஆறாம் திருமுறையுமல்ல! நாம் தொடும்போதே, ஆறாம் திருமுறை அல்லாததில் என்ன உண்மையிருக்கப் போகிறதென்று முன்னங்கூடியே முடிவு கட்டிவிட்டோம். கட்டிய முடிவுக்கு மாற்றம் எப்படி ஒப்புதற்கு நெஞ்சம் தயாராகும். முடிவு என்று ஒன்றைச் சொல்ல நமக்கு ஆற்றலிருப்பின் நாம் ஏன் நூல் பார்க்க வேண்டும்? இதையாவது சிந்திக்கக் கூடாதா நாம்? பிறர் வாய்ச்சொல் கேட்கவே ஒருப்படாது உள்ளம். முன்னரே முற்றுப்புள்ளி முடிவு கட்டிவிடாது 'கமா' அரைப்புள்ளி போட்டு வைத்தால் நலமாகுமே. பெரியதொரு முற்றுப்புள்ளி போட்டு விடுகிறோமே! ஐயோ பரிதாபம்!

7 ஆம் பதிகத்தில் வெட்டவெளியாக (முன் உணர்த்திய குறிப்புகளான ''ஒன்று கொடுத்தது''—''பூ'' அருளியது அனைத்தையும்) ''தன்வணம்'' ஒன்றளித்தான் எனவும் ''சித்தியொன்று'' கொடுத்தான் எனவும் ''ஒளி வண்ணம் தந்தென்னை அளித்தான்'' எனவும் ''சாவாத வரங்கொடுத்துத் தனக்கடிமை பணித்தான்'' எனவும் இந்த வகைகளில் பறைசாற்றி இறும்பூதெய்தி நம்மையெலாம் பெருமை கொளச் செய்யத் தயவு வைத்தருளுகிறார்கள் அடிகள் பெருமகனார்! இத் திருமுறையை ஓதுக்கலாமா? பாபம் சம்பவியாதா? இது ஆறாம்

Koviloor Digital Library

திருமுறையிலடங்கியதல்ல வென்றும், 5 ஆம் திருமுறையில் பாடல்கள் 3029 முதல் 3225 வரை உள்ளதென்றும் சொல்ல முன் வரவேண்டும்.

எஞ்சிய 41 பாடல்களைக் கொண்ட 4 பதிகங்களும் முதல் பதிகம் உயிர் அநுபவம்—அருள் அநுபவம்—சுத்த சிவ அநுபவம் பற்றியும், இரண்டாம் பதிகம் சுற்றுணை பூட்டிய கடல் கடந்த இறையருளின் பேராற்றலையும், 3 வது பதிகம் முதலைவாய்ப் பிள்ளையைப் பல்லாண்டுகள் சென்று வரவழைத்த வரலாறும், 4 ஆவது பதிகம் அன்புருவம், அருளுருவம், இன்புருவம் பற்றியும்தான் பேசுகிறது (3226—3265). இந்நிலைகள் ஆறாம் திருமுறைப் பயில்வோர்களுக்குப் புறம்பானதாகுமா?

"வீட்டுக்காசைப் படுவாரை வீட்டை விட்டுத் துரத்தியே வேட்டாண்டியா யுலகில் ஓட்டாண்டி யாக்கு வார்க்கு—தெண்டனிட்டேன் என்று சொல்லடி" என்ற பாடலும், "இச்சையிலார் இட்ட மலம் பட்ட இடம் எல்லாம் பொன்னாகும் என்றால் இட்டமதை விட்டதற் கிசைந்திலையே" என்ற நெஞ்சறிவுறுத்தல் கண்ணியும் இன்ன திருமுறையிலிருக்கிறதென்று எடுத்துக்காட்டுவது நமக்குள் பெருமை தராத ஒன்றா! இக்கூற்றுகளைச் செற்யபடுத்தினால், தானே வருகிறது 6 ஆம் திருமுறை அநுபவங்கள்!

ஆறாம் திருமுறையில் சற்குருமணி மாலையிலுள்ள:

"கருதாமல் கருதும் ஓர் கருத்தினுட் கருத்தே
காணாமல் காணுமோர் காட்சியின் விளைவே!
எருதாகத் திரிந்தேனுக் கிதபரம் அளித்தே
இறவாத வரமுந் தந்தருளிய ஒளியே

Koviloor Digital Library

வருநாகந் தவிர்த்திட வந்த தெள்ளமுதே
மாணிக்க மலைநடு மருவிய பரமே
தருநாவ முனைவெனச் சாற்றிய பதியே
தவிநட ராசவென் சற்குரு மணியே!"

(3731)

என்ற பாடலின் முதல்வரிக்கு விரிவுரை யாற்றுவதுபோல் மஹாதேவ மாலையில் உள்ள:

"கிரியை நெறிஅகற்றி மறைமுடிவில் நின்று
'கேளாமல் கேட்கின்றகேள்வியே' சொற்
கரியவறை விடுத்து தவநிலைக்கு மேலே
'காணாமற் காண்கின்ற காட்சியே! 'உள்
அரியநிலை ஒன்றிரண்டின் நடுவே சற்றும்
'அறியாமல் அறிகின்ற அறிவே' என்றும்
உரிய சதாநிலை நின்ற உணர்ச்சி மேலோர்
'உன்னாமல் உன்னுகின்ற' ஒளியாம் தேவே!"

(2161)

என்ற இந்தப் பாடல் முழுவதுமே அமைந்துள்ளது. மஹாதேவ மாலை ஆறாம் திருமுறையா? ஆறாம் திருமுறைக்குப் பொருள் காண மூன்றாம் திருமுறை உதவுகிறதே. மூன்றாம் திருமுறை வெளிப்பாடு ஆறாம் திருமுறையில் உறுதிப்படுகிறது. அரிசி தனியேயாகும் வரை 'நெல்முளை' உமி தவிட்டை எப்படி அகற்றுவது, முன்னே கூறியது போல! 'கேளாமல் கேட்டல்'--'காணாமற் காணல்'— 'அறியாமல் அறிதல்' — உணர்ச்சி மேலோர்' 'உன்னாமல் உன்னுதல்' என்பன புரிந்து கொண்டால் தானே ஆறாம் திருமுறை "கருதாமல் கருதும் ஓர் கருத்தினுட் கருத்தே" புரிய வாய்ப்பிருக்கும்!

Koviloor Digital Library

அருள் நூல்களைப் பயிலும்போது முதலிலிருந்து ஈறு வரை காய்தல் உவத்தலின்றி முன்னமே நாம் சேர்த்து வைத்திருக்கிற (ஸ்டோர் செய்தவை) அறிவை எல்லாம் அறவே விட்டு விட்டு அவ்வப்பொழுது தோன்றும் பொருளோடு புதுமையாக அப்படிப் போய்க்கொண்டே யிருந்தால் நம் தகுதிக்குரிய பாடல்கள் நம்மையறியாமலே நம்மை ஈர்க்கும்! அப்படி ஈர்ப்பதில் திளைத்துத் திளைத்து மேலும் படித்துச் சென்றோமானால் தகுதிக்குத் தக அது ஈர்த்துக்கொண்டு போகும். அவ்வப்போது முன் தெரிந்த பொருள்களும் மாறிப் பாடல் மட்டும் மாறாமலே இருந்து வரும்! நம் தகுதியும் தெள்ளத் தெரியும்!

அப்படிக்கில்லாது ''அவர்கள் பெரியவர்கள்' அவர்கள் ஆறாம் திருமுறையைத் தவிர வேறு தீண்டுவதே இல்லை. நாமும் அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்று ஏன் பாசாங்கு செய்ய வேண்டும்? அப்பாசாங்கு என்ன ஆகும்? ''கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி'' மாதிரியை விட வேறு என்ன ஆக முடியும்? நாடகத்தால் நடிக்காமல் ''உள்ளதனை உள்ளபடி யுணர்ந்தால்'' தானே பேதநிலை மாறும்!.

“உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்
உறவு கலவாமை வேண்டும்''

என்ற பாடல் எந்தத் திருமுறை என்று சங்கத்தாரல்லாத வரும் கூடச் சொல்வரே! இது சாதாரண நிலையா இந்த நிலை கைகூடினால் ஆறாம் திருமுறை பார்க்காமலே அநுபவம் கிட்டிவிடுமே. ஒருவருடைய பசியின் வீக்கத் தாழ்வு, உணவின் வகை அவரவர்களே தேர்ந்தெடுக்க வேண்டுமேயல்லாது, பகட்டுவதால் (காப்பி அடிப்பதால்)

Koviloor Digital Library

பசியும் நீங்காது, உடலும் செம்மைப் படாது. இது சொல்லி விளக்கியா ஆதல் வேண்டும்!

சமய மதங்களில் வரும் சொற்களில் நமக்குக் காழ்ப்பு இருக்கவே கூடாது! அச்சொல் உணர்த்தும் பொருளில் தான் நாம் சிந்தனைத் தேரை ஓட்ட வேண்டும்! ஆறாம் திரு முறை சமயம் கடந்ததென்று சொல்லும் போது எல்லாரும் (சங்கத்தார்) பாடிவரும் "தங்கமே யனையார் கூடிய" என்ற திருப்பாடலில் வரும் "கோவில்" என்ற சமயச் சொல்லுக்குச் சமய நூல் பொருளான "கோவிலை"யே கொள்ளலாமா? அவ்விடத்துச் "சபை" என்றுதான் நாம் கொள்ளல் பொருத்தம். வடலூரில் ஞானசபைதானே அன்றி ஞானக்கோவில் அல்ல! அல்லவா? இப்படி எவ்வளவோ காணலாம்!

"தடித்தவோர் மகனை" என்ற ஆறாம் திருமுறைப் பாடலில் "பொடித் திருமேனி அம்பலக் கூத்தன்" என்று பாடியருளுகிறார்கள். அப்படியானால் திருநீற்றின் அவசியத்தைப் பெருமான் இங்குக் கூறுகிறார்கள் என்று கொண்டால் ஆறாம் திருமுறையின் நிலை என்னாகும்? அடிக்கடி பயில வாய்ப்பில்லாத "தந்தையாய் என்னுடைய தாயாய்" என்று தொடங்கும் முதல் திருமுறையின் நிலை என்னாகும்? ஆறாம் திருமுறைப் பாடலில் (3901) "உமையாள் மணவாளன்" என்று பாடியிருக்கிறார்கள். அப்படியானால் கல்யாண கோலத்துடனுள்ள மூர்த்திகளை இந்த இடத்தில் கொள்ளலாமா? அருளாளர்கள் திருவாக்கை நாம் முடிவுகட்டாமல் உள்ள பொருள் தெரிவதற்குத் தவம் கிடத்தல் தகைமையாகும். இப்படிப் பாடல்களை ஒதுக்கிப் பார்க்கும் 6ஆம் திருமுறை சன்மார்க்கிகளுமிருப்பது கண்கூடு.

விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்வோமாக!

Koviloor Digital Library

எனவே இதுகாறும் கூறியவாற்றால் முதற்றிருமுறை முதல் ஆறாம் திருமுறை வரையும் உரைநடைப் பகுதி முற்றிலும் ஒன்றுகூட விருப்பு வெறுப்பின்றி விடாது பயிலுதல் சால்பு. அவரவர்களுக்கு இயல்பாயீர்ப்பதில் நிலைப்பது இயல்பு. ஒரு லட்டில் இனிப்புள்ள பாகம் எது எனப் பிரித்துப் பார்க்க முயல்வது நன்மதியாகாது. இறையருள் வல்லபம்; நம் ஆற்றாமை; சமயமதச் சடங்கின் உள்ளீடு புரியாமல் ஆச்சார தர்மப்பிடிப்பே லட்சியம் எனக் கொள்வோர் சார்பால் வரும் தீமையால் அன்புநெறி காண முடியாமை இவை உணர்ந்து ''கருணை ஒன்றே வடிவாகும்'' நிலைதான் அருட்பாவின் உள்ளீடு. இவற்றின் தொடர்பில்லாத ஒருசீர், ஓர் உரைநடை கூட திருவருட்பாவில் இல்லை. ''எல்கேஜி; யுகேஜி'' படித்து முடித்து விட்டதற்காக அவ்வகுப்புகளை எள்ளி நகையாடுதல் அறியாமை! இப்படிச் சொல்வதால் ''எல்கேஜி, யுகேஜி''யே திரும்பந் திரும்பப் படிக்க வேண்டுமென்று பொருளே இல்லை. அல்லவா!

சாறு வேண்டிய பொழில் வடலரசுப் பெரும் விழாக்களிலேயும் சன்மார்க்கச் சங்க விழாக்களிலேயும் திருமுறைகள் பற்றிய சொற்பொழிவுகளிலே 1, 2, 3, 4, 5, திருமுறைகளைப் பேச இணங்காது என்றும், ஆறாம் திருமுறையானால் மட்டும் பேசமுடியும், அவ்வைந்தை ஏன் புரட்டுகிறீர்கள் என்று சொல்லும் சொற்களைக் கேட்கும் போது, வள்ளற் பெருமானே! எளியோமைக் காத்தருள்க! என்று வேண்டுவதைத் தவிர வேறு புலனாவதில்லையே. என்று ஓலமிடுவதைத் தவிர என்ன இருக்கிறது!

1 முதல் 5 திருமுறைகளில் எவ்வளவோ 6 ஆம் திருமுறையின் அடிப்படைகள் இருக்கின்றன! அவற்றை எடுத்துக் காட்டி 6 ஆம் திருமுறையையே விரிவுரை செய்து அமைதிபெற வழிவகை கொள்ளை கொள்ளையாக

Koviloor Digital Library

இருக்கும் போது அவற்றைத் தீண்டமாட்டேன் எனச் சொல்வது சால்பு ஆகாது. வள்ளற்பெருமான் சமயநெறிக் கடவுளர்களின் பெயர்களைக் கொண்டு மகுடம் சூட்டிப் பாடியிருக்கிறார்களேயன்றி 5 திருமுறையிலும் ஜாதி சமய நெறி ஆச்சார அநுட்டானங்களை வற்புறுத்தவே இல்லை. தொடக்கமிருந்து ஈறுவரை இவற்றை வன்மையாகவே கண்டித்திருப்பது கண்கூடு. சமயங் கடந்த க்ண்கொண்டு பார்த்தால்தான் 5 திருமுறைகளும் விள்ங்கும். சமய ஆச்சார சங்கற்பவிகற்பக் கண்கொண்டு பார்த்தால் 6ஆம் திருமுறையும் விளங்காது. இவ்வளவு புரிந்து கொள்ளாமல் சொற்போரில் ஈடுபடுகிறோம்! போர் என்று முடியுமோ புண்ணியா புரியவைத் தருள்வாயாக!

ஒரு செய்யுளைப் பார்க்கும்போது செய்யுள் வேறு, பார்ப்பவன் வேறு என்ற நிலையிலேயே நாம் பார்ப்பதால் தான் இத்தகைய சர்ச்சைகள் துளிர்விடுகிறது. பார்ப் போனில்லாமல் பார்த்தல் மட்டுமிருந்தால் "தள்ளுவது கொள்ளுவது" என்ற இரண்டு நிலைக்கே இடமில்லை. படிக்கும் பாடல்களுக்கும் நமக்கும் இடைவெளியில்லாமல் பாடல் மாத்திரமயமேயானால் எத்தடையுமே அங்கில்லை. எனவே 5 திருமுறைகளிலும் சமயநெறிகளை வற்புறுத்தும் பாடல்கள்தாம் இவை என்று, சிந்திப்போர்களுக்குத் தோன்றினால் அப்பாடல்களை அறவே அவர்கள் கைவிட்டு விடுவதில் எவ்வித மறுப்பே இல்லை. பற்பல இடங்களில் அம்மாதிரி நிலை காட்சியளவில் தோன்றினாலும் பெருமானாருடைய "பொதுமையுணர்வு" அணுவளவு கூட மாறியநிலை எங்கும் பார்க்க முடியாது எனக் கூறி,

"பொது உணர்வு உணரும் போதலால் பிரித்தே
அதுவெனில் தோன்றா அருட்பெருஞ் ஜோதி".

என்ற (திரு அகவல்121/2) அருள்வாக்குடன்இக்கட்டுரையை நிறைவு செய்வோமாக!

Koviloor Digital Library

11. சந்தோடச் சந்தோடல்

திருவருட் பிரகாச வள்ளற்பெருந்தகை ஆறந்தங்களையும் தட்டிப் பார்த்து, சுண்டிப் பார்த்து, அதன் உள்ளீடுகளையும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து அருளிய பின்னர் சித்தர் கணங்களைப்பற்றி ஆய்வுசெயத் தொடங்கியருளும்போது இவர்கள் ஆறந்த வகைகளிலும் எதிலும் உள்ளடங்காத நிலையில் அமைகிறார்கள். நம் பெருமானார் சாகாக்கலையை உறுதிப்படுத்தத் திரு அவதாரம் பூண்டருளியவர். அருட் ஜோதி ஆண்டவரை மணம்புரிந்தருளிய தெய்வமாதரசியாரான திருவே கருவாகச் சூல் கொண்டு பிறந்தருளியவர்கள் அடிகள்

சித்தர் கணங்களின் சமாதியிடங்கள் பல இப்பூமியில் சுட்டப்பெறுகின்றன. ஒவ்வோர் சித்தரின் வரலாறு எங்கோ ஓர் இடம் சமாதியும் பிற இடத்திலும் எழுந்ததாயும், சிலருக்கு ஓரிடத்துக்கு மேலும் சமாதியும் காணப் பெறுகிறது. சித்துத் தன்மைகளுக்கு அளவேது? நம் பெருமானாரும் வடலூரிலிருக்கும்போதே கொடிமரம் எடுக்கும் வேற்றூரில் மரத்தின்மேல் உலவியதாகவும், தில்லைத் தெரிசனத்தையும் வடலூர் பெருவெளியில் காட்டியதாகவும் இன்ன பிறவகைகளும் தெரிந்துணரக் கிடக்கின்றன. என்றாலும் இத்துணை வல்லபத்தோடு நின்றருள அமைதிகொண்டதாக இல்லை, ஏன்? என்றும் அழியா "ஒளி ஒலி வான்" வடிவுக்கு வருவிக்கவுற்ற

Koviloor Digital Library

வள்ளல் அன்றோ? அஷ்டகத்தில் உள்ள ஏழாம் பாடலான ''தத்துவம் அனைத்தும்'' எனத் தொடங்கும் பாடலில் சித்தியல் முழுதும் தெரிந்து அவற்றோடு நின்று விடாமல் மேலே செல்கிறார் ஏன்! சிவநில அநுபவிக்க அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் விண்ணப்பித்தருள் கின்றார். என்ன விண்ணப்பம் அது?

''ஆண்டவனே சித்தர்கள்நிலை பெரும்நிலையாக இருக்கிறதே. சந்தோட லகிரியில் மகிழ்ச்சிப் பிரவாகத் தில் உலவுகிறார்களே. ஆறந்தங்களில் உட்பட்டவர்கள் தாமா? சித்தியல் முழுதும் தெரிந்து அவற்றைத் துச்ச மெனத்தள்ளி சுத்தப் பிரணவஞான முத்தேக சித்தி பெற்ற வர்கள்தாமா? சூதாகிய ரகசியம் தெரிந்தேனல்லனே? உங்களுடைய திருவருட்கருணையால் சித்து வகைகளை யும் எளியேனுக்கு அருளியுள்ளீர்களே. இந்தச் சந்தோடச் சித்தர்கள் வகைக்கும் எளியேனுக்கும் ஊடாலே சந்து (பிளவு) உண்டாகி விட்டதே? சாகாக் கல்விக்கும் இந்தச் சித்துடன் அமைந்து விடுவதுக்கும் சந்து கிடக்கிறதே (சந்து—இடைவெளி-Gap), இந்தச் சந்தை ஓடச்செய்ய மாட்டீர்களா? சந்தாகிய பிரிவினை வேற்றுமைதானே, ஒருவரை ஒருவர் புரிய முடியாமலே பிரிவுறச் செய்கிறது? ''ஒருமையுடன்'' என்று இளம் பொழுதிலேயே வேற்றுமை, பிளவு, சந்து, இடைவெளியாம் துண்டிக்கும் உணர்வுஅற ஆன்மநேயம் கற்பித்தருளினீர்களே! இப்போது சித்தர் குழாத்துக்கும் அடியேனுக்கும் உள்ள இரகசியமாம் சூதாம், பிரிவுணர்வை காட்டியருளமாட்டீர்களா? இது தெரியாமல்—இந்தப் பிளவு நீங்காமல்''சாகாக்கலைப் பொருள் விளக்கம் கிடைக்குமா?'' என்றெல்லாம் வேண்டிய தற்கிணங்க ஆண்டவன் அருள் செய்ததாக ஒருதிருவருட்பா

Koviloor Digital Library

வின் மூலம் தெரிய நாம் புண்ணியம் செய்தவர்களா கின்றோம். அந்தப் பாடல் எது?

"அந்தோ ஈததிசயம் ஈததிசயம் என்புகல்வேன்
அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே
இந்தோங்கு சடைமணிநின் அடிமுடியும் காட்டி
இதுகாட்டி அதுகாட்டி என்னிலையும் காட்டிச்
சந்தோட சித்தர்கள்தம் தனிச்சூதும் காட்டிச்
சாகாத நிலைகாட்டி சகஜநிலை காட்டி
வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்தஇடம் காட்டி
மகிழ்வித்தாய் நின் அருளின் வண்மையைஎவர்க்
குளதே!"

[திருமுறை 4, அன்பு மாலை—10(பா.பதிப்பு)]

திருப்பாடலின் ஓட்டத்தையும் கருத்தையும் கவர்ச்சி யையும் குதூகலத்தையும் ஒன்றாக்கிக் குழைத்த அருள் நிலையைச் சிந்திப்போம்.

"சித்தர்களின் இரகசியம் ஒருவகைச் சூதுச்சித்திரம், அனைத்து வகை இரகசியங்களை "பிரமரகசியம் பேசி யென் உளத்தே தரமுற விளங்கும் சாந்த சற்குருவே!" என திருஅகவலில் அகவியதன்ன. —(பா. பதிப்பு 524) காட்டி விட்டீர்கள், பிளவு நீங்கிவிட்டது. சந்தை (இடை வெளியை) ஓடச் செய்து விட்டீர்கள்" என்றருள்கிறார். (அடுத்த வீட்டிற்கும் நம் வீட்டிற்கும் நடுவே சந்து போட்டுக்கட்டுவது நாம் தெரிகிறோம்). இந்தச் சந்து தான் இரண்டு வீட்டையும் பிரித்துக் காட்டுகிறது. எதிர் வீட்டிற்கும் நம் வீட்டிற்கும் இடையே தெரு ஓடுகிறது.

Koviloor Digital Library

இந்தத் தெருதான் (இடைவெளி—Space) எதிர்வீட்டு வரிசைகளை நம்வீட்டு வரிசைகளிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. இதுபோன்று அறிவியலிலும் சந்தாம் பிளவுதான் நம்மை வாட்டி வதைக்கிறது. உன்னுடையது என்னுடையது என்ற பிரிவுச்சந்து. இந்தச் சந்து அறத்தான் சந்துபட (பட=பட்டொழிய) வழிபாடு தவம் தியானம் எல்லாம் ஜீவகாருண்ய (உயிர்கருணை) அடிப்படையில் தொடங்குகிறோம். சந்து முழுமையாய் ஒழியாத வரை உண்மை நிலையடைய வாய்ப்பில்லை.

உலகியலில் (சர அசர) அசையும் பொருள், அசையாப் பொருளில் உள்ள உள்ளீட்டுகளையும் அடியேனின் நிலையும் காட்டித், தெரிவதற்கரிய சித்தர்கள் இரகசியத்தையும் காட்டி அனைத்துச் சந்துகளையும் ஒட்டி, (சந்து+ஒட= சந்தோட) ஒழியச்செய்து, உடனடியாக, ''சாகாத நிலை'' காட்டி சகஜமாக அதாவது சிக்கலற அநுபவ வழக்கமேற்பட காட்டியருளிய பேரதிசயத்தில் திளைக்கின்றேன். இவ்வதிசயத்தை என்னெனப் புகல்வேன். காற்றை ஒத்த, அமைதியுறாமல் வந்து வந்து ஓடிச் சலிக்கின்ற சலனம் தருகிற ஆட்டமோய்கிலா வஞ்சக மனத்தைக் கரைந்தோடச் செய்து மகிழ்வித்தீர்களே! ஆண்டவனே! என இறும்பூதெய்தி மகிழ்கிறரர்கள்.

சந்தோடிய; பிளவு ஓட்டப்பெற்ற (பிளவு பட்டொழிந்த) அறிவுதான் "அயலறியா அறிவு." அறிவானது அயலாக அந்நியமாக எதையும் அறியாமல் அனைத்தையும் தான் தானாக பார்ப்பது. 'பங்கமோர் அனுவும் பற்றிடா அறிவு' தான் அயலறியா அறிவு, விரிக்கிற் பெருகும்! கொள்ளை கொள்ளையாகச் சான்றுகள் உள

Koviloor Digital Library

இவ்வாறு இந்தப் பாடலைக் கண்ணுறுவதில் ஐயமுறுவோர் குருகுலத்தில் கலந்தருளினால் வந்தனத்துடன் ஏற்று நாம் அனைவரும் வள்ளற்பெருமானின் குருகுலத்தில் மாணவர்களாகிச் சிந்திப்போமாக. அருள் நூல்களுக்கு எம்போன்றார் கரை கண்டுவிட முடியாததென்பது திண்ணம். வரவர பல்லோர் கருத்தும் வெளிவந்தால் சத்விசாரத்துக்குத் துணைபுரியுமென்ற தயவு நோக்கம் கொண்டே இதை வெளியிடுகிறேன். சற்குரு பாதமலர் சரணம். நடுநிலை வளர்ப்போம்,

வாழ்க தயவு! வளர்க ஒருமை!

"குருகுலத்தில் சேர்ந்து குறைகளை நீக்கி
ஒருகுலமாய் வாழ்வோம் உவந்து"

(புதுக்குறள்)

Koviloor Digital Library

12. கொடி விளக்கம்

மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் நம் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய பேருபதேசத்தில் கீழ்க் கண்டவாறு கொடி பற்றிய குறிப்புக் காணப்பெறுகிறது:

"...அக்கொடி இப்போதுதான் கட்டிக் கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில் : நமது நாபி முதல் புருவமத்தி யீறாக ஒரு நாடியிருக்கிறது. அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஒரு சவ்வு தொங்கு கிறது. அதன் அடிப்புறம் வெள்ளைவர்ண, மேற்புறம் மஞ்சள் வர்ணம் ... இக்கொடி நம் அநுபவத்தின் கண் விளங்கும் இவ்வடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளி முகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லார்க்கும் நல்ல அநுபவம் அறிவின்கண் தோன்றும்".

இதில் அடிப்புறம் வெள்ளை வர்ணம், மேற்புறம் மஞ்சள் வர்ணம் என்பதில்தான் நம் சிந்தனை பிறழாமல் நடுநிலை கொள்ள வேண்டும், ஒரு பொருளில் (இங்குக் கொடியில்) அடிப்புறம் மேற்புறம் என்று சொன்னால் நடுப்புறம் என ஒரு பகுதி சொல்லாமலே விளங்குகிறது இப்படி விளங்கும் நடுப்புறத்தைச் சேர்த்தால் அடிப்புறம், நடுப்புறம், மேற்புறம் என மூன்று புறங்கள் (புறங்கள் — பகுதிகள் — இடங்கள்) வருகின்றன. இவை மூன்றும் சம மான புறங்களே (பகுதிகளே) என்று சொல்ல வேண்டு வதில்லை. இயல்பாக சமநிலைப் புறங்களே. இவ்வாறு

Koviloor Digital Library

குறிக்கும்போது மேற்புறம் என ஒரு புறத்தை அறுதியிட்டு மஞ்சள் வர்ணம் என விவகாரத்துக்கு இடமில்லாது சொல்லப் பெற்றிருக்கிறது. எஞ்சிய பாகம் நடுப்புறமும் அடிப்புறமுமேயாகும். இதில் அடிப்புறம் வெள்ளை வர்ணம் எனச் சுட்டப்பெற்றுள்ளது. அவ்வாறாயின் நடுப்புறத்தை எந்த வர்ணத்தில் சேர்ப்பதென்ற வினா எழும்புகிறது. மேற்புறம் என் ஒரு புறத்தைச் சுட்டி முடிந்து விட்டதால் அதன் கீழ் உள்ள புறமெல்லாம் அடிப்புறமாகத்தானே ஆதல் வேண்டும்? அம்முறையில் அந்த இடங்களான எஞ்சிய நடுப்புறத்தையும் அடிப் புறத்துடன் சேர்த்து வெள்ளை வர்ணத்துடன் சேர்க்க வேண்டிய நியாயம் இயல்பாய்க் கிடைக்கிறது. இவ்வாறு சிந்தித்தால் மூன்றில் ஒரு பகுதியான (புறமான) மேற்புறம் மஞ்சளையும், அதன் கீழ் உள்ள மூன்றில் இரண்டான எஞ்சிய அடிப்புறம் (அடிப்பாகம்-அடிப்பகுதி)வெள்ளை எனக்கோடல் பொருத்தமேயன்றோ!

இவ்வாறு ஒருபொருளைப் பொதுவாகக் கொள்ள்ல் (மேல்-நடு-அடி) அதாவது மூன்று பகுதியாகப் பகுப்பது மரபு என்பதும் இதற்கு 'நம் பெருமானாரின் திருவாக்கால்' சான்றுகள் உண்டோ எனின் நிறையக் கிடைத்தருளப் பெறுகின்றோம்:

(1) சற்குருமணி மாலை வரிசையில் 13ஆவது பாடல் "அடியிது முடி இது நடுநிலை இதுமேல் ..." (தொடர்ந்த பாடல் வரிசை-எண் 3967.) எனத் தொடங்குகிறது. இதில் உள்ள அடி என்பது ஒரு பொருளின் அடிப்புறமாகும். முடி என்பது மேற்புறமாகும். நடு என்பது மத்தியப் பகுதியான நடுவே உள்ள புறமா(பகுதி)கும்.

Koviloor Digital Library

(2) இறை திருக்காட்சி தலைப்பு வரிசையில் 22ஆம் திருவருட்பா "அடி, நடு, முடியோர்" (3975) என்று தொடங்குகிறது.

எனவே ஒரு பொருளில் (இங்குக் கொடியில்) அடி, நடு, முடி என்ற மூன்று நிலை சிந்திக்கற்பாலது என்பது தெளிவாம். இவ்வாறு பற்பல துறையில் சான்று பகரச் செய்யுள் பகுதியிலும் உரைநடைப் பகுதியிலும் அநேக இடங்கள் கிடைக்கப் பெறுகின்றன. விரிவஞ்சி இத்துடன் அமைய நேரிடுகிறது.

மேலும், சித்திவளாகத்தில் நம் பெருமானார் தோன்றும் துணையாக அடையாளவண்ணமாக (கட்டிக் கொண்ட) நேரே தம் தெய்வத் திருக்கரங்களால் கட்டிய (ஏற்றி இறக்கும் கொடி அல்ல) கொடியின் வண்ணமே தொன்று தொட்டு அவ்வூர் கிராமவாசிகளால் முன்கட்டப் பெற்றிருந்த கொடிக்குப் பதில் கொடி அமைக்கும்போது முன்னிருந்தபடியே புதுக்கொடி தயாரித்து ஏற்றிக் கட்டப்பெற்றுக் காத்துவரப் பெறுகின்றது கண்கூடு. கொடி ஏற்றுவதாக மற்ற இடங்களைப் போல் ஏற்று கிறார்களே தவிர கொடியில் மாற்றம் செய்யவில்லை. இது கிராமவாசிகள் கையிலிருப்பதால் இங்குக் கொடியில் வண்ண, வர்ண, அமைப்புச் சிறிதேனும் மாறாமலிருந்து வருவதைப் பழமை அகநோக்கோடு நோக்கி அவர் களுக்குத் தோள் கொடுப்பதும் சாலும்! இவர்களிடம் ஆய்வுக்கே இடமில்லை. ஏட்டுப் படிப்பால் புறமிருந்து படித்த எம்போல்வாரிடையே தான் மிஞ்சிய ஆய்வு மூளையைத் துளைக்கின்றது.

ஏட்டு படிப்பின்றி—சந்தைப் படிப்பின்றி— எழுதாத ஏடகத்தே— அநுபவ அருளறிவில் கண்டானந்தித்த நம்

Koviloor Digital Library

பெருமானார் திருவாய் மலர்ந்து சுட்டிக் காட்டிய உண்மை நிலையை உணர "பெருமானே, எம்போன்றவர்களுக்கு அநுபவ அறிவு இன்னும் வரவில்லையே! எல்லார்க்கும் நல்ல அநுபவம் அறிவின்கண் தோன்றும் என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளீர்களே! அந்த அநுபவம் எங்களுக்கு அறிவின்கண் தோன்றச் செய்வதும் தேவரீர் திருக் கருணையால்தான் தோன்றவேண்டும். எம்மனோர் ஏட்டுப் படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றற விட்டகலச் செய்து "விரைந்திரு தருணம் வந்தருள் புரிவீர்களாக" என்று இத்தருணமான ஐப்பசி 7—24-10-1983 இந்நாளிலிருந்து (கொடி கட்டிய நாளிலிருந்து) ஒரு சேரத் தவமிருப்போமாக!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி!

கொடிகள் பற்பல வகைகளில் இப்போது நடைமுறையில் இருந்து வருவதால், எளியேன் கருத்தைப் பலர் சத் விசாரத்தில் கேட்டும் நடைமுறையில் உள்ள சங்கையை மிகைப்படுத்துமோ என அஞ்சி மோனம் சாதித்து வந்ததில், 'வள்ளலார் குருகுல' இதழாசிரியப் பெருந்தகை பன்முறை கேட்டும், கடிதம் எழுதியதால் அடியேன் உள்ளக் கிடக்கையைத் தெரிவிக்க நேர்ந்தது. திருவருள் துணை.

—ஆசிரியர்

Koviloor Digital Library

இந்நூல் முதற்பதிப்பில், கட்டுரைகளில் சங்கைகள் ஏற்படின் தெரிவிக்குமாறு வெளியிட்டிருந்ததில் இந்த மூன்றாண்டு (1983-86) காலத்தில் 'கொடி விளக்கம்' பற்றிய சங்கைகள் மட்டும் எழுப்பப் பெற்று பலதடவைகள் பலருடன் சத்விசாரம்'' நடந்த கலந்துரையாடல் இதன்கீழ் தரப்பெறுகிறது:—

கேள்வி:—

சன்மார்க்கக் கொடியில் கால் பங்கு மஞ்சளும் முக்கால் பங்கு வெள்ளையுமான வண்ணத்தில் உள்ள கொடிதான் முன்னர்கட்டியிருந்தது. அருட்பா உரைநடையில் ''நான் ஆன்மா............கால் பங்கு பொன்மை முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம்............'' என்றிருப்பதால் அவ்வாறு கொண்டிருக்கலாமன்றோ!?

பதில்: –

உங்கள் கேள்வியிலேயே நல்ல விளக்கமிருக்கிறதைச் சிந்திப்போம். ஆன்மாவின் வண்ணமல்லவா? சொல்லப் பெறுகிறது அதை இங்கு கொடியில் வைத்துப் பொருத்துவது பொருத்தமா? ஆன்மாவின் லட்சணமும்; ''ஒரு நாடி நுனியில் ஒரு சவ்வு தொங்குகிறது. அதன் வண்ணம்'' என்று பேசியருளும் போது அதன் லட்சணமும் ஒன்றாகுமா? மிக மிகச் சாதாரணமான செய்தி இது. இரண்டுக்கும் பொருத்தம் பார்க்கத் துணியலாமா? ஆன்மா, கோடி சூரியப்பிரகாச முடையது! இங்கு பேசப் பெறுவது நாடியில் தொங்கும் ஒரு சவ்வின் நிறம் என்னே நம் போக்கு. இதனுடனிருத்தலாமா அல்லது............இன்னும்.........?

கேள்வி:—

போதும், போதும் எப்படியோ மொட்டைதலைக்கும் முழங்காலுக்கும் ஒரு முடிச்சுப் போட எங்காவது

Koviloor Digital Library

'காலும் முக்காலும் என்ற சொற்றொடர் வருகிறதா, சொற்றொடர் வருகிறதா என்ற ஒரே எண்ணத்தில் தேடிய பலன் அப்படிக் கேள்வி கேட்கப் பெற்றது. இது தொடர்பற்றதேதான் என இப்போது தெரிகிறது. ஆனால் புதுசந்தேகம் வந்து விட்டது ஆன்மா இவ்வாறு கால் பங்கு மஞ்சளும் முக்கால்பங்கு வெள்ளையுமாக இருக்கிற தா? ஆன்மாவுக்கு இரண்டு வண்ணமுண்டா?

பதில்: –

அருட்பாவில் செய்யுளையோ, உரைநடையையோ சற்று நிதானித்துப் (வேகங் கொடுத்து) பார்க்க வேண்டும் கொடியைப் பற்றிய நினைப்பையே வைத்துக் கொண்டு இன்னும் சிந்திக்கிறீர்கள். கொடியைச் சிந்திக்கும்போது கொடிமயமாக வேண்டும். ஆன்மாவைச் சிந்திக்கும் போது அம்மயமாகிச் சிந்திக்கவேண்டும். ஒன்றுக்கொன்று ஏன் ஒப்பிடுகிறீர்கள். கொடியில்தான் மேற்புறம், அடிப்புறம் என இடஞ்சுட்டிப் பேசியுள்ளார் பெருமானார். ஆன்ம வண்ணம் சொல்லும் போது அடிப்புறம், மேல்புறம் பற்றிய பேச்சே இல்லை. கால் பங்கு மஞ்சளும், முக்கால் பங்கு வெள்ளையும் கலந்த வண்ணம் என்று தான் உள்ளது. கொடியில்—'கலந்த என்ற சொல்லே இல்லை. அடிப்புறம் மேற்புறம் என்றுதான் உள்ளது.

நாம் ஏன் புறம் என்ற சொல்லையும், கலத்தல் என்ற சொல்லையும் ஒன்றாக்கிக் கலங்கிப்போய் உள்நுழைய முடியாது புறத்தே நின்று விடுகிறோம் அடிப்புறம் மேற் புறம் என்றால் ஒரு பகுதி இடத்தின் அளவுக்குறிப்பு காட்டியாய் விடுகிறது. இப்படிக்கில்லாது—'கலந்த' வண்ணம் என்று (புறமே சுட்டாமல்) சொல்லும் போது நாம்தான் அவசரப்படுகிறோம். சிந்தியுங்கள்.'' மஞ்சளும்

Koviloor Digital Library

வெள்ளையும் கலந்த வண்ண மென்றால் இதில் பாகம் செய்து இடம் பிரிக்க வழியேது! கால்பங்கு மஞ்சள் வண்ணம் (கலர்) உள்ள வர்ணத்தையும் (மஞ்சள் வர்ணக் கேக்கைக்கரைத்து) முக்கால்பங்கு வெள்ளை வர்ணத்தையும் (வெள்ளை வர்ணக்கேக்கைக்கரைத்து) கலந்து கரைத்தால் என்ன வர்ணம் கிடைக்குமோ? அந்த வர்ணம் ஆன்மா என்றுதானே கொள்ளவேண்டும். சொற்களின் மூலத்தை நாமாக ஏன் திருத்துவது? இருப்பதையே புரிந்து கொள்ள முடியவில்லை. இல்லாததை ஏன் வருவிப்பது? (ஒரு டப்பாவில் ¼ பங்கு மஞ்சள் வர்ணத்தையும் ¾ பங்கு வெள்ளை வர்ணத்தையும் போட்டுக் கரைத்து ஒன்றில் பூசினால் என்ன வர்ணம் வருகிறதோ அதுதானே சொல்லுக்குப் பொருள்) ஆன்மாவின் வண்ணம் சுத்த மஞ்சளும் அல்ல, சுத்த வெள்ளையுமல்ல. இந்த பங்கு வீதம் (MIXTURE) கலந்த வண்ணமும் தானே தங்கு தடையின்றித் தெரிகிறதே. உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகிறேன். உதய சூரியனின் வண்ணம் என்ன? ¼ பங்கும் ¾ பங்கும் என்றும் மஞ்சள் வெள்ளை கலந்த நிலையில் தோற்றம் தருகிறதல்லவா? அல்லது அடிப்புறம், மேல்புறம் என்று அளவுப் பகுதி பிரித்து வருகிறதா? ¼ பங்கு ¾ பங்கு பாகம் அறுதியிட்டுக்காட்ட முடியுமா? சுத்த வெள்ளையுமல்ல சுத்த மஞ்சளுமல்ல. ஆனால் மஞ்சளும், வெண்மையும் கலந்த நிறமெனக் கொள்வதுதடையில்லை அல்லவா? உதயசூரியன் ஏற ஏற வெண்மையே முற்றிலுமாகத் தெரிகிறது. தொடக்கம் எப்படி இருந்தது. அப்படிக் கொள்ளுங்கள் உபமான அளவில் இதை எடுத்துக் காட்டுகிறேன் சரிதானா?

கேள்வி: —

நல்ல வேளையாக இப்போதுதான் இவ்விளக்கமே புரிகிறது. இந்த விளக்கமே ஒரு நுண்மைதான் அடிப்புறம்,

Koviloor Digital Library

மேற்புறம் என்று கொடியில் இடம் பிரித்து காட்டியதும், ஆன்மாவில் வர்ணச் சேர்க்கைக்கலப்பின் அளவுகாட்டியது மென்ற விளக்கம். ஆன்ம நிலையை கொடி நிலையில் ஒப்பிட்டுப் பார்க்க எள்ளளவு கூட சம்பந்தமே இல்லை! ஆனால் புதிதாக ஒரு புதுமை எப்படி புகுந்திருக்கிறது என்பது புரிய வில்லை. அதாவது காலும், முக்காலு மில்லை, ஒன்றும் மூன்றுமாகவுமில்லை. சமபாதியாக வெள்ளைபாதி, மஞ்சள் பாதியாக கொடி வந்துவிட்டதே! இது என்ன புதுமை!

மற்றொருவர் பதில்:—

புதுமை ஒன்றுமே இல்லை. ஆதாரம் உள்ளது. ஐயா இதற்கு நான் சொல்கிறேன். கொடிப்பாட்டில் "பாதிக்கொடியே" என்று வருகிறதல்லவா? அதனால் தான் பாதிமஞ்சளும் பாதி வெள்ளையும் கொள்ளப் பட்டது! இதில் ஒரு நியாயமிருக்கிறதே? சான்றில்லாமல் வரமுடியுமா?

முன்னே கேட்டவர்:-

அப்படிச் சொல்லுங்கள் ஒன்று மில்லாமல் ஒன்று வெளிவருமா?

பதில்

ஐயா எல்லாவற்றையும் நன்றாகப் பொறுமையாகச் சிந்திப்போம். கொடிப்பாட்டு என்று சிற்சக்தி துதியைப் பாடி வருவது பொருந்தாது என்று கருதுகிறேன், யாரோ ஒரு வல்லவன் பூட்டிய பூட்டு அல்லது மேலோட்டமாகக் "கொடி" என்று பாடலில் வந்தவுடனே அதைப்பாட அதைத்தொடர்ந்து, தொடர்ந்து பின் வந்தோர்களாகிய நாம் பின்பற்றி விட்டோம். கண்மூடித் தனமாக!

Koviloor Digital Library

இப்படிக் கண்மூடித்தனமெனச் சொல்வதற்கு வருந்தாதீர்கள். அடியேன் கண்ணை நீங்கள் திறந்து விட்டாலும் உங்கள் காலில் விழ்ந்து ஏற்கிறேன். பொருத்தமாக மட்டும் இருக்க வேண்டும் நமது அருள் தந்தை பிரான் திரு அவதாரம் செய்து அறிவுக்கண்ணை திறந்து விட்டப்பிறகும் கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூட வேண்டாமா? கொடிப்பாட்டைச் சாதாரண மாகவே சிந்திப்போம். ஆழ்ந்த ஆய்வு ஒன்றும் இதற்குத் தேவை யில்லை. சிற்சக்திதுதி என்று மகுடமிட்ட தலைப்பில் (கொடிப்பாடல் என்ற அச்சே இல்லை) 49. தடவை கொடியே, கொடியே என்று வருகிறது. ஒரு தடவை யாவது கொடியின் வண்ணமோ அடிப்புறம் மேற்புற மென்று கூறப்படவில்லை. ஆனால் என்ன கூறுகிறது. நீங்கள் சொல்லும் ''பாதிக் கொடியே'' என்ற பகுதி

"சோதியுருப் பாதிக் கொடியே''

என்றுள்ளது. ''சோதியுரு'' என்ற சொல்லை விட்டு விட்டீர்கள். ''சைவர்கள் சாப்பிடுமிடம்'' என்று ஒரு ''போர்டு'' தொங்கியது. சைவர்—கள்—சாப்பிடுமிடம் என்று படிக்கலாமா? அல்லது ''சைவர்'' என்ற சொல்லையே விட்டுவிடலாமா? சோதியுருப்பாதிக் கொடியே'' என்று சோதிக்காமல் சொற்றொடர் பிரிக்கா மலல்லவா படிக்க வேண்டும் சோதியுருவில் பாதியாக யிருப்பது யார்? எது? அதற்கு விளக்கமே அடுத்த சொல்லில் 'சோதி வலப்பாகக் கொடியே' என்று காண் கிறோமே! சோதி வலப்பாகமிருப்பது எது அல்லது யார்? நாடியில் தொங்கும்-சவ்வா? ஆத்திரம் கொள்ளாமல் நம் பெருமானை நடுவிருத்திச் சிந்திப் பேமாக! இதற்கு முந்திய விளியில் ஆநந்த சொரூபக் கொடியே' என்று

Koviloor Digital Library

சொல்லியருளுவர், ஆநந்த சொரூபம் அநுபவச் சொரூபமல்லவா? அது இறைத்தன்மை அல்லவா. அதைத் தானே சோதி, அருட்ஜோதி, அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை என்கிறார்கள் தனிப்பெருங்கருணை என்று பெயர் பெறுகிறது. அந்தச் சோதியும் அல்லது இந்தக் கருணையும் வேறுபொருளல்ல. ஆற்றல் வெளிப்படும் போதுள்ள நிலைக்குப் பெயர்தான் இது (சக்தி) வேறு பேதம் கற்பிப்பது பொருத்தமல்ல.

கருணையை தாய்மைக்கு ஒப்பிடுவது பண்டையோர் மரபு அனுபவ மரபு இலக்கிய மரபு, ஆனால் தந்தையி லிருந்து மாறுபட்டவளா தாய்! தந்தையின்றி தாய்க் கருணைவருமா? தந்தையின் கருவில் வளராமல் தாயின் கருவிலேமட்டும் கரு வளர்ந்ததா? இதை உறுதிப்படுத்த அடுத்த சொற்றொடர்'' எனையீன்ற ஆதிக்கொடியே' என்கிறார்கள் ஈன்றது யார்? ஈன்ற மூலம் எது, ஆண்ட வனாரின் நல்லபிள்ளை ஒரேபிள்ளை என்று உலகவரெல் லாம் பேசுமாறு என்னையீன்ற தந்தையே தாயே என்று பெருமானே பேசுகிறார்களே, உடம்பிலிருந்து புறச் செயலில் ஆற்றல் வெளிப்படும்போது வலம் இடமான இரண்டு பாகத்தில் முந்துவது வலப்பாகம் தானே? வலப்பாகச் செய்லுக்கு இடப்பாகச்செயல் என்றுமே ஆற்றல் குறைந்ததுதான் இது வெல்லாம் சாதாரண அனுபவம்தானே, அடியேன் புரியாத அநுபவ்ம் பேச வில்லை சிக்கலான நுண்மைக் கெல்லாம் போகவில்லை. பேசவில்லை. நீங்கள் கேள்வி கேட்காமலிருந்தும் வலம் இடம் பக்கம்பற்றிய கேள்வியை வலிந்தே எழுப்பிக் கொண்டு பதில் தரப்பெறுகிறது. உரைநடைப்பகுதி 'சத்தியும் சிவமும்' என்ற தலைப்பை கவனிப்போம். .... ''வலது பாகம் சக்தியாகவும் இடது பாகம்

Koviloor Digital Library

சிவமாகவுமிருப்பது அநுபவம்'' என்று பெருமான் அருளுகிறார்கள் இதைவிட என்ன சொல்ல வேண்டும். இவ்வாறு தெள்ளத்தெளிய உள்ளங்கை நெல்லிக்கனியாக ''வலப்பாகம்'' சொல்வதால் 'வலப்பாகக் கொடியே'. என்று தாயை விளித்து அருளுகிறார்கள் பாடலில் கொடி எனக்கொள்ளும் சிற்சக்திநுதி முழுமையுமே தாயின் விளிகளே! தாய்வேறு தந்தைவேறு எனப்பிரிப்பது அறியாமை! இதைக் கொண்டுபோய் கொடியில் சேர்ந்து பேசுவதும் செயற்படுவதும் எவ்வளவு அறியாமை.

49 சங்கப்புலவர்களிலிருந்து சங்கத் தமிழ் காத்ததன்ன சிற்சக்தியை 49 முறை அழைத்து தாய்மையின் அருளாற்றலைக் கொடியே, கொடியே (தாயே, தாயே) என்று விளித்து அழைக்கும் போது இதில்போய் கொடிப் பாட்டு என்று பாட்டுக்குப் பாட்டுப் பாடிப் பாடி கற்பூரம். காட்டுவதும் ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும் கொடியை கீழே இறக்கி பின்பு ஏற்றுவதுமாக இருப்பது என்ன அரசியல் கொடியா இது மங்கலத்தில் ஏற்றியும் அமங் கலத்தில் (மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் போலிருக்கிறதே!) இறக்கியும் என்றமரபு கூட அரசியல் போல வந்துவிடும் இந்தக் கொடிக்கு பாட வேண்டுமென்றால் பெருமான் பாடாமலா விடுவார்கள் "கொடி விண்ணப்பம்" என்ற தலைப்பில் இரண்டாவது திருமுறையில் ஒரு பதிகமே பாடியுள்ளார்கள் அதில் ''தூய மால்விடைதுவசத்தினீரே'' எனப்பல முறைசொல்லியருளுவர் துவசம் என்றால் கோவில்களில் கொடி ஏற்றுவதை ''துவசாரோகணம்'' என்று கேள்விப் படுகிறோமல்லவா? இப்படி இருக்கும் போது சன்மார்க்க கொடிக்குப்பாட நினைத்திருந்தால் தெள்ளத் தெளிய பாடியிருக்க மாட்டார்களா! பாடாத தாலோ அல்லது பாடி நமக்குக் கிடைக்காததாலோ நாம் இப்படி மாறாட்டமாவது சரியா?

Koviloor Digital Library

தாய் ஈன்றாளா! அல்லது ஈன்ற பின் அநுபவத்தில் தெரியும் வண்ணச் சவ்வுக் கொடி ஈன்றதா? சக்தி என்பது ஆற்றல் ஆற்றல் என்பது அருள்: சிவம் வெளிப்படுவது ஆற்றல் அந்த ஆற்றலே சக்தி தனிப்பெருங்கருணை. அருளது சக்தியாகும் அரன்றனக்கு என்பது முதுமொழி

கேள்வி:

இவ்வளவு ஆதாரமிருக்கும்போது தரும சாலையில் பாதிக்கொடி இப்போது எப்படிவந்தது?

மற்றொருவர் நகவல்:

ஐயா, அதை ஏன் கேட்டீர்கள் 3 ஆண்டுகளாகத்தான் இந்தக் கொடிபற்றிய திருக்கோலம் பாதிபாதி வந்தவுடன் தான் விழிப்பு வந்தது சன்மார்க்கத்தாருக்கு. இதற்கு முன் இப்போது சொல்கிறபடியே ஒருபாகம் மஞ்சள் இரு பாகம் வெள்ளையிருந்து வந்திருக்க முடியும். அல்லது அது மருவி காலும் முக்காலுமாக (ஒருபாகம் மஞ்சள் மூன்று பாகம் வெள்ளை) வந்திருக்கலாம் இந்த வித்தியாசம் பொது மக்கள் பார்வைக்கு வந்திருக்காது. அவ்வளவு கூர்ந்து தோற்றம் கவனிக்கக் காரணமில்லை. இப்போது பாதி மஞ்சள் பாதி வெள்ளை என்று வந்து விட்டதால் தான் பளிச்சென்று எடுத்துக் காட்டுகிறது. பாதிக் கொடி ஏற்றியவுடன் கூச்சல் கிளம்பியது அச்சமயம் ஐயா சொன்னார்கள்-“இது போன்றது பொருந்தாது” என்று ஆனால் அதற்கு கூட்டத்தில் ஏகக் கூச்சல் வந்தது. ஐயாவை அதட்டினார்கள் ஐயா விட்டு விட்டார்கள். “நமக்கு ஏன் வம்பு கிளர்ச்சி வேண்டாம்” வரும்போது வரட்டும் என்று ஒதுங்கி விட்டார்கள். அப்பால் வள்ளலார் குருகுலம் பத்திரிக்கை கண்காணிப்பாளர் திரு சுந்தரராசர் B.E.

Koviloor Digital Library

வற்புறுத்தியதற்காக 1983ல் வெளியிட்டு விட்டார்கள் முதற்பதிப்பில் ஆனால் கிளர்ச்சி செய்ய விருப்பமில்லை. உடனடியாகக் கிளர்ச்சிக்குக் கிளம்பிய ஒரு சாராரையும தடுத்தார்கள்.

மேலுமொருவர்:

இந்தப் பாதிக் கொடியும் நீடித்து பறப்பதில்லை ஐயா சுவாமிகள் பிறந்த நாளிலிருந்து பாதி மஞ்சள் பாதி வெள்ளை கொடி பறக்கும். அப்பால் தை பூசத்தில் ஒரு பாகம் மஞ்சள் இரண்டு பாகம் வெள்ளையுமுள்ள கொடி பழமை போல் பரக்கும். எனவே இரண்டு வகை கொடிகள் பரந்து வருகின்றன.

வேறொருவர் கேள்வி:

எப்படி ஒரு நிறுவனத்தில் இரண்டு வகை கொடி?

மற்றொருவர் பதில்:

கொடிகள் தெய்வநிலைய நிறுவனத்தார்களுடையதல்ல. கொடி உபயதார்கள் தனி நபர்கள். ஒரு உபயதாரர் பாதிக் கொடியாக மாறிவிட்டார். மற்றொருவர் மாறாமல் பழமையாகவே · இருக்கிறார். அவ்வளவுதான். கொடுத்த கொடியை தெய்வநிலையப்பூசகர் ஏற்றுகிறார்.

வேறொருவர்

என்ன ஐயா இப்படி ஒருநிலை! ஏன் ஐயா விவகாரத்தைக் கிளப்புகிறீர்கள். பலர் மூடுங்கள் கடையை என்று சொல்லி

அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
எனமுழங்கினர்.

Koviloor Digital Library

பின்னர் எழுந்த கேள்வி

வடலூர் நிலமைதான் இப்படியிருக்கிறது மேட்டுக்குப் பத்தில் எப்படி இருக்கிறது.

பதில்

இதுபற்றித்தான் ஏற்கனவே உள்ள அடியேன் குறிப்பில் அதுவும் இந்த நூலில் விளக்கம் யிருக்கிறதே.

அங்கு பழமையே நடைபெற்று வருகிறது. ஒருபாகம் மஞ்சள் இருபாகம் வெள்ளை. இங்கு கொடிகொடுப்பதும் ஏற்றுவதும் கிராமவாசிகளே யாதலால் மாற்ற மில்லை.

கேள்வி

''அரசியல் கொடிபோல்'' என்று சொன்னீர்களே ஆரம்பத்தில் அதில் என்னவோ கருத்துகள் உள்ளடங்கிக் கிடக்கிறதே அதன் விபரம் சொல்லலாமா.

பதில்

என்னுவதைச் சொல்லத்தடையேயில்லை ஏற்றுக் கொள்ளவேண்டு மென்ற கட்டாயமுமில்லை என்னுவதை யும்; நடைமுறைகளையும் சொல்லாமல் உண்மை எப்படிக்கான முடியும்! இது உத்சவக் கொடி அல்ல. ஒரு முறை நம்கொடி ஏற்றி விட்டால் அது பழமையாகி விட்ட பிறகு இன்னொரு புதுக் கொடியை அவ்விடத்தில் வைத்துக் கட்டி விட்டு முன்னையக் கொடியை களைய வேண்டும். கட்டியது கட்டியது தான், பின்னர் ஏன் ஏற்ற, இறக்கம் ஒருமுறைகட்டியது கட்டியதேதான் இது சமயக் கொடியு

Koviloor Digital Library

மல்ல அரசியல் கொடியு மல்ல அந்தக்கொடிகளுக்குத் தான் ஏற்ற இறக்கங்கள்!. நாம் நம்கொடியை நீதிக் கொடியாக நினைத்தால் உலகுகட்டி ஆளும் கொடியாக நினைத்தால் அதற்கு ஏற்ற இறக்கம் செய்வோமா!

பலர்—என்னதான் வழி?

பதில்— அருட்பெருஞ்சோதி சொல்லி அமைதியடைவோம்!

ஒருவனே ஒப்பில் ஒளிவடிவ எந்தை
பெருமானே! எம்மைநிதம் பேணும்—திருவோங்கு
புண்ணியத்தின் புண்ணியமே! பொன்னான்மநேயத்தை
தன்னார்ந்து தாதா தழைத்து.

Koviloor Digital Library

13. மணிமாடம் திறப்புவிழா

(31-1-1980 புனித வியாழன்)

திருவருட்பா முழக்கிக் கொண்டு திருக்கூட்டம் சத்திய தருமச்சாலையிலிருந்து புறப்பட்டு காலை சரியாக 8 மணிக்கு மணிமாடத்தைச் சேர்ந்தது. அமைதி நிலவியது. திறப்பாளர் குங்கிலியம் பழ. சண்முகனார் அருட்பெருஞ் ஜோதி சொல்லித் தாமே இயற்றிய;

"மின்னுருவச் சுடர் வண்ண மேனியான் காண்
மிகுந்த ஞான வொளி பரப்பினான் காண்
என்னுருவம் உன்னுருவம் என்ற பேதம்
இல்லாமை கண்ட எங்கள் இறையோன் தான் காண்
மன்னுருவ உயிர் அனைத்தும் நன்னுள் வாழும்
மண்ணாதி விண்ணவர்க்கும் வள்ளல் தான் காண்
பொன்னுருவ முத்தேகப் பளித[1] வாடை
பொலிந்து வரும் வடற்பதியின் புனிதன் தானே!"

என்ற பாடலைப் பாடி வள்ளற் பெருமானைச் சென்னியாரக் கைகள் அஞ்சலி கூப்பித் தொழுது ஏத்தி ''மணிக்கதவம் திறவாயோ'' என்ற திருவருட்பாவைப் பாடி, மணி மாடத்தைத் திறந்து (மணிமாட வாயிலில் தொங்க விடப்பட்டிருந்த வெண்மைத் திரையைத் தம்மிரு கைகளாலும் தள்ளி விட) உள்ளே திருக்கூட்டத்துடன் பய பக்தியாய் அனைவரும் நுழைந்தார்கள்.

---

1 பளிதம் – பச்சை கற்பூரம்

Koviloor Digital Library

உள்ளே அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்த மேடையில் உள்ள அகல் விளக்கு ஜோதியை யடைந்து அனைவரும் அமர, திறப்பாளர் ''வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும் மாதவம் பன்னாட் புரிந்து'' ''மணிமாட நடுவே'' என்ற திருப்பாடலைப் பாடி அந்தப் பாடலின் நடுவே வரும் ''பளிக் கறையினூடே'' என்ற திருவாக்குக்குச் சான்றாக மணி மாடம் உள்ளே பளிங்குக் கல்லில் பதித்தெழுதியிருக்கும் ''நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து'' என்ற பாடலைச் சுட்டிக் காட்டிப் பொருத்திப் பேசினார்கள், மேலும் பேசுகையில் வள்ளற் பெருமான் திருவருளுக்கு வேறு எங்கும் ஆராய்ச்சி செய்ய வேண்டா மென்றும், சுத்த சன்மார்க்கத் திரு. துறவியாரவர்களே சான்று என்றும், வள்ளற் பெருமான் ஒருவருக்கே தாலி கட்டிய கற்புடைய தலைவி துறவியார் இவர்கள் என்றும், செல்வ வாசனை, கல்வி வாசனை துளியளவு கூட இல்லாத இவர்கள் மணிமாடம் கண்டதும், ''அருட்சுடர்'' இதழ் மலர்வித்து வருவதும், புலால் உண்ணாத தொழிலாளர்களைக் கொண்டு கண்காட்சி சாலை செய்வித்து வருவதும், கொள்கை உறுதியைக்காட்டித் திருவருளை உறுதிப்படுத்துகிறதென்றும், நாம் பல தெய்வங்களுக்கு வாழ்க்கைப்பட்டு வந்ததால் திருவருள் தாமதப்படுகிறதென்றும், இந்த நற்பணியின் புண்ணிய வசத்தாலும் வந்திருந்த சன்மார்க்கிகளின் ஆசியாலும் ஈறாக வான் வடிவ வள்ளலாரின் பேரருட் கருணையாலும் சுத்த சன்மார்க்கச் செந்நெறி உயிர், உடல் இரண்டிலும் பேதமின்றி நீக்கமற கலந்து இரண்டற்று ஒன்றாகி ''பிரிவுற் றறியாப் பேரருள்'' வசத்ததாக ஆக வேண்டு மென்றும் வேண்டிக் கொண்டது சபையை ஈர்த்தது.

இம் மணிமாடம் கட்டத் தொடங்கி 7 ஆண்டுடன் நிறைவெய்தின என்பதற்கு, ஏழு என்ற எண் ஒரு சிறப்பு

Koviloor Digital Library

என் என்றும்; நாள்கள் 7, மேகங்கள் 7, தலைமுறை-7, (மூவேழ் சுற்றமும்-திருவாசகம்) பூலோக புவர்லோக, சொர்க்கலோக வகைகள் 7, கடல்கள் 7, ஒலி (சுரபேதம்) வகை 7, ஒளி வண்ணம் (கலர்) 7 வள்ளல்கள் 7 கண்டங்கள் 7 என்று விரித்துக் கூறி ஈற்றில் சுருக்கமாக வள்ளற் பெருமான் திருக் கரங்களால் அமைந்த திரைகளின் குறிப்பு-7 என்றும் "ஏழியல் மாடம் இசையுற வைத்தான் என்றும்" என்ற வரிகளை "வாழி மாமணிமன்றில் இறைவன்" என்ற திருவருட்பாவிலிருந்தும் "விண்ணிடத்தே முதன் முப்பூ" என்று தொடங்கும் திருவருட்பாவில் "பூ" வகைகள் கூறி அப்பாடலின் கூட்டுத்தொகை "பூ" -7, என்பதையும் மேட்டுக்குப்பத்தில் கொடி கட்டிய மாதம் 7வது மாதமான அற்பிசி என்றும் தேதி ஏழு என்றும் வலியுறுத்திச் சுட்டிக் காட்டி-1980 ஆம் ஆண்டு வியாழனில் கூடிய தைப் பூசத்தில் திறக்கப் பெற்ற நிலையில் பிறவிவகை ஏழையும் கடந்து எட்டாவது ஆன "அ"கர நிலை. அகர முதல எழுத்தின் தொடராம் ஆதி பகவன் முதற்றே உலகு என்றதில் உலகில் உள்ள உகர நிலைச் சிறப்பில் உணர்கின்றோம் என்றும் பேசினார்கள். தருமச்சாலை தொடங்கியதும், சங்கம் தொடங்கியதும், ஞானசபையில் ஆதி முதல் ஜோதி காட்டியதும், திரு அகவல் எழுதியதும் அனைத்தும் வியாழக்கிழமையே என்பதைச் சுட்டிக்காட்டும்போது சபை குதூகலித்து ஆரவாரம் மிகுந்திருந்தது.

மணிமாடம் கவர்ச்சிகரமாய் அமைதி தந்து கொண்டிருப்பதாகவும், புத்தகயா, சாரநாத், இராமகிருஷ்ணா மடம்-பேலூர், டேராடுன்-ஆனந்தமயி ஆஸ்ரமத்தில் உள்ள அமைதி நிலவுகிறது என்றும், துறவியாரவர்கட்குப் பக்கபலமாய் வாய்ந்தவர்களான உதயேந்திரம் (கோவிந்தசாமி) ஐயா முதலானோர்கள் அடக்கமாகத்

Koviloor Digital Library

தொண்டு ஒன்றே குறி எனச் செயல்பட்டு வருவது மிகவும் போற்றத்தக்கது என்றும், திருவருள் கை கூட்டுவதால்தான் துறவியார் முடைகள் அவ்வப்போது கதிரவன் ஒளியிற் கடும்பனி எனப் பறக்கிறது என்றும்,

"அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோடு
ஐந்துசால் பூன்றிய தூண்."

—(திருக்குறள்-983)

என்ற திருவள்ளுவத்துக்கு இலக்காகத் துறவியார் திருக் கூட்டம், அமைந்தது, வள்ளற் பெருமான் திருநோக்கே என்றார்கள்.

சன்மார்க்கிகளுக்குள் ஒற்றுமை வளரத் திருவருட் பிரகாச வள்ளலார் இன்னும் திரு நோக்கம் செய்ய வில்லை என்றும், அரசாங்கம் வேறு நாம் வேறல்ல என்றும், நாமே அவர்கள், அவர்களே நாம் என்ற மனோ பாவம் நம் ஒற்றுமையில் தானிருக்கிறது என்றும், 150 வருடத்தில் சமயச் சீர்திருத்தம் வாராமைக்கு யாரும் கவலைப்பட வேண்டுவதில்லை என்றும் மகான் புத்தர் கண்ட கொள்கைகள் உறுதியாகிக் கால் கொள்ள 500 ஆண்டுகள் சென்று, பல வருடம் பலர் கூடித்தான் பௌத்த சங்கம் நிறுவி முறைப்பட்ட தென்றும், உலகியலில் அரசாங்கங்கள் மாறும்போதே எவ்வளவு சிரமமிருக்கிற தென்றும்–அதாவது கொஞ்சங் கொஞ்சமாக கால அளவில் மாறுதலடையும் தன்மையது என்றும் சமயமோ ஊழூழி காலமாய் வந்தது, இரத்தத்தில் மூளையில் எலும்பில் தசையில் பற்றியது என்றும், இவை மாறுவதென்பது எளி தல்ல என்றும், எனவே சன்மார்க்கிகள் தான் அதிகம் பொறுமையாயிருந்து வள்ளற் பெருமான் வகுத்தருளிய தங்குதடையற்ற சுத்த சன்மார்க்க செந்நெறி அரசுச்

Koviloor Digital Library

செங்கோல் வள்ளல் தாமே தாங்கி நடத்துவதை நாம் அனைவரும் உள்ளத்திலும், உயிரிலும் கண்களிலும் புருவமத்தியிலும் கொண்டு நிறுத்தி,

"உளத்திலும் கண்ணிலும் உயிரிலும் எனது
குளத்திலும் நிரம்பிய குருசிவ பதியே."

என்ற திரு அகவலுக்குப் பாத்திரமாகிக் குளத்தினும் என்பது புருவ நடுமூலமாகச் (சென்னியினுள்ளே மையத்துக்குச் செல்லும் குறிப்பு எனவும்,) வள்ளற் பெருந்தகையின் திருவடித் தாமரைகளுக்கு அஞ்சலி செலுத்திப் பொருள் கோடல் வேண்டும் என்றும், இலக்கிய அறிவால் பெருமானிடம் அண்டமுடியவில்லை என்றும், சரணாகதி தத்துவத்தால் பல உள்ளீட்டுப் பொருள்களைப் பாங்குற அணுகிப்பெற முயல வேண்டுமென்றும் வலியுறுத்திப் பேசினார்.

தொடர்ந்து பேசுகையில். ஒரு நீதிபதி முன்னர் (முன்னுரை ஆற்றிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி நெறியாளரான மரியாதைக்குரிய K. R. பஞ்சாட்சரம் வர்களைச் சுட்டிக்காட்டி) திறப்பு விழா நடத்துவது பெரும் பொருத்தமென்றும், இறைவன் நீதி சொரூபன் என்றும், நீதி என்றும், அதனால்தான் பெருமானார் அழியாத் தன்மையை அச்சுறுத்திக் காட்டவே, சத்திய தருமச்சாலை, சத்திய சங்கம், சத்திய ஞான சபை என்ற "சத்திய"ச் சொற்கள் மாறாது வைத்தருளியுள்ளார்கள் என்றும், நீதி என்றும் அழியாதது, சத்தியமும் என்றும் அழியாதது, சத்திய அரிச்சந்திரனை நாம் நேரில் காணாவிடினும் வள்ளலார் குருகுல உயர்நிலைப்பள்ளி நிறுவனர் அமரர் O. P. R. அவர்களை நாம் கண்டுதான் உள்ளோம் என்றும், நீதி தவறா வாழ்வே சுத்த சன்மார்க்கம் என்றும் சொன்னார்கள். (நீதி, நெறி, உண்மை, ஒழுங்கு, நிசம்

Koviloor Digital Library

என்பன சத்தியத்தின் பாற்பட்டது) நிறைவுரையாக கீழ்க்கண்ட வெண்பா ஒன்றை, முறையோடு, ''நன்றியொரு வருக்குச் செய்தக்கால் அந்நன்றி'' என்ற மூதுரை வெண்பாவை இருமுறைப் பாடிக்காட்டி அதேபோல் அனைவரும் பாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அப்படியே அவர்கள் சொல்ல அனைவரும் இரண்டு முறை பாடியமை பெரும் கவர்ச்சிகரமாயிருந்தது.

"வள்ளற் பெருமான் வளர் சித்தி நூற்றாண்டு
தெள்ளமுத நந்நினைவாய்ச் சித்தித்த—உள்ளம்
கவர்ந்த "மணிமாடம்" கண்கொளாக் காட்சி
தவமார் அமைப்பிதுவே தான்."

என்று பாடி முடிந்தவுடன் ஒன்றுக்கும் பற்றாத, எந்த விதமான சொற்பொழிவு முதலான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூசும் எளியேனை துறவியர் அவர்கள் இப் பணிக்கு ஆளாக்கியதை மறுக்காமல் ஏற்றதின் காரணம்

"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

(திருக்குறள்-872)

என்ற பொய்யாமொழிப்படி மறுத்தால் கிராக்கியை வலியுறுத்தி ஏதேனும் உடனே தன் கை ஆயுதமான சொல்லேறு உழவால் (பேனாமுனையால்) அச்சு வாகனம் ஏற்றி விடுவார்களோ என்ற அச்சத்தாலும், சாலை சங்கம் தொடங்கிய நாளும் ஞானசபை முதற் ஜோதி காட்டிய நாளும் 1596 வரிகள் கொண்ட அகவல் எழுதிய நாளும் வியாழனாக இருப்பதாலும் இன்றும் வியாழக்கிழமையான இப்புனித நாள் (Holly Thursday) கூடிய வள்ளற்

Koviloor Digital Library

பெருமான் நற்றுணையாலும் இன்றைய மணிமாடத் திறப்பு விழாவுக்கு இசைந்தேனேயல்லாது வேறெந்தவிதத் தகுதியும் பற்றிய தல்ல என்று மீண்டும் பெருமானின் பொன்னார் பூங்கமலத் திருவடிகளை வாழ்த்தி வணங்கு வோமாக என்று சொல்லி

"அருட் பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

என்ற மாமந்திர மெல்லோசையுடன் திறப்பு விழா வுரையை நிறைவு செய்தார்கள்,

Koviloor Digital Library

14. இறைவனடி சேர்தலில் ஏமாற்றமா!

ஆன்மா, கடவுள், பிறப்பு, பிறவாமை என்பவற்றை ஒப்புக்கொண்டுள்ளோர்களிடையில் வைக்கும் விருந்தாகும் இக்கட்டுரை. விருந்தைச் சுவைத்து, சுவைக்கின்றதா? அன்றிக் கசக்கின்றதா? என்பதைத் தெரிவித்தருளும் நோக்குடன் எழுதப்படுகிறதே தவிர, வேறு முடிந்த கருத்து ஏதும் பற்றியதல்ல. பதில் வந்த பிறகு சுவையின் தன்மையை ஆய்வோமாக, இரு சாராரும் கூடி!

ஆன்மா ''அரு'' உடல் ''உரு''. இந்த ''அருவுரு''க் கலப்பால் இயங்குகிறோம். சத்துப் போய்ச் செத்து விட்டால் யாவருமே மரபு காரணமாக, இன்னார் இறையடி சேர்ந்தார் என்று சொல்லுகிறோம். இது வெற்று உபசார வழக்கே தவிர அணுவளவும் உண்மையில்லை. இது அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

இனிச் சிந்திப்பது இறைவழிபாடுகளில் சிறந்து விளங்குபவர்களாய் உள்ளவர்களைப் பற்றியதே! இவர்கள் உடல்விடின் இறையடிசேர்ந்தார்கள் என்று சொல்வது பற்றித்தான் இப்போதைய சிந்தனை. இறையருளால் பக்குவம் வருவிக்க வேண்டிக் கொடுக்கப் பெற்ற உடலம் வினைஒழிந்த பின்பு இங்கு வீழ்ந்து விடுகிறது. ஆன்மா இறையுடன் கலந்துவிடுகிறது எனப் பகருகிறோம். பற்பல மேற்கோள்களும் சான்றுகளும் சாதகமாகச் சொல்லிக் கொள்ளுகிறோம். கலை மலிந்த இப்பூவுலகில் எதற்கு வேண்டுமானாலும் சான்றுகள் கொடுக்க முடிகிறது.

Koviloor Digital Library

எறும்பைப் பற்றி ஒருவர் சொன்னார், ''அப்பா இது போல் சுறுசுறுப்பாக இரு'' என்று; மற்றொருவர் சொன்னார் ''அப்பா எறும்பைப்போல் சேர்த்து வைப்பில் பேராசையாயிராதே'' என்று. மேற்கோள்களும் சான்று களும் அவரவர்கள் கருத்திற்கேற்பக் கொடுக்கமுடிகிறது. எனவே இவற்றை விட்டுவிட்டு உண்மை என்ன என்பதைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க முயல்வதே சால்புடைத்தாகு மன்றோ!

ஒன்றை மட்டும் எடுத்துக்காட்டாகச் சுருக்கமாகச் சொல்லுகிறோம். வண்டியில் ஏறி வந்தோம், வண்டியை விட்டு இறங்கி உள்ளே போய்விட்டோம், வண்டியைப் பற்றிக்கவலை ஏன் என்கிறோம். வண்டி இங்கு உடலாகும். உள்ளே போவோமென்ற இடம் இறைநிலை, ஏறிவந்தவர் ஆன்மா. இறைநிலை என்பது அனைத்துப் பொருளிலும் வியாபித்திருக்கும் நிலை. வியாபிக்கப்பட்ட உடலம் அனைத்துலகப் பொருளில் ஒன்றுதான். இந்த முறைக்கு ஒப்பினால்தான் இறைநிலை பங்கப்படாதிருக்கும். இதில் மாறுபாடு கண்டு கற்ற வித்தைகளை வைத்து வாதாடி னால் சர்வவியாபகத்தன்மைக்கு பங்கமேற்படும்.

எனவே, இதற்கு அநுகூலமாய் உள்ள சேர்க்கைதான் இரண்டறக்கலத்தல் விதிக்கு ஒவ்வும். உடலை இங்கு விட்டுச் சென்ற ஆன்மா உலகில் உள்ள எந்தப் பொருளி லாவது கலக்கும் என்பதில் தூயவெளியும் உடன்பாடே. இங்ஙனம் உடலைவிட்ட ஆன்மா எதிலாவது சென்ற டைந்து விட்டால், விட்ட இந்த உடலின் கதி என்னை? இதைப் பலனற்று விட்டுவிட்டால் இதற்கு வழி என்ன ஆவது? உடலோடு சேர்ந்து வாழும்போதுதானே இன்ப, துன்ப நுகர்ச்சி! இந்த இரண்டும் கடந்த நிலையில் உடலும் அந்நிலை எய்த வேண்டாமா? இரண்டும்

Koviloor Digital Library

ஒன்றாகப் பிரிவற நின்று அனைத்தையும் அனுபவித்து, பிறவாமை எய்தும் போது மட்டும் ஆன்மா எய்தியதை உடலம் எய்தவில்லை என்பது பொருந்துவதாகத் தெரிய வில்லையே. உடலைவிட்ட பிறகு அதற்கு இன்ப துன்பம் என்பது எப்படி நுகர முடியும்?

புண்ணிய பாவத்திற்குத் தக மீண்டும் உடலம் கொடுக்கப்படுகிறதே! இப்படிக் கொடுக்கப்பட்டுக் கொண்டேயிருந்தால் புண்ணிய பாவம் சமமாகும்போது உடலம் மட்டும் முன்போல புண்ணியம் பாவம் மிகுந்தும் குறைந்தும் இருந்தபோது மாண்ட மாதிரி இப்போதும் (புண்ணிய பாவம் சமமான போதும்) உடலம் இங்கே விடப்பட்டால் அறிவு அதை ஏற்று வாங்கிக்கொள்ள மறுக்கிறது. கற்ற நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டினால் இருதரப்புகளும் (அதாவது உடலம் விட்டும் பிறவாமையுண்டு, 1) உடலம் விடாமலும் பிறவாமை யுண்டு 2)) வேண்டிய அளவு காட்டமுடியும். எனவே அவற்றிலிருந்து அந்தப் பண்டகசாலையிலிருந்து-அறவே விடுதலைபெற்று அன்றாட வாழ்வில் பெறும் அனுபவ அறிவைக் கொண்டு நமக்கு நாமே சிந்திக்கலாமே! எது முறையோ அதைக் கொள்ளலாமே!

உடலில் இருந்து கொண்டுதான் நனவு கனவு சுழுத்தி நிலை அனுபவிக்கிறோம். உடலில் இருந்து கொண்டே உடல் நினைவு இல்லாமல் அனுபவிக்கிறோம். ஆனால் உடல் இல்லாமல் இல்லை. எந்த இன்ப துன்பமும் இந்த அடிப்படையை மறுக்கமுடியவில்லை. எனவே உயிர் நீத்த பின்பு உள்ள அனுபவ நிலைக்கு இப்போது நாம் வாதாட வேண்டாம். கண்முன் நின்ற தன்மையான அனுபவத் தன்மையைக் கண்டு, உணர முடியாமல், கண்காணா அனுபவமில்லாத ஒன்றுக்கு முற்படல் வீண்வேலையாகும்.

Koviloor Digital Library

எனவே இந்த உடலில்லாமல் எந்த அநுபவமும் இல்லை. அப்படியானால் உடலை விட்ட ஆன்மா இன்பப்பேறு எப்படி எய்தமுடியும்?

இவ்விதச் சிந்தனையில் இந்த உடலை என்ன செய்வது என்ற கேள்வி பிறக்கிறது. எப்படி உயிரும் உடலும் பிரிவற நின்று தோன்றி வந்தோமோ அப்படிப் பிரிவற நின்று இரண்டும் ஒன்றாகி மறைந்தால்தான் பிறவாமை வந்தது என்று கொள்ளலாம். அறிவு தங்கு தடையின்றி ஒப்புக் கொள்கிறதே. இரண்டறக்கலத்தல் என்ற சொல்லுக்குக் கண்கண்ட உடலும் கண்காணா ஆன்மாவும் ஒன்றாகி விட்டதைப் பொருளாகக் கொள்ள இடம் தருகிறதே. எதிலும் இரண்டு (இரட்டை-**Duality**) அதாவது இருமை நிலை என்ற தன்மைதானே துன்பம் தந்து வளர்கிறது. இதற்கு ஆய்வு ஒன்றும் வேண்டாமே. உடல் வேறு உயிர்வேறு ஆகவல்லவோ நமக்கு இருக்கிறது சாகும் வரை. இந்த நிலை மாறினால் அல்லவோ இருமை மாண்டு ஒருமை வரும்?

எனவே இந்த ஊத்தைச் சடலத்தை எப்படி அழியாமல் சுத்தவுடலாக ஆக்குவது என்பது வேறு கேள்வி, அதற்குப்பதிலும் வேறு. அது இப்போது பிரச்சினை அல்ல. இரண்டறல் என்பதற்கு மட்டுமே இப்போது சிந்தனை. அந்த ஞானி அப்படிச் சொன்னார், இந்த ஞானி இப்படிச் சொன்னார், என்ற நம் வாசாஞானத்தில் நாம் புகவில்லை. அனுபவ அறிவு ஞானத்தால் நாம் சிந்திக்கின்றோம். சாதாரண வாழ்விலே இரண்டற்ற மனமாய் ஒருவரிடம் ஒருவர் பழகினால் துன்பமோ, இன்பமோ, பிழையோ, சரியோ படவில்லையே. எதிரெதிரான இரண்டும் கடந்த ஓர் அமைதி நிலையிலேயே நேரம் போவது தெரியாமல் காலம் கடந்து விடுகிறோமே.

Koviloor Digital Library

இப்படியானால் அனைத்து நிலையிலும் வாழ்வில் இரட்டைத் தன்மை அதாவது இருமைநிலை யற்று விட்டால் அந்த அமைதிநிலை வரலாம்தானே! அதுதான் காலம் கடந்த நிலை. அப்போது உயிர் என்ன ஆயிற்று, உடல் என்ன ஆயிற்று என்ற எண்ணமே இல்லையே! இவ்வாறு இருமையற்ற நிலை வரும்போது, எண்ணியது என்ற ஒரு நிலையும் அதற்குப் பிறகு செயற்படுவது என்ற ஒரு நிலையுமான இரட்டைநிலை இல்லையே, எண்ணமே செயல், செயலே எண்ணம். எண்ணத்துக்கும் செயலுக்கும் நடுவே இடைவெளி (Gap) கிடையாதே. இடைவெளி இருந்தால்தான் இரட்டை. இரட்டை என்றாலே விலங்கு பூட்டிய வில்லங்கமாய்த்தானே அமைகிறது.

இந்த எண்ணம் தந்த இடைவெளிதான் ''நீ, நான்'' என்ற பிரிவினை, பிரிவினைக்கு வித்து எண்ணம் தானே. எண்ணமற்றால் பிரிவினை மாயும். மனமும் மூச்சும் நமக்கு ஒன்றுபடவில்லையே. ஆரம்பமே இரட்டை. மனதுக்கும் மூச்சுக்கும் உள்ள சம்பந்தமே அறிந்து கொள்ளவில்லையே. மனம் எங்கெங்கோ ஓடித் தாவுகிறது. அப்போது மூச்சு என்ன செய்கிறது? அது தன்பாட்டுக்கு அதன் வேலையைச் செய்கிறது. சம்பந்தா சம்பந்தமே இல்லாது பிரிவுற்றது. இந்த இரட்டையர்கள் தங்கள் தங்கள் வேலையைச் செய் கிறார்கள். பிரிவினை வளர்ந்து கொண்டு வேரூன்றித் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துச் சுவைக்கிறது. இந்தப் பிரிவினையே நமக்குச் சுகமென ஆகிவிட்டது. போலிச் சுகமல்லவோ இது!

எனவே இக்கட்டுரையைக் கண்ணுறுவோர் தங்கள் தங்கள் சிந்தனையைத் தெரிவித்தால் கட்டுரையாளன் மூலம் இதைச் சாவதானமான முறையில் மீண்டும் தொடர முடியும். வீண்வாதமல்ல. விவாதமுமன்று, பண்டமான ஒருநிலை. காய்தல் உவத்தலின்றி அறிவுக் கடல் நீந்துவோமாக!

Koviloor Digital Library

15. கண்ணாடியிலா கந்தன் காட்சி

குழுமியுள்ள சன்மார்க்க சங்கத்தாரனைவருக்கும் வந்தனம்.

திருவருட்பிரகாச வள்ளற் பெருமானின் வரலாற்றில் வள்ளலார் கண்ணாடியில் கந்தப் பரமனைக் கண்டு வழி பட்டதாக உள்ள வரலாறு பற்றிச் சற்று சிந்திக்க முயல்வதே எளியேனின் பேச்சாகும்.

வள்ளற்பெருமான் தோன்றும் துணையாயிருந்த காலத்தில் வெளிவந்த வரலாறுகளில் மேற்கண்ட குறிப்பு கள் காணக்கிடைக்கவில்லை. பின்னர் தோன்றாத்துணை யாயும் தோன்றும் துணையாயுமிருந்து கண்டனுபவித்த அணுக்கத் தொண்டர்கள் எழுதிய வரலாறுகளிலும் இக்குறிப்புக் காணுமாறில்லை. இதன் பின்னர் வந்த சில குறிப்புகளில் சென்னையில் பெருமான் வதியுங்காலை வழிபாட்டிற்கென தம் அறையில் கண்ணாடி முதலான பொருள்கள் வைத்திருந்த குறிப்புகள் உள்ளன.

இவற்றில் ஒன்றிலேனும் "கண்ணாடியில் கந்தவேட் பரமனைக் கண்டார்" (தரிசித்தார்) எனக் காணப்பெற வில்லை.

இதற்கும் பின்னர் வந்த வரலாற்றுப் புதிப்புகளில் படிப்படியாகக் கண்ணாடியில் காட்சி கண்டார் என

Koviloor Digital Library

வந்துள்ளன. இதற்கும் பின்னர் வந்த பதிப்புகளில், இதற்கு ஆதாரமாக திருத்தணிகைப் பதிகம் முதலாம் பாடலான "சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்" எனத் தொடங்கும் திருஅருட்பா காட்டப்பெற்றிருக்கிறது

இந்த நிலை என்ன ஆயிற்றென்றால் 'கதைக்குக் கண்ணு மூக்கு வைத்து' இந்த நிகழ்ச்சியை ஓவியமாகத் தீட்டியும், உருவச்சிலைகளாக வடித்தும், இன்னும் சில விடங்களில் உயரத்தில் ஒரு நிலைக் கண்ணாடியை மாட்டி அதற்கு நேரே எதிர்ப்புறத்தில் கொஞ்சம் இடைவெளி விட்டு, ஆறுமுகப்பெருமானின் திருவுருவம் சமைத்து இந்த உருவம் அந்த எதிரில் உள்ள கண்ணாடியில் காணு மாறு செய்து, அப்பால் அடிமட்டத்தில் வள்ளற்பெருமான் திருமேனி, உருவச் சிலையாகச் சமைத்துக் கண்ணாடியில் காணப்பெறும் ஆறுமுகவரின் நிழல் திருமேனியை வணங்குவதாயும், இன்னுமோர் இடத்தில் "இதுதான் வள்ளலார், முருக முதல்வனைக் கண்ட கண்ணாடி" என்று ஒரு கண்ணாடியை வைத்துப் பூப்போட்டு வழி படுவதாகவும் செய்திகள் கிடைக்கின்றன. இன்னும் எட் டாத செய்திகள் எவ்வளவு கோலாகலங்களில் நடைபெறு கின்றனவோ அறியோம்! பெருமானிடத்தில் ஈடுபாடு கொண்டு அவரவர்கள் ஈடுபாட்டுக்குத் தக வழிபடும் பெற்றிகளில் தலையிட நாம் விரும்பவில்லை. ஆயினும் இதன் உண்மை புலனாக ஒரு வெளியீடு வருதல் ஈடு பாடுள்ள சங்கத்தார்களுக்கும், அடியவர்களுக்கும், மேடைச் சொற்பொழிவாளர்களுக்கும், நூல் எழுதுவோ ருக்கும் நலம் பயக்குமெனக் கருதுகிறோம்.

பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திரு அருட்பா செய்யுட் பகுதிகளிலோ—உரை நடைப்பகுதிகளிலோ—ஒரு

Koviloor Digital Library

கூறாவது ஓர் அணுவாவது இதற்கு சான்று இருப்பின் நாம் அதற்குத்தகச் சிந்திப்பது முறையாகும். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. சொற்பொழிவாளர்கள் முதலியோரிடத்தில் கலந்து ஐயம் தீர்த்துக்கொள்ள முயன்றாலும் ஈடுபாடு கொள்கிறார்களல்லர். இந்த மரபாவது இனி நிற்குமா என்றால், அதிகப் படுகிறதே தவிர குறைந்த பாடாயும் இல்லை, எனவே, இது பற்றியும் கொஞ்சம் சிந்திப்போமாக.

பெருமான் தனி அறையில் வழிபாட்டிற்குக் கண்ணாடி வாங்கிப்போன ஆதரவுபற்றி முதலில் ஆய முற்படுவோமாக. உபய கலாநிதி முதல் மாணவப் பெருந்தகையாளரின் வாக்குகளிலும், அடிகள் பெருமானாரின் மருகரும் சமரச வேத சன்மார்க்க சங்க வித்வான்களில் ஒருவருமான புராணிகர் பொன்னேரி ஐயா அவர்களின் வாக்குகளிலும் இந்தப் பெற்றிக் காணப்பெறவில்லை, பின்னைய தொடக்கப் பதிப்புகளில் 'கண்ணாடி' வாங்கிச் சென்றதாக மட்டுமே காணக்கிடக்கிறதே அல்லாது கண்ணாடியில் காட்சி கண்டதாக இல்லை. இதை நாம் மறுக்க முற்படவில்லை. ஏன் எனின், கண்ணாடி ஒரு வழிபாட்டுப் பொருளேயாகும். இதன் விளக்கம் கூறின் கட்டுரை பெருகிவிடும். இதை ஒப்புக்கொண்டு மேலும் தொடர்வோம்! இனி ஆய்வது சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் எனத் தொடங்கும் திருவருட்பாச் செய்யுளை இணைத்துக் கட்டிய கதையும், அதைத் தொடர்ந்து மேலும் மேலும் சொற்பொழிவுகளும் நூல் வெளியீட்டுப் பெருக்கங்களும் மிகுவதுதான் தீராக் கவலை தருகிறது. பாடலைக் கவனிப்போம்!

"சீர்கொண்ட தெய்வ வதனங்களாறுந் திகழ் கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களுமோர்

Koviloor Digital Library

கூர் கொண்ட வேலுமயிலுநற் கோழிக் கொடியுமருட்
கார் கொண்ட வண்மைத் தணிகாசலமு

மென் கண்ணுற்றதே."

(திருத்தணிகைப் பதிகம், பிரார்த்தனைமாலை-1) இதுதான் திருப்பாடல்.

இந்தத் திருவாக்கில் ஈற்றடியில் 'என் கண்ணுற்றதே' என்றுதானுள்ளது. இதை எப்படி கண்ணாடிக்குள் காட்சி கண்டதாகப் புனைய முடியும்?

(1) ''என் கண்'', ''அவன் கண்'' அதாவது என்னிடத்தில், அவனிடத்தில் என்று பொருள்படுமாறு பேசி வருகிறோம்.

(2) மேலும் வழக்கத்தில் உள்ள அகக் கண்,—புறக் கண், நெற்றிக் கண் என்ற சொற்களும் நந்தமக்குப் புதிய ஆய்வுச் சொற்கள் அல்ல

(3) மேலும் ''கண்'' என்ற இச்சிறு சொல்லுக்குரிய ஓரளவு பொருளைத் தருகிறோம் (முழுமையும் தரவில்லை). நம் அளவுக்குரியது மட்டும்தான் சுருக்கிக் காண்போம்:—

(3)ல்
1. ஞானம் உணர்த்துவது
2. பிசம்
3. முன்பு
4. பற்றுக்கோடு
5. உடம்பு
6. அறிவு
7. நாட்டம்

Koviloor Digital Library

8. பார்வை
9. நோக்கம்
10. கண்ணோட்டம்
11. தேங்காய் முதலியவற்றில் முளை கிளம்பும் இடம்
12. பெருமை

(இன்னும் உள. விரிவஞ்சி விடுத்தனம்).

மேலே கண்ட 1, 2, 3 ... 12 வகை இந்தப் பொருள்களோடு "என்" என்பதை முதலில் கொண்டு பாடலில் உள்ள சொல்லான "என்கண்" என்ற செம்பவளத் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்குக்குப் பொருள் கண்டால் எவ்வளவு மகிழ்வாக உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது? அனுபவித்து மகிழ்வோமாக.

மேலும் "உற்றதுஎன்ற சொல்லுக்கும் பொருள் பார்ப்போம்.

உறுதல்—இருத்தல், தங்குதல், பயன்படல், நிகழ்தல், மிகுதல், ஒத்தல், (இன்னும் பொருள் உளது, தேவையானவை மட்டும் கொண்டுள்ளோம்.)

இந்த 'உறுதல்' பொருளையும் சேர்த்து "என்கண் உற்றதே" என்ற தொடர் சொல்லுக்குப் பொருள் விரிக்கவா வேண்டும்! அவரவர் தகுதிக்கு எந்தப்பொருளை யாவது கொண்டு சேர்த்துச் சொல்லி நினைந்து ஒன்றி இன்புறலாமே! ஒன்றே ஒன்று மட்டும் (விரிவஞ்சி) பொருள் சொல்லி அமைவோம்!

Koviloor Digital Library

என்னிடத்தில் இருந்துவிட்டான் கந்தன்
என்னிடத்தில் மிகுந்து தங்கி விட்டான் கந்தன்
என் உடம்பில் ஒத்துப் பயன்பட்டு விட்டான் கந்தன்

(கொஞ்சம் பச்சையாகச் சொல்லப்போனால் என் அறிவு, என் பெருமை, என் ஞானம், என் அகம், என் புறம், என் உடல் அனைத்தும் கந்தக்கடவுளின் வடிவே எனச் சொல்லித் துதித்து ஏத்தி மகிழ்ந்திருமாந்திருக்கலா மன்றோ)

மேலும் பெருமான் ஆறாம் திருமுறையில் பாடி அருள்வார்:

''கற்குமுறை கற்றறியேன் கற்பன கற்றறிந்த கருத்தர்
திருக்கூட்டத்தில் களித்திருக்க அறியேன்''.

—(முறையீடு-3)

என்று நம்மை நோக்கித்தானே இக் குறைபாட்டைத் தம் மேல் ஏற்றிப் பாடியருள்கின்றார்கள். அதை விட்டுவிட்டு, ''வாழைப்பழம் தின்னாது தாழைப்பழம் தின்றால்' 'என் செய்வோம்! போக்குவழி யுண்டா?

வள்ளற் பெருந்தகையே! கருணைக்கடவுளே!!
எம்மை யாண்டருள் புரிக!!! கை கொடுத்துக்
காப்பாற்றியருள்க!!!

எனவே, 'கண்ணாடியில்' கண்டதாகக் கூறும் போக்குக்குச் சற்றேனும் இடமில்லை என்பதை நன்றாக ஊன்றிப் பார்த்து இப்போக்கை அறவே கைவிட்டொழிப் போமாக! தவறு ஒப்புக் கொள்வோமாக!

மேலும் ''கண்ணாடியில்'' வந்ததாகக் கூறும் மரபு— வள்ளற்பெருமானை ஏத்துவதாக நினைத்து, ஏதேதோ

Koviloor Digital Library

செய்து விடுகிறோம். சிவசிவ! அருளாளர்கள் திருவாக்கை சட்டெனப் பொருள் பண்ணிவிட முடியாது. மிகவும் எளிமையான சொல்தான் கையாளப்பெறும். வெள்ளைப் பாட்டு என்றுதான் நினைப்போம்; ஆனால் கடல் ஆழ் முத்து எனப் பொருள் பொதிந்து ஒளிவிடும்! அவர்களின் உள்ளேயிருந்து பாடுகிறவன் யார்? அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் அல்லவா? நம் போன்ற சுற்ற அறிவா பாடுகிறது? இதைஎல்லாம் சிந்தித்து இந்தக் கண்ணாடிக்காட்சிப் போக்கை' க் கழற்றிச் சுக்கு நூறாக்கி, உண்மைக் கண்ணை நாடச்செய்து (கண் நாடி - கண்ணாடி) கண்ணாடியாக்குவோமாக!

பெருமானின் சுத்தப் பிரணவ ஞானவடிவான ஒளி, ஒலி வான் வடிவப்பெற்றி ஆறாம் திருமுறையில்தான் உள்ளது என்ற எண்ணத்தை அறவே விட்டுவிட்டு முதல் திருமுறையிலேயே இதன் முளைவிட்ட பகுதியிருப்பதைத் தெரிந்து திருமுறை வளர வளர இந்தப் பெற்றியும் வளர்ந்து ஏனைய திருமுறைகளிலும் விரவி மலிந்து மணம் தருவதையும் நுகர்வோமாக,

இந்த முறையில் எந்தத் திருமுறைக்குப் பொருள் சொன்னாலும் பயபக்தியோடு அணுகிப் பருக, அணைந்து கூடுவோமாக! வணக்கம்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

Koviloor Digital Library

16. நோன்பு

"ஓவாதுண்டு படுத்துறங்கி உணர்ந்து விழித்துக்
கதைபேசி உடம்பு நோவாது உளம் அடக்காது
ஓகோ நோன்பு கும்பிட்டே,
சாவாவரமும் சித்தி எல்லாம் தழைத்த நிலையும்
சன்மார்க்க சங்கமதிப்பும்பெற்றேன் என்
சதுர்தான் பெரிதென் சரித்திரத்தை
ஆவா நினைக்கில் அதிசயம் என் அப்பா அரசே
அமுதே என் ஆவிக்கினிய துணையே என்
அன்பே அறிவே அருட்சோதித்
தேவா! இதுநின் செயலே, இச்செயலை நினைக்குந்
தொறும் என்சிந்தை கனிந்து கனிந்துருகித்
தொள்ளாரமுதம் ஆனதுவே."

நோன்பு என்பது கொன்று தின்னாமை, அவ்வை திருவாக்கு இது. விலங்கினங்களுக்குத்தான் தின்னல் என்ற சொல்வழக்கு. சர்க்கஸ்காரர் கேட்கிறார் பணி யாளனை, "சிங்கத்துக்கு இறைச்சி போட்டாச்சா என்று எனவே தின்னல் என்பதும் இறைச்சி என்பதும் மக்களுக்கு உரியவழக்காகத் தெரியவில்லை. எனவே புலால் நீங்கிய உணவுதான் உண்ணல் என்பது. இவைதான் 'மக்களுக்குரிய வழக்காகின்றது. மக்கள் உண்ணல் செய்வதன்றித் தின்னல் செய்வதன்று,

காப்பது விரதம் என மேலும் நோன்பு பேசப் பெறு கிறது. ஐம்பொறிகளில் வாய்மட்டும் தான் பேசவும், உண்ணவுமான இரண்டு செயல்களுக்கு உரியது. எனவே இது முதலில் காக்கப் பெறுகிறது. உணவும், பேச்சும்

Koviloor Digital Library

ஒழுங்கு பெறின் ஏனைய புலன்கள் அடங்க அடங்க ஆற்றல் விரயமாவதில்லை. உள்ளடங்கி ஆக்கம் பெறுகிறது சக்தி. ''சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்க்கும் அறிவில்'' மனம் அடங்குகிறது. அடங்குவதென்பது அழிவதன்று. வெம்மாயையற்று வெளிக்குள் வெளிகடந்து சும்மாயிருக்கும் செயற்கரிய செயல்நிலை. அகந்தே விழிப்புணர்வில் ஊக்கமாயிருக்கும், ஆராத பேருணர்வுப் பிழம்பு! இதுவே அருள் நிலைக்கு வித்து. இதன் செயல் காரண காரியம் **(Cause and effect)** கடந்தது. பாப புண்ணியமாம் தீதும் நன்றும் கடந்தது, நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற அளப்பருங் கருணை மாகடல். இத்தகைய சீரிய நோன்பை எல்லோரும் ஆற்றாததால்தான் இலர் பலராகி விட்டார்கள் எனக்காரணம் காட்டுவர் தமிழ் மறைத் தந்தையர்.

எத்தகைய ஆற்றொணாத்துயரையும் இந்நோன்பு கைவந்தோர் தாங்கி மகிழ்வர். இவ்வாறு தாங்க ஆற்றல் இல்லாமல் நோன்பின் உட்பொருள் புரியாது பொறி புலன்களை மாய்த்து விடுகின்றனர். ஆற்றல் மிஞ்சிய கடுமையான விரதங்கள் நோற்பது நோன்பு அன்று; இதை ''நோரா நோன்பு சீராகாது'' எனப் பேசுவர். இதை வலியுறுத்துவதன்ன ' திறத்தாற்றின் நோவாதது நோன்பு அன்று'' என்று முதுமொழிக்காஞ்சி முரசறைகிறது. இந்நோன்புக்கு இலக்கணம் வகுக்கும் குறட்பா ''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலில் ஆற்றல் தலைப்பட்டவருக்கு'' என்பதாகும். சாவை வெல்வது இதன் கருத்து. இதற்குச் சான்றாக வள்ளற் பெருந்தகை கூற்றுவனுக்கு ஆளாகாது யாக்கையை ஒளி, ஒலி, வான் ''வடிவாக்கி'' ''ஓகோ! நோன்பு கும்பிட்டே சாவாவரமும் சித்தியெலாம் பெற்றேன்'' எனத் தம்சரிதை சாற்றுவார்.

Koviloor Digital Library

17. தொண்டு

"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போ
லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார் யாவரவ
ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமா னடம்புரியு மிடமெனநான்
தெரிந்தே னந்த
வித்தகர்த மடிக்கேவல் புரிந்திடவென் சிந்தைமிக
விழைந்த தாலோ?"

(ஆறாவது திருமுறை-தனிப்பாடல்-2)

(திருவருட்பாச் செம்மாதுளம்பழத்தில் இப்பாடல் ஒரு மணி முத்து.)

ஏவல் புரிதல் என்பது தொண்டாற்றல், பணிபுரிதல் என்றவகைப் பொருள் தருகிறது. புகழ் என்ற பயனைக் கூடக் கருதாத தொண்டும் கொடையும் தயையும் பிறவிக் குணம். இது சந்தைப் படிப்பால் வருவதன்று. சொந்தப் படிப்பால் உரமேறி வளர்வது. "ஏவாமக்கள் மூவா மருந்தாம்." எவ்வாறு சாவா மருந்தாகிறார்கள் மெய்த் தொண்டர்கள் என்பது இங்குக் காணப்பெறுகிறோம்.

உயிரிரக்கமே தொண்டின் இலக்கணம், எவ்வுயிர்த் திரளும் தம்முயிரெனவே எண்ணிச் செயல்படுவது. எண்ணுவதென்றும் அதன்பின்னர் செயல்படுவதென்றும் இரண்டு தனித்தனி நிலைகள் ஈண்டு இல்லை. எண்ணுவது

Koviloor Digital Library

என்ற அகச் செயலுக்கும் பின்னர் புறத்தே செயற்படும் செயலுக்கும் நடுவே காலமும் இடைவெளியும் (Time and Space) அணுவளவும் இல்லை. ''சட்டி சுட்ட அதேநொடி யில் எப்படிச் சுடுதலுக்கும் கை விடுதலுக்கும் நடுவே சந்து (gap) கிடையாதோ, அதே நிலையில் அந்நிலை தான் என்னுவதும் உடனடியாகச் செயற்படுவதும்.

பிறர் துன்பத்தை நம் துன்பமாக என்ணுவது வேறு, அத்துன்பமாகவே நாம் ஆவது வேறு. என்ணுவதோடு நின்றும் விடலாம், அத்துன்பம் துடைக்காமல், ஆனால் அப்படி இல்லாமல் பிறர் துன்பமாகவே நாம் ஆவதுதான் தொண்டு. நம் உடலில் நம் நெஞ்சத்தில் உற்ற துன்பத் துக்கு என்ன பாடுபடுவோமோ, படுகிறோமோ அப்படிப் பிறர் துயரிலும் அப்பாடாகவே நாம் ஆவது — கண்முன் நின்ற ஒருவரின் !துயர் துடைக்க முயல்வதைத் தாண்டியது இந்நிலை.

நெஞ்சம் கனியாமல், ஆயிரம் மூட்டை அங்கே அன்னதானம் என்றால் அது தொண்டன்று. இரக்கமே உயிராய் இரக்கமே செயலாயிருப்பதுதான் தொண்டு. உயிரிரக்கச் செயலின் உச்சநிலை பேசும் தரமன்று. வாடிய பயிரைக் கண்டவுடன் தாம் வாடுவதுதான் நிலை. வாடு வதாக என்ணுவதில்லை. ஐயோ வாடுகிறதே என்று சொல்வதல்ல. பயிரின் வாட்டமாகவே தாம் வாடி பயிராகவே ஆவது தான் தொண்டின் வடிவம்.

தொண்டு செய்வதால் நம் நிலை என்னாகும் என மெய்த் தொண்டர்கள் சிந்திப்பதற்கு அவர்கள் இயல்பு நேரம் தராது. ஏன் எனின் சிந்திப்பது அறிவு. அறிவு எதையும் ஆயும், சீர்தூக்கும். சீர்தூக்கிவிட்டால், அது

Koviloor Digital Library

செயற்படாமல் இருக்க ஏது உண்டு. எனவே தொண்டர்களுக்கு ஆயும் தன்மையேயில்லை.

''கைம்மாறு கருதாக் கடப்பாடு மாரிமாட்டு என் ஆற்றும் கொல்லோ உலகு'' என்ற வள்ளுவமே தொண்டுக்குச் சான்று. இக்கருத்துத் தரும் ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி ஒத்துரிமையுடையவரா யுவக்கின்றார்'' என்ற சொற்றொடர் நெஞ்சை அள்ளிச் சிந்திக்கச் சிந்திக்கத் தேன் பிலிற்றி நிற்கிறது.

Koviloor Digital Library

18. பக்தி

"சத்திய மெய்யறிவின்ப வடிவாகிப் பொதுவில்
[தனிநடஞ் செய்
தருளுகின்ற சற்குருவே! எனக்குப்
புத்தியோடு சித்தியும் நல்லறிவும் அளித் தழியாப்
[புனிதநிலை
தனிலிருக்கப் புரிந்தபரம் பொருளே!
பத்தியறி யாச்சிறியேன் மயக்கம்இன்னும் தவிர்த்துப்
பரமசுக மயமாக்கிப் படிற்றுளத்தைப் போக்கித்
தத்துவ! "நீ நான்" எனும் பேதமது நீக்கித் தனித்த
[சுகா தீதமும் நீ
தந்தருள்க மகிழ்ந்தே."

(நான்காம் திருமுறை-அன்புமாலை-24)

மாடு மனை மக்கள் சுற்ற மிவற்றில் கொண்ட பற்று பாசம் எனப் பெறும். ஆண்டவனிடம் காட்டும் பற்றுக்குப் பக்தி என வழங்குகிறோம். எனினும் கடவுள் நிலையறிந்து அம்மயமாவதே பக்தியாம். பிறரறியா வண்ணம் கள்ளக் காதல் போன்றது பக்தி, இந்தப் பக்தியாம் காதலுக்குப் புறத்தே பொருள் இல்லை. அகத்தே அது ஓய்வின்றி வளருகிறது. இது பிரிக்க முடியாச் சொந்த உடமை, உணர்வு மயமே இது. அக் காதற் பொருள் தேடத் தேட ஓடும். தேடாத நிலையில் தானே அணையும், தேடாநிலை எனில் அச் சிந்தனையே அற்றநிலை அல்ல, சிந்தனை முடிந்தது

Koviloor Digital Library

இனிச் சிந்திக்க முயற்சி இன்றி ஒய்ந்து சும்மா இருக்கும் இடம் அது. தேடுபவன் என்ற ஒருவன் ஒழிந்த இடம், அப்படி எனின் மூடமும் அல்ல, செத்து விடுவதுமல்ல. எண்ணம் செத்து விடுவது என்பதே பொருள். இது எப்படி இயலும்? இதுவரை கற்றறிந்த கேட்டறிந்த அனைத்தி லிருந்தும் முழுவிடுதலையாய் இருக்கின்ற சுகநிலை, சுத்த சாந்தநிலை கருவி கரணங்கடந்த முழு உணர்வு நிலை, உணருபவன் என்ற ஒருவனும் அங்கு இல்லாத சுத்த முழு உணர்வு நிலையே.

ஆம், இதுதான் பக்தி. தேடுபவனுக்கும் தேடப்படும் பொருளுக்கும் அணுத் துணையும் இடைவெளியில்லாச் செறிவே பக்தி. பக்தி செய்வதென்பது அன்று. பக்தியாக ஆவதே தான் ஒழுங்கு. பக்தியாயிருப்பது தான் பக்தியின் அநுபவம். ''தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச்சுடும்'' என்ற குறட்பாவில் அறிபவன் யார்? பொய் புகன்றவன் யார்? சுடப்படுபவன் யார்? சுட்டது யார்! சுடும் நிலையாது? சிந்திக்கச் சிந்திக்க அமுதம் சுரக்கிறது.

சிந்தனை ஒன்றும் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமான முரண்பட்ட நிலை பக்தியை வளர்க்காது அழிக்கும். பக்தி ஆக்கசக்தியை வளர்ப்பது எதிலும் இம்மூன்றும் ஒன்றிய நிலையே சாந்தத்துக்கு ஏது. ஒன்றை விட்டொன்று பாய்வதும் பக்தியாகாது. முறுகிய பக்தி நிலையிலும் ஒரு மயக்கம் உண்டாம். இம் மயக்கம் தூக்கமாத்திரை மயக்கமன்று மிஞ்சிய காதலால். அமைவது தானே தெளிந் தின்புறும்.

தொன்று தொட்ட ''நான்'' ''எனது'' என்ற பொய்ம் மையான ஒரு விடமுடியாப் பற்று நம்மைச் செறிந்து

Koviloor Digital Library

கப்பிக் கொண்டு — பிசின்போல செம்பினில் களிம்பு போலப் பற்றிக்கொண்டு — மயக்குகிறது. இந்த மயக்கம் தீர்வதுதான் பக்தியின் உண்மை நிலை. பக்தி அறியாச் சிறியேன் என அடங்கி அடக்கத்திலும் அடக்கமாகப் பாடல் பேசும் அருமை. சிந்தித்தால் அறியாமையையும் அதுவாகவேயிருந்து உணரும். "உலகவர்களில் தான்" என்றும், "தான் வேறு உலகம் வேறு" என்ற நிலைக்கு இடம் இல்லாமல் இருப்பதே "நீதான்" என்ற அறிவு கடந்த சுகாதீத நிலையாம்.

Koviloor Digital Library

19. அடிகளாரின் அருள் நெறி

திருவருட் பிரகாச வள்ளல் இராமலிங்க அடிகளாரின் அருள்நெறிக்குத் தொடக்கப் பாலர் பாடமான "ஆன்ம நேய ஒருமைப்பாடு" என்ற ஒப்புயர்வற்ற சொற்றொடர் அவர்கள் ஒருவராலே கண்டு ஆளப்பெற்றது. இந்தவித்தே முளையாகி விளைவதாகி விளைவிக்கும் பொருளதாகி மேலுமாகிக் கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக் குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத சத்தாகிச் சித்தாகி இன்பமாகிச் சதாநிலையாகி எல்லா உயிர்க்கும் சாட்சியாகி முத்தாகி மாணிக்கமாகித் தெய்வ முழு வயிரத் தனி மணியாம் முடிவிலாத் தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் சோதியாக ஒளிவிடச் செய்தது அடிகள் பெருமானை.

என்றும் அழியாப் பேரின்ப வீட்டின் கதவங்களைத் திறப்பது உயிர்க்கருணை ஒன்றே ஒன்றுதான் என்று வலியுறுத்துவர். கருணைவேறு தாம் வேறல்லர் அடிகள். திங்களும் ஒளியும் போல தாமும் கருணையும் பிரிவற ஒன்றிய பேரருளாளர். உயிர்த்திரள் அனைத்தும் ஒன்றெ௳ன எண்ணுபவர் மட்டுமல்லர். உயிர்த்திரள் அனைத்தும் தாமேயானவர். எனவேதான் உயிர்க்கொலைக்கும் புலால் புசிப்புக்கும் உள்ளம் நடுங்கி ஓலமிட்டு அலறி நைந்து அனல்வாய் மெழுகாகிறார்கள். தரும யுத்தக் கொலை எனினும் கொலை என்ற சொல் செவி புகுந்தாலே உளம் நடுங்கி அயர்வர்.

"மறைமுடி வயங்கும் ஒரு தனித்தலைமை வள்ளலே
உலகரசாள்வோர்

Koviloor Digital Library

உறைமுடி வாள் கொண்டொருவரை ஒருவர்
உயிரறச் செய்தனர் எனவே
நறையுறச் சிறியேன் கேட்டபோதெல்லாம்
நனர்ந்துளநடுங்கி நின்றயர்ந்தேன்
இறையும் இவ்வுலகில் கொலைஎனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவதியல்பே."

—(ஆறாவது திருமுறை—பிள்ளைப் பெரு விண்ணப்பம்-16)
என்ற திருவருட்பாவால் அடிகளின் மனோநிலை அறியப் பெறுகிறது.

அடுத்து புலைப் புசிப்புப் பற்றி பேசுகையில் ஒருவன் ஓர் ஆணைப் பெண்ணாக்கவும் உடனே அப்பெண்ணை ஆணாக்கவும், இறந்தாரை எழுப்பவும் ஆற்றல் பெற்ற திறனுடையோனாயினும், ஒன்றின் உயிர் உடம்பைக் கடிந்துண்ணும் கருத்தனாக, உண்ணும் செயலில்லாது உன்னை நினைத்தாலே அவனை ஞானி எனக் கூற முடியாது—கூறக்கூடாது என்று ஆணையிட்டு அறுதிகட்டி அறைவர். உடம்பிலிருந்து உயிர் கடியப்படுகிறது என்ற சொல் அளவிலேயே அத்தொழில் புரியும் காட்சியான கூரிய வாள் நையும்படியாக அறுவை செய்யும் இரக்க மில்லாக் காட்சி புலனாகிறது, என்பதை நொந்து பாடுவர்.

இவ்வாறு அறைந்தருளிய அடிகள் உடனடியாக வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு உளம் நடுங்கி ஆற்றாமல் என்பெலாம் கருக இளைத்தனன், ஏங்கினன் அந்த இளைப்பையும் ஏக்கத்தையும் ஐயனே நீயறியாயோ என இரங்குவர், அயலார் உறவோர் யாரேனும் இயல் பாக இறந்து பட்டார்கள் எனக் கேட்ட அளவிலே

Koviloor Digital Library

செவிகளைப் பொத்தி ஆண்டவனிடம் முறையிட்டு அலறுவர். இந்த அலறலின் முதிர்ச்சியே தன்னுயிரும் தன்னுடலைவிட்டு நீங்காத நிலையான, கூற்றத்தைக் குதிக்கச் செய்து நிலமிசை நீடுவாழும் பெற்றிக்கு ஆக்கி வைத்து மரணமில்லாப் பெருவாழ்வு என்ற புத்துயிர்ப்புத் துடிப்பான தமிழ்த் திருவாக்கை நம்மனோர் கேட்கவா வது வைத்தது.

புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவழிந்து "ஐ"-மேல் உந்தி அலமந்தயர்ந்து மடியும் காட்சி அடிகளால் காணொணாதது, கேட்கவொணாதது. மக்கள் பசியால் வருந்துவது கேட்டுப்பகர நாஎழமுடியாமல் திகைத்தருள் வர். பசி வந்த காலத்தில் அறிவு விளக்கமின்றி மயங்கு வதையும் அறிவு மயங்கவே அறிவுக்கறிவாம் கடவுள் விளக்கம் மறைபடுவதையும் சுட்டிக்காட்டி அழுதழுது நெஞ்சம் நெக்குருகுவார்.

பசி என்ற நெருப்பு மக்களைப்பற்றி எரிக்கும்போதும், பசி என்ற புலி மக்களைப் பாயும்போதும், உணவு கொடுத்து உதவுவதே அந்நெருப்பை அவித்துப் புலியையும் விரட்டுவதாக ஆகும் என உயிர்க்கருணைத் தொடக்கம் தொடங்கிப் பின்னர் இன்றியமையாத ஆடை, கல்வி, மருத்துவம் அனைத்தும் தந்து ஈத்துவக்கும் இன்பம் அனுபவித்து உயிர்க் கருணை வளர்க்க வேண்டுமெனப் பேசுவார்.

"வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில் என்மனம் சென்ற தோறும்
வெருவி நின்னடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பம் செய்கின்றேன் இன்றும்

Koviloor Digital Library

உருவ என் உயிர்தான் உயிர் இரக்கம்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில் என் உயிரும் ஒருவும் என்னுள்ளத்
தொருவனே நின் பதத்தாணை!"

—(ஆறாவது திருமுறை-பிள்ளைப் பெருவிண்ணப்பம்—93)

என்ற அமுத மொழிகளால் அடிகளின் இரக்கநிலை உய்த்துணர வாய்ப்புப் பெறுகிறோம்.

இத்தகைய பசிப்பிணி முதலியன நீக்க சத்திய தருமச்சாலை என்ற நிறுவனத்தையும் அடிகள் தோற்றுவித்தருளினர். இறைவன் பேரருளாளன், பேரறிவினன். நாம் சிற்றறிவுடையோம், இருள் மருளுடையோம் என்பதை உணர்ந்து பேரறிவுத் தன்மையும் பேரருள் தன்மையும் பெற, இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என ஒழுகலாறுகளை நான்கு வகைப்படுத்தினார்.

முன்னைய இரண்டொழுக்கம் பெரும்பான்மையர் அறிந்ததே. பின்னைய ஜீவ ஒழுக்கம் என்பது எல்லா மனிதரிடத்தும் சாதி, சமயம், மதம், சாத்திரம், குலம், உயர்வு, தாழ்வு முதலான பேதம் அற்றுத் தானாக நிற்றல், அடுத்த ஆன்ம ஒழுக்கம் என்பது அனைத்துலக உயிர் வர்க்கங்களனைத்திடத்தும் இரக்கம் வைத்து ஆன்மா சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு பூரணமாக நிற்றல் என்பதாம். இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் தாமாகவே முயன்று அடைய வேண்டுமென்றும், ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் இரண்டும் நமக்கிரங்கி இறையருள் நல்குமெனச் சொல்லியருளுவார்.

Koviloor Digital Library

பேர் அறிவும், சிற்றறிவும், அறிவுத்தன்மை என்ற அளவில் ஓர் இனமாதலானும் இனம் இனத்தோடு சேர ஒரே வழி கற்றுத் தந்து, இந்த உளவை ஆண்டவன் அருளியதாகவும் அதை கனிவோடு நமக்குத் தருவ தாகவும் அருளுகிறார்கள் அடிகள். அதுதான் தயவு. சிறிய தயவைக் கொண்டு பெருக்கித் தயாவண்ணமேயாகிப் பெருந்தயவான பேரருள் நிலையைப் பெறுதல். உயிர்க் கருணை, ஆன்ம விசாரணை என்ற இரண்டும் இரண்டு கண்களாக அடிகள் உணர்த்துவார். சமயக் கட்டும் சாத்திரக்கட்டும் மற்றவர்களிடம் அன்பு காட்டத் தடை யாகிற தென்பதை வற்புறுத்துவார். எவ்விதக் கட்டா லும் கட்டப்பெறாது முழுச் சுதந்திரமாக இரக்கம், கருணை, அன்பு மயமாகவேண்டுமெனப் பகர்வார்.

மனைவி மக்கள் நண்பர்களிடம் நாம் காட்டும் பரிவை அன்பு என்று மயங்குவதைத் தொட்டுக்காட்டி அது பாசமென உணர்த்தியும், அன்பு என்பது மனம் சிந்தனை கடந்தது என்றும், நன்மை தீமை என்ற விளைவு நோக்காது அது கருணைவயப்பட்ட செயலாகவே இருக்குமென்றும் அது ஆய்வுநிலைக்குக் கட்டுப்பட்டதன்று என்றும், பல்லூழி காலமாக நம்மைக் குழிதோண்டிப் போட்டுவந்த மனத்தை அடக்கல் என்ற முறை பயனளிக்காது என்றும், அது இயல்பாக அடங்கும் முறை உணரவேண்டுமென்றும், மருந்தறியேன்-மனம் அடங்கும் திறத்தில் ஓர் இடத்தில் இருந்தறியேன்-என்றும் பாடியருள்வர். உள்ளதனை உள்ள படி உணர உணர்த்தினையே என்றும் பிறிதோரிடத்தில் பேசுவார். ஒன்றுமறியாத நிலை என உள்ளபடி உணரும் போதுதான் அனைத்தும் தெரிந்த நிலை இயல் பாகத் தெரியும்.

எந்தத் துறையிலும் காண்பான்-காணுமிடம்-காணப் படுமிடம் என்ற மூவகை நிலையில் காணுமிடமாக நின்று

Koviloor Digital Library

ஏனைய இரண்டும் அற்றிருப்பதே அநுபவமென்றும் அதாவது அநுபவிக்கிறோம் என்ற எண்ண நிலையும் அற்ற நிலை என அருளுவார். இத்தகைய தாம் வகுத்த அருள் நெறிகளைப் பரிபாலிக்கச் சன்மார்க்க சத்திய சங்கமும் கண்டவர்.

2400 ஆண்டுகட்கு முன்னர் ஆன்மிகத் துறையில் புத்தர் பெருமகனாரே சங்கம் கண்டனர். அதன்பின் சங்கம் கண்டவர் அடிகளே. கொலைத் தொழிலும் புலைப் பொசிப்பும் அற்றவர்களே உறுப்பினர். இவர்களை அக வினத்தார் என அழைத்தார்கள். ஏனையவர்கள் புறவின மாகக் கருதப்பட்டனர். புறவினத்தாரை அகவினமாக்கல் அருள் நெறியின் பகுதி எனப் பறைசாற்றினர். உலகரனை வரும் தொழ சத்திய ஞானசபை கண்டனர். இங்கு 'அருட் பெருஞ் சோதியனே ஆண்டவன். சத்திய ஞானசபை என்னுட் கண்டனன், சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன். 'திருந்துமென் உள்ளத் திருக்கோவில் ஞான சித்திபுரம் எனச் சத்தியம் கண்டேன், என்ற திருவருட் பாவின்படி ஒவ்வொருவரும் தம்முள் ஞானசபை காண வேண்டுமென்பதையே உணர்த்தி நிற்கிறது, ஞான சபை தலைநிமிர்ந்து.

எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச் சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி என அருளினர். தாம் வகுத்த, சமயம் மதம் கடந்த சுத்த சன்மார்க்க நெறியின் பயன் சாகாநிலையே. பல்லூழி காலமாக இயற்கைக்கு மாறான அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் முதலானவை அறிவிலுறைந்து உறைந்து மூளை குருதி முதலான உடற்கூறுகளும் அப்படியே ஆகிவிட்ட படியால் பேரிரக்கம் பெருங்கருணை என்ற ஒரே துறைதான்

Koviloor Digital Library

மீண்டும் முன்னைய மாறான பண்புகளை மாற்றி அப்படி மாற்றப் பெறுவதினால் மூளை குருதி முதலான உறுப்புகளும் மாறி சுத்ததேகம் என்ற ஒளிவடிவம், பிரணவதேகம் என்ற ஒலி வடிவம், ஞானதேகம் என்ற வான்வடிவமாதல் வேண்டும் என்றும், சத்துப்போய் செத்துமடிந்து உடலம் மண்ணில் விழுந்தால் அது பிறவாநிலையில் இன்ப வடிவம் பெற வழிவகுக்காது என்றும். மீட்டிங்குவந்து வினைப் பிறவி சாராது இன்பாநுபவம் என்ற நிலை எனின் அது தன்னுணர்வோடு உடலம் கரைந்து ஒளிவடிவமாகி விட வேண்டும். என்று அருள்நெறி வகுத்துத் தொகுத்துப் பேசிப்பாடி எழுதியவாறு சித்திவளாகத் திருமாளிகையில் அந்நிலையே அடைந்து இன்புருவாய்த் திகழ்கிறார்கள்.

Koviloor Digital Library

20. வஞ்சமிலாவள்ளலுக்கு வாழ்த்து!

தொன்றுதொட்ட தைப்பெங்கல் தோதார்ந்த தைப்பூசம்
என்றும் தமிழ்மக்கள் ஏற்றவொரு—நன்றாம்
திருநாள்தான் என்றாலும் தெய்வீக நாளாய்
ஒருநாளும் காணவிலை ஓம். 1

ஓமார் அணைமீதில் உள்ளார்ந்த சோதிதனைத்
தாமாய் முயன்றென்றும் தாமாக—நாமாக
நாளொன்றும் நாடவில்லை நாடாமை கண்டிறைவன்
ஆளனுப்பச் சிந்தித்தான் ஆர்ந்து. 2

ஆர்ந்தய்யன் தேடியதில் ஆள்கிடைத்த தாயில்லை
தேர்ந்துதா னேதான் தெளிந்தான்காண்-''ஓர்ந்த திரு''
தானே வடிவெடுத்தான் தந்நிகரில் ''வள்ளலென''த்
தானே மருதூரில் சார்ந்து. 3

சார்ந்த இராமலிங்கத் தன்கருணைத் தேனானான்
தீர்ந்த முடிவாகச் செப்பினான்—தேர்ந்த
திருவருட்பாத் தெள்ளமுதைத் தேவார்ந்த வாயால்
கருவில் திருவார் களிப்பு 4

களித்தஇந் நூல்காட்டும் கற்கண்டாய் ''நெஞ்சம்
ஒளிக்கா துளதே உரைத்தால்—வெளியாகும்
நன்றென்றோ தீதென்றோ நாடாமல் உள்ளதனை
என்றென்றும் சொல்லுகவென் றே'' 5

Koviloor Digital Library

சொல்லொன்றும் செய்கையொன்றும் என்றவண்ண
மில்லாதே
அல்லும் பகலும் அறவொன்றாய்—"நல்லவகை
கண்டால் நயமாய்க் கடவுள்நிலை கண்டுண்டு
மண்டலத்தில் வாழலாம் மாண்பு." 6

மாண்பென்றால் மன்னுதிரு வாழ்வளிக்கும் வள்ளுவராம்
ஆண்மகனார் சொல்லொளியின் ஆர்ந்துரையைக்-காண்
போமால்
"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்" 7

"உள்ளம் ஒருமையுறின் உத்தமனாம்" என்றென்றும்
கள்ளமிலா இந்தவகை காணாமல்—வெள்ளமாய்த்
தானம்தவ மெல்லாம் தழைக்கவே செய்தாலும்
ஞானமிலை என்றான் நயந்து. 8

நயந்த இவ் வுண்மைதான் நாமறிய நாட்டும்
பயன்தரு "ஞானசபை" பார்த்தோம்—உயக்கொள்ளும்
உண்மையை நாடவில்லை ஊக்குமித் தைப்பூசம்
கண்ணுற்றுப் பார்ப்போமேக் காத்து. 9

காத்துவரும் சூரியனும் கண்ணார்ந்த சந்திரனும்
பூத்திருக்கும் ஓர்நாள்தான் பூசமிது—ஆத்திகத்து
நட்டநடுச் சோதிதனை நாடலாம் ஞானசபை
பட்டப் பகலிலே பார்த்து. 10

பார்த்த நடுச்சோதி பங்கிடு செய்யுமொளி
ஆர்த்த சுழுமுனையின் ஆதிசுடர்—சேர்த்த
இடகலை—பிங்கலை என்றவிரு மூச்சும்
கடல்சேர் அலையாம் கலை. 11

Koviloor Digital Library

கலையிரண்டில் ஒன்றுகதிர் ஒன்றுமதி கண்டு
மலையிலக்காய் ஒன்றாக மற்ற—கலையாம்
நடுநாடி வாய்திறக்கும் நம்முடலம் நீங்கா;
சுடுகா டிடுகாடில் சூழ்ந்து. 12

சூழ்ந்த முறையிது சூடுதற்கோ பொய்மயத்த
ஆழ்ந்தவே டம்வேண்டா மென்றார்த்தான் —
"தாழ்ந்துருகும்
"நெஞ்சக் கருணையால் நீடுமிது" என்றானே!
வஞ்சமிலா வள்ளலுக்கு வாழ்த்து 13

வாழ்த்திதைக் கண்டுணரா வாதச் சமயத்தை
ஆழ்த்திவான் ஆழ்கடலில் ஐயனிவன்—பாழ்த்த
மதப்பிரிவைப் பாழாக்கப் பாடுபட்டான் ஏத்தும்
இதமான நம்மிறைவன் இன்று. 14

இன்றிறைவன் தந்தமுறை ஏற்ற சுயமார்க்கம்
ஒன்றும் சமயவகை உற்றதல்ல—நன்றுதரு
''சுத்தசன் மார்க்கச் சுகநெறி'' அப்பப்பா!
நத்தியிதை நாடுவோம் நாள். 15

நாள்நாளும்—''நாம்—பிறர்'' என்றரெட்டை நாடாது
தோள்கொடுத்தால் இந்நிதி சூழுமால்—வாள்ஞானம்
ஓங்கலாம்—பொன்மேனி ஊக்கி ஒளிதருமால்
பாங்குடனே பண்புடனே பார். 16

பண்பார் கதிரவனைப் பார்த்தோம்தைப் பொங்கலிலே
தண்ணார் மதியையும் சார்ந்தின்று—கண்கொண்டு
ஞானசபை தூபி நலமார் திசையிரண்டில்
வானுயர்ந்து காண்போம் மகிழ்ந்து. 17

Koviloor Digital Library

மகிழ்ந்த திசை ''கீழ்மேல்'' மாண்பார் இரண்டும்.
அகிலம் களிக்கும் அருளே—புகுந்தநற்
சோதிசுயம் வாமசோதி சோமசோதி சோதிமுதல்
ஆதிசோதி ஈதே அருள். 18

ஆதியருள் தானேதான் அன்புமய ஈசனாம்
மீதியெலாம் வீணாம் மிரட்டல்தாம்—வாதியாது
என்றென்றும் கண்டுகொள்வீர் என்றே அருள்முரசை
நன்றே முழக்கினான் நாள். 19

நாளான பூசமிதில் நாடிப் புலனுழுவோம்!
ஆளாக ஆளாவோம் ஐயனுக்கு—காளானாய்ப்
போகாமல் கண்டபடி போடாமல் யாக்கையை
வேகாமல் காண்போம் விரைந்து. 20

விரைந்துவழி காண விரும்பினால் பூசம்
விரைந்துவரும் இம்மதியில் வேண்டித்—துரையான
வள்ளல் திருஅருட்பா வாகாய்த் தெரிந்துணர்ந்து
அள்ளிப் பருகுவோம் அன்பு. 21

அள்ளிக் கொடுக்கும் அருமை அருளையே
துள்ளியே பெற்றுய்வோம் தோயந்துநிதம் வெள்ளமென,
தொன்மை ஒளிநெறி உற்றவிழா வந்தடைய
தொன்றுதொட்ட தைப்பூசந் தோது. 22

Koviloor Digital Library

21. மூவா மருந்தேநீ! முந்து

முத்தேக சித்திபெற்ற முன்னவனே வள்ளலே
சித்தெல்லாம் வல்லயெம் தேசிகனே-இத்தருணம்
பித்துலக வாழ்வெம்மைப் பேநித்து வாட்டுவதை
நிச்சயமாய்க் கண்டிருப்பாய் நீ.

கண்டிருந்தும் தோன்றவிலை காணாத காட்சியாய்
விண்டருள வில்லை வெளிப்படையாய்-அண்டியுனை
வேண்டத் தெரியுமலால் வேறுதெரி யாதய்யா
ஆண்டருள்வ தெப்போதோ ஆர்ந்து

ஆண்டுகொள வில்லையெனில் ஆர்வம் அடங்காது
தூண்டிவிடும் ஏதேதோ சொல்லுகிறோம்-மாண்டவரை
மீட்டிங்கு வாழ்வுதரும் விண்ணவனே பேரமைதி
கூட்டிவைப்பாய், ஆட்டாது கூத்து

கூத்துனதைத் தாங்கக் கொடுத்தருள்வாய் பேராற்றல்
ஏத்துகிறோம் பாதமலர் ஏற்றருள்க-நாத்தடிக்கப்
பேசுகிறோம் சன்மார்க்கம் பேணவிலை ஆன்மநேயம்
கூசுதே நெஞ்சம் கொதித்து.

Koviloor Digital Library

நெஞ்சம் கொதித்தால் நெறியிலா இவ்வடியோம்
தஞ்சம் புகாமலே தான்திருகும்-வஞ்சமனம்
சொற்கேளாத் தன்மையுற்றால் சொல்லோச்சித்
தேற்றுவரார்?
பொற்சபைதான் என்றும் பொறுப்பு.

பொற்சபையும் சிற்சபையும் போற்றவழி சொல்லுவதார்?
சற்சபையாம் ஞானசபை தான்மோனத்—தெற்சபையே!
மோனமெனில் கன்னெஞ்சம் மோதிமெழு காயுருக
வான்ரூவி யென்னநீ வா.

வாவா யென அழைத்து வாடுமெங்கள் உள்ளமெலாம்
நாவார ஓர்சொல் நவின்றெமக்குத்-தேவார்ந்த
தேவனே சோதியுருத் தெய்வமே சேர்ந்தருள
மூவா மருந்தே நீ முந்து.

Koviloor Digital Library

22. எந்தையே இராமலிங்க நின் இணையடி ஏத்துவோமே!

மக்களின்ப பம்போக்க மகிழ்ச்சியோடு யிரை ஈந்த
மாபெருந்தியாகச் செம்மல் ஏசுவாம் அன்பு நெய்யை
தக்கதோர் அரசுநீத்துத் தவமதே உயிராக் கொண்ட
சாந்தனாம் புத்த தேவன் தன்னலி அகலிலூற்றி

மிக்கதே . பொறுமை பூண்டு மேதினி வியப்பநின்ற
விண்ணவன் நபிகளான மெல்லிய திரியைத் தூண்டி
எக்குலத்தவரும் போற்ற இவ்விளக்க தனை ஏற்றும்
எந்தையே இராமலிங்க நின் இணையடி ஏத்துவோமே!

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: ..-436846)